தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986 மே 14, புதன் கிழமை
சித்திரை 31, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.''

அவையின் தன்மை அறியாமல் சொல்லுதலை மேற்கொள்கின்றவர் சொற்களின் வகை அறியாதவரே, அவர் சொல்ல வல்லதும் இல்லை.

1. வினாக்கள் — விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பீடித் தொழிலாளர் கூலி.

739 —(*வினா எண் 7267) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களின் கூலியை உயர்த்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 1000 ஜாடி பீடிகள் சுற்றுவதற்கு ரூ. 8.00 என்பதற்குப் பதில் ரூ. 9.50 என்றும், 1000 சாதா பீடிகள் சுற்றுவதற்கு ரூ. 7.80 என்பதற்குப் பதில் ரூ. 9.30 என்றும் குறைந்த அளவு ஊதிய வீதங்களை உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் உள்ள பீடி கம்பெனிகளில் அவர்கள்

என்ன கூலி கொடுக்கிறார்கள் தொழிலாளிக்கு? நமது மாநிலத்திற்கும் அதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? குறிப்பாக கேரளாவிலிருந்து வருகின்ற மலபார் பீடி என்ற பீடி பெரிய பீடியாக இருப்பதால் இங்கேயுள்ள பீடிகளின் விற்பனை குறைவாக உள்ளது. ஆகவே, வெளி மாநிலப் பீடிகள் நம் மாநிலத்தில் தடை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்றைய மாநில பீடிகளைப் பற்றி நாம் எதுவும் சொல்வதற்கில்லை. இந்த மாநிலத்தைப் பொறுத்தும், இங்கே பீடி சுற்றுகின்ற தொழிலாளியைப் பொறுத்தும்தான் நாம் ஊதிய வீதங்களைப் பற்றியும், அதைச் சுற்றுபவர்களுக்கான கூலியைப் பற்றியும் நாம் நிர்ணயம் செய்கிறோம். இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திலும் தயார் செய்யப்படுகின்ற எந்தவொரு பொருளும் வேறொரு மாநிலத்திற்குச் செல்லலாம், அதற்குத் தடை விதிப்பதற்கு சட்டத்தில் இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை பீடிக் கம்பெனிகள் இருக்கின்றன? அதில் எத்தனை தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள்? குடி குடியைக் கெடுக்கும் என்று மது பாட்டில்களில் எழுதியிருக்கிறார்கள், சிகரெட்டிலும் கூட எழுதியிருக்கிறார்கள். அதைப் போல பீடிகளிலேயும், பீடி குடிப்பது உடம்புக்குக் கெடுதி என்று ஏதேனும் எழுதுவதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எழுதுவதற்கே பீடியில் இடம் இருக்குமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது. அப்படியே இருந்தாலும் எழுதியதையும் சேர்த்து எரித்துவிட்டுக் குடிப்பார்கள். அந்த எழுத்துக்கும் சேர்த்துதான் கேடு ஏற்படும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பீடித் தொழிலாளர்களின் மீது கொண்டிருக்கின்ற அக்கறையை நான் பாராட்டுகின்றேன். ஆனால் விவசாயக் கூலி, தொழிலாளிக்கு வேலையில்லாத நாட்களிலே ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கொடுப்போம் என்று ஆளும் கட்சி தேர்தல் நேரத்திலே வாக்குறுதி தந்திருக்கிறது. அந்தத் தேர்தல் வாக்குறுதி, இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஒன்றரை ஆண்டுகளாகியும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இதை அரசு நிறைவேற்றுமா? எப்பொழுது நிறைவேற்றும் என்பதை அமைச்சரின் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதோடு இந்த............

1986 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக துணைக் கேள்வியைக் கேட்க வேண்டும். இதற்கு அமைச்சர்களிடத்தில் பதில் இருந்தால் சொல்லட்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் கூலி பற்றிய கேள்வி இது. ஆகவே, இந்தக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கின்ற கேள்விக்கும் தொடர்பு இல்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு ஆயிரம் பீடிகளுக்கு எவ்வளவு கூலி என்று அரசு நிர்ணயித்திருந்தாலும் கூட, பல யிடங்களில் ஆயிரம் பீடிகளுக்குரிய புகையிலையைக் கொடுத்து விட்டு, பீடியின் விலைக் கிரயத்திற்கு கூலியைப் பிடித்து விடுகின்றனர். இப்படி அந்தக் கூலிக் கிரயத்தை அந்த முதலாளிகள் கழித்து விடுகின்றார்கள். இப்படிப்பட்ட நிலை மையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் தொழிலாளர்களின் கோரிக்கையின்படி பீடி சுற்றுவதற்கு 12 ரூபாய் என்று கூலியை உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 5—5—1984 முதல் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்கள் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டது:—1,000 ஜாடி பீடிகள் சுற்ற ரூ. 8.00 (அகவிலைப்படி உட்பட):—1,000 சாதா பீடிகள் சுற்ற (எந்த அளவாயினும்—முக்கூடல் வகை உட்பட) ரூ. 7.80 (அகவிலைப் படி உட்பட). இப்போது அண்மையிலே தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு 12(3)-ன் கீழ், சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு ஊதிய வீதங்களை உயர்த்தி 1985-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அதன்படி 1,000 ஜாடி பீடிகள் சுற்ற ரூ. 9.50, 1,000 சாதா பீடிகள் சுற்ற ரூ. 9.30. இந்த ஊதிய வீதங்களையே மாநிலம் முழுவதற்கும் பொருந்தச் செய்ய இவற்றையே குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் குறைந்த அளவு ஊதிய வீதங்களாக அறிவிக்கை முறையில் நிர்ணயிக்க தொழிலாளர் துறை ஆணையர் பரிந்துரை செய்திருக்கிறார். அதை பரிசீலித்து விரைவிலேயே ஆணை பிறப்பிக்கப்பட இருக்கிறது. ஆகவே, இந்தத் தொகை மாநிலம் முழுவதும் மேற் கொள்ளப்பட வேண்டும் என்ற ஆணை விரைவிலேயே பிறப் பிக்கப்பட இருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மலர்மன்னனுக்கு மட்டும் இந்த சபை அல்ல. 7, 8 உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். நீங்கள் அமருங்கள். மரபைக் காப்பாற்றுங்கள். கொஞ்சம் அவை அடக்கத்தோடு இருங்கள்.

தஞ்சை மாவட்டத்தில் புயல் எச்சரிக்கைக் கருவிகள்.

740—(*வினா எண் 7881) திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் புயல் எச்சரிக்கைக் கருவிகள் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) எங்கெங்கு எத்தனை நிறுவப்பட உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் 11 புயல் எச்சரிக்கைக் கருவிகள் கீழ்க்கண்ட இடங்களில் நிறுவப்பட்டுள்ளன :—

1. சீர்காழி.
2. தஞ்சாவூர்.
3. மயிலாடுதுறை.
4. நன்னிலம்.
5. நாகப்பட்டினம்.
6. திருத்துறைப்பூண்டி.
7. வேதாரணியம்.
8. பட்டுக்கோட்டை.
9. அதிராமப்பட்டினம்.
10. பொறையார்.
11. மல்லிப்பட்டினம்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை போன்ற பல்வேறு இடங்களில் புயல் எச்சரிக்கைக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன என்று சொல்லியிருக்கிறார். ஆண்டுதோறும் வழக்கமாக தஞ்சையிலே புயல் அடிக்கின்ற நேரங்களில் ஒரத்தநாடு தாலுக்காவில் அதிகமாக சேதம் ஏற்படுகிறது. எனவே, மத்தியப் பகுதியான ஒரத்தநாட்டில் ஒரு புயல் எச்சரிக்கைக் கருவி அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1986 மே 14]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற்குறிப்பு இல்லை. அதுபற்றி தனியாகத்தான் ஆராயவேண்டும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் புயல் எச்சரிக்கைக் கருவிகள் 11 இடங்களில் அமைக்கப்போவதாக அறிவித்து இருக்கிறார்கள். நன்றி சொல்வதோடு அந்த வேலைகள் இந்த ஆண்டே துவக்கப்படுமா அல்லது எப்போது இந்த வேலைகள் துவக்கப்படும் என்று அறிவதோடு, திருத்துறைப் பூண்டி என்று சொல்கின்றபோது கடலோரப் பகுதியாக இருக்கக் கூடிய தொண்டைக்காடு, முத்துப்பேட்டை பகுதியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 இடங்களில் இந்தப் புயல் எச்சரிக்கைக் கருவி அமைப்பதற்கான செயற்குறிப்பை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சில முக்கிய பாகங்கள் கிடைக்காத காரணத்தினால் வேலை தொடங்கப்படவில்லை. மற்ற வேலைகள் தொடங்கப் பட்டாலும் இந்தக் கருவிகள் வைப்பதிலே சில இடற்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. விரைவிலேயே முயற்சிகள் மேற்கொள்ளப் படும். திருத்துறைப்பூண்டி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த இடம் என்று திட்டவட்டமாக தெரிவிக்கப்படவில்லை. தனிக் கேள்வி போட்டால் அந்த இடத்தைக் குறிப்பிடலாம்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் 11 இடங்களில் புயல் எச்சரிக்கைக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் கடலோரப் பகுதியில் புயல் எச்சரிக்கைக் கருவி அமைப்பதற்கு செயற் குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்படுகின்ற 11 இடங்களைச் சேர்த்து மொத்தம் 44 இடங்களில் இந்தப் புயல் எச்சரிக்கைக் கருவிகள் அமைக்கப்படுகின்றன.

(முற்பகல் 9-10)

ஏற்கெனவே அமைந்திருப்பது 33 இடங்களில். அந்த வகையில் தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மரக்காணம், கடலூர், வானூர், சிதம்பரம், போர்ட்னோவோ, திண்டிவனம், நெய்வேலி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடலோரப் பகுதிகளில் புயல் பாதுகாப்பு எச்சரிக்கை கருவிகள் அமைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் திருப்பாலைவனம், பொன்னேரி, சைதாப்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர், செங்கற்பட்டு, காஞ்சீபுரம், மதுராந்தகம், சென்னை, கல்பாக்கம் ஆகிய இடங்களில் இந்தப் புயல் எச்சரிக்கைக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

கிராமப் பணியாளர்கள்.

741—*(வினா எண். 8333) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப் பணியாளர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கிராம ஊழியர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலித்துப் பார்த்து, இப்போது இருந்து வரும் நிலையையே நீடிக்க விடலாம் என்றும் மாற்றம் அவசியம் இல்லையென்றும் முடிவு செய்துள்ளது.

திரு. மு இராசாங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பணியாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் கிராமங்களின் அன்றாட நடவடிக்கைகளிலே தொடர்பு கொண்டு இருப்பவர்கள். சொல்லப் போனால் முழு நேரமும் பணியாற்றுபவர்கள். அவர்களை அரசினுடைய நிரந்தர ஊழியர்களாக ஆக்கி, ஊதியத்தையும் அதிகப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தக் கிராமக் காவலர், கிராமப் பணியாளர் மற்றும் பாசனக் காவலர்கள் என்றமுறையில் வருகிற இந்தக் கிராம ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருப்பவர்கள். அவர்கள் 31,572 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு சிறப்பு மதிப்பூதியமாக ரூ. 300 திங்கள் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அரசு ஊழியர்களாக ஆக்குவது என்றால் பல சிரமங்கள் ஏற்படக் கூடும். அரசு ஊழியர்களாக ஆக்குகிற சூழ்நிலை ஏற்படுகிற போது இவர்களுடைய கல்வித்தரம் முதலியவற்றை நிர்ண யிக்கிறபோது இந்த முப்பத்து ஓராயிரத்துச் சில்லரை பேர்களில் பலபேரை வீட்டுக்குத்தான் அனுப்ப வேண்டி வரும். ஏனென் றால், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது வகுப்பு படித் தவர்கள் எல்லாம் கூட இப்போது வேலையில் இருக்கிறார்கள். அரசு சம்பளம் என்று ஆக்குகிறபோது 8-வது படித்திருக்க வேண்டும் என்றெல்லாம் வரும். அப்போது இடர்பாடு ஏற்படக் கூடும். இப்போது அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருக் கிறார்கள். முழு நேர அரசு ஊழியர்களாக ஆக்கினால் அரசுக்குச் செலவும் அதிகமாகும். இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களை அடிப்படையாக வைத்துத்தான் ஏற்கனவே இருந்து வருகிற வழிமுறை நீடிக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. ஆனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் வட்டாட்சியர் மூலம் நியமிப்பதால் இடையிலே குறுக்குச் செலவு ஏற்படுவதாக அறிகிறேன். ஆகவே, வேலைவாய்ப்புலுவலகம் மூலம் நேர்முகத் தேர்வுக்கு ஏற்பாடு செய்து அந்த வகையில் அவர்களுக்குப் பணி கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக இந்தக் கிராமக் காவலர்கள், கிராமப் பணியாளர்கள் மற்றும் பாசனக் காவலர் கள் என்பவர்களைப் பொறுத்த வரையில் கிராமப் பகுதிகளில் இருக்கின்றவர்களுக்குச் சாதாரணமான நிலைமையில் அளிக்கப் படுகிறது. ஆனால் வேலைவாய்ப்பலுவலகத்தின் மூலம் பதிவு செய்து அதன்பிறகுதான் அவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றால் பல இடர்ப்பாடுகள் ஏற்படும். அந்த ஊர் நிலைமையை அனுசரித்து அங்கே குடியிருப்பவர்களை வைத்தால்தான் அந்த ஊருக்குப் பொருத்தமாக இருக்குமே தவிர, வேலை வாய்ப்பகத் தில் இருந்து தான் பட்டியல் வரவேண்டும் என்றால் இடர்பாடு அதிகமாக ஏற்படும். பல தொல்லைகள் வரும். ஆகவே, இப் போது இருக்கிற நிலைமைதான் பொருத்தமானதாக இருக்கும்.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பணியாளர்களை நியமனம் செய்கிறபோது 30, 35 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியவர்களுடைய வாரிசாக வருகின்றவர்களைத்தான் எடுக்க வேண்டும் என்ற வகையில் அரசு செயற்குறிப்பு அனுப்புமா? இப்போது அம்மாதிரி அனுப்பப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களைக் கட்டாயம் எடுத் துத் தீரவேண்டும் என்ற நிலைமை இல்லை என்றாலும் கூடுமான

வரையில் அங்கே பணியிலே இருந்து ஓய்வு பெற்றவர்களின் குடும்பத்திலே இருப்பவர்களுக்கு, அவர்கள் தகுதி படைத்தவர்களாக இருந்தால், அளிக்கவேண்டுமென்ற கொள்கையைக் கடைபிடித்துத்தான் அவர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பணியாளர்களுக்கு 300 ரூபாய் சம்பளம் தரப்படுவதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சம்பளத்தையாவது இன்னும் கொஞ்சம் கூட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்டச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் துப்புரவுத் தொழிலாளர் குடியிருப்புகள்.

742—(*வினா எண். 2412) திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்-தாராபுரம் ரோட்டிலுள்ள நகராட்சித் துப்புரவுப் பணித் தொழிலாளர் குடியிருப்புகள் இடிந்துவிழும் நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மற்றும் (ஆ) திருப்பூர்-தாராபுரம் சாலையில் உள்ள துப்புரவுத் தொழிலாளர் குடியிருப்புகள் எதுவும் விழும் நிலையில் இல்லை. இருப்பினும் இக்குடியிருப்புகளுக்குத் தேவையான மராமத்து செய்வதற்கு ரூ. 41,000 மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு விரைவில் வேலை துவங்க உள்ளது.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நேரிலே வருவார்களானால், இடிந்து விழும் நிலையில் இருப்பதை நேரடியாக நான் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன். குறிப்பாக, நகரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வெளியேறக்கூடிய சாக்கடை நீர் முற்றிலும் அங்கேதான் தேங்கியிருக்கிறது. அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களின் காலனியை ஒட்டியிருக்கிற தனியார்களுடைய இடத்திலே அந்தச் சாக்கடை நீர் வடிந்து ஓடுவதற்கு அவர்கள் அனுமதிக்காமல் அடைத்து விட்டார்கள். அதனால், மலங்களுடைய சாக்கடை நீரையும்,

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1986 மே 14]

மலத்தையும் அப்புறப்படுத்துவதையே ஜீவனமாகக் கொண்டிருக்கிற அந்தத் தொழிலாளர்களுடைய காலனிகளுக்குள்ளே சாக்கடை நீர் நிரந்தரமாகத் தேங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் அந்த வீடுகளின் அஸ்திவாரம் பாதிக்கப்பட்டுப் பல்வேறு வீடுகள் இடிந்து விழுகின்ற நிலைமையில் இருக்கின்றன. நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு சொல்கிறேன். அப்படி இடிந்து விழுந்து ஏதாவது உயிர்ச்சேதம் ஏற்படுமானால், அத்தகைய நிலையில் அறிக்கை வைப்பதைத் தவிர்த்து (மணியடிக்கப்பெற்றது)--- அதைஅரசாங்கம் கவனிக்கிற முறையில், நேரடியாக அமைச்சர் பார்வையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வீடுகளைப் பார்ப்பதற்கு ஒன்றும் சிரமம் இல்லை. திருப்பூர் வந்தால் பார்க்கலாம். ஆனால், என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பின்படி 17 வீடுகள் இருக்கின்றன; மண் சுவர்களால் கட்டப்பட்டிருக்கின்றன; சுவரின் பின் பகுதிகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு கழிவுநீர் தேக்கத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. அதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதற்கு என்ன வழி செய்யலாம் என்பதைப் பற்றிச் சொல்லலாம். அந்த வீடுகளைப் பொறுத்தமட்டில், அதைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 41,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வீடுகள் மண் சுவரால் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறபொழுது, அவை 20 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டிருக்கின்றன என்ற முறையில் இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ள இயலும். எனவே, மாண்புமிகு அமைச்சரிடம் இருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புவது, திருப்பூர் நகராட்சிக்கு விசேஷமான கடன் உதவி செய்து ஒரு குறுகிய காலத்திற்குள் மாடி வீடுகளாக அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்குக் கட்டித் தருகிற திட்டத்தை அரசு பரிசீலித்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுகளாயிற்று என்று சொன்னார் ; அது தவறு ; 30 ஆண்டுகள் ஆகிறது. என்றாலும் அந்த நகராட்சி நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் நிலம் கையகப் படுத்துவதற்கு விலை அதிகம் ஆகியிருக்கிறது—நிதிநிலை சரியானதற்குப் பிறகு அதைப் பற்றி அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

தலைஞாயிறு பேருந்து நிலையம்.

743—(*வினா எண். 6311) திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறு நகரப் பேருந்து நிலையத்திற்கென புதுக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, தலைஞாயிறு பேரூராட்சி மன்றம் வறுமையில் வாடுகின்ற காரணத்தாலே, அங்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் நிரந்தரமாக பஸ் ஸ்டான்ட் ஒன்று கட்ட முடியவில்லை. அரசு மானியமாகவோ அல்லது கடனாகவோ கொடுத்து அந்தப் பேரூராட்சிக்கு பஸ் நிலையம் கட்ட ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தலைஞாயிறு பேரூராட்சி நிதிநிலை சரியில்லையென்பது அரசுக்குத் தெரியும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை எதுவும் தற்போது இல்லை.

திரு. வி. இரா. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் வேலூர் நகரப் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு ஓராண்டு ஆகிறது. பேருந்து கட்டிடத்திற்குள்ளே உள்ள கழிவறைகள், பிளாட்பார்ம்—தார் சாலைகள் சிதைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே, கட்டிய ஒப்பந்தக்காரர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து தரப்படும்.

சென்னை நகரில் தனியார் தெருக்கள்.

744—(*வினா எண். 9112) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1986 மே 14]

(அ) சென்னை மாநகரிலுள்ள மொத்த தனியார் தெருக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) சைதை பகுதியிலுள்ள ஒவ்வொரு வட்டத்திலும் தனியார் தெருக்களின் எண்ணிக்கை எத்தனை?

(இ) தனியார் தெருக்களை அபிவிருத்தி செய்ய மாநகராட்சிக்கு அரசு வழங்கும் நிதி மானியமாகக் கொடுக்கப்படுகிறதா அல்லது கடனாகக் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 1980 ஆம் ஆண்டு தொகுக்கப்பட்ட பட்டியல்படி, சென்னை மாநகரிலுள்ள தனியார் தெருக்களின் எண்ணிக்கை 1,100 ஆகும். ஆனால் அது தற்போது 1,500 ஆக உயர்ந்துள்ளது.

(ஆ) சைதை பகுதியிலுள்ள தனியார் தெருக்களின் மொத்த எண்ணிக்கை 201 ஆகும்.

(இ) தனியார் தெருக்களை அபிவிருத்தி செய்ய சென்னை மாநகராட்சிக்குக் கீழ்க்கண்டவாறு நிதி உதவி வழங்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது :—

1986–87-ல் ரூ. 130 இலட்சங்கள்.
1987–88-ல் ரூ. 160 இலட்சங்கள்.
1988–89-ல் ரூ. 100 இலட்சங்கள்.
1989–90-ல் ரூ. 40 இலட்சங்கள்.

இதனை மாநகராட்சி நிதி உதவி பெற்ற ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக அரசுக்குத் திரும்ப செலுத்த வேண்டும்.

(முற்பகல் 9–20)

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தனியார் தெருக்களில் முதலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பணி கழிவு நீர் செல்லுகின்ற பாதையை அமைத்தல். எனவே சென்னை பெருநகர் குடி தண்ணீர் வழங்கு துறைக்கு இது சம்பந்தமான விவரங்கள் அனுப்பி நடவடிக்கை எடுக்கலாம். அரசு எடுத்திருக்கிற இந்தக் கொள்கை முடிவான தனியார் தெருக்களிலும் அரசு காரியங்களைச் செய்யலாம் என்ற அந்த முடிவினைக் குறித்து அந்தத் துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதா? அப்படி என்றால் மாநகராட்சியும் குடிதண்ணீர் வழங்கு துறையும் இணைந்து அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கவும், முதலில் தெரு விளக்குகளுக்கு....(மணியடிக்கப்பெற்றது)

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாக கேளுங்கள். இது மானியம் அல்ல, பேசிக் கொண்டே போவதற்கு.

திரு. சைதை சா. துரைசாமி : முதலில் தெரு விளக்கு பணிகளையும் கழிவு நீர் செல்லுகின்ற பாதையை அமைக்கின்ற பணிகளையும் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கழிவு நீர் சாக்கடையைப் பற்றி மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரிடத்திலே தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொள்ள வேண்டும். மாநகராட்சியைப் பொறுத்த மட்டில், அந்த வேலைகளை எடுத்துக் கொள்வதற்கு, என்.ஓ.சி. கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. தெரு விளக்குகளைப் பற்றிச் சொன்னார்கள். அவைகளையெல்லாம் செய்வதற்காகத்தான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்குகின்ற வகையில் பற்றாக்குறை ஏற்படுமானால் அரசு பரிசீலித்து மேற்கொண்டு நிதியை ஒதுக்க முன்வரும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவு நீர் செல்லுகின்ற பாதையை அமைக்கின்ற பணிகள் வேளாண்மைத் துறையைச் சார்ந்ததாக இருந்தாலும் மாநகராட்சியினுடைய கன்கரன்ஸ் வழங்கியதற்குப் பிறகுதான் அவர்கள் அந்தப் பணியைச் செய்வார்கள். ஆகவே அவர்களுக்கும் என்.ஓ.சி. வழங்குகின்ற பணிக்கு நடவடிக்கை எடுத்த பிறகு, அவர்களுக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்தால்தான், குடிதண்ணீர் வழங்குகின்ற அந்த நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஆகவே சிறப்பு நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டுள்ளதா ? அத்தோடு மாநகராட்சியின் மூலம் மின்சார விளக்குக் கம்பங்களை ஆங்காங்கே போடுவதற்கும் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார விளக்குக் கம்பங்கள் அமைப்பது மாநகராட்சித் தலைவரின் பொறுப்பு ஆகும். ஆனால் குடிதண்ணீர் நிலைமையைப் பொறுத்த மட்டில், அந்தக் குடிதண்ணீர் வடிகால் வாரியத்திற்கு மாநகராட்சி என்.ஓ.சி. கொடுத்திருக்கிறது. அப்படி இல்லாவிட்டாலும் கொடுத்து விட தயாராக இருக்கிறோம். அவர்கள் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டும்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, என்.ஓ.சி. கொடுக்கப்படுவது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நல்லதுதான். ஆனால் அங்கீகாரம் பெறவில்லை, அப்ரூவல் வாங்கவில்லை என்ற காணத்தாலே, அபிவிருத்தி வரி கட்ட

1986 மே 14]

வில்லை என்று நூற்றுக்கணக்கான தெருக்கள் விளக்குகள் எரியாமல் இருண்டு இருப்பதோடு, அந்தத் தெருக்கள் சுத்தம் செய்யப்படுவதே கிடையாது என்ற நிலையில் சென்னை மாநகரத்தில் இருக்கின்ற அவைகளுக்கு, அங்கே நீண்டகாலமாக குடியிருக்கக்கூடிய அந்த மக்களின் சௌகரியத்தைப் பற்றி நினைத்தாவது மற்றத் தெருக்களில் எந்த அளவுக்கு கவனம் செலுத்தப்படுகிறதோ அந்த அளவுக்கு இந்த பிரைவேட் ரோடு என்று சொல்லக்கூடிய தெருக்களையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி எடுத்துக் கொள்ள அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தேன். தனியார் தெருக்கள் என்ற பெயரில் அப்போது சில பேர்கள் மனைகளை அப்ரூவல் வாங்காமலேயே விற்று விட்டு போய் விட்டார்கள். தெருக்களின் அபிவிருத்திக்கான பணத்தையும் மாநகராட்சிக்கு கட்டவில்லை. அதனால் இப்போது அந்த வீடு களிலே குடியிருப்பவர்கள் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதற்காக ஏற்கனவே 4 ஆண்டுகளுக்கு முன்னாலே நமது புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு ஆணையைப் பிறப்பித்தார்கள். மொத்தம் ஆகின்ற செலவில் 25 சதவீதம் அந்த வீடுகளில் இருப் பவர்கள் பணமாக கட்டி விட்டால் அந்த அபிவிருத்தி வேலைகளை மாநகராட்சியே செய்து மிச்சத் தொகையை வீட்டு வரியோடு சேர்த்து, பத்து ஆண்டுகளில் வசூல் செய்துக் கொள்ளலாம் என்று ஆணை பிறப்பித்தார்கள்.

ஆனால் இப்போது போட்டிருக்கிற ஒரு புதிய ஆணையின்படி அப்படி அவர்கள் நான்கில் ஒரு பங்கு கூட கட்ட வேண்டியது இல்லை. முழுவதையும் மாநகராட்சியே ஏற்றுக் கொண்டு, அந்தப் பணிகளைச் செய்து முடித்ததற்குப் பிறகு, அந்த வேலைகளுக்கு ஆகின்ற பணத்தை வீட்டு வரியோடு சேர்த்து தவணையில் வசூலிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதைத்தான் விளக்கிச் சொன்னேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைநாயகர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்கள் இந்தத் தனியார் தெருக்கள் சில ஜாதி யின் பெயராலே இருந்து வந்ததை மாற்றி அந்த ஜாதிய பெயர் களை நீக்கிவிட வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுத் தார்கள். மகிழ்ச்சி. ஆனால் அப்படிச் செய்ததன் மூலம், டாக்டர் நாயர் தெரு என்ற பெயர், இப்போது வெறும் தெரு வாக நிற்கிறதே, அப்படிப்பட்டவற்றை அரசே கவனித்து வேறு பெயர்களை வைக்கின்ற வகையில் அமைச்சர் பெருந்தகை அவர்கள் ஏதாவது சட்டத்திருத்தம் செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெருந்தகை அதைப்பற்றி தனியாகக் கேள்விபோட்டால் பரிசீலிக்கலாம்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டிலே மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும் தனியார்களுக்குச் சொந்தமான சந்துகள் அல்லது ரோடுகள் என்பது ஒரு முக்கியமான பிரச்னையாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களும் அறிவார்கள். அவர்களுடைய பதிலிலும் அதைப்பற்றி விளக்கம் தந்திருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது கௌன்சில் இருந்த காலத்தில் தனியாருக்குச் சொந்தமான சந்துகளை அங்கு குடியிருப்பவர்கள் அல்லது அந்தச் சந்துக்கு எவ்வளவு பேர்கள் பாத்தியதைப் பட்டவர்களோ அவர்கள் நகராட்சிக்கு அல்லது மாநகராட்சிக்கு ஸ்டாம்ப் பேப்பரில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள்.

திரு. மு. இராமநாதன் : எழுத்து மூலமாக அதைப் பராமரிப்பதற்காக நகராட்சி இடத்தில் அல்லது மாநகராட்சி இடத்தில் ஒப்படைத்து விடுவார்கள். அப்படி எழுதிக் கொடுத்து விட்டால் அந்தப் பராமரிப்புப் பொறுப்பை அந்த நகராட்சி அல்லது மாநகராட்சி ஏற்று அமல்படுத்துகிற முறை இதுவரையில் இருந்து வந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலில் இதுவும் அடங்குமா? இது எல்லாயிடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ரியல் எஸ்டேட்காரர்கள் என்று அழைக்கப்படுகிற மனைகளைப் பிரித்து விற்கிறவர்கள் அவர்கள் செய்கிற வம்பு தான், ரியல் எஸ்டேட்காரர்கள் செய்கிற தகராறுதான் இவ்வளவும். அவர்கள் மனையைப் பிரித்து விற்றுவிட்டுப் போய் விடுகிறார்கள். குடியேறுகிற மக்கள் அதைப் பற்றி கவனம் இல்லாமல் குடியேறிவிடுகிறார்கள். குடியேறியவர்களிடம் வரி வசூலிப்பது அங்குள்ள உள்ளாட்சி மன்றத்தின் உரிமையாக ஆகி விடுகிறது, வீட்டு வரி கட்டுவதால், வீட்டு வரி கட்டுகிறோம், வசதிகள் செய்து தாருங்கள், தெருக்கள் வேண்டும், விளக்குகள் வேண்டும், குடிநீர் வேண்டும் என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆனால் அபிவிருத்தி வரி கட்டவில்லை. அப்படி கட்டவேண்டும் என்று நகராட்சி அல்லது மாநகராட்சி கோருகிறது. ஆனால் அதை விற்றுவிட்டுப் போனவர்கள் கட்டி இருக்க வேண்டும். கட்டாமல் விற்றுவிட்டுப் போய்விடுகிறார்கள். இப்படி கொள்ளை இலாபம் அடித்துவிட்டு விற்றுவிட்டுப் போய் விடுகிறார்கள். ஆகவே அவர்கள் சொல்வதை அனுமதிப்

1986 மே 14]

பது என்ற வகையில் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. ஏற்கனவே பல ஆண்டுகள் தனியார் தெருக்களாக இருந்து வீடுகள கட்டிக்கொண்டு அந்தத் தெருக்களைப் பயன்படுத்திக் கொண்டு அனாதைகளைப் போல் இருப்பார்களானால் அந்தத் தெருக்களை எல்லாம் மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் எடுத்துக்கொள்ள வேண்டும். மொத்தமாகச் செலவு செய்யவேண்டும், அதற்குண்டான செலவை அங்கு வீடு கட்டிக்கொண்டிருப்பவர்களிடமிருந்து வீட்டு வரியோடு சேர்த்து வசூலித்துக் கொள்ள வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது கூறிய இந்தச் சலுகை சென்னை மாநகராட்சிக்கு மட்டும் பொருந்துமா? அல்லது தமிழகத்தில் இருக்கிற மற்ற மாநகராட்சிப் பகுதிகளுக்கும், நகராட்சிப் பகுதிகளுக்கும் பொருந்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னை மாநகராட்சிக்கு மட்டும்தான் இது பொருந்தும். மற்ற நகராட்சிகளுக்கு விரிவுபடுத்துவது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. காரணம் ரியல் எஸ்டேட்காரர்களை எப்படிக் கட்டுப்படுத்துவது, எப்படி பணம் கட்டவேண்டும், அப்படிக் கட்டத் தவறினால் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையெல்லாம் அரசாங்கம் பரிசீலித்து முடிவு செய்ததற்குப் பிறகுதான் ஒரு முடிவு எடுக்க முடியும்.

சேலம் மாவட்டத்தில் குடிநீர்த் திட்டங்கள்.

745—(*வினா எண். 4692) திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டப் பணிகள் சேலம் மாவட்டத்தில் எத்தனை கிராமங்களில் செயல்படுத்தப்பட உள்ளது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டப் பணிகள் சேலம் மாவட்டத்தில் சேலம் நகராட்சி மற்றும் 11 நடுத்தர நகரங்களுக்கும், 281 கிராமக் குடியிருப்புகளுக்கும் செயல்படுத்தப்பட உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

[1986 மே 14

திரு. சி. சிவப்பிரகாசம் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உலக வங்கி மேற்கொள்ளும் திட்டங்கள் எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் செய்யப்பட இருக்கிறது? இதில் என்னென்ன பணிகள் செய்யப்பட இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு சேலம் மாவட்டத்திற்கு மட்டும் ரூ. 33.02 கோடியாகும். அதோடு தேவூர் குடிநீர்த் துணைத் திட்டம் மற்றும் அரசிராமணி துணைத் திட்டங்களும் உலக வங்கித் திட்டத்தில் அடங்கும். அதன் மதிப்பீடு ரூ. 73.59 இலட்சமாகும். இவை குடிநீர் வழங்குவதற்காக செய்யப்படுகிற திட்டங்கள்.

திரு. சி. சிவப்பிரகாசம் : பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க ஒரு திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டு, அந்தப் பணி வருகிற நிதி ஆண்டில் இந்த உலக வங்கி உதவியோடு செய்யும் திட்டத்தில் சேர்த்து எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலக வங்கி உதவியோடு குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்படும் ஏற்பாடு மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ரூ. 141.42 கோடி செலவில் உருவாக்கப்பட்டிருக்கிற திட்டம். இந்தத் திட்டம் கோவை, சேலம், மதுரை ஆகிய மூன்று பெரு நகரங்களுக்கும், 75 நடுத்தர நகரங்களுக்கும், 740 கிராமக் குடியிருப்புகளுக்கும் நிறைவேற்றப்பட இருக்கின்றது.

திரு. கே. குப்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதை விட உலக வங்கி உதவியோடு நிறைவேற்றப்பட இருக்கிற திட்டங்களில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. எனவே உலக வங்கி உதவியோடு நிறைவேற்றப்பட முடிவு செய்யப்பட்டுள்ள திட்டங்களை குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றுகிற வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இதில் தாமதம் எதுவும் இல்லை. உலக

1986 மே 14]

வங்கித் திட்டத்திற்கான ஒப்பந்தம் பிப்ரவரி 1985-ல் அறுதியிடப்பட்டது. இது $4\frac{1}{2}$ ஆண்டுக் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

(முற்பகல் 9–30)

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவி மூலம் பல ஜில்லாக்களில் பல கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தயாரித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கேயெல்லாம் தண்ணீர் இல்லாமல் இருக்கிறதோ, அங்கேயெல்லாம் போர் போடுகிறார்கள். கிரவுண்ட் வாட்டர் பெயில்யூர் ஆகிவிடுகிறது. எனவே, கூட்டு குடிநீர்த்திட்டத்தை காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம் என்ற முறையில் எங்கேயெல்லாம் அமுல் நடத்த வேண்டுமென்று மக்கள் கேட்கிறார்களோ, அங்கேயெல்லாம் இத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, அமுல் நடத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உலக வங்கியின் மூலமாகத்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதில்லை. அதற்கு பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற அமைப்புகளின் மூலம் கடனுதவி பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதில், குடிநீர் வடிகால் வாரியம் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

திரு ச. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி, கொங்கனாபுரம், மகுடம்சாவடி போன்ற பகுதிகளுக்கு குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த இருப்பதாக ஏற்கனவே இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், இந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? விரைவில் பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதுபற்றி இப்போது தகவல் இல்லை.

இராமுத்தேவன் பட்டியில் மாதிரிப் பண்ணைகள்.

746 (*வினா எண். 7869) திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, இராமுத்தேவன்பட்டி கிராமம் அருகே வேளாண்மைப் பல்கலைக் கழகம் மூலம் ஆராய்ச்சி மையங்கள், மாதிரிப் பண்ணைகள் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலைகள் தொடங்கப் படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதி, இராமுத்தேவன்பட்டி கிராமம் அருகே விவசாயப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சி மையங்கள், மாதிரிப் பண்ணைகள் அமைக்க ஆராய்ச்சி நடத்தியதாக அறிகிறேன். இந்த நிதி ஆண்டிலாவது அந்த ஆராய்ச்சி மையங்களையும், மாதிரிப் பண்ணைகளையும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரு ஆராய்ச்சி பண்ணை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய அமைத்த குழு, ஏழு இடங்களை பார்வையிட்டு, மேற்படி பண்ணையை சேவல்பட்டியின் பக்கத்தில் அமைக்க 500 ஏக்கர் பரப்பளவில் கால்நடை, தீவனப் பயிர் மற்றும் விவசாயம், தோட்டக்கலை, வனப் பயிர் சம்பந்தமான ஆராய்ச்சிகளைத் தொடங்கலாம் என்று சிபார்சு செய்துள்ளது. ஆனால், நடப்பு ஐந்தாண்டு திட்டத்தில் தகுந்த நிதி ஒதுக்கீடு இல்லாததால் அந்தத் திட்டத்தை உடனடியாகத் தொடங்குவதற்கில்லை. போதிய நிதி வசதி கிடைக்கும்போது அது தொடங்கப்படும்.

திரு. கா. செ. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலமாக ஆராய்ச்சி மையங்கள், மற்றும் மாதிரிப் பண்ணைகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? புதிதாக எங்கெங்கு துவக்கப்பட இருக்கின்றன? எல்லா மாவட்டங்களிலும் மாதிரிப் பண்ணைகளை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

பருத்தி விலை.

747 (*வினா எண் 9074) திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் பயனுறும் வகையில் பருத்தி விலையை உயர்த்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.

LEGISLATURE ... ALONE TRIUMPHS

1986 மே 14]

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் பருத்தியின் விலை ஏறு வதும், இறங்குவதுமாக உள்ளது. ஆனால், மகசூலுக்குத் தேவையான இடுபொருட்களின் விலை ஆண்டுக்கு ஆண்டு ஏறுகிறதே தவிர, இறங்குவது இல்லை. ஆகவே, பருத்தியின் விலை ஏறினாலும், இறங்கினாலும், இடுபொருட்களின் விலை ஏறிக்கொண்டே போவதினால், விவசாயப் பெருமக்கள் மிகவும் வேதனை அடைந்துள்ளார்கள். அவர்கள் அவதியைப் போக்குகின்ற இந்த அரசு, விவசாயிகளுக்கு உழைப்புக்கு ஏற்றவாறு ஊதியம் கிடைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர் கள் வழிவகை செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர் களே, பருத்தியைப் பொறுத்தவரையில், பருத்தியின் கொள் முதல் விலையை மத்திய அரசின் விவசாய விளைபொருள் விலைகளை நிர்ணயிக்கும் குழு முடிவு செய்து, இரகவாரியாக கொள்முதல் விலைகளை நிர்ணயம் செய்து மாநில அரசுக் குத் தெரிவிக்கிறது. இந்தக் கொள்முதல் விலைகளின் அடிப்படை யில்தான், நாம் அந்த விவசாயப் பெருமக்களுக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால்தான் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வதுபோல், ஆண்டுக்கு ஆண்டு பருத்தியின் விலையையும் நிர்ணயம் செய்து மற்ற மாநிலங்களுக்கு நம் அரசு வழிகாட்டியாக இருக்கும் முறையில் செயல்பட முன்வருமா? மைய அரசுக்கு நம் அரசு எவ்வளவு விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று பரிந் துரை செய்திருக்கிறது? அதற்கு மைய அரசு எவ்வளவு தர முன்வந்துள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறி விப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர் களே, மத்திய அரசு பருத்தியைப் பொறுத்தவரையில் கொள முதல் விலையை நிர்ணயம் செய்து அனுப்பியதற்குப் பிறகு, மாநில அரசு அதை மாற்றம் செய்ய வழியில்லை. இந்த ஆண் டைப் பொறுத்தவரையில், நாம் எம்சியு 5 பருத்திக்கு குவிண் டால் ஒன்றுக்கு ரூ. 650 தரவேண்டும் என்று பரிந்துரை செய் தோம். மத்திய அரசு 555 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக் கிறது. எம்சியு 7-க்கு ரூ. 600 பரிந்துரை செய்தோம், அவர்கள் 500 என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். எல்ஆர்எ 5166-க்கு ரூ. 550 என்று நிர்ணயம் செய்தோம். அவர்கள் ரூ. 505 என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். வரலட்சுமி பருத்திக்கு 700 ரூபாய் என்று நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். மத்திய

அரசு 577 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிக்கிறார்கள். ஆகவே நாம் செய்யக்கூடிய பரிந்துரைக்கும், மத்திய அரசு நிர்ணயிக்கக்கூடிய விலைக்கும் தொடர்பில்லாத காரணத்தால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு சில பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இருந்தாலும் உரிய வகையில் விவசாயப் பெருமக்கள் உற்சாகப்படுகிற அளவிற்கு மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் எல்ஆர்ஏ காட்டன் விலை மிகவும் குறைந்து விட்டது. அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அரசு நியாயமான விலையில் பருத்தி கொள்முதல் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்த நியாயமான விலை என்பதில் தான் சிக்கல இருக்கிறது. நாம் பரிந்துரை செய்கிற விலைக்கும் மத்திய அரசு நிர்ணயிக்கிற விலைக்கும் சிக்கல் இருக்கிறது. இருந்தாலும மாநில அரசு உரிய அளவில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, மத்திய அரசு பருத்தியைப் போல கரும்பு, நெல் போன்றவைகளுக்கும் விலை நிர்ணயம் செய்கிறார்கள். மாநில அரசு ஊக்கத் தொகையாக ஒரு தொகையை வழங்குகிறது. அதைப்போல மாநில அரசு பருத்தி உற்பத்தியாளர்களுக்கும் ஒரு குவிண்டாலுக்கு இவ்வளவு என்று மானியமாக வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதைப் பெரும்பாலும் வாங்குவது இந்திய பருத்திக் கழகம் தான். ஆகவே இதை அதிகப்படுத்துவதற்கு வழியில்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, தமிழக அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்த விலை மத்திய அரசு அறிவித்த அடிப்படை விலையைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது. தமிழக அரசு சிபாரிசு செய்த அந்த விலையின் அடிப்படையில் தமிழ் நாடு தனிப் பருத்திக் கழகத்தை ஏற்படுத்தி, விவசாயிகள் மத்தியில் தேங்கிக் கிடக்கிற அதிகமான நீண்ட இழை பருத்தியைக் கொள்முதல் செய்வதற்கு இந்த ஆண்டே அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1986 மே 14]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கனவே அதுபற்றிய சாத்தியக்கூறுகளை எல்லாம் நாம் ஆராய்ந்து பார்த்தோம். மராட்டிய மாநிலத்தில் அமைந்திருப்பதைப் போல தனியாக பருத்திக் கழகத்தை அமைக்கலாமா என்று பார்த்தோம். ஆனால் அதற்கு ஆகக்கூடிய செலவு மற்றவைகளைக் கருத்திலே கொண்டு பார்க்கிறபோது நம்மாலே இப்படி தனிப் பருத்திக் கழகத்தை நடத்த வாய்ப்பில்லை என்கிற நிலையில்தான் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

திரு. கோ. வீரய்யன் : தலைவர் அவர்களே, பருத்தி உற்பத்திச் செலவைப் பொறுத்தவரையில் மிகவும் கூடியிருக்கிறது. ஆனால் பருத்தி விலை மூன்று ஆண்டு காலமாக தொடர்ச்சியாக வீழ்ந்து கொண்டிருக்கிறது. மாநில அரசு ஒரு விலையை சிபாரிசு செய்திருக்கிறது. மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற விலையை விட கீழே போகிறபோது, அந்த விலையை விட கீழே போகாமல் இருப்பதற்கான உத்தரவாதத்தை மாநில அரசு ஏற்படுத்துமா? சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், கூட்டுறவுத் துறை, அல்லது வேளாண்மைத் துறை என்று இப்படி ஏதாவது துறையின் மூலமாக கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவைப்படுகிற பருத்தியையாவது நேரிடையாக மாநில அரசு கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கையெடுக்குமா? இந்திய பருத்திக் கழகத்தின் மூலமாக தமிழக அரசு கொள்முதல் செய்வதற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்துவதற்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உற்பத்திச் செலவு அதிகமாகியிருக்கிறது என்பதை நாம் கணக்கிலே கொண்டுதான் அதற்குரிய நியாயமான விலை கொடுக்கவேண்டுமென்று பரிந்துரைகளை வழங்கியிருக்கிறோம். ஆனாலும் மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற அந்த விலைக்கும் குறையாமல் விவசாயப் பெருமக்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் நாம் உரிய நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகிறோம். தஞ்சை மாவட்டத்தில் சிக்கல் ஏற்பட்டபோதும், நாம் அதுபோன்ற முயற்சியை எடுத்து, விவசாயப் பெருமக்களிடமிருந்து பருத்தியை வாங்குவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்தோம். அந்த வகையில்தான் மாநில அரசு முயற்சி எடுக்க முடியும். அந்த முயற்சியை மாநில அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 748 மற்றும் 749 ஆகியவை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

செங்குன்றம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் புதிய பாலம்.

652—(*வினா எண். 4067-ஏ) திரு. ஜி. கே. ஜே. பாரதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்குன்றம் அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் ஒரு புதிய பாலம் கட்டப்பட்டு போக்குவரத்திற்கு திறந்துவிடப்படுவதற்கு முன்பாகவே விரிசல்கள் ஏற்பட்டு முற்றிலும் பழுதானதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(இ) அங்கு மீண்டும் புதிய பாலம் கட்டுவதற்கு அரசு பரிசீலனை உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) செங்கற்பட்டு மாவட்டம் செங்குன்றத்தில் சென்னை — கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பாலம் கட்டுமானக் குறைபாடுகளின் காரணமாக உபயோகத்திற்கு திறந்து விடப்படாமல் உள்ளது. குறைபாடுகளை நிவர்த்தி செய்ய கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி பாலம் 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தான் போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டது. பாலம் போக்குவரத்திற்குத் திறந்து வைக்கப்பட்ட பின்னர் 1979-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பாலத்தின் மேல் தளத்தில் கடுமையான இடர்பாடுகள் தோன்றலாயின. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்படி கட்டுமானங்களின் தரக்குறைவின் காரணமாக இது ஏற்பட்டிருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. எனவே பாலத்தில் போக்குவரத்து நடைபெறாத வண்ணம் பாலம் மூடப்பட்டது. தரக்குறைவான கட்டுமானப் பணிக்கு காரணமாகயிருந்த அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேற்படிபாலத்தை புதியதாக திரும்பக்கட்டுவதற்கு சிறப்பு பழுது நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டு, அதனுடைய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்புதலுக்காக மைய அரசுக்கு அனுப்ப நடவடிக்கையெடுக்கப்பட்டு இருக்கிறது.

1986 மே 14]

(முற்பகல் 9-40)

திரு. ஜி. கே. ஜே. பாரதி : மாண்புமிகு பேரவையின் தளநாயகர் அவர்களே, நம்முடைய செங்குன்றம் அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலையினுடைய பாலத்தை அமைச்சர் பெருந்தகை அவர்கள் கட்டி முடித்த பிறகு திறந்ததாகச் சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதியில் கட்டி முடித்த பிறகு, விழா எடுக்காமலேயே அந்தப் பாலம் பழுதுபட்டு இருக்கிறது என்பதை அந்தப் பகுதி மக்கள் நன்றாக அறிவார்கள். அந்தத் தொகுதியைச் சேர்ந்த நானும் அறிவேன். இருந்தாலும் கட்டுமானப் பணியிலே ஏற்பட்ட கோளாறுகளினால் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அல்லது எடுக்கவில்லை என்றாலும், அந்த ஒப்பந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்களா? அந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அந்த இழப்புத் தொகையை வசூலிக்கின்ற வாய்ப்பை உருவாக்குவீர்களா? ஒரு விழா எடுக்காமலேயே அந்தப் பாலம் பழுதடைந்திருக்கிறது. ஒருவேளை விழா எடுத்த பின்பு, அந்தப் பாலம் பழுதுபட்டு இருந்தால், அந்த ஒப்பந்தக்காரர் தப்பித்து இருப்பார். ஆகவே அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்பதை மீண்டும் அமைச்சர் பெருந்தகை அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எல்லாப் பாலங்களுக்கும் கட்டுகிற எல்லா இடத்திலேயும் நாம் விழா எடுத்துவிட முடியாது. இந்தப் பாலம் 1974–லே கட்டி முடிக்கப்பட்டது. அங்கே உள்ள பை-பாஸ் ரோடு இருக்கிறதே, அது முடிக்கப்படாமல் இருந்த காரணத்தால், 1979-லே தான் பொதுமக்களுடைய உபயோகத்திற்காக திறந்து விடப்பட்டது. ஆனால் திறந்து விட்ட சில காலத்திலேயே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, அந்த மேல் தளத்திலே சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. அது என்ன காரணத்தால் ஏற்பட்டு இருக்கிறது என்பதைப் பற்றி ஆய்வு செய்த பின்பு அதிலே கட்டுமானம் தரக்குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால்தான் இது ஏற்பட்டு இருக்கிறது என்பதை உணர்ந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைப் பற்றிய முழு விவரம் என்னிடம் இல்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அந்தப் பொறுப்பை ஏற்றுக் கட்டியவர்கள் அத்தனை பேர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்து, அந்த நடவடிக்கைகளுக்குப் பின்புதான், நம்முடைய புலன் ஆய்வுத் துறை கூட அதைப் பார்த்துவிட்டு, அவர்களிடத்திலே அந்தப் பாலத்தினுடைய பொறுப்பு கூட ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. 1982-லேதான் அதனுடைய

வேலைகளை முடித்து நம்மிடத்திலே திருப்பி ஒப்படைத்து இருக்கிறார்கள். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் தல நாயகர் அவர்களே, அமைச்சர் பெருந்தகை அவர்களுக்கு நன்றி. இருந்தாலும் மீண்டும் அந்தப் பணியை தொடங்குவதற்கு பணம் எவ்வளவு ஒதுக்கி இருக்கிறீர்கள். மீண்டும் இப்படி ஒரு தவறு நிகழாவண்ணம் அரசு கண்காணிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் விழா எடுத்து நம்முடைய அரசு செய்கின்ற பணிகளை விளம்பரப்படுத்துவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசாங்கத்திற்கு அதை புதிய பாலமாக கட்ட வேண்டும் என்பதற்காக 3 முறை நாம் பரிந்துரை செய்தோம். ஆனால் மத்திய அரசைப் பொறுத்தவரையில், அதே இடத்திலே அந்தப் பாலத்தை அமைக்க வேண்டும் என்று அவர்கள் நமக்குச் சொல்லிவிட்டார்கள். இதுவரையில், புலன் ஆய்வுத்துறையிடத்திலே அந்தப் பாலம் ஆய்வுக்காக ஒப்படைக்கப்பட்டு இருந்த காரணத்தால், 1982 வரை அந்த இடம் நமக்கு கிடைக்கவில்லை. இப்போது 21 லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரித்து மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்த ஒப்புதல் கிடைத்த உடனே, அந்தப் பாலத்தை மீண்டும் சரிசெய்ய முடியுமா என்ற முயற்சியை மாநில அரசு மேற்கொள்ளும்.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லூருக்குச் செல்லுகின்ற இந்த தேசிய நெடுஞ்சாலையில் செங்குன்றத்தில் அமைந்து உள்ள இந்தப் பாலத்தினுடைய டிசைன் செய்ததே தவறு என்று கருதப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்து இருந்தால், அந்த டிசைன் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, முழு விளக்கமும் இந்த டெக்னிக்கல் பாயின்ட்ஸ் பொறுத்தவரை என்னிடத்திலே இல்லை என்றாலும், டிசைனிலே எனக்குத் தெரிந்த வரையில் நான் அந்த இடத்தைப் பார்த்து இருக்கிறேன் — எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் கட்டப்பட்ட அந்த மேல் தளம் அது ஒட்டையாக கீழே விழுந்து இருக்கிறது. தண்ணீர் வந்து அடித்துக் கொண்டு போனாலோ அல்லது வண்டிகள் அதிகமாக அந்த இடத்திலே வந்து விபத்துக்கள் ஏற்பட்டாலும், டிசைனிலே நாம்

1986 மே 14]

குறை சொல்ல முடியும். ஆனால் மேல் தளம் இடிந்து விழுவதற்கும், டிசைனுக்கும் சம்பந்தம் கிடையாது. அதைச் செய்தவர்கள் சரியாகச் செய்யவில்லை என்பது தான் எனக்குக் கிடைத்த தகவல். எதுவாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டிசைனிலே தவறு இல்லை என்று சொன்னார்கள். நான் அந்தப் பாலத்தை சென்று பார்க்கிறபோது, அங்கே அமைக்கப்பட்டு இருக்கிற அந்தக் காலங்கள் கூட வித்தியாசமாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் அதைக் கட்டிய காண்ட்ராக்டர், அந்த ஸ்பெசிபிகேஷன்படி கட்டினாரா, அல்லது டிசைன் எடுத்தவர்கள் தவறு செய்திருக்கிறார்களா? அதைக் கட்டிய ஒப்பந்தக்காரர்கள், மற்றும் அதைச் சூப்பர்வைஸ் செய்தவர்களோடு சேர்ந்து தான் மாபெரும் ஊழலைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது? கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? இதில் நஷ்டமான பணத்தைத் திரும்பப்பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டு இருக்கிறதா? இப்போது அதைக் கட்டுவதற்கு ஏன் தாமதம் ஆகிறது? அதற்கு பை-பாஸ் சாலை என்பது கூட இல்லை. அது இல்லாததால், ஏற்கனவே இருந்த பழைய சாலையிலேயே பொதுமக்கள் செல்லுகின்றார்கள். இந்த பை-பாஸ் சாலையைத் தவிர, அங்கே வேறு நல்ல சாலை கிடையாது? எனவே எப்போது அந்த வேலை துவங்கப்பட்டு முடிக்கப்படும்? இவ்வளவு முக்கியமான நெடுஞ்சாலை இல்லாமல் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே எப்போது முடிப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே அவர் கேட்ட கேள்வி சிலவற்றுக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். டிசைனில் முழுக்க முழுக்க தவறு இல்லை என்று நான் சொல்லவில்லை. எனக்குத் தெரிந்தவரையில் நான் பார்த்தபோது அந்த மேல் தளம் உடைந்து கீழே விழுந்திருக்கிறது. அதன் காரணத்தால் நமக்கு உடனடியாகத் தோன்றுவது அதைக் கட்டியவர்கள் சரியாக கட்டவில்லை என்பதுதான். இதிலே என்ன நடவடிக்கை என்றால், அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் அந்த கட்டுமானம் செய்தவர்கள் மீது என்ன நடவடிக்கை என்கின்ற விளக்கம் என்னிடத்திலே இல்லாத காரணத்தால்தான் பின்னாலே தருகின்றேன் என்று சொன்னேன். மத்திய அரசாங்கத்திற்கு இது சம்பந்தமாக 3 முறை நாம் மதிப்பீடு தயார் செய்து வேறு இடத்திலே கட்டி விடலாம் என்று அந்த ஏற்பாட்டை நாம் செய்தோம். ஆனால், மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அந்த இடத்திலேயே மீண்டும் கட்ட வேண்டுமென்று

[1986 மே 14

சொல்லிவிட்ட காரணத்தால் இதை உடனடியாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. காரணம், ஆய்வுக்காக புலன் ஆய்வுத் துறையிடத்திலே அந்தப் பாலம் ஒப்படைக்கப்பட்டது. அதை மீண்டும் 82-லே நம்மிடத்திலே திருப்பி ஒப்படைத்து விட்டார்கள். எனவே அந்த இடத்திலேயே இடித்துவிட்டு புதிய பாலம் கட்டலாமா என்று மத்திய அரசாங்கத்துக்கு எழுதிய போது மீண்டும் அதிலே ஒரு 'ஜாயின்ட் இன்ஸ்பெக்ஷன்' போட்டு அதையே ரிப்பேர் செய்யலாமா என்று முயற்சி எடுத்து 27 லட்ச ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி பெறப்பட்ட பின்புதான் அந்த வேலையை நாம் துவங்க முடியும். அதுவரை துவங்க முடியாது. எனவே அந்த அனுமதி கிடைத்தவுடனே வேலையைத் துவங்கி எவ்வளவு விரைவாக முடிக்கமுடியுமோ அவ்வளவு விரைவாக முடித்து விடலாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அரசு கட்டுமானப் பணியில் இப்படிப் பட்ட குறைகள் வராமல் இருப்பதைத் தவிர்ப்பதற்காக, ஒரு குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்து, அது கட்டிமுடிக்கப்பட்ட ஒரு 5 ஆண்டு காலத்திற்குள் ஒரு சிறிய பழுது ஏற்பட்டாலோ பெரிய பழுதுகள் ஏற்பட்டாலோ, அதற்கு அதை செய்த காண்டிராக் டர்கள்தான் பொறுப்பு எடுக்க வேண்டும் என்கிற வகையில் அதனுடைய முழு தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை 5 ஆண்டுகளுக்குள் கொடுக்காமல், இடையிலே பழுது ஏற்பட் டால் அவர்கள்தான் சரி செய்ய வேண்டுமென்கிற வகையிலே அரசாங்கம் ஒரு ஆணையைப் பிறப்பிக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது நல்ல யோசனைதான். அதுபற்றி ஆய்வு செய்து பார்க் கலாம். ஆனால் நமக்கு ஏற்படுகிற பிரச்சனை என்னவென்று சொன்னால் இதை எடுத்து கட்டக்கூடியவர்கள் அதிகமாக வராமல், போட்டியில்லாமல், குறிப்பிட்ட வசதிகள் உள்ளவர் கள் மட்டுமே செய்ய முடியும் என்ற நிலை ஏற்படுகிறபோது, அதிகமான தொகையை நாம் கொடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. எனவே அது பற்றி தனியாக ஆய்வு செய்து வேண்டுமானால் நாம் நட வடிக்கை எடுக்கலாம்.

1986 மே 14]

போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம்.

*653—(*வினா எண் 4540)* **திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் முதலீடு பெறும் வழி என்ன ?

(ஆ) அவற்றிற்கு கழகம் செலுத்தும் வட்டி வீதம் என்ன ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) பொதுமக்கள், நிறுவனங்கள், கம்பெனிகள் முதலானவர்களிடமிருந்து வைப்புத் தொகைகளை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் ஏற்றுக்கொள்கிறது.

(ஆ) 14.5 சதவீதம் வட்டி அளிக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் பொது மக்களிடமிருந்து வைப்பு நிதி பெறும்போது அவர்களுக்கு என்ன சதவீதம் வட்டி கொடுக்கிறார்கள்? இக்கழகம் மற்றவர்களுக்கு கடன் வழங்கும்போது அவர்களிடமிருந்து என்ன வட்டி வசூலிக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதியாக பெறும் தொகைக்கு நான் ஏற்கனவே சொன்னதுபோல் 14.5 சதவீதம் வட்டி கொடுக்கிறார்கள். இதிலே 2, 3 மூன்று முறைகள் இருக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக அந்த வைப்பு நிதியை வைத்தார்களானால் அதற்கு வட்டிவிகிதம் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். அதிலே பர்சென்டேஜ் என்று போடாமல், ஆயிரம் ரூபாய் செலுத்தினால் மூன்று ஆண்டு காலத்திற்கு அதை தொடர்ந்து வைத்திருந்தால் 1,540 ரூபாய் என்றும், இரண்டு ஆண்டுக்காலம் என்று சொன்னால் 1,285 ரூபாய் என்றும் ஓராண்டு காலத்திற்கு வைத்திருந்தால் 1,130 ரூபாய் என்றும் இப்படி பல வகையிலே இருக்கின்றன. இது மிக மிக உபயோகமான, மக்களுடைய வைப்பு நிதிக்கு, ஒரு தகுந்த வருமானத்தை ஈட்ட கூடியதாகக் கூட இருக்கிறது. இந்த நேரத்திலே இந்தக் கேள்விகூட மிக பயனுள்ள நேரத்தில் வந்திருக்கிறது. இதிலே பலபேர் டெபாசிட் செய்து பயன் அடைய வேண்டுமென்று கூட நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று அவர்கள் திருப்பி கடனாக கொடுக்கிற இடத்தில் நம்முடைய போக்குவரத்துக் கழகங்களுக்கு அவர்கள் கொடுக்கிறார்கள். அவர்களிடத்திலே 16 சத

[1986 மே 14

வீதம் பெறுகிறர்கள். அது சரியான விகிதமா, எவ்வளவு பெறுகிறார்கள் என்பதற்கான சரியான விளக்கம் என்னிடத்திலே இல்லை. ஆனால் 16 சதவீதம் என்று சொல்லியிருப்பதாக எனக்கு நினைவு. இவர்கள் கொடுப்பது 14.5 சதவீதம்.

போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் வேகத் தடைக் கருவி.

654—(*வினா எண் 5431) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்துகளில் தற்பொழுது ''வேகத்தடை கருவி'' பயன்படுத்தாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேகத்தடைக் கருவிகள் அடிக்கடி பழுதடைந்துவிடுவதாலும், உதிரி பாகங்கள் கிடைக்காத காரணத்தாலும் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்துகளில் வேகத்தடை கருவிகள் பெரும்பாலும் பொருத்தப்படாமல் இருக்கின்றன.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேகத்தடைக் கருவிகள் பொருத்தப்படாததால் இன்றைக்குப் பல விபத்துகள் நடப்பதை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். இரண்டு தினங்களுக்கு முன்பாகக் கூட சைதை மர்மலாங் பாலத்தில் வேகமாக வந்த அந்த பஸ், கண்ட்ரோல் பண்ணமுடியாத காரணத்தால் ஆற்றுக்குள்ளே விழுந்து விட்டது. ஆகவே இப்படி அதிகமான வேகத்தில் வருகின்ற பல்லவன் போக்குவரத்து பேருந்துகளைக் கட்டுப்படுத்த வேகத்தடை இல்லையென்றாலும் பேருந்துகள் 40 கிலோ மீட்டர் வேகத்துக்கு மேல் செல்லமுடியாத வகையில் மாற்றம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எல்லா போக்குவரத்துக் கழகங்களினுடைய பேருந்துகளில் வேகக் கட்டுப்பாடு கருவிகள் இல்லையென்று நான் சொல்லவில்லை. சமீபத்தில் எடுக்கப்பட்ட வண்டிகளிலே அதை பொருத்தமுடியாத நிலை ஏற்பட்டது. அதற்கு இப்போது மாற்றாக—ஏற்கனவே நாம் பொருத்தியவைகளிலே சிலவற்றிலே பழுது பார்க்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இப்போது அதை பழுது பார்ப்பதற்கான ஏற்பாட்டை சேரன் போக்குவரத்து கழகம் ஏற்றுக்கொண்டு அதை படிப்படியாக செய்து வருகிறது. புதிதாக நாம் எடுக்கிற வண்டிகளுக்கு சேரன் போக்குவரத்துக் கழகம் தயார் செய்கிற அந்த வேகக் கட்டுப்பாடு கருவியை பொருத்துவதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது,

1986 மே 14]

அந்த பாலத்திலே விழுந்த வண்டியை பொறுத்தவரையில்— தயவுசெய்து நான் ஒரு தவறான எண்ணத்தை பொதுமக்களுக்கு சொல்லிவிடக்கூடாது. அந்த வண்டி வேகமாக வரவில்லை. அதற்கு மிக சமீபத்தில் நிறுத்தம் இருக்கிறது. ஸ்டாப்பிங் இருக்கிறது. அந்த இடத்தில் வண்டியை நிறுத்தி பேசஞ்சரை இறக்கி விட்டு மீண்டும் ஏற்றிக் கொண்டு அந்த ஓட்டுநர் வண்டியை ஓட்டி வருகிறார். அந்தப் பாலத்திற்கு முன்னால் ஒரு திருப்பம் இருக்கிறது. எனவே, அங்கே அதிகமான வேகத்தில் வருவதற்கு கட்டாயமாக வாய்ப்பு இல்லை. உடனடியாக நானே அந்த இடத்திற்குச் சென்று அந்த இடத்தைப் பார்த்தேன். அந்த இடத்திலே அவர்கள் பிரேக் அடித்த காரணத்தால் எவ்வளவு தூரத்திற்கு அந்த தார் இருக்கிறது என்பதை கூட நான் பார்த்தேன். வலது பக்கமாக போய் கொண்டிருந்த ஒரு சைக்கிள்காரர் திடீர் என்று உள்ளே நுழைந்து விட்ட காரணத்தால் இதிலே அதிகமான பயணிகளை வண்டியில் வைத்துக் கொண்டு அவ்வளவு பெரிய வண்டியை உடனடியாக பிரேக் அடித்து நிறுத்த முடியாத காரணத்தால் அந்த சைக்கிளிஸ்ட்டை காப்பாற்றவேண்டும் என்பதற்காக இடது பக்கமாக வண்டியை திருப்பி இருக்கிறார்கள். கட்டுப்படுத்த முடியாமல் வண்டியில் அதிகமான எண்ணிக்கையில் டிக்கட் இருந்த காரணத்தாலும் பெரிய வண்டியாக இருந்த காரணத்தாலும் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அது கீழே போய் விழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. எனவே அதிக வேகத்தால்தான் இது ஏற்பட்டது என்று சொல்லி நடக்காத ஒன்றை தவறாக பொதுமக்களுக்கு நாம் சொல்லிவிடக் கூடாது. காரணம் ஏதோ ஒரு காரணத்திற்காக அரசியல் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் சாதாரண பொதுமக்கள் சாலை விதிகளை கடைப்பிடிக்காமல் இருப்பதை நாம் எடுத்துச் சொல்வதற்கோ அல்லது அதை கடுமையாகச் சொல்வதற்கோ தயங்குகிறோம். அதன் காரணமாகத்தான் இப்படிப்பட்ட விபத்துகள் நடக்கிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அந்த சைக்கிளிஸ்ட்டு மட்டும் வராமல் இருந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்கவே இருக்காது என்பதை நான் இங்கே தெளிவாக சொல்ல விரும்புகிறேன். அதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இந்த விபத்துக்களை தடுக்க வேண்டும் என்பதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டி அதிலே கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை அமல் ஆக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து நடந்த இடத்தை நான் பார்த்தேன் அமைச்சர் அவர்கள் பார்த்துவிட்டு சென்ற பிறகு. அப்படிப்பட்ட ஒரு நிலை இல்லை என்று சொன்னதற்கு நன்றி. ஏன் என்றால்

அப்படிப்பட்ட தவறான தகவல் வெளியே வரக்கூடாது என்பதற்காகத்தான் அதை சொன்னேன். அப்படிப்பட்ட நிலை இல்லை என்றுசொன்னதற்கு நன்றி.

இந்த பஸ்களிலே அரசியல் கட்சிகளுடைய சுவரொட்டிகள் ஓட்டப்படுகின்றன. அவைகளை பார்ப்பதற்கு பொதுமக்களுக்கு அருவருப்பாக இருக்கிறது. ஒன்று பஸ்களில் விளம்பரம் செய்யப்படும்போது அதற்கு என்று பின்புறத்தில் ஒதுக்கி ஒரு கட்டணம் வசூலிக்கின்ற வகையில் ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டும் அல்லது எந்தவிதமான சுவரொட்டிகளும் அந்த பஸ்ஸில் ஓட்டினால் அந்த பஸ்ஸினுடைய நடத்துனரும், ஓட்டுனரும் பொறுப்பு ஏற்று அதை கிழித்து எறிவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி அதற்கு சம்பந்தம் இல்லை என்றாலும் உபயோகமாக இருக்கும் என்ற காரணத்தால் பதில் சொல்லுகிறேன். பேருந்துகளில் மட்டும் அல்ல, நெடுஞ்சாலையில் கூட போவதற்கு பொதுமக்களின் நன்மைக்காக இந்த பாதை எங்கே போகிறது என்று சைன் போர்டு இருக்கிறது. அதிலேகூட கொண்டு போய் ஒட்டி விடுகிறார்கள். அதை மீண்டும் கிழித்து எறிந்து அதில் பெயின்ட் அடித்து எழுதுவதற்கு நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஏற்கனவே நெடுஞ்சாலைத் துறைக்கு போதியபணம் இல்லாத காரணத்தால் சிரமப்பட்டுக்கொண்டு இருக்கும் இந்த நிலையில் இதனால் கூடுதலான செலவையும் நம்மைப் போன்றவர்கள்தான் ஏற்படுத்தி விடுகிறோம் என்று நான் கருதுகிறேன். அதே நிலைதான் இந்த பேருந்துகளிலும் ஏற்படுகிறது. இந்த போஸ்ட்டர்களை ஒட்டினால் அந்த பேருந்துகள் பாதிக்கப்படுகிறது. காரணம் பெயின்ட் மீண்டும் அடிக்கவேண்டிய நிலை எல்லாம் ஏற்படுகிறது. இதைக் கட்டாயமாக தவிர்க்க வேண்டும். நாங்கள் கடிதம் கூட ஒவ்வொரு அரசியல் கட்சித் தலைவருக்கும் எழுத வேண்டும் என்று ஒரு முயற்சி எடுத்தோம். அதுவே கூட தவறாக வந்து விடக்கூடாது என்ற காரணத்தால் அதை நிறுத்தி விட்டோம்.

இன்னும் ஒன்று அந்த டிரைவரும், நடத்துனரும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு அதை கிழிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு செய்வார்கள். ஆனால் கூட்டம் சேர்ந்து கொண்டு அவர்களுக்கு ஏதாவது ஆபத்து விளைவித்து விடக்கூடாது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். எனவே, இந்த நிலைகளை எல்லாம் மாற்றுகின்ற வகையில் நாமாக முயற்சி எடுத்தால் ஒழிய இதற்கு என்று சட்டம் இப்படி எல்லாம் கொண்டு வர வேண்டும் என்பது, கட்டணம் வசூலிப்பது என்பது இவைகளால் முடியாது. எனவே, அந்த அந்த அரசியல்

1986 மே 14]

கட்சிகள் கட்டாயமாக இந்த இடத்தில் ஓட்டக்கூடாது என்ற நிலையை உருவாக்குவார்களானால் இந்த பிரச்சினை தீர்க்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேகத் தடை கருவி வந்து 40 மைல் ஸ்பீடுக்கு மேல் போகக்கூடாது என்பதற்காக அந்த கருவி புகுத்தப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்களும் சொன்னார்கள். நான் உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து இருக்கிறேன். எல்லா இடங்களிலும் பேருந்துகள் இருக்கின்றன. அங்கே எல்லாம் வேகமான பயணத்தால்தான் ஆக்சிடெண்டு ஆகாமல் இருக்கிறது. இங்கே மட்டும் ஏன் இப்படி இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 கிலோ மீட்டர் என்று தான் நாம் குறிப்பிட்டு இருக்கிறோம். 40 அல்ல. இந்த 60 கிலோ மீட்டருக்கு மேல் போகக்கூடாது என்று குறிப்பிட்டு இருக்கிறோம். எல்லா இடத்திலும் வேகமாக போகவேண்டும் என்ற நிலை எங்கேயும் இல்லை. நாம் தவறாக அப்படி ஒரு எண்ணத்தை வைத்துக் கொண்டு இருக்கிறோம். எந்தெந்த இடங்களில் எவ்வளவு வேகமாகப் போகவேண்டுமென்று வெளிநாடுகளில் பார்க்கிறபோது, தாமரைக்கனி போல் சுற்றுப்பயணம் செய்வதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும், ஓரளவிற்கு ஒரு முறை முதலமைச்சரோடு செல்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. அங்கே பார்க்கிறபோது ஒவ்வொரு இடத்திலும் குறிப்பிட்ட வேகம் போகவேண்டுமென்றிருக்கிறது. அதிலே முறையாக அவர்கள் கடைப்பிடிக்கிற காரணத்தால் அங்கே விபத்துக்கள் நடப்பதில்லை. ஆனால் இங்கே 25 கிலோ மீட்டருக்கு மேல் போகக் கூடாது என்று சொன்னால், அவர்கள் 60 கிலோ மீட்டர் வேகத்தில் போவார்கள். அப்படிப்பட்ட நிலை இங்கே இருப்பதன் காரணமாகத்தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே எந்தெந்த . இடத்தில் எவ்வளவு வேகத்தில் போகவேண்டுமென்று இருக்கும்பொழுது, அதன்படி அந்த வேகத்தில் போனால் இந்த விபத்துக்களை தவிர்க்கலாம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேகத் தடைக் கருவிகள் அநேகமாக இப்போது பேருந்துகளில் சரிவர செயல்படுவதில்லை. இது ஆரம்பகாலத்தில் இந்தக் கருவிகள் எல்லா பேருந்துகளிலும் பொருத்தப்பட்டு சுறுசுறுப்பாக எல்லா வண்டிகளும் வேலை செய்தது. இப்போது மோட்டார் வாங்குகிற கம்பெனிக்காரர்களுக்கு கிடைக்க

வேண்டிய பணம் கிடைத்து விட்டது. இப்போதும் ரிப்பேர் செய்வதற்கு வழியிருக்கிறது. சேரன் டிரான்போர்ட்டில் அப்படி நடக்கிறது என்று சொல்வது சரியல்ல. கோவை நகரத்தில் அநேகமாக எல்லா இடங்களிலும் இந்தக் கருவிகள் வேலை செய்வதில்லை. நான் கேட்பதெல்லாம், இந்த வேகத்தை, முறை வைத்து கட்டுப்படுத்தி ஓட்ட வேண்டும். குறிப்பிட்ட வேகத்தில் போகவில்லை என்றால், தனியார் பஸ்கள் போட்டி போட்டுக்கொண்டு உங்கள் பிசினஸை கெடுத்துவிடுவார்கள். ஆகவே குறிப்பிட்ட வேகத்தில் அரசுப் பேருந்துகளை ஓட்டுவதற்கு, கருவிகளை ஒழுங்குபடுத்தி வைக்க அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு கார் வாங்குகிறபோது, அந்தக் காரை ஒரு முறை, இரண்டு முறை சர்வீஸ் செய்து கொடுப்பார்கள். அதற்குப் பின் அதைப் பழுது பார்க்க வேண்டிய பொறுப்பு அந்தக் காரினுடைய சொந்தக்காரருக்குத்தான். எனவே அந்தக் கருவியை வாங்குகிறபோது, அதைப்பொருத்தி, அது சரியாக இயங்குகிற வரை, அதைப் பழுது பார்த்துக் கொடுக்கவேண்டுமென்றும், அதை முறைப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டிருந்தோம். அதை ஏற்படுத்திக் கொடுத்து விட்டார்கள். தொடர்ந்து வருகின்ற அந்த ரிப்பேரைப் பார்ப்பதற்கு ஒரு சரியான வாய்ப்பு இல்லாமல், புதியதாக ஒரு வாய்ப்பு உருவாக்கப்பட்டு, புதியதாக மார்க்கெட்டில் வந்த காரணத்தால், அதற்கு சரியான உடனடியாகத் தேவையான அந்த உதிரி பாகங்கள் கிடைக்காமல் இருந்தது. இந்த உதிரி பாகங்களை வாங்குவதில் கூட, கொஞ்சம் அதிகமான விலை கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. சேரன் போக்குவரத்துக் கழகம் அதைச் செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதை விரிவாக்கி, எல்லா போக்குவரத்துக் கழகங்களும் செய்ய வேண்டுமென்ற ஏற்பாட்டைத்தான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளம்பரச் சுவரொட்டிகளைப் பற்றி, போக்குவரத்துத் துறையிலே ஒட்டுவதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதைத் தடுப்பதற்கு கருவிகள் வழங்கப்படுவதை விட, ஒவ்வொரு பேருந்திற்குப் பின்னாலே விளம்பரப் பலகைகளை அத்தோடு இணைத்து வைத்து, ஒரு நாளைக்கு இவ்வளவு தொகை என்று வசூல் செய்ய முடியுமா?

அதேபோல் இன்றைக்கு டிராபிக் ரெகுலேட் பண்ணுவதற்கு டிராபிக் கான்ஸ்டபிள்களுக்கு பல நிறுவனங்கள், வங்கிகள் போன்றவைகள் நிழற் குடைகளை தந்திருக்கின்றன. ஆக அந்த நிழற்குடைகளை பல அரசியல் கட்சிகள், வேறு பல நிறுவனங்கள் அவற்றை விளம்பரப்பலகைகளாக மாற்றுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு).

986 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்க வேண்டும்.

டாக்டர்கே. பி. இராமலிங்கம்: ஆகவே, டிராபிக் கான்ஸ்டபிள் காட்டுகிற ரெகுலேஷன்களையெல்லாம் பார்க்க முடியாமல்இதிலே ஒட்டப்படுகின்ற பெண்களுடைய படங்களை பார்த்து கொண்டு, அந்த டிரைவர்கள் எல்லாம் தடம் புரளுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்த நிழற் குடைகளில் இது போன்று ஒட்டக்கூடாது என்று அந்தப் போலீஸ்காரர்களை வைத்தாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எங்கோ போய் இப்படி விபத்து ஏற்பட்டிருக்கிறது. அந்த அனுபவத்தின் காரணமாக இப்படி பொருத்தமாக சொல்கிறார்கள். கொஞ்சம் ஏமாந்து போனால், மனிதனுடைய முதுகினிலே கூட ஒட்டி விட்டுப் போகின்ற நிலை தான் இப்போது இருக்கிறது. இப்போது பேருந்துகளில் கூட, பின்னாலே அதற்காக ஒரு போர்டை வைக்கவேண்டுமென்ற ஒரு நடவடிக்கையை எடுத்தோம். அதற்காக கணக்குப்போட்டு பார்க்கிறபோது பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவாகும் என்ற நிலை ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட சந்தேகம் எல்லாம் இந்த போர்டை பல இலட்ச ரூபாய் செலவானாலும் பரவாயில்லை, பேருந்துகளை பாதுகாக்க வேண்டுமென்பதற்காகச் செய்து விடலாம். ஆனால் அரசியல் கட்சிகள், இதிலே ஒட்டுவார்களா? அதெல்லாம் முடியாது, சைட்டிலே தான் ஒட்டுவோம் என்ற பிரச்சினையை ஏற்படுத்தி விடுவார்களா? கட்டணம் கொடுப்பார்களா? இவ்வளவு கட்டணம் கொடுக்கவேண்டுமென்று கேட்டால் அப்படி கேட்டவர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமா? இதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே நாமாக ஏதோ நினைத்துக் கொண்டு பேசுவதைவிட ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் இப்படிப்பட்ட பேருந்துகளில் ஒட்டுகிறபோது ஒரு முறையை கடைபிடிக்க வேண்டுமென்ற நிலையை எல்லா உறுப்பினர்களுக்கும், அந்தந்த கட்சிகளின் கிளைகளுக்கும் தெரிவித்துவிடுவார்களானால், இதை அமலாக்குவதற்கு சுலபமாக இருக்கும். எனவே பல இலட்சணக்கான ரூபாயை வீணடித்து, இதைப்பயன்படுத்தாமல் மீண்டும் இதே நிலை வருவதற்கு நாங்கள் விரும்பவில்லை. எல்லோரும் ஏற்றுக்கொண்டால் இதைச் செய்யலாம்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இங்கே நம்முடைய எதிர்க்கட்சியினுடைய தலைவர் திரு. ரமணி அவர்கள் கேட்கிறபோது, தனியாருடைய வாகனங்கள் முந்திக் கொண்டு, அரசாங்க வாகனங்கள் குறிப்பிட்ட அளவுக்கு வேகமாகச் சென்றால், கார்ப்பரேஷனுக்கு வருமானம் குறைந்து விடுகிறது என்பது போல் சொன்னார்கள். எனவே, தனியார் வாகனங்களை ஓட்டுகிற டிரைவர்களை அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிற வகையில், அந்தந்தப் பகுதியில் மோட்டார் வாகன ஆய்வாளர் மூலமாக அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளிகளை அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது என்பது அவ்வளவு சரியான முறையாக இருக்கமுடியாது. அது நடைமுறையிலே ஏற்றுக்கொள்வதாகவும் இருக்க முடியாது. வேகமாகப் போகவேண்டாம் என்று நாம் சொல்லலாம். இவ்வளவு கிலோ மீட்டர் வேகம் தான் போகலாம் என்று சொன்னால், யாராக இருந்தாலும், தனியார் ஓட்டுநர்களானாலும், சொந்த வண்டி ஓட்டிச் செல்பவர்களாக இருந்தாலும் கூட, 40 கிலோ மீட்டருக்கு மேலே போகக்கூடாது என்றால் போகக்கூடாது. அப்படி மீறிப் போனால் நடவடிக்கை எடுக்க போக்குவரத்துத் துறைக்கும், காவல் துறைக்கும் அதிகாரம் இருக்கிறது. எனவே, அவர்களை நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர இயலாது.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், போக்குவரத்துத்துறை அனைத்து ஊழியர்களுக்கும் லைசென்சு கொடுக்கிறார்கள். ஆனால், விரைவு வண்டிகள் செல்லும்போது, குறுக்கே வரக்கூடிய லாரிகள், அல்லது குறுகிய இடங்களில் வரக்கூடிய டவுன் பஸ்கள் போன்றவைகள் விரைவு வண்டியைத் தடை பண்ணி, ஒதுங்கி, செல்வதற்கு வழிவிடமாட்டேன் என்று சொல்கிறார்கள். அதனால்வேறு டிராபிக் இடைஞ்சல் இருக்கிறது. நாம் அந்த லாரி துறையினரை அழைத்து ஒரு கூட்டம் போட்டு, விரைவு வண்டிகள் வரும்போது, அதிக தூரம் செல்லும் வண்டிகள் வரும்போது அவர்கள் ஒதுங்கி வழி விடவேண்டும் என்று சட்டமாகக் கொண்டு வர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நடைமுறையிலே விரைவு வண்டிகளுக்கு சாதாரணப் பேருந்துகள் அல்லது லாரிகள் வழிவிடவேண்டும் என்று ஒரு முறை ஏற்கனவே இருந்து வருகிறது. அதைக் கடைப் பிடிக்கவில்லை என்று சொன்னால். பக்கத்திலே இருக்கிற காவல் நிலையத்திலே

1986 மே 14]

புகார் செய்யப்பட்டால், அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுப்பார்கள். கடுமையான நடவடிக்கை எடுப்பது என்பது கடினம். காரணம், இலட்சக்கணக்கான வண்டிகள் இயங்கிக் கொண்டிருக்கிறபோது ஒவ்வொரு இடத்திலேயும் பார்த்து நடவடிக்கை எடுப்பது என்பது கடினம். எங்கே இந்தப் பிரச்சினை வருகிறதோ, அப்போது சம்பந்தப்பட்ட ஓட்டுநர் பக்கத்திலே இருக்கிற காவல்நிலையத்திலே சொல்லிவிட்டால் அதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் தற்காலிகப் பணியாளர்கள்.

655—(*வினா எண். 7612) திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் குழித்துறை கிளையில் தினக்கூலிகளாக எத்தனை ஓட்டுநர்களும், எத்தனை நடத்துனர்களும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்?

(ஆ) இக்கிளையில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பணிகளில் நிரந்தரப்பணி பணியிடங்கள் எத்தனை காலியாக உள்ளன?

(இ) தினக்கூலிகளாகப் பணியாற்றுபவர்களை சீனியாரிட்டி அடிப்படையில் காலியாக உள்ள நிரந்தரப் பணியிடங்களில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) 23 ஓட்டுநர்களும் 23 நடத்துனர்களும் தினக்கூலி அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஆ) தற்பொழுது குழித்துறை பணிமனையில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பணிகளில் நிரந்தர பணியிடங்கள் காலியாக இல்லை.

(இ) தினக்கூலி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் அமர்த்தப்பட்ட பணியாளர்கள், ஓராண்டுக்குள் 240 நாட்கள் பணி முடித்த உடனே, அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லாதிருந்தால், மாதாந்திர ஊழியர்களாக பணியில் அமர்த்தப்படுகிறார்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே தொழிலாளிகளை நிரந்தரமாக வேலைக்கு அமர்த்தப்படுவதற்கு 7.5 சதவிகிதம் என்ற முறையில் உள்ள 'நார்ம்ஸ்' இப்போது முழுமையாக பல கழகங்

களிலே கடைப்பிடிக்கப்படவில்லை. நேசமணி போக்குவரத்துக் கழகத்தில், குழித்துறை பணிமனையில் மற்றும் மற்ற பணிமனை களிலேயும் அப்படி 7.5 சதவிகிதம் என்ற முறையில் பணியாளர் கள் அமர்த்தப்படவில்லை என்பதும், அதே போன்று தேவையான அளவுக்கு ஓட்டுநர்கள், நடத்துநர்கள் அமர்த்தப்படவில்லை என்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அமைச்சர் அவர் கள், ஓராண்டு பூர்த்தியானவர்களை நிரந்தரப்படுத்தப்பட்டதாக சொல்கிறார்கள். ஆனால் ராஜதுரை என்ற டிரைவர் 1984-லே இருந்து 85 வரை 9 முறைகள் சி. எல். ஆர். ஆக வேலைக்கு அமர்த்தப்பட்டார். அவர் நிரந்தரப்படுத்தப்படவில்லை என் பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சட்டப்படி செய்ய வேண்டிய 7.5 சதவிகிதம் அவர்களை வைத்து இருக்கிறார்கள் என்று எனக்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இல்லாமல் இருக்குமேயானால், அதை நிரூபிக்கின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் கொடுப்பார் களேயானால், அதைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கலாம். ஏன் அப்படி வைத்திருந்தார்கள் என்று கேள்வியைக் கூட கேட்டு நடவடிக்கை எடுக்கலாம். ராஜதுரையைப் பற்றிச் சொன்னார் கள். நான் ஏற்கனவே சொன்னது போல், ஓராண்டிற்குள்ளாக 240 நாட்கள் தொடர்ந்து பணியை முடித்து இருந்தால் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள். இரண்டாவது, அவர்கள் மீது அந் தக் காலத்தில் எந்த ஒழுங்கு நடவடிக்கையும் இருக்கக் கூடாது. தவறு செய்திருந்தால் அவர்களையும் நிரந்தரம் ஆக்க வேண்டும் என்று கேட்பது நியாயமாக இருக்காது. ராஜதுரை மீது ஏதா வது தவறு இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்து நட வடிக்கை எடுக்கலாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, குழித் துறை பணிமனையில் எத்தனை பேருந்துகள் இருக்கின்றன ? மொத்தமாக எத்தனை டிரைவர்கள், எத்தனை கண்டக்டர்கள் அங்கே வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கு 202 ஓட்டுநர் களும், 201 நடத்துநர்களும் இருக்கிறார்கள். அதிலே தினக் கூலியாகச் சொன்னதில் 23, 23 என்று சொல்லி இருக்கிறேன். வண்டிகள் எத்தனை என்ற கணக்கு தெரியவில்லை. பழைய கணக்குப்படி, 90 இருந்ததாக ஞாபகம் இருக்கிறது. ஆனால் இதிலே குறிப்பு கொடுக்கப்படவில்லை.

1986 மே 14]

வடபழனி—போரூர் சாலை.

656—(*வினா எண் 8804) திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடபழனியிலிருந்து போரூர் செல்லும் ஆற்காடு சாலையை செப்பனிட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : கடந்த நவம்பர் 1985-ல் ஏற்பட்ட புயல் வெள்ள சேதங்களில் இச்சாலையில் 7/0-லிருந்து 12/0 வரை உடனடியாக நொடிகள் போடப்பட்டு சரி செய்யப் பட்டிருக்கிறது. நிரந்தர சீராக்கத்தின் கீழ் மோசமான பகுதி களை 7/1-லிருந்து 8/8 வரை மற்றும் 11/9-லிருந்து 12/0 வரை ரூ. 5.55 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வேலைகளில் ஜல்லி கள் சேகரிக்கும் வேலை தற்போது நடைபெற்று வருகிறது. இவைகள் யாவும் மே மாதம் இறுதிக்குள்ளாக முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலையிலே அமைச்சரவர்கள் குறிப் பிடும் முறையில் எந்த வேலையும் நடைபெறவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இலட்சக்கணக் கான மக்கள் போய் வரும் அந்த நெடுஞ்சாலையை உடனடியாகச் செப்பனிட்டு, முழுமையாகத் தார் ரோடாகப் போடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, நான் இங்கே ஜல்லி சேகரம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். அநேகமாக அந்த வேலை நடப்பதை நம் மால் பார்க்க முடியாது. ஜல்லி சேகரம் என்பது, எங்கேயிருந்து, எப்படிப்பட்ட ஜல்லி சேகரிக்கப்பட வேண்டுமென்று அப்ரூவ் செய்த பிறகு தான் கொண்டு வருவார்கள். இருந்தாலும், மே மாதம் இறுதிக்குள் செய்து முடித்துவிடுவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி அவர்கள் செய்யவில்லை என்றால், ஏன் தவறான தகவலைச் கொடுத்தீர்கள் என்று அந்த அதிகாரி யின் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : தலைவரவர்களே, வட பழனியிலிருந்து போரூர் செல்லும் சாலை பெரும்பாலும் சிங்கிள் ரோடாக இருப்பதால் அதை டபிள் ரோடாக ஆக்குவார்களா ? மேலும், நெடுஞ்சாலையில் மின் கம்பங்கள் நடு ரோட்டில் இருக்கின்றன. எனவே இன்றைக்கு போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற நேரத்தில் அந்த மின் கம்பங்கள் போக்குவரத்திற்குத்

தடையாக இருக்கின்றன. இதற்கெல்லாம் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும், ஏ.வி.எம். இராஜேஸ்வரி சினிமா தியேட்டர் அருகில் உள்ள அந்தச் சாலை நீண்ட காலமாக—சுமார் பத்தாண்டு காலத்திற்கும் மேலாக போட்டு போட்டு மீண்டும் மீண்டும் செப்பனிடாமலே இருக்கிறது. இதைச் சரி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த வினாவிற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. தனியாக அதைப்பற்றி எடுத்து ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக அதை எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவரவர்களே, சென்னை—திருவள்ளூர் நெடுஞ் சாலை இதே முறையில் இருந்து கொண்டு இருக்கிறது. அதையும் அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து ரிப்போர் செய்ய ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கனவே நான் சொன்னபடி தனிப்பட்ட முறையிலே அதற்கான கடிதம் வருகின்ற பொழுது நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம். ஏற்கனவே கொடுத்து இருக்கிறீர்கள், நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ச்சியாக நிதி நிலைமைகளைப் பொறுத்து, எது எது அதிகமாகப் பழுது பட்டிருக்கிறதோ அந்த அடிப்படையில் எடுத்து வருகிறார்கள். இதைப் பற்றித் தனிக் கவனம் செலுத்த ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ. வி. எம். ஸ்டூடியோவிற்குச் செல்லும் ஆற்காடு சாலை ஓராண்டுக் காலமாகப் போடப்பட்டு வருகிறது. இது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? இப்படி ஓராண்டுக் காலமாக பிடிவாதமாக அந்தப் பாதையை முடிக்காமல் இருக்கிறார்கள். இப்படி முடிவு பெறாமலே இருப்பதால் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு இன்னலைத் தருகின்ற அளவிற்கு இருக்கிறது. இந்த நிலைமையில் அந்த ஒப்பந்தக்காரர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்த வழியாக ஒரு நிகழ்ச்சிக்குப் போகும் பொழுது நான் பார்த்தேன். அப்பொழுது அதிகாரிகளுக்கு அதைப் பற்றிச் சொன்னேன். ஒப்பந்தக்காரர்கள் சம்பந்தமாகப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டால், அந்த ஒப்பந்தத்தில் ஏதாவது முடிவு வராமல் மீண்டும் வேலையைத் துவக்க முடியாமல் இருக்கிறது. சில இடங்களில்

1986 மே 14]

பாதை சரியாக செய்யப்படவில்லை என்று நாம் போகின்ற பொழுது சொல்லி, ஜல்லி மோசமாக இருக்கிறது, பாதை சரியாக அமைக்கப்படவில்லை என்று சொல்லி, வேலை நடக்கின்ற பொழுது விஜிலன்ஸ் அல்லது மேலதிகாரிகள் நடவடிக்கை எடுத்து நோட்டீஸ் கொடுத்து விட்டால் உடனே வேலை நின்று போய் விடுகிறது. சில நேரங்களில் ஒப்பந்தக்காரர்கள் நீதி மன்றத்திற்குப் போய்விடுகிறார்கள். பிறகு உடனடியாக அந்தப் பாதையை போட முடியாத அளவிற்குச் சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. ஆதலால் தான் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இருந்தாலும் கூட அதை விரைவுபடுத்திச் செய்வதற்கு நாம் என்ன செய்ய முடியும் என்று பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேஷனல் ஹைவேஸ், ஹைவேஸ் போன்ற இடங்களில், பல இடங்களில் மழைக் காலங்களில் ஏற்படுகின்ற சேதத்தால் ரோடுகள் அடித்துக் கொண்டு போவதும், மாறி மாறி பல இலட்சக்கணக்கான ரூபாய்களைப் போட்டு, உடனடியாக ரோடுகளைப் போட்டும் அங்கே சரியான வகையில் தண்ணீர் போவதற்கு வாராவதிகள் அல்லது சிறிய மேம்பாலங்கள் அல்லது பெரிய மேம்பாலங்களானாலும் சரி, இந்த நிலையினால் தான் அடிக்கடி அவ்வளவு பெரிய தொகை செலவு செய்தும் நமக்குப் பயன் இல்லாமல் போகிறது என்பதை அரசு அறியுமா? உடனடியாக, பல வாராவதிகளை அமைப்பதற்கு அரசு முன் வருமா?

(முற்பகல் 10–10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசு அறியும். அரசு முன் வர ஆசைப்படுகிறது. ஆனால், போதிய நிதி வசதியில்லாத காரணத்தால்தான் படிப்படியாக எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த நிலைமைகள் சீர் செய்யப்பட வேண்டுமானால், நிதி வசதி சீராகின்ற காலத்திலேதான் சீர் செய்யப்படும். ஆனால், ஆண்டுக்குக் கொஞ்சமாக எடுத்து, எது மிக அதிகமாக பாதிக்கப்படுகிறதோ அந்த அடிப்படையிலே படிப்படியாக எடுத்து நாம் வேலைகளை மேற்கொண்டிருக்கிறோம். எனவே, நிதியின் காரணமாக, இந்த நிலை ஏற்படுகிறதே தவிர, அரசுக்குத் தெரியாமலோ அல்லது அரசு விரும்பாமலோ அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பேருந்து செல்லும் சாலைகள் அனைத்தையும் தார்ச் சாலைகளாக அமைக்கும் திட்டம் இருந்ததே, அந்தத் திட்டம் இப்பொழுது எந்த நிலையில் உள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தார்ச் சாலைகளாக அமைக்க வேண்டுமென்ற நிலையிலேதான் இருக்கிறது. இப்பொழுது ஏறத்தாழ 9,000 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைக்குச் சொந்தமாக வைத்துக் கொள்வதா, அல்லது உள்ளாட்சித் துறைக்குக் கொடுத்து விடுவதா என்ற ஒரு பிரச்சினை வந்தது. முதல் அமைச்சருடைய தலைமையிலே ஒரு கூட்டம் நடத்தப்பட்டு, அந்தக் கூட்டத்திலே விவாதிக்கிற பொழுது, இந்தப் பொருளும் அங்கே வந்தது. அதிலே நெடுஞ் சாலைத் துறைக்குக் குறிப்பிட்ட கிலோ மீட்டர் தூரத்தையும் நம்முடைய உள்ளாட்சித் துறைக்குக் குறிப்பிட்ட கிலோ மீட்டர் தூரத்தையும் இப்பொழுது ஒதுக்கி இருக்கிறார்கள். எனவே, அந்த, அந்தத் துறை நிதி நிலைக்கேற்ப அந்த பிளாக் டாப் செய்கின்ற வேலையை இப்பொழுது செய்து வருகிறது.

பொம்மியம்பட்டியில் சத்துணவுக் கூடம்.

*750—(*வினா எண் 5171)* **திரு. செ. செம்மலை :** மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் பொம்மியம்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் ஒரு சத்துணவு மையம் துவக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : இது பற்றிய கருத்துரு ஏதுவும் அரசால் பெறப்படவில்லை. பெறப்பட்டால் அரசு அதனை விதிகளுக்குட்பட்டு பரிசீலனை செய்யும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நடவடிக்கை இப்போதைக்கு இல்லையென்று சொன்னாலும், அந்த இடத்திலே ஒரு சத்துணவுக் கூடம் அமைக்க வேண்டுமென்ற அவசியத்தையும் தேவையையும் வலியுறுத்தி சேலம் மாவட்ட ஆட்சியாளர் ஒரு முறையான முன் மொழிவை அனுப்பியிருக்கிறார்கள். அந்த முன்மொழிவு அரசுக்குக் கிடைக்கப் பெற்றவுடன் அந்த இடத்தில் சத்துணவு கூடம் அமைப்பதற்கான ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சத்துணவுக் கூடம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், குறைந்தது 70 குழந்தைகள் இருக்க வேண்டும். அந்தக் குழந்தைகள் பக்கத்தில் இருக்கிற சத்துணவுக் கூடங்களுக்குச் செல்வதற்கு வெகுதூரம் இருக்கிறது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் உணர்ந்து அரசுக்கு அறிவிப்பாரானால் அங்கே ஒரு புதிய சத்துணவுக் கூடம் ஆரம்பிப்பதற்கான வழிவகைகளை அரசு செய்யும்.

1986 மே 14]

ஒன்றிய அளவில் சமையற் கூடங்கள்

*751—(*வினா எண். 7427)* மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகளுக்கு வழங்கப்படும் சத்துணவு ஒன்றிய அளவில் ஓரிடத்தில் தயாரித்து விநியோகிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (அ) மற்றும் (ஆ) இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒன்றிய அளவிலே, உணவைச் சமைத்து வழங்குவது முடியாது என்ற வகையில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒருவேளை, சுமார் 2 இலட்சம் பணியாளர்கள், பணி பறிபோய்விடும் என்ற அச்சத்திலே அரசு அப்படி முடிவு எடுத்து இருக்கலாம். ஆனால், சத்துணவு மையங்களில் பல்வேறு குற்றச்சாட்டுகள் குறைகள் உள்ளூரிலே இருக்கிற காரணத்தால் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போக்குவதற்குப் பணியாற்றுபவர்கள் பணி எந்த வகையிலும் பாதிக்கப்படாமல், அவர்கள் அந்தக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து, அந்தக் குழந்தைகள் இல்லங்களின் பராமரிப்பையும் வைத்துக் கொள்கின்ற வகையில், ஒன்றிய அளவிலே ஒரே இடத்திலே சமைத்து, மக்களுக்கு வழங்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மையத்திலும் இருக்கிற குழந்தைகளுக்கு ஏற்ப, உணவு தயாரிக்கப்பட்டு, சுடச்சுட வழங்குவதுதான் ஆரோக்கியத்திற்கு உகந்தது என்ற முறையில் தான் தற்போது, அந்த, அந்த இடத்தில் நடத்தப்பட்டு வருகிறது. எனவே, ஒரே இடத்தில் நாம் தயாரித்து அனுப்புகிறபொழுது அது காலம் தாழ்ந்து அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு உருவாகும். எனவே, அதுபற்றி தற்போது அரசு எந்தச் சிந்தனையும் செய்யவில்லையென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு செங்கற்பட்டு மாவட்டத்தில்

பரீட்சார்த்தமாக சென்ட்ரல் குக்கிங் ஸிஸ்டம் என்ற சிஸ்டத்தை வைத்திருந்தார்கள். நான் இந்த கேள்வியை கேட்பதன் நோக்கமே அந்த பணியில் இருப்பவர்களை பல குற்றச்சாட்டுகளிலிருந்து தவிர்ப்பதற்காகத்தான். கடந்த ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத்தில் செய்ததைப்போல் குறைந்தபட்சம் ஏதாவது ஒரு ஊராட்சி ஒன்றியத்தை எடுத்து, ஒன்றிய அளவிலே சமைத்து குழந்தைகளுக்கு பரிட்சார்த்தமாக கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மையங்களில் தவறுகள் ஏற்படுகின்றது என்பதனால் மையமாக ஒரு இடத்தில் சமைத்து அதை வழங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி சமைத்து எடுத்துக் கொண்டு போகும் போது கூட ஏதாவது தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டாகும். இந்த முறையை விட அந்த முறை நல்லது என்று சொல்வதற்கில்லை. இப்பொழுது இருக்கும் முறையே நல்லது என்று சொல்கிறார்கள். எங்காவது தவறுகள் ஏற்பட்டால், அதை சுட்டிக் காட்டினால் அந்த தவறுகளுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பீளமேடு நெசவாளர் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம்.

752—(*வினா எண். 8084) திரு. கு. ரமணி : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம் பீளமேட்டில் உள்ள வ.உ.சி. ஆலைத் தொழிலாளர் கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் நெ. கே. 1705 செயல்பட முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) ஆம்.

(ஆ) இச்சங்க நிர்வாகத்தில் சில முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாலும் சங்கத்தின் நிர்வாகக்குழுவினர் சங்க நடவடிக்கைகளைச் செவ்வனே செய்யாமையாலும் நிர்வாகக்

1986 மே 14]

குழுவைக் கலைத்து ஒரு சிறப்பு அலுவலரை நியமித்து, சங்கத்தைச் சரிவர செயல்படுத்துவது குறித்து வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அளவில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சங்கத்தினுடைய தலைவர் 7 ஆண்டுகளாக தலைவராக இருக்கிறார். அவர் 1983 லே இன்சால்வன்சி பெட்டிஷன் கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவர் மெம்பராக இருக்க முடியாது. 3 வருஷமாக நடவடிக்கை எடுக்கணும் என்று அங்கிருக்கின்ற டெப்டி ரெஜிஸ்டாரிடம் கொடுத்தும் கூட அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த டெப்டி ரெஜிஸ்டார் பேரில் கூட நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் பிரச்சினை தீராது. இப்போதுள்ள பிரச்சினை என்னவென்றால் அதில் இருக்கின்ற டைரக்டர்களும், மெம்பர்களும் 20 வருடத்திற்கு மேலாக ஒழுங்காக பங்ஷன் பண்ணக்கூடிய இந்த சொசைட்டியை கலைக்கக்கூடாது, கலைப்பது தவறு என்று சொல்கின்றனர். வேறு உதவி தலைவருக்கு அதிகாரம் கொடுத்து, ஜெனரல் பாடி மீட்டிங் போட்டு ஒரு புதிய போர்டை தேர்ந்தெடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, பொதுவாக இந்த சங்கத்தை பொறுத்தவரையில் 2–10–1979 க்கு பிறகு பொதுக் குழு கூட்டமே கூட்டப்படவில்லை. அதற்குபிறகு 1980 லிருந்து 1985 ஆண்டுவரை 39 நிர்வாகக் கூட்டங்கள் கூட்டுவதாக அறிவிப்பு வந்ததற்கு பிறகும், அந்த நேரத்தில் சரியாக உடனடியாக அந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்ட முறையில் ஆரம்பத்திலிருந்து இப்படிப்பட்ட முறைகேடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு பொது நிர்வாக கூட்டத்தை கூட்டுமாறு தான் கேட்டார் என்று நினைக்கிறேன். அந்த முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டு காலமாக அங்கிருக்கின்ற டெப்டி ரிஜிஸ்ட்டாரை கோர்ட்டால் விசாரணை செய்வதற்கு உரிமை இருக்கிறது. அதற்கும் பெட்டிஷன் சமர்ப்பிக்கப்பட்டு விசாரணை செய்யவில்லை. அவரே வந்து இந்த போர்டைக் கலைத்து தனி அதிகாரி வைக்க வேண்டும் என்ற தந்திரம் அதில் இருக்கிறதோ என்ற பயம் உறுப்பினர்களுக்கு ஏற்பட்டு என் கையில் மேமோரேண்டம் தந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து உடனடியாக தலையிட்டு ஒரு பொது குழு கூட்டத்தை கூட்டி அந்த போர்டை முறையாக தேர்ந்

தெடுப்பதற்கு முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். இந்த இன்சால்வன்சி கொடுத்த ஆள் அங்கே இருக்கக்கூடாது. He should be dismissed from the society. அப்படிச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்டமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, சங்கத்தின் நிதி நிலையை அனுசரித்து பார்க்கின்றபோது சில பிரச்சினைகள் எல்லாம் அங்கு இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் அந்த சங்கத்தை பொறுத்தவரையில் மொத்தம் 72 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 9—12—1985 அன்று 22 உறுப்பினர்கள் சங்கத் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்று ஆரம்பத்திலேயே ஒரு முறை முடிவு எடுத்திருக்கிறார்கள். அப்பொழுது எத்தனை உறுப்பினர்கள் இப்படிப்பட்ட முடிவிற்கு வந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. குறிப்பிட்ட அதிகாரிகள் அந்தச் சங்கத்திற்கு சென்று பொதுவாக உறுப்பினர்களுடைய ஒட்டுமொத்தமான நிலையை தெரிந்துகொண்டு அதற்கு பிறகு நல்ல முடிவை அரசு எடுக்கும்.

திரு. அ. மலர்மன்னன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம் பிளமேட்டில் உள்ள வீடு கட்டும் சங்கத்திலும், திருச்சியிலே தில்லைநகர் கூட்டுறவு சொசைட்டி வீடு கட்டும் சங்கத்திலும் கடந்த 10 ஆண்டுகளாக இதுபோன்ற நிலமை உருவாகி பல முறைகேடுகள் அங்கு நடைபெறுவதாக முன்னாள் அமைச்சரிடம் கோரிக்கை தரப்பட்டது. அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த அமைச்சரவை நடவடிக்கை எடுத்து அந்த முறைகேடுகள் ஒழிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியை பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தச் சங்கத்தின் முழுமையான விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. இருந்தாலும் எனக்கு நேரிடையாக தெரிந்த தகவலை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது நீதி மன்றத்திற்கு அந்த சங்கத்தைச் சார்ந்தவர்கள் சென்றிருப்பதனால், இடையிலே ஒரு முடிவு எடுக்காத சூழ்நிலை அரசுக்கு இருக்கிறது. நீதி மன்றத் தீர்ப்பு எப்போது என்று எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். அதற்கு தகுந்தாற்போல் அரசு முடிவு எடுக்கும்.

1986 மே 14]

சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல் நிலைப்பள்ளி.

753—(*வினா எண். 9121) **திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதியை சேர்ந்த சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தொழில் நுட்ப பயிற்சி நிலையம் நிறுவ அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டில் நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 10-20.)

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல் நிலைப்பள்ளி தமிழகத்திலே ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களின் பள்ளிகளில், மிகவும் சிறந்த ஒரு பள்ளியாக விளங்கி வருகிறது. அங்கே ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். அங்கே ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமல்லாமல் அனைத்து வகுப்பினரும் அதிகபட்சமாகப் பயின்று வருகிறார்கள். மிகவும் சிறப்பு வாய்ந்த பள்ளியாக அது இருக்கிறது. எனவே இது சம்பந்தமாக அங்கே ஒரு ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் நிறுவ வேண்டுமென்று அந்தப் பகுதியிலேயுள்ள சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரை செய்யப்பட்டு அரசு அதிகாரிகளும் பார்வையிட்டு ப்ரப்போஸல் அனுப்பி இருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இப்போது இருக்கிறார்கள். எனவே தயவு செய்து சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒரு பாலிடெக்னிக் அல்லது ஐ.டி.ஐ. நிறுவிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஐ.டி.ஐ. பள்ளி ஏற்படுத்த வேண்டுமென்று 1983 ஆம் ஆண்டு மே மாதம் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பப்பட்டது. இருந்தாலும் 1985-86-ஆம் ஆண்டிலே நிதிநிலையைக் கருத்தில் கொண்டு திட்டக் குழுவால் இது ஏற்கப்படவில்லை; அவ்வாறு பரிசீலிக்கப்பெற முடியாது என்று சொல்லி

அங்கே நிதிநிலைமை காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் 1986—87-ல் பழங்குடியினர் நலத் திட்டத்தின் மூலமாக சங்கராயபுரத்திலே சிறிய அளவில் ஒரு தொழில் பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. சா. ஜெயச்சந்திரன் ; மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நிதிநிலைமை சரியில்லை என்று கூறினார்கள். சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தனி நபர்கள், ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த தனியார் ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் அமைக்க முன்வந்தால் அரசு அனுமதி அளிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத்தலைவா அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் இந்தத் துறைக்கு சம்பந்தப்பட்டதல்ல. பழங்குடியினர் நலத் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர்களுக்குத் தனியாக ஏற்படுத்த வேண்டுமென்று அரசு கருதுகிற காரணத்தால் 1986—87-ல் சங்கராயபுரத்தில் ஒரு சிறிய தொழிற்கூடம் அமைக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மற்ற விவரங்களை மற்ற துறைகளில் கேட்டால்தான் அதற்கான விளக்கம் தெரிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்,

போடிநாயக்கனூரில் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதி மன்றம்.

748—(*வினா எண். 5651) **திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் போடிநாயக்கனூரில் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசு திட்டம் வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : போடிநாயக்கனூரில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் உயர்நீதிமன்றத்திடமிருந்தோ, வழக்குரைஞர் சங்கத்திடமிருந்தோ அல்லது பொதுக்களிடமிருந்தோ வரவில்லை. அவ்விதம் வரும்பொழுது நிதி நிலைமையை அனுசரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1986 மே 14]

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூரில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்காக பொது மக்களிடமிருந்து வந்திருக்கிற கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு வரும் ஆண்டிலாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா? மேலும் நீதிமன்றம் அமைக்கிற போதே அதற்கான கட்டிடங்களையும் கட்டுவது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டிலே ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் அதாவது குற்றவியல் இரண்டாம் வகுப்ப நீதிமன்றம் இருக்க வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் ஆங்கு இதைக் கொணர அரசு பரிசீலிக்கும். ஆனால் நீதிமன்றம் ஏற்படுத்துகிற அதே நேரத்திலேயே நீதிமன்றக் கட்டடமும் கட்டித் தரப்பட முடியும் என்று சொல்வதற்கில்லை. காரணம், நிதி நிலைமைக்கேற்பதான் அதைச் செய்ய முடியும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நீதிமன்றங்களில் குற்றவியல் நீதிபதிகள் இல்லை என்ற குறையைப் போக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒட்டுமொத்தமாக இரண்டு இடங்களில்தான் குற்றவியல் நீதிபதிகள் இல்லாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதற்கும் தக்க நடவடிக்கையை உயர்நீதிமன்றம் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவி பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே இரண்டு பேரை தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு செய்து உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பி தற்போது அந்தக் காலியிடங்கள் நிரப்பப்பட இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறைச்சாலை சமையல் கூடங்கள்.

749—(*வினா எண். 6592) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு சமையல் செய்வதற்கு விறகுக்குப் பதிலாக சமையல் கேஸ் பயன்படுத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[1986 மே 14

மாண்டமிகு திரு. சி. பொன்னையன் : (அ) சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு சமையல் செய்வதற்கு விறகுக்குப் பதிலாக சமையல் கேஸ் பயன்படுத்தும் உத்தேசம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய நோக்கம் எரிபொருள் என்ற முறையில் சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிற விறகுச் செலவைக் குறைக்க வேண்டும் என்பதுதான். கேஸ் சிலிண்டரைப் பயன்படுத்தினால் ஆண்டு ஒன்றுக்கு ஒட்டுமொத்தமாக விறகுக்கு என்ன செலவாகிறதோ அதில் சரிபாதிதான் செலவாகும் என்று புள்ளி விவரங்கள் பல கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அரசு இதை மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விறகுக்குப் பதிலாக கேஸைப் பயன்படுத்துவதால் சிக்கனமும் அதே நேரத்தில் மரங்களை அழிப்பதிலிருந்து அவற்றை காப்பாற்றவும் முடியும் என்ற முறையில் ஒரு முடிவு செய்யப்பட்டு சிறைச்சாலைக்கு என்று ஆராய்வதற்கான ஒரு குறிப்பு இருக்கிறது. பரீட்சார்த்தமாக சென்னையிலே இதை முயன்று பார்த்து மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. இந்தத் திட்டம் நடைமுறையில் இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொன்னேனே தவிர, அது வரவே வராது என்று நான் சொல்லவில்லை. அதை நடைமுறைக்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சிறைச்சாலைக்கும் அடுப்படியில் விறகுகள் காண்டிராக்டர்கள் மூலமாகத்தான் சப்ளை செய்யப்படுகிறது. அவர்கள் பச்சை மரங்களை வெட்டிக் கொண்டு வந்து, எடை அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்காக கொடுத்துவிடுகிறார்கள். அது காய்வதன் மூலம் மேலும் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. அந்தப் பச்சை விறகுகளை எரிப்பதற்காக சமையல் எண்ணயை அடுப்பில் கொட்டுகின்ற நிலைமை தான் பல சிறைச்சாலைகளில் இருக்கின்றன. ஆகவே தமிழகத்தில் இருக்கிற எல்லா சிறைச்சாலைகளிலும் கேஸ் சிலிண்டர் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படிப் பயன்படுத்தினால் இரண்டு வகையில் தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன் கிடைக்கும் என்பதை உத்தேசித்து அதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

1986 மே 14]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்களை அழிப்பதிலிருந்து தவிர்க்க வேண்டும் என்றும் அதே நேரத்தில் சிக்கன முறையை உருவாக்க வேண்டும் என்றும் அரசு பரீட்சார்த்தமாக சென்னை சிறையில் அதை இன்டிரடியூஸ் செய்திருக்கிறது என்றுதான் நான் பதில் சொன்னேன். அதை நடைமுறைக்கு விரைவில் கொண்டு வரவேண்டும் என்று தான் அரசு முடிவு எடுத்திருக்கிறது என்றும் ஏற்கனவே நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) தஞ்சை மாவட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள வெள்ள நிவாரண நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் க. பால சுப்பிரமணியன், சா. ஞானசுந்தரம், பாப்பா சுப்பிர மணியன், ப. ந. இராமச்சந்திரன், என். விஜயபாலன், எம். தங்கமணி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ” தஞ்சை மாவட்டத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட புயல், வெள்ளம் சம்பந்தமாக நிவாரணம் அளித்ததில் இடிந்து போன வீடுகளுக்கு 2-வது தடவையாகக் கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்ட தொகை சரியாகவும் முறையாகவும் செலவிடப்படாததால், அம் மாவட்ட மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த ” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 14

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தால் தஞ்சை மாவட்டத்தில் குடிசைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. முதல் கட்டமாக ரூ. 1,21,35,150 அளவிற்குப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு குடிசை மானியம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது :—

		ரூ.
1.	வேதாரண்யம்	4,32,150
2.	நாகப்பட்டினம்	8,11,950
3.	மயிலாடுதுறை	21,38,400
4.	சீர்காழி	32,06,250
5.	திருத்துறைப்பூண்டி	4,27,350
6.	நன்னிலம்	6,26,100
7.	திருவாரூர்	2,10,450
8.	கொடவாசல்	1,91,850
9.	தரங்கம்பாடி	34,94,250
10.	மன்னார்குடி	1,66,650
11.	நீடாமங்கலம்	68,700
12.	திருவிடைமருதூர்	2,91,900
13.	கும்பகோணம்	29,550
14.	பட்டுக்கோட்டை	31,500
15.	பேராவூரணி	8,100
	மொத்தம் ..	1,21,35,150

1986 மே 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

2. இரண்டாவது கட்டமாக ரூ. 61.85 இலட்சம் குடிசை மானியமாக கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது:—

(ரூபாய் இலட்சத்தில்).

1	நாகப்பட்டினம்	13.00
2	நன்னிலம்	14.00
3	திருவாரூர்	8.85
4	திருத்துறைப்பூண்டி ..	10.00
5	மயிலாடுதுறை	3.00
6	சீர்காழி	3.00
7	தரங்கம்பாடி	2.00
8	வேதாரண்யம்	8.00

3. வேதாரண்யம், நாகப்பட்டினம், தரங்கம்பாடி, சீர்காழி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நன்னிலம் மற்றும் மயிலாடுதுறை பகுதிகள் கிழக்கு தஞ்சை மாவட்டத்தில் பள்ளமான பகுதிகளில் உள்ளன. ஆகையால், இவைகள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. ஆனால், மன்னார்குடி, நீடாமங்கலம், திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் ஆகிய பகுதிகள் மேடான பகுதிகளில் இருப்பதால் பெரும் மழை பெய்தாலும் உடனே நீர் வடிந்து விடுகிறது.

பாதிக்கப்பட்ட குடிசை வாழ் மக்களுக்கு போதிய நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. சில பகுதிகளில் தங்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என தந்தி மூலமும் மனுக்கள் மூலமும் மாவட்ட ஆட்சியருக்கு மக்கள் புகார் செய்துள்ளனர். இம்மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விசாரித்து அறிக்கை அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளார்.

குடிசை மானியம் வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ளது. கணக்குகள் எல்லாம் சரியாக வைக்கப்பட்டுள்ளன. வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலர் ஆகியோரின் மேற்பார்வையில் குடிசை மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. க. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த விரிவான அறிக்கையிலிருந்தே நாம் ஏற்படுத்திய எந்த ஏற்பாட்டுக்கும் சரியாக செலவிடப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

உதாரணத்திற்கு வேதாரண்யம் தாலுகாவிற்கு முதல் கட்டமாக அளிக்கப்பட்ட தொகை, ரூபாய் 4 இலட்சத்து 32 ஆயிரத்து 150. அதிலே விடுபட்டு போனவர்களுக்கு இரண்டாவது கட்டத்தில் 8 இலட்சம் ரூபாய் கொடுத்திருப்பதாக இங்கே சொல்லப்பட்ட தகவல் இருக்கிறது.

அதேபோல நாகப்பட்டினம் தாலுக்காவிற்கு முதல் தடவையாக ரூபாய் 8,11,950 என்றும், அதிலே விடுபட்டுப் போனவர்களுக்கு இரண்டாவது கட்டமாக ரூபாய் 13 இலட்சம் செலவிடப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. அதேபோல மயிலாடுதுறையில் ரூ. 21,38,400 முதல் கட்டத்தில் செலவிடப்பட்டதாகவும், அதிலே விடுபட்டுப் போனவர்களுக்கு ரூபாய் 3 இலட்சம் மட்டும் இரண்டாவது கட்டத்தில் செலவிடப்பட்டிருப்பதாக இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல சீர்காழி தாலுக்காவிற்கு ரூபாய் 32,06,250 முதல் கட்டம் என்றும், அதற்கு இரண்டாவது தடவையாக ரூபாய் 3 இலட்சம் மட்டும் என்று..(மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : அடுத்து திருத்துறைப்பூண்டி தாலுக்காவிற்கு ரூ. 4,27,350 தான் முதல் தடவைக்கும் ஆனால் 10 இலட்சம் ரூபாய் இரண்டாவது தடவையாக விடுபட்டுப் போனவர்களுக்கென்று கொடுத்திருக்கிறார்கள். அதேபோல நன்னிலம் தாலுக்காவிற்கு ரூ. 6,26,100 என்று முதல் தடவையும், இரண்டாவது தடவையில் விடுபட்டு போனவர்களுக்கு என்று 14 இலட்சம் ரூபாய் கொடுத்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல சீர்காழி தாலுக்காவிற்கு..(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அறிக்கையில் இருப்பதையே அப்படியே படிப்பதில் லாபம் ஒன்றும் இல்லை. அதிலே ஏதாவது குறை இருந்தால் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : சீர்காழி தாலுக்காவிற்கு 3 இலட்சம் ரூபாய் இரண்டாவது தடவையாக கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுவதில் ஒரு நபருக்குக் கூட ஒரு ரூபாய் கூட கிடைக்கவில்லை. அத்தோடு அது வட்டார வளர்ச்சி அதிகாரிகள் மூலமாக வழங்கப்படுகிறது என்று அறிக்கையில் இருக்கிறது.

(முற்பகல் 10–30)

இரண்டு வட்டார வளர்ச்சி இடங்கள் இருக்கின்றன. சீர்காழி ஒன்றியம், கொள்ளிடம் ஒன்றியம். எந்த அதிகாரிக்கும் இது தெரியாது. ஆகவே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்திருப்பதால் இதைக் குற்றப்

புலனாய்வுத் துறை அல்லது இலஞ்ச ஒழிப்புத் துறையிடம் ஒப்படைத்து, விசாரணை செய்து இந்த 61 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் எங்கே போனது என்று கண்டுபிடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறிப்பிட்ட சில கிழக்குப் பகுதிகளில் பலத்த வெள்ளச் சேதம் ஏற்பட்ட போது, சில சமயங்களில் சில ஊர்களுக்கு போக முடியாத அத்தகைய சூழ்நிலை ஏற்பட்ட போது, ஆங்காங்கு உத்தேச மதிப்பின் அடிப்படையில், ஆங்காங்கு இருக்கிற வருவாய்த் துறை அதிகாரிகளும், மற்றவர்களும் கொடுத்த கணக்கின் அடிப்படையில் நிதியொதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவசரமாக நடவடிக்கை யெடுக்க வேண்டும், உடனடியாக நடவடிக்கை யெடுக்க வேண்டும். அவர்களுடைய தொல்லைகளும், துயரங்களும் போக்கப்பட வேண்டுமென்ற கட்டாயத்தின் அடிப்படையில் முதலில் 1,21,35,150 ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்த அடிப்படையில் எந்தெந்த பகுதிக்கு எவ்வளவு என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இன்னென்ன பகுதியில் இந்தெந்த இடங்கள் விடுபட்டிருக்கின்றன என்று அறிக்கை வந்ததற்குப் பிறகு மறுபடியும் இரண்டாவது தடவையாக 61 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகும் சில இடங்களில் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு உதவி வந்து சேரவில்லை என்று கடிதம் மூலம், தந்தி மூலம் தெரிவித்துள்ளார்கள். அவைகள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு, அவர்கள் ஆங்காங்கு இருக்கிற வருவாய்த்துறை அதிகாரிகள், பிற அதிகாரிகள் மூலமாக ஆய்வு நடத்தி வருகிறார்கள். ஆய்வு நடத்திய பிறகு உண்மை நிலைமைகள் தெரியுமானால், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வது போன்று வெள்ள நிவாரணத்திற்கென்று ஒதுக்கிய தொகையை மோசடி செய்கிற அளவிற்கு யாராவது நடந்திருப்பார்களானால் மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றி குற்றச்சாட்டை புகார் வடிவில் அரசுக்கு அனுப்பி வைப்பார்களானால், இலஞ்ச ஒழிப்புத் துறை மூலமாகவோ, அல்லது வருவாய்த்துறை மூலமாகவோ தக்க நடவடிக்கை யெடுக்க அரசு தயங்காது என்று குறிப்பிட்டு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சா. ஞானசுந்தரம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி, நீடாமங்கலம் போன்ற பகுதிகள் மேடாக இருப்பதால் இரண்டாவது தடவை நிதியுதவி அளிக்க இயலவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மன்னார்குடி, நீடாமங்கலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெருகவாழ்ந்தான், கோட்டூர், களப்பால், போன்ற

பகுதிகள் மிகவும் பள்ளமான பகுதியாக இருக்கின்றன. ஆகவே மீண்டும் அந்தப் பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, காரணங்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக எந்த இடத்தில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதோ அந்த இடத்தில் நிவாரணம் அளிக்க வேண்டுமென்பது தான் அரசினுடைய நோக்கம். பள்ளமான பகுதியாக இருந்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, நீர் தேங்கி, அதன் காரணமாக குடிசைகள் பாழாகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற தன்மையில் அந்தப் பகுதிகள் மீண்டும் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் அதுபற்றி கவனிக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை முதலில் குறிப்பிட்டபடி அதுபற்றி சில புகார்களும், தந்தியும் வந்திருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அவை அனுப்பப்பட்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஆய்வு நடத்தச் செய்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட பகுதிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், அவர்கள் ஆய்ந்து, தக்க நடவடிக்கையெடுப்பார்கள். மேற்கொண்டு நிதி தேவைப்படுமானால் அரசுக்கு அதுபற்றி மாவட்ட ஆட்சித்தலைவர் விண்ணப்பிப்பார்கள்.

திரு. பாப்பா சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட அந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தஞ்சை மாவட்டத்தில் 1¼ கோடி ரூபாய் அளவிற்கு நிவாரணத்தைத் தந்தது. விடுபட்டுப் போன மக்களுக்கு வெள்ள நிவாரணம் தர மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அரசு தயாராக இருக்கிறது. இருந்தாலும் அதிகாரிகள் வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்த அரசுக்கு களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற வகையில் செயல்படுகிறார்கள். எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி பணம் கொடுக்க வேண்டுமென்று டி.டி.சி. மீட்டிங்கில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் கேட்டோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுடைய குறைகளைப் போக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறோம் என்ற காரணத்தை மனதிலே வைத்துக் கொண்டு, திட்டமிட்டு இந்த அரசாங்கத்திற்கு களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அன்றையதினம்....(மணியடிக்கப்பெற்றது.)

1986 மே 14] [திரு. பாப்பா சுப்பிரமணியம்]

மன்னிக்க வேண்டும். இது ஒரு பெரிய கேள்வி. எனவே திட்டமிட்டு இந்த அரசுக்கு களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், அன்றையதினம் இதே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அனைத்துப் பகுதியில் உள்ள வீடுகளுக்கு கொடுத்தாகிவிட்டது, இனி கொடுக்கத் தேவையில்லை என்று சொன்ன, அதே மாவட்ட ஆட்சித் தலைவர், இந்த ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி கிட்டத்தட்ட 61 இலட்ச ரூபாய் அளவிற்குக் கொடுத்து இருக்கிறார்கள். இந்த 61 இலட்ச ரூபாய் என்பது, கிட்டத்தட்ட ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற, குடவாசல் தாலுக்கா, தரங்கம்பாடி தாலுக்கா, சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை தாலுக்கா போன்ற தாலுக்காக்களுக்கு வேண்டுமென்றே பணத்தைக் கொடுக்காமல், குறைவாகக் கொடுத்து, இந்த அரசுக்கும், அந்தத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்ட, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அதேபோன்று நான் ஏற்கனவே தெரிவித்த (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகைகள் பற்றியும், அது பட்டுவாடா செய்யப்பட்டு இருக்கிற பாங்கு பற்றியும், நான் முதலிலே குறிப்பிட்டேன். ஆகவே ஆளும் கட்சியினுடைய தொகுதிகள், வேறு பல கட்சி உறுப்பினர்களுடைய தொகுதிகள் என்று அதிகாரிகளோ, அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோ, அப்படி பாகுபடுத்திப் பார்ப்பதில்லை. எல்லா அதிகாரிகளும், காழ்ப்புணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அரசுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்திலே செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் சில பல அதிகாரிகள் இருக்கக் கூடும். சில பேர்கள் தவறு செய்யவும் கூடும். வெள்ள நிவாரணத்தைப் பொறுத்தவரையில், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சை மாவட்டம் மற்றும் சென்னை மாவட்டம் போன்றவைகளில் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சில கிராம அதிகாரிகள் மற்றும் வேறு பலரும் கூட தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு விசாரணைக்கு உட்பட்டு இருக்கிறார்கள். ஆனால் எல்லா அதிகாரிகளும் தவறு செய்கிறார்கள் என்று சகட்டு மேனிக்கு அவர்கள் இந்த அரசின் மீது களங்கம் கற்பிக்கிறார்கள் என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. குறிப்பிட்டு எங்கேயாவது தவறுகள் நடந்திருந்தால், அதைப்பற்றி சுட்டிக் காட்டினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே நடவடிக்கை எடுக்கப்பட்டு, விசாரணை நடததப்பட்டு இருக்கிறது. எனவே பணம் கொடுக்கப்பட வேண்டிய இடமாக இருந்து, பாதிக்கப்பட்ட இடமாக இருந்து, அப்படிக் கொடுக்கப்படாமல் இருந்தால், அதை பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம், அதுபற்றி நாமும் கவனிக்கலாம்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட புயல், வெள்ளம் சம்பந்தமாக இரண்டாவது தடவையாக நிவாரணம் அளிப்பதில் பல தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டுகளை திடீரென்று சொல்லக் கூடாது. கடைசியாக சொன்ன அந்தப் பகுதிகள் நீக்கப்படுகின்றன. எனவே குற்றச்சாட்டு சொல்லாமல் கேள்வியாக கேட்கவும்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நல்ல நோக்கத்தோடு செயல்படுத்துகின்ற இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதில், முறைகேடாக நடக்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ? . என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அப்படிப்பட்ட தீங்கான செயல்கள் பற்றி அரசுக்கு நேரடியாகத் தெரியாது. அது உங்கள் மூலமாகத்தான் தெரிய வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள், எங்கெங்கு அப்படிப்பட்ட குற்றங்கள், குறைகள் நடக்கின்றன என்பதைப் பற்றி எழுத்து மூலமாகத் தந்தால், அதைப் பற்றி விசாரித்து, தக்க நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்று, ஒதுக்கப்பட்ட தொகையிலே ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டால், அது தவிர்க்கப்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். அந்த வகையிலே குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதித் தந்தால், அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது.

திரு. மு. தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக என்னுடைய தொகுதியாக உள்ள மயிலாடுதுறை பெரிதும் பாதிக்கப்பட்டு, 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டு, நான் கோட்டாட்சி அலுவலர் அவர்களையும், வட்ட வளர்ச்சி அதிகாரி அவர்களையும் அழைத்துச் சென்று, நேரிலே பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்கள், மற்றும் பாதிக்கப்பட்ட இடங்களை புகைப்படம் எடுத்து, அதை நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலேயும், மற்றும் மத்தியக் குழுவினிடத்திலேயும் கொடுத்து இருக்கிறேன். அப்படிக் கொடுத்ததற்குப் பின்னாலும், என்னுடைய தாலுக்கா பாதிக்கப்படாத தாலுக்கா என்று அறிவிக்கப்பட்டு, நான் மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 மே 14] *[திரு. மு. தங்கமணி]*

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, பிறகு, என்னுடைய மயிலாடுதுறை தாலுக்கா பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டது. இதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், மற்ற பாதிக்கப்பட்டு இருக்கின்ற அந்த ஏரியாக்களில், குறைவாகப் பணத்தைக் கொடுத்து, பிறகு இரண்டாவது தடவையாக, பாதிக்கப்பட்டு இருக்கின்ற அந்தப் பகுதிகளுக்கு அதிகப்படியான தொகை எப்படி கொடுக்க முடிந்தது. இப்படிப்பட்ட முறைகேடுகளை உடனடியாக விசாரிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை பகுதிக்கு முதல் தடவையாக 21 இலட்சத்து 38 ஆயிரத்து 400 ரூபாய் தரப் பட்டிருக்கிறது. முதல் தடவை அதிகமாகத்தான் தரப்பட்டிருக்கிறது. அதிகமாகத் தரப்பட்ட பகுதிகளிலே மயிலாடுதுறை 21 இலட்சத்து 38 ஆயிரத்து 400 ரூபாய்; சீர்காழிக்கு 3 இலட்சத்து 26 ஆயிரத்து 250 ரூபாய்; அதேபோன்று தரங்கம்பாடிக்கு 34 இலட்சத்து 94 ஆயிரத்து 250 ரூபாய்; இவைகளுக்கெல்லாம் அதிகமாக கொடுக்கப்பட்ட தொகை. இரண்டாவது தடவையாகத்தான் மயிலாடுதுறைக்கு 3 இலட்சம் ரூபாய் தரப் பட்டிருக்கிறது. நான் முதலிலேயே சொல்லியபடி இன்னும் எங்கேயாவது விடுபட்டிருக்குமேனாயால் அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிசிலனை செய்து வருகிறார்கள். அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாறு பேசின் விதிகள் காரணமாக பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கிடைப்பதில் உள்ள இன்னல்கள் குறித்து.

***திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள, திருப்பத்தூர், வாணியம்பாடி மற்றும் இதர தாலுக்காக்களில் நடைமுறையில் இருந்துவரும் பாலாறு பேசின் விதி மற்றும் நிலத்தடி நீர் விதி ஆகியவைகளின் காரணமாக அப்பகுதியிலுள்ள விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு பெற முடியாத சூழ்நிலையில் அப்பகுதியில் வாழும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடாற்காடு/செங்கல்பட்டு மாவட்டத்தில் பாலாறு படுகையில் பாசன பரப்பு, அதன் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டைக் காட்டிலும் விரிவடைந்து விட்டதால், தற்பொழுதுள்ள பாசன வசதியை பாதுகாக்கவும் மற்றும் நிலத்தடி நீரின் அளவு பாதுகாப்பான அளவிலிருந்து குறைந்துவிடாமலும் இருப்பதற்காக பாலாறு படுகையில் புதிய கிணறுகளை தோண்டுவதை தடுக்க விதிகள் ஏற்படுத்தப்பட்டன. இருப்பினும், அவ்வப்போது இவ் விதிகள் தளர்த்தப்பட்டு வருகின்றன. பொதுப்பணித்துறை செயற் பொறியாளர்/நிலநீர் தலைமைப் பொறியாளரைக் கலந்தாலோசித்து, தடை நீக்கச் சான்றிதழ் கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சான்றிதழ் கொடுத்த பின்தான் மின் இணைப்பு வழங்க மின் சார வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

2. பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்கும், கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளை வெட்டவும் தடை நீக்கச் சான்றிதழ் விவசாயிகளுக்கு சிரமமின்றி கிடைக்க பாலாறு படுகை விதிகளை 3–5–1985 நாளிட்ட அரசு ஆணை எண். 702 பொதுப்பணித் துறையில் அரசு மேலும் தளர்த்தியுள்ளது. இதன்படி, செயற்திறனிலுள்ள நீர் ஊற்றுக்களின் தலைப்பில் (Active Spring Head) 200 மீட்டர் தூரத்திற்குள் ஏற்கெனவே இருக்கும் கிணறுகளை ஆழப்படுத்தவோ, புதிய கிணறுகளைத் தோண்டவோ, விசைக் குழாய்களை அமைக்கவோ கூடாது. அரசாணை நிலை எண். 2430 பொதுப்பணித்துறை நாள் 27–10–1983இல் வரையறை செய்யப்பட்ட விதிகளைப் பின்பற்றி உள்ளூர் பொதுப்பணித்துறை அலுவலர்களைக் கலந்தாலோசித்து பாலாறு படுகை விதிகளுக்குட்பட்ட கிராமங்களின் பட்டியலை செங்கற்பட்டு மற்றும் வடாற்காடு மாவட்டங்களின் ஆட்சியாளர்கள் திருத்தி அமைக்கலாம். பாலாறு என்பது அதன் உப ஆறுகளையும் குறிக்கும். 1963 ஆம் ஆண்டிற்கான பட்டியலிலிருந்து மாற்றம் ஏதாவது செய்ய வேண்டி இருப்பின் அரசின் ஒப்புதலைக் கட்டாயம் பெற வேண்டும். பாலாறு படுகை விதி 6-இல் உள்ளவாறு செயற்திறனுள்ள நீர் ஊற்றுக்கள் (Active Springs) செயற்திறனுள்ள நீர் ஊற்று வாய்க்கால்கள் (Active Springs Channels) மற்றும் வேறு நீர் ஆதாரங்களில் (Other Sources) விசைக் குழாய்களை அமைப்பதற்கு விதிக்கப்பட்ட குதிரைத் திறன் தடைக்கட்டுப்பாடுகளை தொடர்ந்து பின்பற்ற வேண்டும். இந்த விதியில் அனுமதிக்கப்பட்ட குதிரைத் திறன்களுக்கு அதிகமாக (அதாவது 10 குதிரைத் திறன்களுக்கு மிகாமல்) 1–7–1984 வரை அமைக்கப்பட்ட விசையேற்றங்களுக்கு பின் ஏற்பு வழங்கப்பட்டது.

1986 மே 14] [திரு. யா. சை. மு. யூசுப்]

3. தற்போதுள்ள நிலத்தின் பாசனத்திற்கு ஊறு ஏற்படா வண்ணம், அதே சமயம் நில நீர் மட்டத்தை பராமரிக்கவும் விதிகள் இருந்தாலும், விவசாயிகளின் நலனைக் கருதி அவ்வப் போது விதிகள் தளர்த்தப்பட்டு வருகின்றன.

*திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது விதிகளை அவ்வப்போது தளர்த்தி மின்இணைப்பு கொடுக் கப்பட்டு வருகின்றன என்று சொல்கின்றார்கள். ஆனால், அந்த நடைமுறையில், அந்த விதி தளர்த்தப்படுவதில்லை. பல ஆண்டு காலமாக, பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் அந்த மின் இணைப்புகோரி அதற்கான சான்றிதழ் கொடுக்காமல் அவதிப் படுகிறார்கள். இந்த நிலையை நாங்கள் எங்கள் வட ஆற்காடு மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்திலேயும், மாண்புமிகு உறுப் பினர்கள் மஜீத், பாபு, கதிர்வேலு போன்ற சட்டமன்ற உறுப் பினர்களும் இதை வலியுறுத்தி வந்தும் அது தவிர வட ஆற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டத்துக்கு அடுத்தபடியாக உணவு உற்பத்தியில் முன்னணியில் இருக்கிறது. ஆகவே, விவசாயிகளு டைய நிலை கருதி இந்த விதிகளை முழுவதுமாக தளர்த்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

†மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, பாலாறு என்பது ஓடிக்கொண் டிருக்கிற தண்ணீரைவிட ஆற்றுக்குக்கீழே இருக்கக்கூடிய நிலத்தடி நீரை அதிகமாகக் கொண்ட ஒரு ஆறு ஆகும். அந்த ஆற்றிலே இருக்கக்கூடிய நிலத்தடி நீர் பாதுகாக்கப் படா விட்டால் அதன் வாயிலாக வட ஆற்காடு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள விவசாயிகள் மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாவார்கள். அதற்காகத்தான் அந்த ஆற்று படு கையின் வாயிலாக பயன் அடைகின்ற விவசாயிகளின் நன்மையைக் கருதித்தான் அந்த பாலாற்று படுகையில் பல விதிகள் விதிக்கப் பட்டு அந்த படுகையில் உள்ள நீர் தன்மைகள் காப்பாற்றுவதற் காக, பாதுகாப்பதற்காக அரசு நடவடிக்கை எடுத்து வந்திருக் கிறது. இருந்த போதிலும் இந்த விதிகளின் வாயிலாக விவசாயி களுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அவ்வப் போது தேவையான அளவுக்குத் தடைகளை தளர்த்தியும் தேவை யான விதி விலக்கு தந்தும் அரசு விவசாயிகளுக்கு நன்மை பயக் கக்கூடிய அளவுக்குத் திட்டங்களைத் தீட்டி வருகிறது. அந்த முறையில் தான் பல்வேறு மாறுதல்களுக்கு ஏற்கெனவே இந்தப் படுகை விதி ஆட்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை 1938 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 1986 ஆம் ஆண்டு வரை போடப் பட்ட பல்வேறு துணை விதிகள், அரசு ஆணைகள் வாயிலாக அறியலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வப்போது தேவைப்பட்டால், தேவையான அளவுக்கு ஆய்வு செய்து அந்த

விதிகளில் மாறுதல்களை மேற்கொள்ளலாமே ஒழிய ஒரேயடியாக படுகை விதிகளை மாற்ற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதியிலே 200 மீட்டருக்குள் அந்தப் பாசன வசதிக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுவது இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 200 மீட்டருக்கு அப்பால் உள்ள நீர் பகுதிகளுக்கும் இந்த மின் இணைப்பு கொடுக்கப்படுவது இல்லை. அதற்கு பாலாறு விதி இருக்கிறது என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அது தவிர வட ஆற்காடு மாவட்டத்தில் 10 குதிரை சக்திக்கு அதிகமான மோட்டார்களை யாரும் அமைப்பது இல்லை. எனவே, இவைகளை எல்லாம் கருதி, விவசாயிகளின் நலன் கருதியும், தமிழ் நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிக்கிற வகையிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து இதை அறவே நீக்க முன் வருவார்களா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 200 மீட்டர் தூரத்தில் அந்தக் கிணறுகளை ஆழப்படுத்தவோ, புதிய கிணறுகளை தோண்டவோ கூடாது. 200 மீட்டருக்குள் என்பதை வலியுறுத்தித் தான் புதிய விதிகள், புதிய அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அரசு ஆணையை இப்பொழுது தான் 3–5–1986-இல் போட்டோம். இன்று தேதி 14–5–1986 என்று கருதுகிறேன். அந்த வகையில் இன்னும் விவரங்கள் சரியாக அந்தப் பகுதிக்கு போய் சேர்ந்து இருக்காது என்று கருதுகிறேன். எனவே, அந்த 3–5–1986 ஆணைகளின்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அந்த ஆணை கடைப்பிடிக்கப் பட்டாலே அந்தப் பகுதி மக்களுக்கு பயன் உள்ளதாக அமையும். மேலும் எந்த எந்த பகுதிகள் எல்லாம் இந்த வரையறைக்குள் வருகிறது என்பதை தனியாக ஒரு பட்டியல் தயாரித்து அது எல்லோருக்கும் தெரியக்கூடிய அளவிலே விளம்பரப்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தை இந்த அரசு வலியுறுத்தியிருக்கிறது.

3. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986, (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986, (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(முற்பகல் 10–50)

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்: "1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பொது விற்பனை வரி (ஐந்தாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1986, (ஆ.இ.)

1986 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள் — தொடர்ச்சி.

(ஈ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(2) பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு,1986, (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) பொது விற்பனை வரி (ஏழாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986, (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) பொது விற்பனை வரி (ஏழாம் திருத்த) சட்ட முன்வடிவு,1986.

மாண்புமிகு தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :—

" 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார் .

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(எ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஏ) உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஏ) உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986, (ஆ.இ.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. அரசினர் தனித் தீர்மானம்.

தமிழ் நாடு சட்டமன்ற மேலவையை நீக்குதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயரால் உள்ள கீழ்க் கண்ட தனித் தீர்மானத்தை நான் மொழிகிறேன்—

" அரசியலமைப்புச் சட்டத்தின் 169-வது உறுப்பின் (1)-வது கூறின்படி, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கப்பட வேண்டும் (abolished) என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானிக்கிறது."

1918-வது ஆண்டில் மாண்டேகு-செம்ஸ்போர்டு அரசியல் சீர்திருத்தக் குழுவினுடைய அறிக்கையின் பேரில் மேலவைத் தத்துவம் முதல், முதல் இந்தியாவில் உருப்பெற்று எழுந்தது. அந்தத் தத்துவத்தை 1935-வது ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டமும் ஏற்றுக்கொண்டது. இந்தியா விடுதலை பெற்றதற்குப் பிறகு தனி அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற தன்மையில், அரசியல் அமைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் அமைக்கப்பட்டு ஒரு தனி அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.

அப்போது மாநிலங்களில் மேலவை வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றிய கருத்துக்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குகின்றபோதே பல உறுப்பினர்கள், பல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். வேண்டாம்

என்கின்ற கருத்தின் அடிப்படையில் பல உறுப்பினர்களும், வேண்டும் என்ற அளவுக்கு சில உறுப்பினர்களும் அந்தக் கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள்.

இறுதியாக, மாநிலங்களில் மேலவை இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை முடிவு கட்டும் பொறுப்பை சட்டமன்றப் பேரவைக்கு விட்டு விட்டு, அதனை ஏற்கும் பொறுப்பை பாராளு மன்றத்திற்கு அளிக்கும் விதிமுறைகளை அரசியல் அமைப்புச் சட்டம் தந்துள்ளது. அதன்படி திருத்தம் கொண்டு வந்திருக் கிறது. மாநிலத்தில் மேலவையை அமைப்பது அல்லது கலைப் பது; மேலவையை அமைப்பது என்றால் அதனை எப்படி அமைக்க வேண்டும், அது எப்படி இயங்க வேண்டும், அதனுடைய அதிகார வரம்புகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை எல்லாம் அரசியல் அமைப்புச் சட்டம் 168 முதல் 174 வரையிலுள்ள பிரிவுகள் தெளிவாக்குகின்றன.

மேலவை அகற்றப்பட வேண்டும் என்றால் அது பற்றிய தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின் 169வது உறுப்பின் (1) வது உட்பிரிவு வழிவகை செய்கிறது. அதன்படிதான் மேலவை நீக்கப்படுவதற் கான தீர்மானம் இப்பேரவையின் முன் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வைக்கப்பட்டு இருக்கின்றது. மேலவை, ஜன நாயக நெறியில், நெறிமுறையில் இந்தியப் பாராளுமன்ற ஜன நாயக முறையில் அனைத்து அரசியலமைப்புச் சட்ட முறையின் படி இருந்து தீர வேண்டிய ஒரு கட்டாய அமைப்பாக அரசியல் அமைப்புச் சட்டம் அதனை ஆக்கவில்லை.

வசதிக்கும், தேவைக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப வேண்டு மானால் மேலவையை வைத்துக் கொள்ளலாம் என்றும், தேவை இல்லை என்ற உணர்வு ஏற்பட்டால், மாநில மேலவையை தீர் மானத்தின் மூலம் நீக்கி விடலாம் என்றும், அந்த உரிமையை மாநில சட்டமன்றப் பேரவைக்கு அரசியல் அமைப்புச் சட்டம் விட்டிருக்கிறது. இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வருவது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு மாறுபட்ட ஒன்று அல்ல. ஜனநாயகத்திற்கு உட்பட்ட ஒன்றுதான். ஜனநாயக நெறி முறைக்கு உட்பட்ட ஒன்றுதான்.

அது ஜனநாயகப் படுகொலையும் ஆகாது. ஜனநாயகத் திற்குட்பட்ட ஒரு முறையின் அடிப்படையிலே தான் ஏற்கெனவே பல்வேறு மாநிலங்களும் கடைப்பிடித்து, இந்திய பாராளுமன்றத் திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற ஒன்று, அந்த முறையிலே தான் இங்கே இந்தத் தீர்மானம் இந்த அவையின் முன் வைக்கப் படுகிறது. இதிலே ஜனநாயகத்திற்கு மாறுபட்ட செயல் எதுவும் இல்லை.

'குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'

என்றார் வள்ளுவப் பெருந்தகையார், அந்த அடிப்படையில் தேவையை நாடி, தேவையின்மையையும் நாடி, அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல் என்ற அடிப்படையில்தான் இந்த அரசு—மேலவை இருக்க வேண்டும் என்பதற்கே காரணங்களும் உண்டு. இருக்க வேண்டாம் என்புதற்கான காரணங்களும் உண்டு. தேவை என்பதற்கான காரணங்களை சிலர் சொல்லக் கூடும் தேவையின்மை என்பதற்கான காரணங்களும் சொல்லக் கூடும். இன்றைய அரசு இவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, தேவையின்மையைக் கருதுகிற காரணத்தினால் தேவை இல்லை என்று, நீக்குவது என்கின்ற முடிவுக்கு வருகிறது. இது இப்போது ஏற்பட்ட ஒன்று கூட அல்ல. 7, 8 திங்களாகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது பற்றி என்னைப் போன்ற அமைச்சர்களிடத்திலே மேலவையைக் கலைப்பதனால் ஏற்படுகிற சாதக, பாதகங்களைப் பற்றி விரிவாக, விளக்கங்கள் தந்து வந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

நான் அதிலே ஏற்படுகின்ற சாதகங்களை அவர்களிடத்திலே குறித்துக் கொடுத்து வந்திருக்கிறேன்; இதிலே ஏற்படுகின்ற பாதகங்களையும் குறித்துக் கொடுத்து வந்திருக்கிறேன். ஆகவே, இது கலைக்கப்பட வேண்டுமென்று யார் யார், எவ்வப்போது கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள் என்பதைப் பார்க்க முடியும், ஆகவே, இப்பொழுது திடீரென்று ஏற்பட்ட ஒன்று அல்ல. ஒரு ஏழெட்டு திங்கள்களாகவே இது பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டு பரிமாறப்பட்டுக் கொண்டும், நினைக்கப்பட்டு நினைக்கப்பட்டுக் கொண்டும் வந்திருக்கிறது. ஆகவே திடீரென்று ஏற்பட்ட ஒன்று அல்ல என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இப்பொழுது மேலவை, இந்தியாவிலே இருக்கின்ற 22 மாநிலங்களில் தமிழகத்தையும் சேர்த்து ஆறு மாநிலங்களிலேதான் இது இருக்கிறது. ஜம்மு காஷ்மீரிலே இருப்பதற்கு, அதற்குத் தனிச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்திலே வைத்திருக்கிறது. ஆக அந்தச் சட்டத்தை மற்றைய மாநிலங்களுக்கு உள்ள சட்டங்களோடு இணைக்க இயலாது. அதற்கென்று ஒரு தனிப் பிரிவு இருக்கிறது. மற்ற வகைகளிலே ஐந்து மாநிலங்களிலேதான் இருக்கின்றன. ஆகவே, மகாராஷ்டிரம், கர்நாடகம், பீஹார், உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு ஆகியவற்றிலேதான் இப்பொழுது மேலவை அமைப்பு இருக்கின்றது. மற்றைய மாநிலங்களில் காலாகாலத்திலே அந்த மேலவை அமைப்பு தேவையில்லை என்ற ஒரு முடிவுக்கு வந்து மேலவையை எடுத்து விட்டார்கள்.

1986 மே 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆகவே, நான் முதலிலேயே கூறியபடி, இது இருந்து தீர வேண்டிய ஒன்று என்கின்ற அடிப்படையில் அரசியல் அமைப்புச் சட்டமே வகுக்கவில்லை. இது இருந்து தீர வேண்டிய ஒன்று என்று கருதப்பட்டு இருக்குமேயானால் அந்த சாய்ஸ்-வேண்டுமா வேண்டாமா என்பது மாநிலப் பேரவைகள் அவர்கள் விருப்பப் படி முடிவு செய்து கொள்ளலாம் என்ற ஒரு பிரிவை அரசியல் அமைப்புச் சட்டத்திலே சேர்த்திருக்க மாட்டார்கள்.

1969-ஆவது ஆண்டில் மேற்கு வங்காளத்தில் திரு. அஜாய் முகர்ஜி தலைமையில், காங்கிரஸ் அல்லாத ஒரு ஆட்சி அமைந்த பொழுது, இந்தத் தீர்மானத்தை—இப்படிப்பட்ட, மேலவையை நீக்குகின்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து அப்பொழுது நிறை வேற்றினார்கள்.

1984-இலே ஆந்திர மாநிலத்திலே இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டாலும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாததன் காரண மாக, அப்பொழுது விடப்பட்டு, மறுபடியும், 1985-லே இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு இந்தியாவினுடைய பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் ஏற்றுக் கொண்டு, பாராளுமன்றமும் ஏற்றுக் கொண்டதன் காரணமாக 1985-ஆவது ஆண்டில் ஆந்திரப் பிரதேசத்திலே இருந்த மேலவையும், இப்படிப்பட்ட தீர்மானத் தின் மூலமாக அங்கும் நீக்கப்பட்டிருக்கின்றது.

மேலவை நீக்கப்பட வேண்டுமென்ற ஒரு கொள்கையை உள்ளபடியே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து நீக்கப்பட வேண்டும் என்ற கொள்கையைத்தான் பல்வேறு சந் தர்ப்பங்களிலேயும் சரி, பல்வேறு வாதங்களிலேயும் சரி, பல் வேறு விவாதங்கள் நடைபெற்று இருக்கும் பொழுதும் சரி தொடர்ந்து எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் நினைவு படுத்த விரும்புகிறேன். ஆகவே, அந்த வகையில் நீண்டகாலமாகவே அவர்கள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், இந்தத் தீர்மானம் வருகின்ற பொழு தும் அதை ஆதரித்தும், அதற்கு வலுவூட்டியும் வந்திருக்கிறார் கள்.

அது மட்டுமல்லாமல் 1969-லே மேற்கு வங்காளத்திலே மேலவையை ஒழிக்கின்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பாராளு மன்றத்திற்கு வந்திருந்தபொழுது அங்கே திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து அதற்கு ஆதரவு தருகின்ற வகையிலே தான், அந்த மேற்கு வங்காளத்தினுடைய மேலவையை ஒழிக்கின்ற தீர்மானம் பாராளுமன்றத்திலே வருகின்ற பொழுது ஆதரிக்கின்ற அளவிற்குத்தான் பல கட்சிகளும் ஆதரித்தன, அதில் திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து ஆதரிக்கத்தான் செய்தது.

1985 ஆவது ஆண்டிலே ஆந்திர மேலவை ஒழிப்பு பற்றிய தீர்மானத்தைக் கொண்டு வந்த பொழுதும் கூட திராவிட முன்னேற்றக் கழகம் உள்பட, கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்பட, கம்யூனிஸ்ட் கட்சியினரே தீர்மானத்தையே நிறை வேற்றி, இரண்டு கட்சிகளும் ஆந்திர மாநிலத்திலே, ஆந்திரப் பிர தேசத்திலே மேலவையை ஒழிக்க வேண்டுமா, வேண்டாமா என் கின்ற வகையில், வேறு பல சூழ்நிலைகள் மற்றவைகளைப்பற்றிக் கவலைப்படாமல் அது ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்கான தன்மைகளை அடிப்படையாக வைத்து, அந்த வகைகளிலேயும் ஆதரித்திருக்கிறார்கள் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

இதிலே உள் நோக்கம் எதுவும் இல்லை என்பதையும் நான் தெளிவுபடுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே உள் நோக்கத்தை வைத்து, கொண்டு வர வேண்டிய அத்தகைய தன்மைகள் இல்லை. ஏழெட்டு திங்கள்களாகவே ஆராய்ந்து அறிந்து, சிந்தித்துப் பார்த்து, கொள்கை வடிவிலே இருந்து, இப்பொழுது தீர்மான வடிவிலே வந்து சேருகின்ற சூழ்நிலையை இன்றைக்கு அது பெற்றிருக்கிறது. உள்ளபடியே, மற்றைய நிலைகள் வருவதற்கும், இங்கே வருகின்ற நிலைமையைப் பொறுத்த வரையிலேயும் மேலவையிலே இருக்கின்ற அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கான வலிவு குறைந்து விடுமோ, அது எதிர்காலத்திலே வலிவு இழந்துவிடுமோ, அதன் காரணமாகத்தான் இதைக்கொண்டு வந்திருக்கிறார்களோ, அதைச் சமாளிப்பதற்காகத்தான் இந்த முடிவோ என்கின்ற அள வுக்கு கூட ஐயப்பாட்டின் அடிப்படையிலே கருத்துக்களைச் சிலர் பரிமாறிக் கொண்டு வருகிறார்கள். அந்த வகையிலே நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தபொழுது, 1—7—1977வது ஆண்டு நிலையைப் பார்த்தோமேயானால், 63 பேர் இருக்க வேண்டிய மேலவையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஐந்து உறுப்பினர்கள்தான் மேலவையில் இருந்தார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 15 பேர்கள் இருந்தார்கள். காங்கிரசின் சார்பாக 5 பேர்கள் இருந்தார்கள். ஜனதா சார்பாக 4 பேர்கள் இருந்தார்கள். ஐக்கிய கட்சியின் சார்பாக 4-ம் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக இரண்டு பேர்களும், பிற கட்சிகள் சார்பாக 4 பேர்களும் வெற்றி டங்கள் 23-ம் என்ற வகையில் 63 இடங்களில் 5 இடங்கள் ஆளுங் கட்சியின் பக்கம் இருந்து 15 இடங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் இருந்து, அவ்வளவு வலிவான அத்தகைய நிலைமையில் கூட சமாளிக்க முடியாது என்று கருதி, அதிலே இருந்து தப்பிக்க வேண்டுமென்று கருதி, மேலவையை நீக்க

1986 மே 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் அப்பொழுது கொண்டு வரப்படவில்லை. அதற்குப் பிறகும்கூட, 1977-ல் 5 இடம், மேலவையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருந்தாலும், 1978-லே அது 13 இடங்களாக மாறி, 1979-லே 16 இடங்களாக மாறி, 1980-லே 17 இடங்களாக மாறி, 1983-லே 17 இடங்களாக இருந்து, 1984-லே 19 இடங்களாகவும், 1984-வது ஆண்டு இறுதியிலே 23 இடங்களாகவும் ஆகியிருக்கிறது. ஆகவே, 1984 இறுதியிலே 22 இடமாக இருந்து, இப்பொழுது அது 21 இடங்களாக இருக்கிறது. இன்றைய நிலையிலே நாம் கணக்கிட்டாலுங்கூட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 21 இடங்களும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 7 இடங்களும், காங்கிரசுக்கு 3 இடங்களும், ஆசிரியர் கூட்டணிக்கு 4 இடங்களும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு 1 இடமும், காந்தி காமராஜ் தேசிய காங்கிரசுக்கு 1 இடமும், சுயேச்சைக்கு 3 இடங்களும், தலைவர் ஒருவரும் மற்றைய 22 இடங்கள் வெற்றிடமாக இருந்து 63 இடங்கள் இருக்கின்றன. இதை ஏன் சொல்ல விரும்புகிறேன் என்றால், இப்பொழுதும் 21 இடங்களில் தான் நிற்கிறது.

அடுத்து, சட்டமன்ற மேலவை இருக்கும் என்று வைத்துக் கொண்டாலும், சட்டமன்ற உறுப்பினர்களாலே தேர்ந்தெடுக்கப் படுகின்றவர்கள் 7 உறுப்பினர்கள், ஜூன் திங்களுக்குள்ளாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற முறை வந்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஓய்வு பெற்றுச் செல்கிற 4 பேர்களுக்குப் பதிலாக 4 பேர்களைத் தேர்ந்தெடுக்கிற வலிவு இன்றைக்கிருக்கிறது. அதைப் போல, காங்கிரசின் சார்பாக 2 பேர்களைத் தேர்ந்தெடுக்கிற வலிவு காங்கிரசுக்கு இன்றைக்கு இருக்கிறது. மற்ற கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்கிற வலிவு அவர்களுக்கெல்லாம் இருக்கிறது. ஆக, 21 என்ற வலிவு, என்றைக்கும், ஜூன் திங்களுக்குப் பிறகு, இங்கேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டால் கூட குறையாது. உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் தேர்தலைப் பொறுத்தவரையில் குறையுமா என்று பார்ப்போமானால், உள்ளாட்சிமன்றத் தேர்தலில் இப்பொழுது 21 இடங்களுக்கு, 16 இடங்களுக்குத்தான் நடைபெறவிருக்கிறது. அந்த 16 இடங்களிலே என்னுடைய கணக்குப்படி, நாங்கள் பார்க்கிறபடி காங்கிரசுக்கும் கழகத்திற்கும் சேர்ந்து, கிட்டத்தட்ட 10, 11 ஆவது வரவேண்டும். அதிலே 6, 7 இடங்களாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வரவேண்டும், குறைவாகக் கணக்குப் போட்டாலும். ஆனால் வேறு வகையில் கணக்குப் போட்டாலும் வரும். அப்படிப் போட்டாலும், இந்தத் தேர்தல் மூலமாக 27, 28 தான் போகும். எப்படியாவது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 7, 8 இடம் வருகிறது என்று வைத்துக் கொண்டாலுங்கூட, 7-ம், 8-ம் 15 என்றுதான் ஆகுமே தவிர,

அதிகமான எண்ணிக்கையில் வந்து விடுவார்கள், ஆகவே இப்பொழுது கலைத்துத் தீர வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே இது கொண்டு வரப்படவில்லையென்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களை இல்லாமல் செய்ய வேண்டுமென்பதல்ல. இந்தப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்திருக்கிறார்கள். அதைவிட வலிவுகொண்டு, சிறப்பான முறையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருந்து $2\frac{1}{2}$ ஆண்டுக்காலம் அவர்கள் பணியாற்றினார்கள். இன்னமும் சொல்லப்போனால், அவர்கள் தொடர்ந்து இங்கேயே இருந்து, 5 ஆண்டுக்காலம் பணியாற்றியிருக்க வேண்டுமென்பதுதான் எல்லோருடைய விருப்பமும். அப்பொழுது சட்டமன்றப் பேரவைத் தலைவராக இருந்த மாண்புமிகு திரு. இராசாராம் அவர்கள்கூட, நீங்கள் இராஜிநாமா செய்யவேண்டாம், இங்கேயே இருங்கள் என்றுதான் கழகத்தின் சார்பாக, பேரவைத் தலைவர் என்ற முறையில் வற்புறுத்திச் சொன்னார்கள். ஆகவே, கலைஞருடைய செல்வாக்கை இதனால் குறைத்து விட முடியும் என்ற அளவுக்கு அரசியலிலே ஞானமற்று விளங்குபவர்களும் நாங்கள் அல்ல. கலைஞருக்கு இருக்கிற செல்வாக்கு இருக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மலுக்கு இருக்கிற செல்வாக்கு நாட்டிலே இருக்கும்.

(முற்பகல் 11-10)

அந்த செல்வாக்கினுடைய வகைகளை அவ்வப்போது நடைபெறுகின்ற இடைத் தேர்தல்களிலும், பொதுத் தேர்தல்களிலும் பொது மக்கள் வெளிப்படுத்திக் கொண்டிருப்பார்கள். ஆக செல்வாக்கை இந்த வகையிலே குறைத்துவிட முடியும் என்று நான் எண்ணவும் இல்லை, இன்னமும் சொல்லப்போனால் இந்த அவைக்கு அவர் வர இயலாது என்றும் நான் சொல்ல முடியாது. பேராசிரியர் அவர்கள் இந்த அவையை விட்டுச்சென்றார்கள். மறுபடியும் இந்தப் பேரவைக்கே நாம் எல்லாம் மகிழத்தக்க அளவுக்கு மறுபடியும் பேரவைக்கே வந்து அவருடைய நல்ல பணிகளை நாம் பெறுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அதுபோன்று இந்த அவைக்கு வந்து பணியாற்றுகின்ற சூழ்நிலை டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் ஏற்படும். ஆக கலைஞர் இங்கேயே $2\frac{1}{2}$ ஆண்டுக் காலம் இருந்தவர்கள். தொடர்ந்து இருக்க வேண்டும். எதிர்க் கட்சித் தலைவராக இருக்க வேண்டும் என்ற தன்மையிலே நாம் இருக்கின்றோம். ஆக அவர்களை ஒழிப்பதற்காகத்தான் இது என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. அதில் காழ்ப்புணர்ச்சி இல்லை என்பதற்காகச் சொல்கிறேன். ஆக இப்படிப்பட்ட எத்தகைய எண்ணமும் இல்லை. பொதுவாக பல ஆண்டு காலம் பல மாநிலங்களில் உள்ள சூழ்நிலையை ஒட்டி, இங்கேயும் அதை முன்னாலேயே கொண்டுவந்திருக்கலாமே என்று சில பல

கருத்துக்களை செய்தித்தாளில் எழுதுகிறார்கள். காலத்தாழ்வு ஏற்பட்டிருக்கிறது என்று வேண்டுமானால் ஒரு குறை சொல்லலாம். முன்னாலேயே கொண்டுவந்து இருக்கலாமே என்று சொல்லுகிறார்கள். கொண்டுவந்திருக்கலாம். ஆனால் இவ்வளவு காலம் நீட்டியிருக்க வேண்டாமே என்பார்கள், நீட்டியிருக்கக்கூட வேண்டியதில்லைதான். இப்பொழுது இந்த உணர்வும் மற்றைய நிலைமைகளும் ஏற்பட்டது. ஆக அந்த அடிப்படையில்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆக இது ஜனநாயக விரோதமான செயலோ, ஜனநாயகப் படுகொலையோ, காழ்ப்புணர்ச்சியோ, வேறு எந்த நிலைமைகளோ இல்லை. ஆக இருக்கின்ற சூழ்நிலையை ஒட்டி, தேவை, தேவையின்மையை அடிப்படையாக வைத்துத்தான் ஒவ்வொரு மாநிலமும் எப்படிப்பட்ட தன்மைகளின் அடிப்படையில் முடிவு செய்கின்றதோ, அந்த முடிவின் அடிப்படையிலே, இந்த அவையும் முடிவு எடுக்கவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலே இவற்றை நாம் கொண்டுவந்திருக்கிறோம். ஆக இதிலே வேறு எந்த காழ்ப்புணர்ச்சியும், வேறு எந்த நிலைமைகளும் இல்லை. அது இருக்க வேண்டும் என்பதற்கான காரணங்கள் உண்டு. அது இருக்க வேண்டாம் என்று சொல்வதற்கான காரணங்கள் உண்டு. எங்களைப் பொறுத்தவரையிலும் இருக்க வேண்டாம் என்பதற்கான உணர்வும், தேவையின்மையை உணர்த்துகின்ற உணர்வும் அதிகம் இருக்கின்ற காரணத்தினால் ஆளும் கட்சியினர் அதை உணர்ந்து இந்தத் தீர்மானத்தை கொண்டு வருகிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சி வரிசையில் உள்ள தலைவர்கள் எல்லாம் கருத்துக்களை எடுத்துச் சொல்லியதற்கு பிறகு இறுதியாக என்னுடைய கருத்தை வழங்குகின்றேன் என்று சொல்லி இவற்றை என்னுடைய முன்னுரையாக மட்டும் அமைத்துக்கொள்ள விரும்புகிறேன். வணக்கம்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு சட்டப் பேரவையின் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையினுடைய நடைமுறையில் இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெயராலே ஒரு தீர்மானத்தை முன்னவர் அவர்கள் இங்கே மொழிந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சற்று முன்னாலே இங்கே இருந்தார்கள். அவர்களே இருந்து முன்மொழிவதாக ஒரு சொல் சொல்லியிருந்தால் கூட இந்த தீர்மானத்திற்கு இருக்கின்ற அளவுகடந்த முக்கியத்துவத்தின் காரணமாக அவர்களுடைய கருத்து அப்படி அமைந்திருக்கிறது என்ற அடிப்படையில், அவர் அதிலே அக்கறையாக இருக்கிறார் என்ற அடிப்படையிலே வாதத்தை நடத்த முடியும். ஆனால் முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவையையே நீக்குவதற்கான—ஒழிப்பதற்கான ஒரு தீர்மானத்தைத் தன் பெயரிலே தந்து, அவர்களேகூட இங்கிருந்து, ஒரு வார்த்தை சொல்லவில்லை என்பது உள்ளபடியே சட்டமன்ற மேலவையை நீக்குவதில் முதலமைச்சருக்கு அக்கறை இருந்தாலும் கூட, எவ்வளவு பெரிய ஒரு காரியத்தைச் செய்கிறோம் என்பதை அவர் எண்ணிப் பார்க்கவில்லையோ

என்று ஒரு சந்தேகம் எனக்கு வருகிறது. ஏனென்றால் சட்டமன்ற மேலவை என்பது, சட்டசபை ஏற்பட்டதற்குப் பின்னாலேதான் மேலவை என்ற பெயர் பெற்றதே தவிர அதற்கு முன்னாலே லெஜிஸ்லேட்டிவ் கௌன்சில் என்று சொல்லுகின்ற போது தனி சட்டமன்றமாக அது இயங்கியது. அப்போது சட்டசபை இல்லை. இந்த சட்டசபை இந்தக் காலத்தில் அதுவும் சுதந்திரத்திற்கு பின்னாலே தேர்ந்தெடுக்கப்படுகின்ற இந்த முறையில் தேர்ந் தெடுக்கப்படுவதற்குப் பதிலாக இந்த சட்டமன்றம் என்ற தனிப் பெயரால் 1920, 1921 ஆம் ஆண்டிலிருந்து அந்த மன்றம் இயங்கி வந்திருக்கிறது. பின்னாலே பிறந்த வாழைக்கன்று முன் னாலே பிறந்த வாழைக்கு முடிவு கட்டுவதைப் போல, இன்றைய தினம் தீர்மானம் சட்டமன்றப் பேரவையில் நானே உறுப்பினராக இருந்தாலும்கூட மேலவைக்கு ஒரு முடிவு கட்டு கிறது என்பது உள்ளபடியே வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சி. ஏனென்றால் தமிழ்நாட்டிலே இருந்த சட்டமன்ற மேலவை எப்படிப்பட்ட பணிகளைச் சட்ட மன்றம் தோன்றுவதற்கு முன்னாலே ஆற்றியிருக்கிறது என்ற அந்த வரலாற்றுக் குறிப்பு களை யாராவது எடுத்துப் பார்ப்பீர்களானால், அகில இந்தியா வுக்கும் வழிகாட்டியாக விளங்குகின்ற சிறப்பை நம்முடைய கௌன்சில் பெற்றிருக்கிறது. மிகப்பெரிய சீர்திருத்தமான அடிப்படைக் கருத்துக்கள் பேசப்பட்ட மன்றம் அது. அந்த மன்றத்திலே நீதிக் கட்சித் தலைவர்கள், சமூக நீதிக்கு வாதாடிய தலைவர்கள், கம்யூனல் ஜீ. ஓ. கொண்டுவருவதற்குக் காரண மாக இருந்த அமைச்சர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகள் நிலைபெறுவதற்கு வழி காட்டியவர்கள்.

பொட்டுக் கட்டுவதை ஒழிக்க வகை செய்த திருமதி முத்து லட்சுமி ரெட்டி அம்மையார் அவர்கள், மிகப் பெரிய அரசியல் வாதி என அகில இந்தியாவில் மதிக்கப்பட்ட சர். ஆர்.கே. சண்முகம் அவர்கள், மிகப் பெரிய ராஜதந்திரி என்று போற்றப் பட்ட சர். சி. ஆர். ரெட்டி அவர்கள், மிகப் பெரிய கல்வியாளர் என்று மதிக்கப்பட்ட சர். ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்கள், மூதறிஞர் ராஜாஜி அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆகிய அவ்வளவு பேரும் அந்த அவையிலே இடம் பெற்றிருக்கி றார்கள். பெருமையாகச் சொல்ல முடியாவிட்டாலும் எனக்கு அந்த அவையிலே உறுப்பினராக இருக்கிற வாய்ப்பு இருந்திருக் கிறது என்பதை நான் எனக்குக் கிடைத்த பயிற்சியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வாய்ப்பு அருமை நண்பர் நாவலர் அவர்களுக்கு ஏற் படாத காரணத்தால் வருத்தம் இல்லாமல் இந்தத் தீர்மானத்தை அவர்கள் முன்மொழிந்து இருக்கிறார். அதற்கான வாய்ப்பு அவருக்கு நிரம்பக் கிடைத்து இருக்கிறது. சட்டமன்ற மேலவை ஏற்பட்டபோது சட்டமன்றம் இல்லாத காரணத் தால் மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்த முறையில் வந்தப்

போது இரட்டை ஆட்சி முறையில் சிறப்பாகச் செயல் பட்டு—அப்போது மேற்கு வங்காளத்திலும் மற்ற இடங்களிலும் அப்படிப் பட்ட சபை இருப்பதற்கான வழி முறைகள் இருந் தாலும் கூட செயல்படாமல் போய், தென்னிந்தியாவிலே—தென்னகத்திலேதான், தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் சார்பிலேதான் ஜனநாயக அடிப்படையே இந்தியாவில் நிலை நாட்டப்பட்டது. அதுவும் தேசிய காங்கிரஸ் கட்சி அதிலே அக்கறையாக இல்லாத கால கட்டத்தில், விலக வேண்டுமென்று தீர்மானித்த கால கட்டத்தில் செயல்படுத்திக் காட்டியவர்கள்—ஒரு வகையில் அவர்களுக்கெல்லாம் கூட, அதனால் சில கெட்ட பெயர் கூட ஏற்பட்டது—ஏதோ வெள்ளைக்காரனுக்கு ஆதர வாக இருப்பதாக. ஆனால் நாட்டு மக்களின் முன்னேற்றத் திற்கு வழி காட்டுகிற மிகப் பெரிய பணியை அந்த அவை நிறைவேற்றியது. ஆனால் இன்றைக்கு நம்முடைய நாவலர் அவர்கள் அந்த அவை இனி இருக்கத் தேவையில்லை என்பதை உணர்வின் காரணமாக இந்தத் தீர்மானத்தை முன்மொழிந் திருக்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள்.

இருக்கத் தேவையில்லை என்பது ஒரு உணர்வுதான் என்று அவர்கள் சொல்கிறபோது எனக்குக் கொஞ்சம் ஆச்சரியமாக இருக்கிறது. ஆந்திராவில் மேலவை தேவையில்லை என்ற தீர்மானம் வந்தபோது அங்கே இருந்த முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் அவர்கள் மேலவை தேவையில்லை என்று தீர்மானித்ததற்குக் காரணமாக இருந்தது, ஆந்திர மேலவை யில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருந்து, தெலுங்கு தேசக் கட்சி ஆட்சியில் சட்டமன்றத்தில் கொண்டு வருகிற தீர்மானங்களை நிறைவேற்ற விடாமல் தடை செய்து கொண்டிருந்தார்கள். சட்டமன்றத்தின் நடவடிக்கைக்கு, நிறைவேற்றப்படுகிற தீர்மானங்களுக்கு மேலவையில் தடைகள் எழுப்பப்பட்ட காரணத்தால், வேறு வழியில்லாமல் அந்த அவையைக் கலைத்தால் தான் மக்களுக்குப் பணியாற்ற முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுத்தான் அந்தக் காரியம் நடைபெற்றது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மேற்கு வங்காளத் தில் மேலவையைக் கலைக்க வேண்டும் என்று சொன்னபோது, முதலிலே கொள்கையாக அது இருந்தாலும் கூட, மேற்கு வங்காளத்திலே மத்தியிலே ஆளுகிற காங்கிரஸ் கட்சி உறுப்பினர் மேலவையிலே அதிகம் இடம் பெற்றிருந்த காரணத் தால் பெரும் இடையூறாக இருந்து, கலைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் இன்றைய தினம் அவை முன்னவர் அவர்கள் இங்கே பேசியபோது சொன்னது போல், அவர்களே மிகத் திட்டவட்டமாகச் சொன்னது போல், எதிர்க் கட்சிகள் எவ்வளவு பேர் இடம் பெற்றாலும், நாளைய தினம் நடைபெறுகிற தேர்தலில் எவ்வளவு பேர் உள்ளே வந்தாலும்

15 பேரானாலும், 20 பேரானாலும் தமிழகத்தில் இன்றைக்கு ஆளும் கட்சிக்கு இருக்கின்ற பலத்தைக் குறைத்து விட முடியாது ; அவர்கள் இடையூறாக இருக்க முடியாது ; எங்கள் தீர்மானங் களைத் தடுத்து நிறுத்த முடியாது ; எந்த விதத்திலும் எதிர்க் கட்சிகள் எங்களுடைய முயற்சிகளையும், செயல் திட்டங்களை யும் தடுக்க வழியில்லை என்பதை நாவலர் அவர்களே ஏற்றுக் கொண்டிருக்கிறபோது அந்த அவையைக் கலைப்பதற்கான திடீர் காரணமோ, திடீர் நியாயமோ, அவசியமோ இந்த 1986 ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்தத் தேதியில், இந்த நிகழ்ச்சியை ஒரு ஆபிச்சுவரி ரிமார்க் என்று சொல்லக் கூடிய அளவுக்கு, இந்த இரங்கல் தீர்மானம் கொண்டு வருகிற அளவுக்கு, இது தேவைப்படுவதற்கான ஒரு பின்னணியோ, காரணமோ, சூழ்நிலையோ இல்லை என்பதை நான் வலியுறுத்தி நினைவூட்ட விரும்புகிறேன்.

ஏதாவது காரணம் இருந்து, இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்கிற கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருந்து, இந்தச் சட்ட மன்ற உறுப்பினர்கள் எப்படி மக்களால், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்த அளவுக்குத் தேர்ந்தெடுக்கப்படாத அவர்களால் இடையூறு இருக்கக்கூடாது என்பதற்காக, நீங்கள் கலைப்பதாக இருந்தால் நான் எதிர்க் கட்சி வரிசையில் இருந்தாலும் கூட இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறை ஏற்பட முடியாது.

இந்தச் சட்டமன்ற மேலவையைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை, இந்தச் சட்டமன்றத்தில் விவாதம் ஏற் படுகிறபோது ஏற்படுகிற சூடு மேலவையில் நடக்கிறபோது இல்லாத காரணத்தால் தெளிவான சிந்தனை முடிவு ஏற்படு வதற்கு அது துணை செய்கிறது என்று குறிப்பிட்டு இருக்கி றார்கள்.

இன்னொரு உதாரணம் கூட எனது நினைவுக்கு வருகிறது. யார் அதைச் சொன்னது என்று நினைவு இல்லை. டீ சாப்பிடுகிற போது கப் அன்ட் சாசர் பயன்படுவதைப் போல கப்பிலே இருக்கிற டீ சூடாக இருக்குமேயானாலும் சாசரிலே ஊற்றுகிறபோது ஆறிவிடும். அது போல் மேலவையும் சாசரில் இருக்கிற டீயாக இருந்து பயன் படுகிறது என்ற கருத்து, ஏற்கனவே யார் தெரிவித்தார்கள் என்பது நினைவு இல்லை. எனவே அப்படித் தெரிவிக்கப்படக் கூடிய அளவுக்கு, இருக்கிற ஒரு நல்ல சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடிய அந்த அமைப்பைக் கலைப்பதிலே பெரிய நன்மை இல்லை. மற்றொன்று இந்தப் பேரவைக்கு அரசாங்கம் ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் செலவழிக்க வேண்டும் என்று சொன்னால், அந்த அவைக்கு ஏறக்குறைய 15 லட்சமோ அல்லது 20 லட்சமோ கூட செலவழிக்க வேண்டிய

அவசியம் வராது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் செலவு கணக்கையே பார்க்காத அரசு அது. ஆக அவர்கள் ஏராளமாகப் பல்வேறு காரணங்களுக்குச் செலவிடக் கூடிய ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை வரவு செலவு செய்கிற போது 15, 20 லட்சம், இதனாலே மிச்சம் என்று கருதுவதற்கு எந்த வித நியாயமும் இல்லை.

(முற்பகல் 11–20)

இவைகளை விட முக்கியமாக நான் எடுத்துச் சொல்ல விரும்புவது, இன்றைக்குத் தேவையா இல்லையா என்பதை தான் எண்ணிப்பார்த்துத் தேவை இல்லை என்ற உணர்வுக்கு நாங்கள் வந்திருக்கிறோம், சில பேர் தேவை என்ற உணர்வுக்கு வந்திருப்பார்கள் என்று நாவலர் அவர்கள் இரண்டு பக்கமும் இருக்கிற நியாயத்தை, தான் உணர்ந்து இருப்பதை எடுத்துக் காட்டினார்கள். மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு நான் ஒன்றை எடுத்துச் சொன்னால் அவர் வருத்தப்பட மாட்டார் என நினைக்கிறேன். அது உணர்வு தானே தவிர, தெளிவு அல்ல. உணர்வுக்கும் தெளிவிற்கும் இடையில் இருக்கிற வேறுபாட்டை அவர்கள் அறிவார்கள். காரண காரியம் என்ற சிந்தனை இல்லாமல் ஒரு உணர்வு உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. காரண காரியம் இல்லாமலே ஒரு உணர்வு உங்களுக்கு வருகிறபோது, எங்களுக்கு காரணத்தோடு, கலைக்கிறார்கள் என்ற காரணத்தோடு, ஒரு உணர்வு எங்களுக்கு வருகிறது. காரணம் இல்லாமலே கலைக்கலாம் என்ற உணர்வு வருகிறபோது, காரணத்தோடு கலைக்கக் கூடாது என்ற உணர்வு வருவதற்கு மகிழ்ச்சி பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, அவர்களே சொன்னார்கள்.

''குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்'' என்ற அடிப்படையிலே தான் எண்ணிப் பார்க்கிறோம் என்று. மேலவையினாலே ஏற்பட்ட குறை என்ன? நீங்கள் நாடுகிற எந்தக் குணம் மேலவையிலே கிடைக்கவில்லை. இங்கிருக்கின்ற அமைச்சர்கள் மேலவையிலே இருக்கிற போது, இங்கே ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப் போன்று எந்த நிகழ்ச்சிக்காவது ஆளாகி யிருக்கிறார்களா? அல்லது அமைச்சர்கள் சொல்லக் கூடிய எந்த விளக்கமும் மேலவையிலே அடியோடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறதா? மேலவை என்பது ஆட்டுக்கு தாடி போன்றது என்று கருதி விடக் கூடிய ஒன்று அல்ல. இன்னும் சொல்லப் போனால் கவர்னருக்குச் சொல்லப்பட்ட இலக்கணம் கூட மேலவைக்குப் பொருந்தாது. அரசியல் சட்டத்திலேயே மேலவை இருக்கலாமா கூடாதா என்று தீர்மானிக்கிற அதிகாரம் சட்டப் பேரவைக்கு, சட்ட மன்றத்திற்கு தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், சட்ட மன்றத்தினுடைய ஃபண்டமண்டல் ரைட்ஸ், அடிப்படை உரிமை என்பதற்காக தந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்

போனால், ஒரு இடத்திலே மாநிலத்தில் இருக்கட்டும், இல்லாத இடத்திலே இல்லாது இருக்கட்டும்; அந்த உரிமையைச் சட்டமன்றமே வைத்துக் கொள்ளட்டும். எல்லா இடத்திலும் இரண்டு அவைகள் இருக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்திலே வற்புறுத்தத் தேவை இல்லை என்று கருதியே அவ்வாறு விதி செய்துள்ளனர்.

எல்லா இடத்திலும் எல்லா மாநிலத்திலும் இரண்டு அவை இருக்க வேண்டும். அதாவது மேலவையும் இருக்க வேண்டும் என்பதை சொல்வதற்கான சட்டம் செய்தபோது, இருக்கலாமா கூடாதா என்று தீர்மானிக்கும் உரிமை சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறது. கட்டாயமாக அது இருக்க வேண்டும் என்று சொன்னால், அதை அரசியல் சட்டத்திலேயே நிறைவேற்றி இருப்பார்கள். பல மாநிலங்கள் புதியதாக பிரிக்கப்படுகிற போது, புதியதாகத்தான் சட்டமன்ற மேலவை வர வேண்டியிருக்கிறது என்ற காரணத்தால், அப்படிப் புதியதாக வருவதை கட்டாயமாக்கப்படுவதால் என்ன லாபம் என்ற கருத்தில், இருப்பதும் இல்லாதிருப்பதும் சட்டமன்றமே தீர்மானிக்கட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அப்படி தீர்மானிக்கலாம் என்ற காரணத்தால், மற்ற மாநிலங்களிலே தீர்மானித்ததைப் போல — 4, 5 மாநிலங்களைத் தவிர, குஜராத்தைத் தவிர, மராட்டியத்தை தவிர, பீகாரைத் தவிர, உத்திரப் பிரதேசத்தைத் தவிர, இன்னொரு மாநிலம் ஒரிஸ்ஸா என்று நினைக்கிறேன், அவைகளைத் தவிர மற்ற இடங்களில் கலைத்து விட்டார்கள். பல இடங்களில் அது ஏற்படவே இல்லை. பல இடங்களில் 65 ஆண்டுக்கால வரலாறு கிடையாது. பல இடங்களில் மேலவையினுடைய வரலாறு பெருமைக்கு உரியதாக இருக்காது. இன்னும் சொல்லப் போனால், மேலவையிலே கிடைக்கின்ற கருத்தோட்டம், தென்னகத்திலே தமிழகத்திலே கிடைத்துவருவது போன்று வேறு எந்த மாநிலத்திலும் கிடைத்தது இல்லை. எனவே இவ்வளவு சிறப்பு பெற்றிருக்கிற போது, நமக்கு வந்திருக்கிற உரிமை, இந்த சட்டமன்றத்திற்காகத் தரப்பட்டிருக்கிற உரிமையே தவிர, அதைக் கலைப்பதிலே மிகுந்த அக்கறையோடு தரப்பட்ட உரிமை அல்ல.

இன்னும் சொல்லப்போனால் அகில இந்தியாவை ஆளுகின்ற காங்கிரஸ் கட்சியே சில மாநிலங்களில் சட்ட மேலவை கலைக்கப்பட்டபோது எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். போராடியிருக்கிறார்கள். அது அவர்களின் பொதுவான கொள்கை அல்ல. அகில இந்தியாவை ஆளுகின்ற கட்சியே அதை எதிர்த்துப் போராடியிருக்கிறார்கள். கலைப்பதற்கு அனுமதி கேட்டுத் தீர்மானம் போட்டதற்கு பின்னாலும் ஒரு ஆண்டுக் காலம் அதை ஏற்காமல் இருக்கவில்லையா?

இன்றையதினம் நிறைவேற்றியதற்குப் பின்னாலும் அதுவும் கொள்கை அடிப்படையிலே நியாயம் என்று காங்கிரசு சொன்னால், பாராளுமன்றத்திலே அதை நிறைவேற்ற ஒரு ஆண்டுக்காலம் ஆவானேன். திரும்ப திரும்ப என்டி. ஆர். அதனை வலியுறுத்த வேண்டிய அவசியம் ஏற்படுவானேன். எனவே காங்கிரஸ் கட்சிக்குக் கூட அது கொள்கை அல்ல. சட்ட திட்டத்திலே வைத்திருப்பதற்கும் இல்லாமல் இருப்பதற்கும் சட்டமன்றமே அந்தக் கடமையைச் செய்வதற்கு விட்டு விடுகிற வகையில் செய்யப்பட்டதே தவிர, கலைக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில் இல்லை. ஒரு வேளை நாவலர் அவர்கள் மற்ற மாநிலங்களில் சில இடங்களில் கலைத் திருக்கின்ற போது, நாம் ஏன் கலைக்கக் கூடாது என்று கேட்டால் இரண்டு விளக்கம் நான் சொல்லமுடியும். ஒன்று நமக்கிருக்கிற தனி பாரம்பரியத்தை காப்பாற்றிக் கொள்வதென்பது நம்மைப் பொறுத்ததே தவிர, மற்றவர்களைப் பொறுத்ததல்ல. மற்றவர் கள் எல்லாம் மும்மொழிக் கொள்கையென்று ஒப்புக்காக உண்மை யில்லாமல் அப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றி மூன்று மொழி களைப் படிக்கிறோம் என்றால் அதற்காக அவர்களைப் பின்பற்றி நாமே நம் கழுத்தை அறுத்துக் கொள்ள முடியுமா? அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? இன்னும் சொல்லப் போனால் ஆளும் கட்சிக்குப் பெரிய வாய்ப்பு மேலவை இருப்பது. சிலசமயங் களில் சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்கிற போது கட்சி அடிப் படையில் வருகிற கருத்து மாறுபாட்டை விலக்கி ஒருமித்த கருத்தை மேலவையில் உருவாக்கிக் கொள்ள முடியும். அந்த வாய்ப்பை பெறக்கூடிய ஆளும் கட்சி, ஆளும் கட்சிக்குச் சாதக மாக இருக்கிற நிலையில், அந்த அவையைக் கலைப்பது என்பதில் என்ன கொள்கை இருக்கிறது? இதிலே என்ன தீரம் இருக் கிறது? இவ்வளவு பெரும்பான்மை இருக்கிறது. இதிலே என்ன வீரம் இருக்கிறது? அதிலே என்ன மாபெரும் தீரம் இருக்கிறது? அல்லது சட்டமன்றத்தில் நடைபெறக் கூடிய எந்தத் தவறு, அல்லது நடைபெற்ற எந்தத் தவறு சட்டமன்ற மேலவையில் நடந்தது, அதனால் நம்முடைய மதிப்பு குறைந்து விட்டது? எனவே சட்டமன்ற மேலவை இருப்பது ஆளும் கட்சிக்கு ஒரு துணைக்கரம். ஆனால் அவைகளை மறந்துவிட்டு, ஏதோ அரசியலில் அன்றாடம் பேசப்படுகிற பேச்சில் கலைஞர் அவர்கள் வந்த நாளிலிருந்து அந்த எண்ணம் உருவாகி இருக்கிறது என்பதைப் போல, 7, 8 திங்களாக அந்த எண்ணம் இருப்பதாக முன்னவர் அவர்கள் சொன்னர்கள். கலைஞர் அவர்கள் அந்த அவைக்கு வந்து $1\frac{1}{2}$ ஆண்டுக்காலம் ஆகிறது. இன்னும் சொல்லப்போனால், 7, 8 மாதங்களுக்குப் பிறகு தான் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவ ராக வருகிற நிலைமை ஏற்பட்டது. தனிப்பட்ட முறையில் கலைஞரை நீங்கள் ஒழிப்பதாகவோ அல்லது ஒழிக்க முயற்சிப்ப தாகவோ நான் கருதவில்லை. எதற்கு அப்படி அவர்கள் எதிரில் உட்கார்ந்து பல நியாயங்களைப் பேசி, பதில் சொல்லிக் கொண் டிருக்கிற தொல்லை நமக்கு வருகிறது. நண்பராகவே

இருப்போமே, எதற்காக எதிர்த்து வாதாட வேண்டுமென்று நல்ல எண்ணத்தில் தான் நீங்கள் இந்தக் காரியத்தில் ஈடுபடு கிறீர்களே தவிர வேறல்ல.

ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். எதிர்க்கட்சிக்கு வலு விருந்து, வாதம் செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து, பதில் சொல்கிறபோது நம்முடைய அரசியலில் ஏற்படுகிற ஆரோக்கியத்தை நீங்கள் இழந்து விடப்போகிறீர்கள். ஆளும் கட்சி ஆரோக்கியத்தை எத்தனையோ வழியில் இழந்திருக்கிறது. எந்தெந்த வகையில் ஆரோக்கியம் இழந்திருக்கிறது என்று இன்றைக்குக் காலையில் பேசப்பட்ட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக ஆளும் கட்சி நண்பர்களே எழுப்பிய பிரச்னையில் எவ்வளவு பெரிய ஊழல்கள் திரும்பத் திரும்ப பேசப்பட்டது என்பதும், அந்த நேரத்தில் நான் எழுந்திருந்து முன்னவர் அவர்களை கேட்டுக்கொள்ளக்கூட எண்ணினேன். ஆனால் முறையல்ல என்பதற்காக பேசாமல் இருந்தேன். எழுத்து மூலமாக உங்கள் புகாரைத் தந்தால் விசாரிக்க ஏற்பாடு செய்கிறேன் என்று நாவலர் அவர்கள் சொன்னார்கள். அதுவே இந்தச் சட்டமன்றத்தை நாம் மதிக்காத தற்கு அடையாளம். தாங்கள் இருக்கிறீர்கள், தங்களுக்கு முன்னாலே தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரிய ஊழல் என்று அவர்கள் அறிந்த பலசெய்திகளை ஒருவருக்கு மேலாக நான்கு பேர்கள் சொல்கிறபோது, உடனடியாக இந்த அவையில் எழுப்பப்பட்ட பிரச்னை குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப் படும் என்று எழுத்து மூலமாகக் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லாத அளவிற்கு, இந்த அவை மதிக்கப்பட வேண்டும். எனவே அதை நான் வேறு கோணத்தில் தான் சொல்கிறேன். ஆனால் இவ்வளவு குறைபாடுகள் ஒரு ஆளும் கட்சி மூலமாக சத்துணவுக் கூடங்களிலிருந்து கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கப்படுகிற இடம் வரையில் பல குறைபாடுகள் இருக்கிறபோது, எதிர்க்கட்சியிலே பல்வேறு அரங்குகளிலிருந்து நியாயங்களை அவ்வப்போது கேட்பது ஆளும் கட்சிக்குத்தான் நன்மை.

இன்னும் சொல்லப்போனால், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று இரண்டையும் நாட்டு மக்களை விட மிகவும் முக்கியமாக நான் கருதுபவன் அல்ல. என்னுடைய மனப்பான்மையிலே என்னுடைய கட்சியை விட, நான் ஏற்றிருக்கிற சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பை விட, ஆட்சியிலே இருக்கிற அமைச்சர் களை விட, ஐந்து கோடி மக்கள்தான் பெரிது. அதை நிறை வேற்றுவதற்கு எனக்கு சக்தி இல்லாவிட்டாலும், என்னுடைய உணர்வு அப்படிப்பட்டது. அந்த அடிப்படையில் சொல்கிறேன். இந்த மக்களுக்காக வாதாடுவதற்கு மேலவையில் 10 பேர், 20 பேர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களோ, ஆசிரியர் களோ அல்லது பட்டதாரிகள் தொகுதியிலிருந்தோ வந்து செயல் படுவார்கள். உள்ளாட்சி மன்றங்களுக்கு 8, 9 ஆண்டுக்காலம்

1986 மே 14] [திரு. க. அன்பழகன்]

தேர்தலே நடத்தாமல் எப்படியோ தசரதனுக்கு பிள்ளைகள் பிறந்ததைப் போல, இவ்வளவு நாள் கழித்து உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற்று, உள்ளாட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னாலே, அவர்கள் வாக்களித்து தங்களுடைய பிரதிநிதிகளாக மாவட்டத்திற்கு ஒருவரை அல்லது இருவரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிற அந்த வாய்ப்பை இன்றையதினம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு நீங்கள் பரிசாக வழங்குகிறீர்கள். ஒருமுறை தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் அனுப்பக் கூடாதா? ஒன்பது ஆண்டுக்காலம் அவர்கள் உரிமை இழக்கச் செய்து, அந்தப் பொது மக்களுடைய உரிமையைப் பறித்து வைத்திருந்தீர்கள். எப்படியோ அந்தத் தேர்தலை நீங்களே அனுமதித்து அனுமதி வழங்கியிருக்கிறீர்கள். தேர்தலில் ஒரே ஒரு கட்சியைச் சேர்ந்த, திராவிட முன்னேற்றக் கழகத்தை மட்டும் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்று வரவில்லை. எல்லா கட்சிகளும் வந்திருக்கின்றன. ஆளும் கட்சியும் வந்திருக்கிறது. ஆளும் கட்சியிலே ஒன்றியத்தினுடைய தலைவர்களாக வந்தவர்களோ, பேரூராட்சி மன்றத் தலைவர்களாக வந்தவர்களோ, ஊராட்சி மன்றத் தலைவர்களாக வந்தவர்களோ இங்கேயிருக்கிற நம்மை விட, இங்கேயிருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களைவிட, கட்சிக்கு உண்மையானவர்கள் அல்லவா? அவர்கள் சார்பிலே பிரதிநிதிகள் மேலவைக்கு வருகிறார்கள் என்று பெருமை இருக்கக் கூடாதா? மகாத்மா காந்தியடிகள் அவர்களின் கொள்கைப்படி பாராளுமன்றத்தை விட சட்டமன்றம் மேலானது. சட்டமன்றத்தை விட உள்ளாட்சி மன்றங்கள்தான் மக்களுக்கு உடனடியாகப் பணியாற்றுகிற மன்றங்கள். அந்த உள்ளாட்சி மன்றங்களை நினைத்துத்தான் காந்தியடிகள் கிராம இராஜ்யத்தை வலியுறுத்தினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் உணர்விலே இந்த உள்ளாட்சி மன்றம் எவ்வளவு நிறைவுடையதாக இயங்குகின்றதோ அதைப் பொறுத்துத்தான் ஜனநாயகத்தினுடைய பலன் கிடைக்கும் என்ற கருத்து இருந்தது.

(முற்பகல் 11.30)

எனவே அப்படிப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுடைய பிரதிநிதிகள் 16 பேர்களோ, 18 பேர்களோ, வெற்றி பெற்று வரக்கூடிய நேரத்திலே, அவர்களுக்கு தேர்தல் நடத்தக்கூடிய நேரத்திலே இந்த மன்றத்திலே இருந்து 7 பேர்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதை ஒருவேளை அரசாங்கம் புறக்கணிக்கிற அளவிற்கு நாமே தேர்ந்தெடுத்து அங்கே 7 பேர்களை ஏன் அனுப்ப வேண்டும். வேண்டாம் என்று கருதினால் அது வேறு. ஆனால் உள்ளாட்சி மன்றங்களிலே இருந்து அவர்களுக்கு என்று வருகிற பிரதிநிதிகள் வந்து உட்காரக் கூடிய அவை அதுதான். இந்த உள்ளாட்சி மன்றங்களில் இருந்து பிரதிநிதிகளாக 10 பேர்கள் வந்து இங்கே உட்கார

[திரு. க. அன்பழகன்] [1986 மே 14

நீங்கள் அனுமதிப்பீர்களா? ஆனால் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், எந்த உள்ளாட்சி அமைப்புகளாக இருந்தாலும் கூட, சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே போய் உட்கார அறை கொடுக்கவேண்டும் என்று இங்கேயே பேசினார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியத் தலைவர்கள் இருக்கிற இடத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் போய் அமரவேண்டும். அந்தச் சலுகைகள் தரப்பட வேண்டும். மரியாதை தரப்பட வேண்டும். அந்த உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்தவர்கள், ஏறத்தாழ 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊராட்சி மன்றங்கள், 376 ஒன்றியங்கள், 96 நகராட்சிகள் 3 மாநகராட்சிகள்—அதற்கு தேர்தல் நடந்தாலும் நடைபெறாவிட்டாலும் அவர்களுடைய பிதிநிதிகள் வந்து இந்த அவையிலே உட்காரக்கூடிய காட்சியை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பார்க்கக்கூடாதா? அவர்கள் வந்ததிலே இருந்து அந்தக் காட்சியை அவர்கள் பார்க்கவில்லை. முதலமைச்சராக வந்ததிலிருந்து, அந்த அவையில் 63 பேர்களில், 38 பேர்களோ, 40 பேர்களோ, அல்லது 41 பேர்களோ தான் இயங்கி இருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை ஜனநாயகத்திற்கு நல்ல பக்குவமான மனப்பான்மையை வளர்க்கக் கூடிய, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, பொதுப்பணியிலே அக்கறை செலுத்துவதற்கான ஒரு நிலைமையை உருவாக்கக் கூடிய ஒரு மேலவையாக இருக்கக்கூடிய அந்த அமைப்பை, கலைப்பது என்பது, இந்தச் சட்டமன்றம் நிறைவேற்றவேண்டிய ஒன்று அல்ல. என்னுடைய நண்பர் நாவலருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னவராக நீங்கள் இருக்கிற காலத்தில் இப்படிப்பட்ட ஒரு காரியத்தைச் செய்தோம் என்ற ஒரு பழியை நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், மக்களிடையே மிகப் பெரிய செல்வாக்கு இருக்கிறது. மக்களுடைய அன்பைப் பெற்றிருக்கிறோம் என்பதிலே தன்னம்பிக்கை உள்ள ஒரு முதலமைச்சர், இப்படி சில அவைகளைக் கலைத்துத்தான் தன்னுடைய ஆட்சிக்கும் பெருமை தேடவேண்டும் என்ற அவசியம் இல்லை. எனவே இந்தக் கலைப்பு அவசியம் இல்லாத காரியம். எனவே இதை எதிர்ப்பது என்னுடைய கடமை என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்தினுடைய சரித்திரத்தில் இன்று முன் மொழியப்பட்டு உள்ள தீர்மானம் ஒரு முக்கியமான தீர்மானம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சம்பந்தப்பட்ட வரையில் கருதுகிறது. எங்களுடைய கட்சி சம்பந்தப்பட்ட வரையில் மாநிலங்களில் இரண்டு அவைகள் தேவையில்லை என்பதை ஆரம்ப முதலே நாங்கள் வலியுறுத்திக் கொண்டு வரக் கூடியவர்கள். பிரிட்டிஷ் ஆட்சி இந்த நாட்டுக்கு 1935 ஆம் ஆண்டு இந்த நாட்டினுடைய மாநில சுயாட்சி என்ற பெயரைச் சொல்லி, என்று ஒரு அரசியல் அமைப்பைத் தந்தார்களோ, அந்த

அரசியல் அமைப்பு வந்த காலத்திலேயே, அந்த அரசியல் அமைப்பை ஏற்றுக் கொள்ளலாமா, கூடாதா என்று கூட பல போராட்டங்கள் இந்த நாட்டில் நடந்தன. ஆகவே, அரசாங்கத்தினுடைய அமைப்பு என்பது ‘கவர்ன்மென்ட் ஸ்ட்ரக்சர்’ என்பது, அதில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கக் கூடிய முறையில் இந்த அமைப்புக்கள் எப்படி அமையவேண்டும். அதில் சாதாரண உழைப்பாளி மக்கள், ஏழை மக்கள், விவசாய மக்கள் படிப்பாளி மக்கள், இப்படிப்பட்ட சமுதாயத்தினுடைய நூற்றுக்கு 98 சதவீத மக்கள், அவர்களுடைய பிரதிநிதித்துவ சபைகளாக இவைகள் இருக்கவேண்டும். அரசாங்கத்தை ஆளுபவர்கள் அவர்கள் தான். அரசாங்கத்தை மாற்றுபவர்களும் அவர்கள்தான். ஆகவே அப்படிப்பட்ட மக்களுடைய சபைகளாக அவைகள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட முறையில், இரண்டு அவைகள் என்ற அந்த அமைப்பு இருக்கிறதே, அந்தத் தன்மையில் வந்தது அல்ல என்பது எங்களுடைய அரசியல் விஞ்ஞானத்தை நாங்கள் கற்றுக் கொண்டு இருக்கக்கூடிய அடிப்படையில் இருந்து பார்க்கிற பார்வை. ஆகவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில், இதில் தெளிவாக நாங்கள் இருக்கிறோம். வேறு எந்த நோக்கத்தோடும் சொல்லக்கூடிய விஷயங்கள் அல்ல. இன்றைக்கு இருக்கக்கூடிய இப்படிப்பட்ட அமைப்புக்கள் ஏழை எளியவர்களுடைய நன்மைக்கு பாதகமாக இருக்கிறதே தவிர, சாதகமான அமைப்பு அல்ல என்பது எங்களுடைய கருத்து. அரசியல் சட்டத்தில் 169 விதியில் கொடுக்கப்பட்டு உள்ள விஷயங்களை எடுத்துக் கொண்டாலே தெரியும். அதைப்பற்றி கூர்மையான விவாதங்கள் நடைபெற்று இருக்கின்றன. அரசியல் நிர்ணய சபையில் இதைப் பற்றி விவாதங்கள் நடைபெற்று இருக்கின்றன. உலகத்தினுடைய பல்வேறு நாடுகளில் இருக்கின்ற அரசியல் அமைப்புக்கள் அந்த அரசாங்கத்தினுடைய கட்டமைப்பு இருக்கிறதே, அது உள்பட அதைச் செயல்படுத்தும்படியாக அரசியல் சட்டங்கள் உள்பட, எப்படியெல்லாம் செயல்படுகிறது என்கின்ற ஆராய்ச்சிகள், அறிவாளிகள் என்று சொல்லக்கூடிய தலைவர்கள் எல்லாம் இருந்து அந்த விவாதங்கள் நடைபெற்றன. அவ்வளவுக்குப் பிறகு நமது அரசியல் சட்டம் வரும்போதும் இந்தச் சபைகள் இருக்கலாமா கூடாதா என்பதை கீழே இருக்கும்படியான சட்டமன்றம் தீர்மானிக்கட்டும் என்று விட்டுவிடுவதற்கு நாங்கள் நினைக்கக்கூடிய ஒரு காரணம், மக்களுடைய நேரடியான பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு வரக்கூடிய அந்தச் சபை ஒரு பூரணமான நேரடி பிரதிநிதித்துவத்தைப் பெற்று வரக்கூடிய அந்தச் சபை, அந்தச் சபை தீர்மானிக்கட்டும் என்று அது விடப்பட்டுள்ளது. அந்த முறையில் இந்த மாதிரி சபைகளை ஆக்குவதற்கும், இல்லாமல் செய்வதற்குமான ஒரு அதிகாரத்தைத்தான் அந்த ஷரத்திலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த முறையில், அதுவும் ஆரம்ப காலத்திலே, நமது பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டது மாதிரி இந்தியாவிலே இருக்கிற பல மாநிலங்களில் இப்படிப்பட்ட மேல் சபைகள் ஏற்படவில்லை, கேரளா போன்ற மாநிலங்களிலெல்லாம் இந்த மாதிரி சபையே

இல்லை. மேற்கு வங்காளத்திலே மார்க்ஸிஸ்ட் கட்சியும் அதோடு சேர்ந்த தோழமை கட்சிகளும் முதலிலே 1967 ஆம் வருடம் அதிகாரத்துக்கு வந்தபோது காங்கிரஸ் கட்சியினுடைய உபத்திரவத்தினாலே மட்டும் அல்ல, அது ஒரு பக்கம் இருக்கட்டும் (குறுக்கீடு) தலைவர் அவர்களே, என்ன அப்ஜெக்ஷன் என்று எனக்கு புரீய வில்லை (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை திருத்திப் பேசி விடுங்கள்.

திரு. கு. ரமணி: காங்கிரஸ் கட்சியினுடைய உபத்திரவம் என்ற வார்த்தையிலா அவர்களுக்கு ஆட்சேபனை? காங்கிரஸ் கட்சியினுடைய பாரம்பரியம் அவர்களுக்கு விட்டுப்போச்சு. எங்களை எதிர்ப்பது காங்கிரஸ் கட்சியினுடைய பாரம்பரியம். அந்த மாதிரியான தாக்குதல்களை இந்திய நாட்டில் வேறு எந்தக் கட்சியும் அனுபவித்தது கிடையாது. எங்களுடைய கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் இரண்டாயிரம் பேர்கள் உயிரிழந்து இருக்கிறார்கள், இரண்டரை, மூன்று ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியிலே. அதை நினைத்துக் கொண்டு நாங்கள் அந்தச் சபையை கலைப்பது என்று சொல்வதெல்லாம் சரி அல்ல. அப்படியானால் இந்தியாவில் ஒரு மக்கள் ஜனநாயக அரசாங்கத்தை உருவாக்க வேண்டுமென்பது அரசியலைப் பொறுத்தவரையில் எங்களுடைய திட்டம் எங்களுடைய கட்சியின் திட்டம். அதை உருவாக்குவதற்கு இன்னும் எத்தனை ஆயிரம் பேர்களை நாங்கள் தியாகம் செய்யவேண்டியிருக்கும் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரிந்து தான் வந்திருக்கிறோம். ஆகவே மேற்கு வங்காளத்திலே அந்தச் சபையைக் கலைப்பது என்பது ஒரு மக்கள் பிரதிநிதி சபையினுடைய அமைப்பு, அது நிலைபெறுவது என்பது உண்மையிலேயே நாம் நினைக்கக்கூடிய மாதிரி ஒரு முறையில் ஒரு ஜனநாயக மரபில் மக்களுடைய எண்ணங்கள் மாறி மாறி புதிய அம்சங்கள் தோன்றி வளர்வதற்கும் நல்ல சட்டங்களையும் சீர்திருத்தங்களையும், புதிய முன்னேற்றத்தையும் அடைவதற்குத் தடைக் கல்லாக நிற்குமா என்பதைத்தான் அடிப்படையில் பார்க்க வேண்டும். சாதாரண அரசியலாக நாங்கள் பார்க்கவில்லை.

உதாரணமாக இந்த மேல்சபையிலிருந்து நீங்கள் பார்க்க முடியும்; அதில் இருக்கும்படியான எந்த மாண்புமிகு உறுப்பினர்களைப் பொறுத்தவரையிலும் நாம் எந்தவிதமான தவறான கருத்தோடும், எந்த எதிரான பிரதிபலிப்புக்கும் நாங்கள் சொல்லவில்லை. அதில் உண்மையிலேயே ஆசிரியர்கள் போன்ற சிலர், ஒரு பகுதி உழைப்பாளி மக்களுடைய பிரதிநிதிகள் சிலர் உள்ளனர். மூளை உழைப்பாளிகள், தேக உழைப்பாளிகள் என்று உழைப்பாளிகளை இரண்டு விதத்திலே நாம் வைத்திருக்கிறோம். அப்படிப்பட்டவர்களுடைய பிரதிநிதிகளைத் தவிர, பணம் படைத்த வர்க்கங்கள், நிலச்சுவான்தாரர்கள், முன் காலத்திலே பேராதிக்கத்தைச் செலுத்தியவர்கள்; ராஜாக்களுக்கும், ஜமீன்தாரர்களுக்கும், மிட்டா, மிராசுதாரர்களுக்கும், பாளையக்காரர்களுக்கும், பட்டக்காரர்களுக்கும் வேண்டியவர்களாக இருந்

(முற்பகல் 11.40).

தவர்கள்; இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இடம் ஒதுக்குவது— To provide berth for them — அவர்களுக்கு அந்த இடங்களை ஏற்படுத்திக் கொடுப்பது— அப்படிப்பட்ட ஒரு இடமாகத்தான் அநேகமாக அச்சபைகள் பல இடங்களிலே பிரதி பலித்தன. இப்படி இந்திய நாட்டில் அமைக்கின்ற எந்த சட்ட திட்டங்களானாலும் சரி; உருவாக்குகின்ற சட்ட திட்டங்க ளானாலும் சரி, அங்கே ஒரு மேல்மட்ட சூப்பர்விஷன் நடக்கும். அதுதானா பிரச்சனை? அங்கே ஒரு சூப்பர்விஷனுக்காகவேண்டி, இந்த சபைக்கு மேலே நமக்கு ஒரு சபை தேவையில்லை. யதார்த்த மாக பார்த்தால் இரண்டு சபை எதற்கு இருக்க வேண்டும்? இந்தியாவினுடைய மத்தியத்தில் ஒரு இடத்தில் இருக்க வேண்டும். பாராளுமன்றம், வயதுவந்த மக்களாலும் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய பாராளுமன்ற சபை இருக்க வேண்டும். இந்த நாடு

பன்மொழி பேசக்கூடிய பல மாநிலங்களாக, மொழி வழி மாநிலங் களாக பிரிக்கப்பட்டு இருக்கின்ற அப்படிப்பட்ட நிலையில் எல்லா மாநிலங்களும் சேர்ந்து ஒரு கூட்டாட்சியாக உள்ளது. அந்த மாநிலங்களுக்கு நியாயம் வழங்காமல் வேறு விதமான பார்லி மெண்டில் நிலைமை வரக்கூடிய சந்தர்ப்பத்தில் தேர்ந்தெடுத்து வரக்கூடிய உறுப்பினர்களின் சேர்மானத்தால் சம நிலைமையை அங்கே உருவாக்கமுடியாமல் சில சமயங்களில் சில மாநிலங் களுக்கு எல்லாம் அதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட நிலையை தடுத்து கண்காணிப்பதற்கு வேண்டி அதற்கும் ஒரு checks and balances என்று சொல்லு கிறோமே அது இருக்க வேண்டும். இங்கே கூட நாம் அதுபற்றி பேசிக்கொண்டு இருக்கிறோம். அவற்றை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் மாநிலங்கள் அவை என்று அங்கே இருக்கிறது. பார்லிமெண்டும் இருக்க வேண்டும். மாநிலங்கள் அவையும் இருக்க வேண்டும். அந்த முறையில்தான் அங்கே இரண்டு சபையும் இருக்கிறது. மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய உரிமை அதனுடைய கலாச்சாரம், பண்பாடு, வளர்ச்சி இவற்றிற்கு எந்தவிதமான பாதுகாப்பற்ற நிலையும் ஆபத் தும் மையத்திலிருந்து—any encroachment from the centre ஏற்படாதபடிக்கு பாதுகாத்துக் கொள்வதற்கும், போராடு வதற்கும் வேண்டி அந்த மாநிலங்களின் சபை இருக்க வேண்டும். அனைத்து வயது வந்த வாக்குரிமை உள்ள மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட சபை, பார்லிமெண்டு இருக்க வேண்டும், இப்படி தான் இரண்டு சபையும் இந்த நாட்டில் இருக்க வேண்டும்.

அது அல்லாமல், இப்படிப்பட்ட மேல் சபையை உருவாக்குவதில் ஆதாயமோ, லாபமோ நாம் ஒன்றும் பிரமாதமாக பெறவில்லை. அதுமட்டும் அல்லாமல் இங்கே பெரிய பண செலவு ஒன்றும் பிரச்சினை அல்ல.

நல்ல காரியத்திற்காக பணம் செலவழிக்கவேண்டும். அது பிரச்சினை அல்ல. ஆனால் இப்படிப்பட்ட கண்ணோட்டத்தில் தான் மார்கிஸ்ட்டு கம்யூனிஸ்டு கட்சி இந்தப் பிரச்சினையை அணுகுகிறது. அந்த முறையில்தான் மேற்கு வங்கத்தில் மறு படியும் நாங்கள் அதிகாரத்திற்கு வந்த போது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே பார்லிமெண்டு இருக்க வேண்டும் என்று சொன்னீர்கள்.

Article 79 : "There shall be a Parliament for the Union which shall consist of the President and two Houses...."

2 அவுசும் இல்லாமல் பார்லிமெண்டு கிடையாது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அதுதான் நான் சொன்னேன். ரொம்ப தெளிவாக சொன்ன விஷயம் அதுதான். 2 சபையும் கொண்டது தான் பார்லிமெண்டு. ஆகவே மேற்கு வங்கத்திலே நாங்கள் மறுபடியும் அதிகாரத்திற்கு வந்த போது எங்கள் பெயரில் தொடுக்கப்பட்டு இருக்கும்படியான தாக்குதல்களையும் நாங்கள் செய்த தியாகத்தையும் இதை எல்லாம் நாங்கள் அஸ்த்திவாரமாக வைத்துக் கொண்டு அல்ல நாங்கள் 2 சபையும் வேண்டாம் என்று சொன்னது. உண்மை யாகவே எங்களுக்கு இருக்கிற அரசியல் அண்டர்ஸ்டேன்டிங் அதனுடைய அடிப்படையில் தான் நியாயமானது என்ற அடிப்படையில் இந்திய நாடு முழுவதும் அப்படிப்பட்ட ஒரு அரசு ஸ்ட்ரக்சர்தான் இருக்கவேண்டும், அப்படிப்பட்ட ஒரு கூட்டு அமைப்புதான் இருக்கவேண்டும் என்பது தான் எங் களுடைய கருத்து. அந்த முறையில் இன்றைக்கு இந்த சபை கலைப்பது என்பது சரியானதுதானே தவிர, தவறானது அல்ல. (கைதட்டல்) எந்த கைத்தட்டலுக்கும் நான் சொல்லவில்லை. இதை தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிறோம். இதற்கு முன்னாலேயே சபையில் பேசுகிற நேரத்திலே நான் பேசியிருக் கிறேன். அந்த சபையில் இருந்து இருக்கக்கூடிய நல்ல அறிஞர்கள், திறமைசாலிகள், அரசியலில் மிகவும் பழுத்த முதிர்ச்சிப் பெற்ற வர்கள் அப்படிப்பட்ட தலைவர்கள் எல்லாம் இருந்து இருக் கிறார்கள். இன்னும் இருக்கிறார்கள். அதே சமயத்தில் ஆசிரியர் கள் போன்றவர்கள் படிப்பாளி மக்களின் பிரதிநிதிகள், அப்படிப் பட்டவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பகுதி யினர்களுக்கு எல்லாம் கூட இந்த மாதிரி ஒரு கலைப்பு என்பது அவர்களுக்கு எல்லாம் ஒரு நஷ்டம் அல்லவா, அவர்களுடைய சேவையை நாம் பெற்றுக்கொள்ள முடியாமல் போகுமே என் றால் அப்படி ஒன்றும் அல்ல. அவர்களும் இதே சபைக்கு வந்து சேரவேண்டும். மக்கள் முன்னால் நின்று நாம் எப்படி— 234 பேர்—நின்று இதிலே நாம் வெற்றி பெற்று இங்கே வந்து இந்த சபையை அமைத்து இருக்கிறோமோ இதே மாதிரி அவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக நின்று அவர்களும் இந்த

1986 மே 14] [திரு. கு. ரமணி]

சபைக்கு வரலாம். எந்தவிதமான தடையோ, இடையூறோ, இடைஞ்சலோ கிடையாது. (கைதட்டல்) ஆனால் அவர்கள் அதற்காக உறுதியாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட உறுதி இல்லை என்று சொன்னால், அப்போது நான் முதலில் சொன்ன சமாசாரம் ஏற்படும். சில பேருக்கு சில இடங்களை உருவாக்கி வைத்து அதற்கு சில காரியங்களை, அதற்கு சில ஏற்பாடுகளை செய்து கொடுத்து கொண்டு இருக்கக்கூடிய ஒரு நிலை அது ஆரோக்கிய அரசியல் அல்ல, நல்ல அமைப்பு அல்ல என்பது எங்களுடைய தாழ்மையான கருத்து. அந்த முறையில் சபையை கலைப்பது என்பது நியாயமானது. இதை ஆரம்ப முதலே எடுத்துரைத்து வற்புறுத்தி வந்தது கம்யூனிஸ்டு இயக்கம். ஆனால் அப்போது எங்கள் பெயரில் இருக்கும்படியான பார்வை கம்யூனிஸ்ட் என்று சொன்னாலே, உங்களுடைய எண்ணம் வேறு மாதிரியாக இருந்தது. அதனாலே இந்த விஷயத்தை இந்த அளவிற்கு தெரிந்துகொண்டு நடவடிக்கை எடுக்க முன் வருவதற்கு நீண்டகாலம் ஆயிற்று. அதுதான் உண்மை. ஆகவே கலைப்பு பொறுத்த வரையிலும் எங்களுடைய நிலை மாறாது.

அடுத்த பிரச்சனை, இப்போது இந்த அரசு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த சந்தர்ப்பத்தில், இப்போது இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்பது, அது எங்களுடைய உணர்வின் பால் பட்டது என்று நம்முடைய முன்னவர் அவர்கள் தீர்மானித்து முன்மொழிந்த போது குறிப்பிட்டார்கள். அந்த உணர்வு என்னவென்று சொல்லவில்லை. ஒரு சமயம் நான் சொன்னது தான் அவருடைய உணர்வு என்று சொன்னால், எனக்கு விவாதத்திற்கு வழி யில்லை. அது அப்படி இருந்தால், அந்த முன்னமேயே சொல்லி யிருக்கலாம். இல்லை, நீங்கள் நன்றாக உணர்ந்து, உங்களுடைய அமைச்சரவையில் உட்கார்ந்து, அப்படி யோசித்துப்பார்த்து, ஒரு கொள்கை முடிவாக செய்திருக்கிறீர்களா ? அப்படி வந்த முடிவு என்ன? அல்லது இந்த உணர்வு உங்களுக்கு எப்படி உருவாயிற்று ? என்ன அதற்கு தோற்றுவாய் ? என்ன அஸ்திவாரம்? ஏன் அது கூறப்படவில்லை. அது கூறப் பட்டிருந்தால், நமக்கு தெரிந்து இருக்கலாம். ஒரு முயற்சி என்பது, உங்களுடைய அரசுக்கோ, ஆட்சிக்கோ, அப்படிப் பட்ட திட்டம் கிடையாது. 'தேர் இஸ் நோ ப்ரொக்ராம்'. அரசாங்கம் வைக்கின்ற திட்டங்கள் எல்லாம் கட்சியினுடைய ப்ரோக்கிராமாக இருந்து வருகிறது. உங்களுக்கு அப்படி இருக்கிறது என்று சொன்னால், அரசியல் அமைப்பு எப்படி இருக்கவேண்டுமென்று உங்களுடைய ப்ரோக்கிராமிலே சொல்லி யிருப்பீர்கள். எங்களுக்கு அப்படியில்லை. தெளிவான ப்ரோக்ராம் உள்ளது. அப்படியானால் என்ன உண்மை? எங்க ளுடைய உணர்வை நான் சொன்னேன். உங்களுடைய உணர்வு என்ன ? உங்களுடைய உணர்வில் நீங்கள் தெளிவாக இருக்க வேண்டும். பதிலுரை கொடுக்கும்போது இதை விளக்க வேண்டும். இல்லையென்று சொன்னால் என்ன வரும் என்று

கேட்டால், இப்போது நீங்கள் செய்திருப்பது என்பது உண்மை யிலே தமிழ் நாட்டில் மக்களிடையில் ஏற்பட்டு வரக் கூடிய ஒரு மாறுதலை பார்க்கும்போது எந்த விதத்தில் நாம் நம்மை நிலை நிறுத்திக் கொள்வதற்கு தந்திரமாகப் போகவேண்டும் என்ற ஆலோசனை இருந்துகொண்டிருக்கிறது. அது தான் உண்மை நிலை. தமிழ் நாட்டில் ஏற்பட்டு வரக் கூடிய மாறு தலை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதுபற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இப்போது ஏற்கனவே நடந்திருக்கும் படியான பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சித் தேர்தல்களிலே, கிட்டத்தட்ட ஒரு பொதுத் தேர்தல் மாதிரி சுமார் 2½ கோடி ஓட்டர்கள், ஓட்டுள்ள மக்கள் இதிலே பங கெடுத்து, ஒரு பெரியக்கமாக இந்தத் தேர்தலை நடத்து னார்கள். இதிலே என்னென்ன பிரச்சினைகள் நடந்தன என்பதெல்லாம் நமக்குத் தெரியும். அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. குடிநீரிலிருந்து, கட்டப்பட்டிருக்கும் மாளிகை களைப் பொறுத்தவரைக்கும் உள்ள மக்கள் பிரச்னைகளே பேசக் கூடிய சூழ்நிலை இதிலே வந்தது. இது ஒரு ஜீவனான பிரச்சினை. அப்படிப்பட்ட பிரச்சினையினுடைய அடிப் படையில் ஒரு இயக்கம், சட்டமன்றத் தேர்தல் நடக்கும்போது கூட இவ்வளவு விரிவாக, ஆழமாக பிரச்சாரம் நடத்தப்பட வில்லை. அந்த அளவிற்கு பட்டிதொட்டிகள், இண்டு இடுக்கு தெருக்கள், மூலை முடுக்குகளிலுள்ள அத்தனை மக்களுக்கும் போகக் கூடிய முறையில் மூன்று மாநகராட்சிகள் தவிர, இந்தத் தேர்தல் பிரச்சாரம் சென்றிருக்கிறது. அப்போது அந்த மக்களுக்கு இடையிலே ஏற்பட்டிருந்த உணர்வுதான் என்ன? உங்களுடைய ஆட்சியின் நடவடிக்கைகள் அவர்களுடைய மனதிலே அதிருப்தியையும், வெறுப்பையும் ஏற்படுத்தியிருக் கிறது. அதைத்தான் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஓட்டுப் போட்டதன் மூலமாக எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை வரும்போது உண்மை யாகவே, அந்த மக்களுடைய தீர்ப்பு உங்களுக்கு ஒரு பெரு மளவிற்கு பாதகமாக வருகிறது. அப்போது நீங்கள் யோசிக்கத் தானே செய்வீர்கள்? எப்படி யோசிக்காமல் இருக்க முடியும்?

இன்னும் 3 மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடைபெற வேண்டியிருக்கிறது. அது நடந்தால் அதிலும் மக்கள் பிரதி பலிப்பு வந்து விடும். தமிழக அரசியலிலே இந்த மக்கள் எப்படி ஒரு பெரிய ஒரு அமோகமான வாய்ப்பை உங்களுக்கு ஒரு வருடத்திற்கு முன்னாலே நடந்த பொதுத்தேர்தலிலே அந்த பிரமாண்டமான பொதுத் தேர்தலிலே, வெள்ளம் போல மக்கள் திரண்டு காட்டியிருக்கிறார்கள். அந்த உணர் வுக்கும், இப்போது ஏற்பட்டிருக்கக் கூடிய இந்த உணர்வுக்கும் உள்ள வித்தியாசம் எப்படிப்பட்டது? அந்த நிலை தொடர்ந்து நீடிக்கலாம். அப்படிப் போகின்றது டிரெண்ட்: இப்படிப்

பாதகமாகப் போகிறது என்று நீங்கள் பார்க்கிறபோது உங்களை நீங்கள் நிலைநிறுத்திக் கொள்வதற்கு சில நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான் நிலை.

(முற்பகல் 11–50)

அதிலே இது ஒன்று ஆகும். இப்போது 21 ஸ்தானங்களுக்கு மேல் சபைக்கு அங்கே பஞ்சாயத்துக்களில் தேர்தல் நடைபெற்று கீழே இருந்து பிரதிநிதிகள் வரவேண்டி இருக்கிறது. நம்முடைய பேராசிரியர் அவர்கள் கூட அதை எல்லாம் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அந்தப் பிரதிநிதிகள் எல்லாம் வந்திருந்து, அந்தச் சபை ஒரு நிறைவான சபையாக நடந்து இருந்தால் எப்படி இருக்கும்? அரை குறை சபையாகத் தானே இதுவரைக்கும் நடந்திருக்கிறது என்றார். அது உண்மைதான். அப்படிப்பட்ட பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அங்கே வரும்போது அந்த சபையினுடைய விவாதங்களும், நடவடிக்கைகளும் இது வரைக்கும் இருந்தது போல் இருக்காது. வித்தியாசங்கள் ஏற்படும். அது முழுவதும் உங்களுடைய ருசிக்கு ஒத்ததாக இருக்கமுடியாது. ஏனென்றால் அந்த உணர்வோடு அந்தப் பிரதிநிதிகள் வரவில்லை. அந்தக் கருத்தும் உங்களுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

முன்னவர் அவர்கள் குறிப்பிடும்போது, 'ஸ்ட்ரெங்த்'-ஐப் பற்றிச் சொன்னார்கள். பலத்தைக் காட்டிச் சொன்னார்கள். இருக்கிற பலன் தானே பின்னாலே குறைந்து போகிறது? ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருக்கும் பலம், 'கன்டினுவஸ், கான்ஸ்டன்ட் ஸ்ட்ரெங்த்' அல்ல. தண்ணீர் பாயிலிங் பாயின்ட்டிற்கு வரும் போதுதான், கொதிநிலை அடையும்போதுதான் உங்களுக்கு அந்த மாற்றம் ஏற்படுகிறது. அந்த நிலை மக்கள் மத்தியிலே வந்துகொண்டிருக்கிறது. இப்போது உங்களுக்கு எண்ணிக்கைகள் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதை தவறான முறையில்—திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகள், எதிர்க்கட்சிகள் கூட்டாக நின்று பலவிதமான கஷ்டங்களுக்கு மத்தியில் போராடி வந்து இருக்கிறார்களே, அதை எல்லாம் நாசப்படுத்தவேண்டும் என்றோ, அதற்கு எதிராக ஏதாவது கையாளவேண்டும் என்றோ, அதற்கு எதிராக அரசியல் தந்திரமாக கடைப்பிடிக்க வேண்டும் என்றோ நாங்கள் கருதவில்லை என்று நீங்கள் உங்கள் உள்ளத்திலிருந்ததைக் குறிப்பிட்டீர்கள்.

ஆனால், எங்களுக்கு என்ன படுகிறது என்றால், அஸ்திவாரம் இதுதான். 'ஆத்திரம் வந்து அரஹரா என்றாலும், சோத்தில் கண் வையடா தம்பி சொக்கலிங்கம்' என்பார்கள். யதார்த்தமான நிலை. இல்லாவிட்டால் உங்களுக்கு அந்த சிந்தனைகள் ஏற்கனவே ஏற்பட்டு வந்திருந்தால் எப்படியும் பிரதிபலிக்காமல் இருக்கமுடியாது. நமது மேன்மை தங்கிய கவர்னர்

அவர்களுடைய உரையில், இந்த அரசாங்கத்தினுடைய கொள்கைகளைப் பற்றி பல குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நாம் இங்கே அதை விவாதித்து இருக்கிறோம். ஏன் அந்த உரையில் ஒரு வார்த்தை கூட, இப்படிப்பட்ட ஒரு காரியம் இவ்வளவு சீக்கிரம் நடக்கப் போகிறது என்பதைப் பற்றி ஒரு துளி கூட குறிப்பிடப்படவில்லையே, என்ன காரணம்? அப்படியென்றால் ஆழ்ந்து சிந்தித்து அப்படிப்பட்ட ஒரு சரியான கொள்கையின் பால் நின்று நீங்கள் உணர்வு பெற்று, ஒரு கொள்கையை வரையறுத்து, அதன்பால் நின்று இந்தக் காரியம் செய்யப்பட்டது என்பதை எப்படி நீங்கள் உறுதிப்படுத்திக் காண்பிக்கமுடியும்? நீங்கள் குறிப்பிடவில்லை. நாங்கள்தான் ஜனங்கள் மத்தியிலே இப்போது பிரகடனம் செய்யவேண்டும். மேல்சபை போக வேண்டும், மத்தியிலே மாநிலங்களுக்கு சம பிரதிநிதித்துவம் உள்ள அவை ஏற்படவேண்டும். அரசியல் அமைப்பிலே, இன்றைக்கு இருக்கிற அரசியல் அமைப்பை மாற்றி ஒரு மக்கள் ஜனநாயக அரசாங்கம் ஏற்படவேண்டும். இன்றைக்கு ஒரு முதலாளித்துவ வளர்ச்சி நாட்டிலே ஏற்பட்டு வளர்ந்து, நாம் இன்றைக்கு படக்கூடிய அத்தனை துன்பங்களுக்கும், உலகத்திலே முதலாளித்துவம் பழுத்து, செத்துக்கொண்டிருக்கும் சமயத்தில் இந்தியாவிலே முதலாளித்துவம் வளர்ந்து, செழித்து முன்னுக்கு போகமுடியாது என்பதே காரணம். அப்படிப்பட்ட நெருக்கடியிலே மாட்டிக் கொண்டிருக்கிறோம். இதுதான் நிலைமை. நிலப்பிரப்புத்துவம் சீரழிந்து கொண்டிருக்கிற ஒரு சமயம். அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தில் நாம் புரட்சிகரமான கண்ணோட்டங்கள் என்று சொல்வது சரியான மாற்றத்தை சமுதாய நிலையிலே கொண்டு வருவதற்காக, நம்முடைய கருத்துக்களை சரியான முறையில் வரையறுத்து, அதை அமுல் பண்ணி அமுலுக்கு கொண்டு வரவேண்டும். அப்படிப்பட்ட கொள்கை அஸ்திவாரம் இருந்து, அதிலிருந்து இந்த உணர்வு ஏற்பட்டிருந்தால், கவர்னர் உரையிலேயே நீங்கள் சொல்லியிருப்பீர்கள்.

நமது முன்னவர் அவர்கள் தான் இங்கே நமக்கு பட்ஜெட்டை சமர்ப்பித்தார்கள். அவர்களுடைய பட்ஜெட் உரையிலே பல்வேறு விஷயங்கதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சமுதாயத்தில் இருக்கிற பல்வேறு கஷ்டங்களை எல்லாம் சொன்னார்கள். ஆனால் இந்த சபையை கலைக்கக்கூடிய ஒரு கொள்கையை உருவாக்கியிருகிறோம். அது பணத்தினுடைய அஸ்திவாரத்தில் அல்ல. ஆனால் அப்படிப்பட்ட ஒரு எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நாங்கள் அதைச் செய்யப் போகிறோம். ஏற்கனவே அது பல சந்தர்ப்பங்களிலே பேசப்படடிருக்கிறது என்று நீங்கள் வெளிப்படுத்தி இருக்கலாம். ஆனால் வெளிப்படுத்தவில்லை. அல்லது, தேர்தல் காலம் முழுவதும் அத்தனை அமைச்சர்களும் பெரியவர்களும், நீங்களும் வெளியிலே போய் மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்தீர்களே, இதைப் பற்றி எங்காவது நீங்கள்

1986 மே 14] [திரு. கு. ரமணி]

எங்களுக்குச் சொன்னது உண்டா என்றால் இல்லை. எதற்காக நான் சொல்கிறேன் என்றால், ஒரு எண்ணம் உருவாக்கப்பட்டது. என்று சொன்னால் அது வெளியிலே முடிவாகக் கொண்டு வரப் பட்டு மக்கள் முன்னால் வைக்கப்படும். அப்போதுதான் அது ஒரு சரியான நிலையாகும். அது தப்பாகவும் இருக்கலாம், சரியாகவும் இருக்கலாம். ஆயினும் அப்படிப்பட்ட உறுதியோடு நின்று இந்தக் காரியத்தைச் செய்ய முன் வந்தோம், முற்பட் டோம் என்று சொல்வதுதான் சரியானது. உங்களைப் பொறுத்த வரையில் எதிர்க்கட்சிகளின் முன்னேற்றத்தை உங்களாலே சகிக்க முடியவில்லை. பொறுக்கமுடியவில்லை என்கிற எண்ணத் தோடு நீங்கள் போய்க்கொண்டிருக்கிறீர்கள் என்றுதானே நாங் கள் பார்க்கவேண்டியிருக்கிறது? அப்படிப் பார்த்து இந்த நிலைமைகளில் இப்பொழுது இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஏன், இந்தச் சபை முடிந்து நான்கு மாதங் கள் கழித்து கொண்டு வந்திருப்பதுதானே? அல்லது உள்ளாட்சித் தேர்தலிலே நின்று வெற்றி பெற்றவர்களால் தேர்ந்தெடுக்கப் படவேண்டிய உள்ளாட்சிகளின் பிரதிநிதிகளாக வர வேண்டிய 21 பேர்களின் தேர்தல் முடிந்ததற்குப் பிறகு கொண்டு வருவது தானே? அல்லது இதற்கு முன்பே கொண்டு வந்திருப்பது தானே? அதையெல்லாம் நீங்கள் பார்த்தால், தர்க்கத்திற்குத் தர்க்கம் என்ற முறையில் சொல்லலாமே தவிர, மெக்கானிக்கல் ஆர்குமெண்ட் பண்ணலாமே தவிர, உண்மையான உணர்வை, அவர்கள் குறிப்பிட்டார்களே அந்த உணர்வை ஒட்டிச் சொல்ல முடியாது. இதுதான் பிரச்சனை. இன்றைக்குக் கொண்டு வந் திருப்பது அப்படிப்பட்ட நோக்கத்தோடுதான்.

உண்மையாகவே, எதிர்க்கட்சிகள் முன்னேறி, வளர்ச்சி அடைந்து, நிலைமைகளிலே மாறுதல் ஏற்படும்பொழுது, நாளைக்கு இந்த அரசாங்கம் மாறி விடும், வேறொன்று நடந்து விடும் என்ற எண்ணத்தில் பார்க்கக்கூடாது. மனிதனுடைய எண்ணங்களில் மாறுதல் ஏற்படுவதற்குப் பல கஷ்டங்கள், பாதிப்புகள் காரணமாக இருக்கின்றன. ஆயிரம் முறை சிந்தித் துத்தான் ஒரு மனிதன், ஒரு படியிலிருந்து அடுத்த படிக்குக் கால் வைக்கிறான். அதற்கிடையிலே அவனுக்கு ஏற்படுகின்ற நெருக்கடி கொஞ்சநஞ்சமல்ல. அவைகளையெல்லாம் சமா ளித்துத்தான், தனக்கு சொந்தமாக்கப்பட்டிருக்கும் துன்பங் களையும், கடுமையான விளைவுகளையும் சிந்தித்துப் பார்த்து அதன் மூலம் கிடைக்கும் அனுபவம்தான் அது. இதிலிருந்து தான் மனிதன் மாறுகிறான். எனவே, அதற்குத் தகுந்தமாதிரி திட்டங்களை அமைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அந்த முறையில் உண்மையாகவே நீங்கள் இதுவரைக்கும் செய்ய வில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, அதனால் தான் சொல்கிறேன், இப்பொழுது இனிமேற்கொண்டு அந்த உள்ளாட்சி அமைப்புகளிலேயிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்

பட வேண்டிய நிலை உள்ளது. அந்த உள்ளாட்சி அமைப்பிலிருந்து வரக்கூடிய பிரதிநிதிகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். 16 இடத்திற்குத்தான் தேர்தல் நடக்கும் என்றும், அதில்கூட ஐந்தாறு இடங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைக்கும் என்றும், உங்களுக்குப் பக்கபலமாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்கும் சிலயிடங்கள் கிடைக்கும் என்றும் நிச்சயமாகத் தெரிகிறது. மற்றபடி திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் போக, ஒன்று அரை தான் மற்றவர்கள் வரமுடியும். ஆகவே எண்ணிக்கைப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் இதுதான் நிலைமை. வேறு பிரச்சினை இல்லை. அப்பொழுதும் நீங்கள் பலமாக இருப்பீர்கள். ஆனால், உங்களுக்கு காற்று அடிக்கும் திசையைப் பார்த்து எந்தவிதத்திலேயாவது, இந்த எதிர்க்கட்சிகளுக்கு இந்தத் தேர்தலினால் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் இந்தச் சபையில் பகிரங்கமாகப் பிரதிபலிக்கப் போகிறது. அப்படிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்துவார்களேயானால் மக்களின் சம்மதம் ஏற்பட்டு, மேலும் மேலும் வளர்ச்சி அடைந்தது என்றால் நமக்கு ஆபத்து என்ற கண்ணோட்டத்தில்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இல்லையென்றால் இப்பொழுது இது வந்திருக்க வேண்டிய அவசியமில்லை. முன்னாலேயே வந்திருக்க முடியும். இப்பொழுது இந்தப் பிரகடனத்தைச் செய்வதற்குப் பதிலாக, முன்கூட்டியே கொள்கையை அறிவித்திருப்பீர்கள். அந்த முடிவினை மக்கள் மத்தியிலே சொல்லி செய்திருப்பீர்கள். அப்பொழுது இவ்வளவு பெரிய ஆர்குமெண்டுகளுக்கு இடம் இருந்திருக்காது. ஆனால் இன்றைக்குப் பல்வேறு பேச்சுக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. நீங்கள் என்ன பேசினாலும், பல்வேறு கருத்துக்கள் உலாவுகின்றன. ஆகவேதான் சொல்கிறோம், இப்பொழுது நீங்கள் செய்திருப்பது, அவசரம் அவசரமாகச் செய்திருப்பது, ஒரு கால அவகாசம்கூட வேண்டாம், உடனே செய்து தீர வேண்டுமென்று செய்திருப்பது, சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்கள் மத்தியிலேயே நான்கு நாட்களாகத் தான் பேச்சு அடிபடுகிறது என்ற நிலைமையில் செய்து இருக்கிறது. ஏனென்றால் தமிழ்நாட்டில் ஜனநாயக முறைகள் இன்றைக்கு நடைபெறுவது சரியாக இல்லை என்பதை உணர்ந்துகொண்டு, நல்ல ஜனநாயக முறைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் கருதி செய்திருக்கிறீர்கள் என்பதல்ல. ஜனநாயக முறைகளை நீங்கள் கையாண்டவிதத்தில் உங்கள்மீது மக்கள் வெறுப்பும் எதிர்ப்பும் கொண்டு அவர்களிடமிருந்து உங்களுக்கு வந்திருக்கும் தேர்தலில் கிடைத்த பதிலே தவிர இது வேறொன்றுமில்லை. அந்தப் பதிலைத் தாளாமல் இப்படிப்பட்ட சமயத்தில் இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதைக் கொண்டு வந்து முடிப்பதற்குச் செய்யப்பட்ட வேலையின் தன்மை இது. ஆயினும் பிரச்சினை அடிப்படையில் நாங்கள் இந்தச் சபைக் கலைப்பு என்ற தீர்மானத்தை ஆதரிக்கிறோம். அந்த முறையிலே பேசி என்னுடைய பேச்சுக்களை முடித்துக்கொள்கிறேன்.

1986 மே 14]

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அரசியலமைப்புச் சட்டத்தின் 169-வது உறுப்பின (1)-வது கூறின்படி, தமிழ் நாடு சட்டமன்ற மேலவை நீக்கப்பட வேண்டும்'' என்ற தீர்மானத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தீர்மானத்தை அவை முன்னவரவர்கள் முன் மொழிந்து, மேலவையைக் கலைப்பதற்கு எங்களுக்கு எந்தவித மான காழ்ப்புணர்ச்சியும் இல்லை, யாரையும் பழி வாங்க வேண்டுமென்ற நினைப்பில் செய்யவில்லை. சுமார் ஏழெட்டு மாதங்களுக்கு முன்பே முதல்வர் அவர்கள் இதைப்பற்றி விசாரித் தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இவையெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களாக எங்களுக்குத் தெரிய வில்லை. கடைசியாக ஒன்றை அவை முன்னவரவர்கள் சொன்னார் கள். நாங்கள் இதை முன்பே கொண்டு வந்திருக்கலாம் என்று சொன்னார்கள். அதை வேண்டுமானால் ஏற்றுக்கொண்டு இருக் கலாம். இதை முன்பு கொண்டு வந்திருக்கலாம் என்பதுதான் எங்கள் கருத்து. இப்பொழுது இந்த நேரத்திலே கொண்டு வருவதை, ஜனதாக்கட்சி மேலவைக் கலைப்பை கடுமையாக எதிர்க்கிறது. இந்தக் கலைப்பின்மூலம் நீங்கள் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உள்ளபடியே மேலவையைக் கலைக்கின்ற நோக்கம் இருந்து இருக்குமேயானால், சென்ற பொதுத் தேர்தலிலேயே தேர்தல் பிரகடன அறிவிப்பாக வெளியிட்டிருக்கலாம் அல்லவா ?

(நண்பகல் 12-00)

இதேமாதிரி ஆந்திராவில் உள்ள அரசு செய்து, அதைச் சட்டமாகக் கொண்டு வந்தபோது அங்குள்ள இந்திரா காங்கிர சார் எதிர்த்தார்கள். மேலவையிலே தமது மெஜாரிட்டி பலத்தின் மூலமாக, தீர்மானமே போட்டார்கள். மேலவையைக் கலைக்கக் கூடாது என்று. ஆனால் இன்று அவர்கள் ஆதரிக்கிற நிலையைப் பார்க்கும்போது, இந்திரா காங்கிரசுக்கு ஒரு மாநிலத்திற்கு ஒரு கொள்கை இருக்கிறதா என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படி மேலவையைக் கலைப்பதற்கு அவர்கள் ஒத்துப் போவார்களானால்...

* * * * *

என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியெல்லாம் பேசக் கூடாது.

* * * * *

சட்டத்திலே இடம் இல்லை.

* * * * *

அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது,

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : காங்கிரசுக்கு ஒரு மாநிலத்திற்கு ஒரு கொள்கையா என்று கேட்டுவிட்டு, மேலவையில் நியமன உறுப்பினர்கள் மட்டும் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உள்ளாட்சி மன்றங்களிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வரக்கூடிய நிலையிலே, மக்கள் பிரதிநிதிகள் வரக்கூடிய இந்த நிலையிலே, இந்தக் கலைப்பை நீங்கள் செய்திருப்பது, ஆளுங்கட்சியினுடைய வெற்றி வாய்ப்பு நல்ல முறையில் இல்லை என்ற காரணத்திற்காக, மேலவை கலைக்கப்படுகிறதா என்ற ஐயத்தைப் பொதுமக்கள் மத்தியிலே உண்டாக்கியிருக்கிறார்கள் என்றுதான் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

* * * *

ஆனால் எங்களுக்கு அதுபற்றி தெரிவிக்கப்படவில்லை. மிக ரகசியமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு அவைமுன் இருக்கக் கூடிய தீர்மானத்தைப் பற்றி பேசுங்கள். மற்ற அரசியல் எல்லாம் பொதுக் கூட்டங்களில் பேசுங்கள். ஆகவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அவை முன்னால் இருக்கக்கூடிய தீர்மானத்தைப் பற்றி பேசுங்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: நீங்கள் இப்பொழுது கலைக்கின்ற மேலவையை இன்னொரு அரசு வந்து கொண்டு வந்தால் இந்தத் தமிழ்நாட்டு மக்களைபற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று கேட்க விரும்புகிறேன். மேலவை மூலம் உங்களது தலைவர் மாண்புமிகு அண்ணாதுரை முதல்வராக இருந்திருக்கிறார் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் முதலிலே மேலவை உறுப்பினராக இருந்தவர்தான் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பேரவைக்குத் தேர்ந்தெடுக்க முடியாமல் இருப்பவர்கள், அறிஞர்கள், மற்றவர்கள் எல்லாம் மேலவைக்கு வரவேண்டுமென்றுதான் மேலவை இருக்கிறது என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்கள் அதை உறுதிப்படுத்துவதைப் போல், உள்ளாட்சி மன்றங்களுக்கு நியமன உறுப்பினர்கள் வரும்போது, தேர்ந்தெடுக்கப்பட முடியாதவர்கள், அறிஞர்கள் எல்லாம் வருவதற்குத்தான் அந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது மேலவை இருக்க வேண்டுமென்பதுதான். அதைப்போல், உங்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

களுடைய ஆட்சியினுடைய அமைச்சர்களாக இருக்கிற மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன், மாண்புமிகு டாக்டர் ஹண்டே, மாண்புமிகு திரு. யூசுப் இவர்கள் எல்லாம் மேலவை மூலமாக, அமைச்சர்களாக வீற்றிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். மேலவையின் மூலம் இந்த அரசு அவர்களை அமைச்சர்களாக்கியிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த அவையில் பேசியதைப் பற்றி இங்கே விவாதிக்க வேண்டாம். அதற்கு பதில் சொல்லக்கூடாது. ஆகவே, அதை நீக்கி விடுகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : முதல்வர் அவர்கள் கொடுத்து பழக்கப்பட்டவர்கள். பறித்து பழக்கப்பட்டவர்கள் அல்ல. ஆகவே, பறிக்க வேண்டாம் என்றுதான் சொல்கின்றேன். சத்தியமூர்த்தி, இராஜாஜி அதே போல தியாகராயர், முத்துலட்சுமி ரெட்டியார் போன்ற அரசியல் வித்தகர்கள் எல்லாம் மேலவை உறுப்பினர்களாக ஆக்கப்பட்டு நாட்டிற்கு பாடுபட்ட அந்த மேலவை இருக்க வேண்டும் என்றும், இந்தப் பேரவைக்கு ஆலோசனை சொல்லக்கூடிய அதிக செலவு இல்லாத மேலவை இருக்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே இந்த அரசு இந்த தீர்மானத்தை வாபஸ் பெறவேண்டும் என்றும் கூறி வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

*திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முன்மொழியப்பட்ட மேலவை ஒழிப்பு தீர்மானத்தின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். பொதுவாக மாநில மேலவை என்பது இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தொடர்ந்து இயக்கம் நடத்திய கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாகும். மேலவை மட்டுமல்ல. தேவையற்ற கவர்னர் பதவியும் நீக்கப்பட வேண்டும் என்பதையும் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. தொடர்ச்சியாக வேறு எந்த இயக்கத்தைக் காட்டிலும் இது மிக அதிகமான முறையில் மேலவை மற்றும் கவர்னர் பதவி ஒழிக்கப்பட வேண்டும் என்று போராடிய எங்களால் இங்கே முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய மேலவை ஒழிப்பு தீர்மானத்தை மகிழ்ச்சியோடு வரவேற்க முடியவில்லை. இந்தத் தீர்மானம் வஞ்சிக்கும் உணர்வு படிந்த ஒரு தீர்மானமாக முன்மொழியப்பட்டிருக்கிற காரணத்தினால் வரவேற்க முடியவில்லை; எந்த ஒரு காரியத்தையும் நல்ல நோக்கத்தோடு செய்ய வேண்டும். தனி மனிதனா

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கு. சுப்பராயன்] [1986 மே 14

னாலும் சரி ஒரு அரசியல் கட்சியானாலும் சரி நல்ல நோக்கத்தோடுதான் நல்ல காரியங்கள் நிகழ்த்தப்பட வேண்டும். ஆனால் ஒரு நல்லகாரியத்தை நீங்கள் தீயநோக்கத்தோடு நிறைவேற்றுகின்ற காரணத்தால் உங்களின் தீர்மானத்தை எங்களால் வழிமொழிய முடியவில்லை. அவற்றை ஏற்க முடியவில்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே முன்மொழிந்து பேசுகின்றபோது மரியாதைக்குரிய நாவலர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். இந்த மேலவை ஒழிக்கப்பட வேண்டும். ஒழிப்பதற்கெல்லாம் யார் யார் போராடினார்கள் என்பதையெல்லாம் குறிப்பிட்டுவிட்டு இது ஒரு தேவையற்ற ஒன்று. இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்கின்ற ஒரு நல்ல வாதத்தை முன் வைத்தார்கள். ஆனால் பொதுவாக தனக்கு தேவையான வசதியான நேரத்தில் நல்ல வாதங்களை முன் வைப்பதும், தனக்கு தேவையற்ற விஷயங்களை கண்டு மறந்து விடுவதும் ஒரு சிறந்த அரசுக்கு முன் உதாரணமாக அமையாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு நாவலர் அவர்களையும், இந்த மாநில அரசையும் நான் கேட்க விரும்புவது இந்த மாநிலத்தின் அதிகாரத்தின் கீழ் இயங்கு கின்ற பல்வேறு துறைகளில் இந்த மேலவை மட்டும்தான் தேவையற்றதா? மற்ற அனைத்துமே தேவையுள்ளது என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கருது கிறதா? ஏன் இந்த காரியத்தை இங்கே நிகழ்த்துகிறீர்கள்? நான் மிக்க வலிவோடு கேட்க விரும்புகிறேன். இங்கே இந்த தீர்மானத்தை முன்மொழிந்திருக்கின்ற இந்த மாநில அரசு ஆட்டுக்கு தாடி, நாட்டுக்கு கவர்னர், என்று சொன்ன அண்ணாவின் பெயரால் மீண்டும் ஒரு தீர்மானத்தை—கவர்னர் பதவி ஒழிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை இந்த மாநில பேரவையில் நிறை வேற்ற வேண்டும், நிறைவேற்றுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். அது தேவை என்று நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? அவற்றை அங்கீகரிக்கிறீர்களா? இல்லை. அங்கேதான் உங்களுடைய உள்நோக்கத்தை நாங்கள் சந்தேகிக்க வேண்டியிருக் கிறது. ஏதோ நான் மட்டும் அல்ல. எதிர்தரப்பில் இருக்கிறவர்கள் மட்டும் அல்ல. ஒரு விஷயத்தை புரிந்துகொள்ள வேண்டும். இப்படி ஒரு தீர்மானம் வந்தது எதிர்தரப்பிற்கும், தமிழ் நாட்டிற்கும் மட்டும்**. ஆளும்கட்சி சட்டமன்ற உறுப்பினர் களையும்** நாம் புரிந்துகொள்ள முடியும். பலரையும் அதிர வைத்த இத்தகைய செய்தி வந்திருக்கிறது என்றால்.........

(கூச்சல்—குழப்பம்)

(பிற்பகல் 12-10)

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் பேசுகிற நேரத்தில் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிற

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1986 மே 14] [திரு. துரை கோவிந்தராசன்]

தீர்மானத்தில்

* * * * என்பது போல் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்து அவைக் குறிப்பிலே இருக்கவேண்டியதில்லை என்றும் அதை எடுத்துவிட வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. கு. சுப்புராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுகிற கட்சி என்ற முறையில் அக்கட்சியின் நடவடிக்கைகள் தமிழ்நாட்டுக்குப் பாதகம் செய்கிறது என்பதைச் சொல்கிற நேரத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானத்தைப் பொறுத்தவரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் மீது களங்கம் கற்பிக்க வேண்டும் என்றோ அவர்களுடைய நடவடிக்கை பற்றியோ நான் குறிப்பிடவில்லை. பொதுவாக ஒருவேளை

* * * * * * தமிழ் நாட்டு மக்கள் அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே அவைக்குறிப்பிலே இருந்து நீக்கியதைத் திரும்பவும் கூறவேண்டியதில்லை.

திரு. கு. சுப்புராயன் : பேரவைத் தலைவர் அவர்களே அவைக்குறிப்பிலே இருந்து நீக்குவதற்கான காரணம் என்ன? அவை அன்பார்லியமெண்டரி வார்த்தைகளா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு கட்சியினைச் சேர்ந்த உறுப்பினர்களின் கருத்து பற்றி நீங்கள் சொல்ல வேண்டியதில்லை என்பதால் தான் நான் நீக்குகிறேன்.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஆளும் கட்சியைப் பற்றிச் சொன்னார்கள். அந்தச் செய்தியைப் போடுகிறபோதே அதற்கு

* * * * ஆகவே ஒவ்வொரு பேச்சையும், வார்த்தையையும் நீக்குவதை விட உண்மையான சட்டமன்றத்தினுடைய அந்த குறிப்புகளை பதியும்படி தாங்கள் அனுமதிக்கவேண்டும். அதுதான் நல்லதே தவிர ஒவ்வொன்றையும் நீக்குவது என்று வருகிறபோது....

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடன்படாத சில கருத்துக்களை பேசும்போது நீக்கித்தான் ஆகவேண்டியிருக்கிறது. பேசும்போதே சற்று யோசித்துப் பேசினால் பிரச்சனை வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி உறுப்பினர் மனதைப் புண்படுத்துகிற நேரத்தில் உடன்படாத வார்த்தைகள் என்று சொல்லி ஆகவே நீக்குகிறேன் என்று சொன்னால் எதிர்க்கட்சியில் இருப்பவர்களின் மனது புண்படுகிற விதத்தில் அவர்கள் பேசுகிறபோது...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் அப்படி ஏதாவது பேசினால் சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, புண்படுகிற சங்கதி என்பதல்ல. ** என்று நோக்கம் கற்பிப்பது தவறு. ஆகவே அதை நீக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் தமிழ்நாடு அதிர்ச்சியுற்று இருக்கிறது, மக்கள் அதிர்ச்சி அடைகிறார்கள் என்று சொன்னால் அதைப்பற்றிக் கவலை இல்லை. அதிர்ச்சி பெறவில்லை என்று நான் இறுதியில் பதில் சொல்கிறேன். நோக்கம் கற்பித்துப் பேசியது தான் தவறேயொழிய தமிழ்நாடு அதிர்ச்சி பெற்றிருக்கிறது அல்லது அகில உலகமே அதிர்ச்சி பெற்றிருக்கிறது என்று சொன்னால் அதில் ஆட்சேபணை இல்லை.

திரு. கு. சுப்புராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முன்மொழியப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் ஆளுகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தால் இதுவரையிலும் மக்களிடத்தில் சொல்லப்படவில்லை. எத்தகைய சூழ்நிலையிலும் வலியுறுத்தப்படவில்லை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். மேலவையை ஒழிக்கவேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்ட கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. திடீரென்று ஏதோ போதி மரத்திற்குக் கீழே புத்தன் உட்கார்ந்த பிறகு ஞானம் வந்தது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 மே 14] [திரு. கு. சுப்பராயன்]

போல் உள்ளாட்சித் தேர்தல்களின் தீர்ப்பு வெளியிடப்பட்ட வுடன், மக்களின் தீர்ப்பு வெளிப்பட்டவுடன் ஒரு புதிய ஞானம் தோன்றித்தான் இப்படிப்பட்ட நடைமுறை இந்த மாநில அரசால் கடைப்பிடிக்கப்படுகிறது. அதாவது மக்கள் தங்கள் எண்ணத்துக்குத் தக்கபடி தீர்ப்பளிக்கவேண்டும், அப்படி தீர்ப்பளிக்கவில்லை என்றால் தங்கள் அதிகாரத் தையும், பல்வேறு முறைகளையும் பயன்படுத்தி அந்தத் தீர்ப்புக்குச் சேதாரம் ஏற்படுத்திவிடுவது என்ற மன இயல்பு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தினருக்கு வாடிக்கையாக இருந்து கொண்டு இருக்கிறது என் பதைத்தான் நான் இந்தத் தீர்மானத்தின் மூலம் வெளியிட விரும்புகிறேன். கடந்த ஆளுநர் உரையின்போது ஏன் இது பற்றிய கொள்கைப் பிரகடனம் செய்யப்படவில்லை. 1977 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது ஏன் இந்தத் தீர்மானம் முன்மொழியப்படவில்லை. 1972-ல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தோற்றுவிக்கப்பட்டபோது ஏன் இதை அறிவிக்கவில்லை. தொடர்ந்து பொதுத் தேர்தல் ஏற் பட்டபோதும் சரி, அதிகாரத்திற்கு வந்தபோதும் சரி, இவற் றை வெளியிடாமல் இருந்துவிட்டு உள்ளாட்சி அமைப்புக் குத் தேர்தல் நடந்து தீர்ப்பு வெளிவந்தவுடன் மேலவையில் எதிர்த்தரப்பினர் வலுப்பெற்றவுடன் தங்கள் வலு பலவீனப் பட்டவுடன், தங்கள் குரல் தாழ்கிறது என்ற நிலை ஏற்பட்ட உடன் எதிர்தரப்புக் குரல் உயர அனுமதிக்கக்கூடாது என்ற உணர்வோடு தான் இந்தத் தீர்மானம் இங்கே முன்மொழியப் படுகிறது. அதனால் தான் நிச்சயமாக இந்தத் தீர்மானத்தை வரவேற்க முடியாது என்பதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல. நீக்கப்பட வேண்டியது எது? பொது வாகவே மாநில அரசுக்கு ஒரு விதமான மூடு இருந்துக் கொண் டிருக்கிறது. ஒரு மனபோக்கு. ஜனநாயகப் பண்புகளுக்கு எதிரான போக்கு தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. நீக்கப்பட வேண்டியது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தன்னில் தங்கி நிரந்தரமாக உள்ளடங்கி போய் யிருக்கிற ஜனநாயக பண்பிற்கு விரோதமான முயற்சிகளைத் தான் நீக்க வேண்டும் முதலில். அவற்றை நீக்குவதற்கு பதிலாக இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது மக்களின் முணுமுணுப்புகளுக்கும் எதிர்ப்புக்கும் வலுச் சேர்ப்பதாக ஆகிவிடும் என்று குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே இன்னொரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்பு வது என்ன நடைமுறையில் நடக்கிறது. பல்வேறு பகுதிகளி லேயிருந்தும் பலர் இதுபற்றி கருத்துக்களை வெளியிட்டிருக்

கிறார்கள். ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிற ஒரு அரசு மக்களின் உணர்வு என்ன, அவர்களின் உணர்ச்சி என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். அவர்களின் முணுமுணுப்பு களை காது கொடுத்துக் கேட்க வேண்டும். மக்களின் எதிர்ப் புக் குரல்களையெல்லாம் காது கொடுத்துக் கேட்க வேண்டும். அவற்றிற்கு பதிலாக, மக்கள் தங்களின் எதிர்ப்பை தெரி விக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகளை கருவிகளாக்கி தேர்ந்தெடுத்து அனுப்புகிறபோது அந்தக் கருவியை மழுங்க அடிக்கின்ற முயற்சியில் ஈடுபடுவது, மக்களுடைய விருப்பத் திற்கு எதிராக, மக்களுக்கு எதிராகவே போர் தொடுப்பது ஆகும். இது ஜனநாயக முறையா? * *

(கூச்சல், குழப்பம்) குறுக்கீடுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குத்தான் பேசும் போதே வார்த்தைகளை எண்ணிப் பார்த்து, யாரையும் புண் படுத்தாத அளவிற்கு பேசுங்கள் என்று சொல்லுகிறேன். ** ** ** என்ற அந்த வார்த்தையை எடுத்துவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே எடுத்துவிடுங்கள். அத்தோடு, அந்த * * ஆட்சியில் இருந்திருந்தால் சுப்பராயன் எம்.எல்.ஏ. ஆக வந்திருக்க முடியாது. இப்போது பேசிக் கொண்டிருக்கவும் முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்பேர் பண்ணி பேசும் போது, கொஞ்சமாவது ஒத்துப் போகின்ற வகையில் கம்பேர் பண்ணி பேசுங்கள்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பற்றி கம்பேர் பண்ணும்போது ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கியிருக்கிறேன். திரும்பவும் அதையே பேசாதீர்கள். ஆத்திரப்படாமல் யோசியுங்கள். மாண்புமிகு அமைச்சர் சொன்னமாதிரி அப்படி அவர் இருந்திருந்தால், நீங்கள் எம்.எல்.ஏ. ஆகியிருக்க முடியாது. தேர்தலே நடக் காது. நடத்த வேண்டிய தேர்தலும் ரத்து செய்யப்பட்டு விடும். ஆனால் தமிழ்நாட்டில் அப்படியா இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே,

** ** ** என்று சொல்லுவதை ஏன் நீக்க வேண்டும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எந்த அடிப்படையில் நீக்கச் சொல்லுகிறீர்கள். நான் சொன்னது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் விளக்கமாக வெளியிலே விவாதமாக வைத்துக் கொள்ளலாம். நானே வேண்டுமானால் உங்களுக்கு ஒருநாள் ஏற்பாடு செய்து தருகிறேன். அன்று பேசிக் கொள்ளுங்கள். இப்போது அவையின் முன்னால் இருக்கிற தீர்மானத்தின் மீது பேசுங்கள்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு எதிரான மக்களின் விருப்பத்திற்கு எதிரான ஒரு மனப்போக்கை கைவிட வேண்டும் என்றுதான்........... (குறுக்கீடு, கூச்சல்) பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் தரப்பு நண்பர்களின் நடவடிக்கை இப்படித்தான் இருக்கும் என்றால்..................(குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்தினுடைய போக்கு, அரசினுடைய நடவடிக்கைகள், அரசினுடைய எண்ணங்கள் ஆகியவற்றைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் குறை சொல்லட்டும். குற்றம் சொல்லட்டும். ஆனால், அவர் சொல்வது போன்ற ** நிலை, இந்தியாவில் இருக்கிறது, தமிழகத்தில் இருக்கிறது அல்லது இங்கே இருக்கிற அமைப்புகளில் இருக்கிறது என்று ஒப்பிட்டு கருத்தைச் சொல்ல வேண்டாம். அப்படிப்பட்ட ஒரு கடப்பிடிப்புக்கு ஆளாகும் வகையில் இந்த மன்றத்தை வைக்க கூடாது. அவர் சொல்லக்கூடிய உதாரணம் இந்தியாவிற்கோ தமிழகத்திற்கோ பொருந்தாது. வேறு வகையில் எப்படி வேண்டுமானாலும் பேசுங்கள், கேட்டுக் கொள்கிறோம். தாங்கியும் கொள்ளுகிறோம்.

(பிற்பகல் 12-20)

திரு. ஆ.கா.அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து வரக்கூடிய இந்த விவாதத்திலே சில வார்த்தைகள் சிலபேருக்கு மனநோவினைத் தரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கிறது என்ற காரணத்திற்காக அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் எடுத்திருக்கிறீர்கள். மரியாதையோடு நான் ஒன்றைச் சுட்ட விரும்புகிறேன். இங்கே ஆட்டுக்கு தாடி உண்டு என்று இரண்டுமுறை சொல்லப்பட்டது. யாராவது இதை ஆட்சே பித்தார்களா என்றால், நீங்கள் கூட ஆட்சேபிக்கவில்லை. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தாடியை எடுக்க வேண்டாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : இந்த அவையே தீர் மானம் செய்தாலும் கூட நான் எடுக்க மாட்டேன். ஆனால் ஒன்று, ஆட்டுக்கு தாடியென்று அலட்சியமாகப் பேச வேண் டாம். ஆண்மைக்குத் தான் தாடி உண்டு. அதை நினைவில் கொள்ளுங்கள். ஏனென்றால் வான்புகழ் கொண்ட வள்ளு வனுக்கு தாடி உண்டு.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : : தலைவர் அவர் களே, தாடியுள்ளவர்கள் எல்லாம் அப்துல் சமத் ஆகிவிட மாட்டார்கள்.

திரு. ஆ.கா.அ. அப்துல் சமத் : உலகத்தினுடைய பேரறி ஞர்களுக்கு எல்லாம் தாடி உண்டு. பெரியார் ஈ.வே.ரா. அவர்களுக்கு தாடி உண்டு. கண்ணியம் மிக்க காயிதே மில்லத் அவர்களுக்கு தாடி உண்டு. எனக்கும் உண்டு. (சிரிப்பு).

தலைவர் அவர்களே, நான் சட்டமன்றத்திற்கு தேர்ந் தெடுக்கப்பட்டபோது இப்படி ஒரு தீர்மானத்தை நிறை வேற்றுவதற்கு சாட்சியாக அமர வேண்டிய அவல நிலை ஏற்படுமென்று நான் கனவிலும் கூட கருதவில்லை. அவை முன்னவர் அவர்கள் நாவலர் என்று நாட்டிய புகழப்பெற்ற வர்கள். தங்களுக்கு இருக்கிற நாவன்மையைத் துணைகொண்டு, அவர்களுக்கு இருக்கிற அறிவாற்றலைத் துணைகொண்டு, இந்தச் சட்டமன்ற மேலவையை கலைப்பதற்கான சில காரணங்களை அவர்கள் சொல்லாமல் சொல்லி காட்டி னார்கள். அவர்கள் சொல்லவேண்டிய காரணங்கள் நிரம்ப உண்டு என்று நான் கருதுகிறேன்.

ஆனால் நான் எந்தக் கோணத்தில் எண்ணிப்பார்த்தாலும், இந்த மேலவையைக் கலைப்பதற்கான ஒரு ஒருமித்த மனப் பான்மையை நான் கொள்ளமுடியாமல் இருக்கிறது. தேர்தல்கள் எல்லாம் முடிந்த பிறகு ஆறுதல் அளிக்கக்கூடிய சபையாக மேலவை தான் நம்முடைய நாட்டிலே இருந்து வந்திருக் கிறது. மேலவை இருந்தில்லையென்றால் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக செயல்பட்டிருந்

1986 மே 14] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

திருக்க முடியாது. மேலவை இருந்தில்லையென்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியினுடைய சகாப்தம் தொடங்கி இருந்திருக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு மேலவையில் உலகத்திற்கு நல்ல கருத்துக்களை வழங்கிய மேலோர்கள் எல்லாம் இடம்பெற்று சேவையாற்றினார்கள்.

ஐக்கிய நாடுகள் மன்றத்திற்குக் கூட தலைமை தாங்கக் கூடிய பேரறிஞர் இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் இடம் பெற்றிருந்த ஒரு மேலவையை, திராவிட பாரம்பரியத்திற்கே ஒரு தெளிவான நோக்கம் தந்த தியாகராயர் போன்றவர்கள் இடம் பெற்றிருந்த மேலவையை, சத்தியமூர்த்தி போன்ற விடுதலை வீரர்கள் இடம் பெற்றிருந்த ஒரு மேலவையைக் கலைக்க, அந்த வரலாற்றிற்கே முற்றுப் புள்ளி வைக்கக்கூடிய தீர்மானத்தை நம் முன்னவர் அவர்கள் முன்மொழியத்தான் வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். இதற்குக் காரணம் என்ன? ஒரு அவையைக் கலைப்பது என்று சொன்னால், நாடு தழுவிய ஒரு விவாதம் நடந்திருக்க வேண்டும். அப்படி இந்த நாட்டிலே ஒரு விவாதம் நடைபெற்றதா? பத்திரிகையில் அதுபற்றி பல கட்டுரைகள் எழுதப்பட்டனவா? கருத்துக்கள் பரிமாறப்பட்டனவா? அரசியல் கட்சிகளுக்கிடையே தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா? நான் குறைந்த அளவில் கேட்கிறேன். ஆளும்கட்சி பொறுப்பை ஏற்றிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு அண்மையில் கூடிற்றே, அந்தக் குழுவில் இது பற்றிய கருத்து ஏதாவது தெரிவிக்கப்பட்டதா என்று பார்த்தால், எதையும் காண முடியவில்லை.

நம்முடைய முன்னவர் அவர்கள் கூட எட்டுத் திங்களாக இந்தக் கருத்துக்கள் முகிழ்விட்டு, அது தளிர்த்து, அது வளர்ந்து வந்தது என்று சொன்னார்கள். ஆனால் மூன்று நாட்களுக்கு முன்னாலே, இதே மன்றத்திலே பேசப்பட்டது. அது கொள்கை அளவில் தான் இருக்கிறது. கொள்கை திட்டமாக உருப்பெற, திட்டம் தீர்மானமாக உருப்பெற நாள் பிடிக்கும் என்று சொன்னார்கள். ஆனால் அடுத்த நாளே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களே என்று நான் வேதனைப்படுகிறேன். இந்தச் சபையைக் கலைப்பதற்கான காரணமென்று அவர்கள் முன்னுரையாகச் சொன்ன கருத்துக்களில் எந்தக் கருத்தையும் நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லையே என்று நான் வருந்துகிறேன். ஏனென்றால் இதனால் செலவாகிறது என்று சொன்னார்கள். எத்தனை இலட்ச ரூபாய் எத்தனை ஆண்டுக்காலமாக செலவாகிறது? எனக்குத் தெரிந்த வரையில் ஒரு 15 இலட்ச ரூபாய் செலவாகிறது. ஏற்கனவே உள்ள நிர்வாகத்திற்காக சில பல இலட்ச ரூபாய்கள் செலவாகின்றன. ஆனால் இந்தச் செலவு கணக்குக்காக ஒரு மேலவையை நீங்கள் அழிக்கத்தான் வேண்டுமா? இல்லாமல் ஒழிக்கத்தான்வேண்டுமா என்பதை அன்புகூர்ந்து நீங்கள் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதே அவையிலே நேற்றுதான் ஒரு மசோதாவைக்கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். நேற்று மாலை அந்த மசோதா கொண்டு வரப்பட்ட காரணத்தால், நோன்பு நாளிலே களைத்துப் போய் இருந்த நான் அதிலே பங்கு கொண்டு இந்த அரசுக்கு வாழ்த்து தெரிவிக்க முடியாமல் போய்விட்டது. ஏறக்குறைய 200 கோடி ரூபாய் இழப்பை இழந்தாலும் கூட மீண்டும் இந்த நாட்டில், அடுத்த ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான சட்ட முன்வடிவை இந்த அவையிலே வைத்தீர்களே, நான் மனமாரப் பாராட்டுகிறேன். 200 கோடி ரூபாயைக் கொடுத்தாவது மதுவை ஒழிக்க வேண்டும் என்று மனமுவந்து தீர்மானம் கொண்டு வந்த நீங்கள் மறுநாளே நல்ல கருத்துக்களை, சிறந்த பாரம்பரியத்துக்கு உகந்த பெரிய வர்களுடைய நினைவுச் சின்னமாக விளங்கக்கூடிய இந்த மேலவையை ஒழிக்கக்கூடிய தீர்மானத்தைக் கொண்டு வரத் தான் வேண்டுமா என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசியல் சாசனத்திலே இந்த அவையை அழிப்பதற்கு உரிய அதிகாரம் இந்த அவைக்கு இருக்கிறது என்று அடிக்கடி சொல்லப்படுகிறது, ஆனால் அப்படி ஒழித்தே தீரவேண்டும் என்ற கட்டாயம் அரசியல் சாசனத்தில் குறிக்கப் பட்டு இருப்பதாக நான் படித்தவரையில் தெரியவில்லை. இவைகளை வைப்பதிலே நமக்கு வந்துற்ற நஷ்டம் என்ன? அந்தச் சபையிலே இருந்தவர்கள் ஏதாவது வரம்பு மீறி நடந்து கொண் டார்களா? அந்தச் சபை தனக்குத் தானே களங்கம் கற்பித்துக் கொண்டதா? அல்லது முறை தவறி நடந்து கொண்டதா? அல்லது இந்தச் சபையினுடைய அதிகாரத்திலே என்றாவது குறுக்கிட்டது உண்டா? அல்லது இந்தச் சபை நிறைவேற்றிய எந்தத் தீர் மானத்தையாவது நாங்கள் நிறைவேற்றமாட்டோம் என்று திருப்பி அனுப்பியதுண்டா? அல்லது என்றாவது ஒருநாள் இந்தச் சபையோடு கன்பிரான்டேஷன் என்று சொல்லக்கூடிய அந்த நிலை ஏற்பட்டது உண்டா என்றால் எந்தக் காலத்திலும் ஏற்பட்டதில்லை. இன்னும் சொல்லப்போனால், நாம் எவ்வ ளவு அவசர உணர்ச்சியோடு சில சந்தர்ப்பங்களில், பல சந் தர்ப்பங்களில் ஆத்திர உணர்ச்சியோடு கருத்துக்களை இந்த அவையில் பரிமாறி இருக்கிறோமோ, அதற்கெல்லாம் மாறு பட்ட முறையில், இன்னும் அழகாகவும், அமைதியாகவும் தீர்க்கமாகவும், அந்தச் சபையிலே விவாதிக்கப்பட்டது என் பதை நாமே படித்து பாராட்டி இருக்கிறோம். அப்படிப்பட்ட ஓர் அவையை இன்று கலைக்க வேண்டிய அவசியம் ஏன் வந் தது என்று கேட்கிறேன். 7, 8 மாதங்களாக அந்த எண்ணம் இருந்தது என்று முன்னவர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. காரணம் அந்த எண்ண இருந்திருக்குமானால் இதே சபையிலேயிருந்து 7 பேர்கள்

1986 மே 14] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

தேர்ந்தெடுக்க வேண்டியதற்கான தேர்தல் குறிப்பு தரப்பட்டு இருக்க முடியுமா? இதற்கு சமீபத்திலேதான், சென்ற இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான், நியமன உறுப்பினர்களாக மாண்பு மிகு 3 உறுப்பினர்கள் அந்த அவைக்கு நியமிக்கப்பட்டார்கள். நேற்றயதினம் கூட இங்கே இருக்கக்கூடிய பொது நிறுவனங் கள் குழுவிற்கு அந்த மேலவையில் இருந்து செயல்படுவதற் காக சில உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிப்பு கூட நேற்று தரப்பட்டு இருக்கிறது என்றால், இவைகள் எல்லாம் 7, 8 மாதங்களாக இந்த அவை இல்லாமல் ஆக்க வேண்டும் என்ற எண்ணம் துடித்து இருந்தது என்றோ, அந்தக் கருத்துப் பட வந்தது என்றோ, சொல்லப்படுவதற்கு ஆதாரமாக அமையுமா என்று நான் கேட்க விரும்புகிறேன். எனவே எந்தக் கணக்குப்படி பார்த்தாலும் கூட சில நண்பர்கள் சொன்னார்கள். நம்முடைய ரமணி அவர்கள், நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் மாண்புக்கு உரியவர்கள் அல்ல என்று சொன்னார் கள். ஒரு காலம் இருந்து இருக்கலாம், நம்மை அன்னியர்கள் ஆண்ட காலத்திலே அவர்களுக்கு ஏவலர்களாக இருப்பார்கள் என்றோ, எடுபிடிகளாக இருப்பார்கள் என்றோ அல்லது அவர் களுடைய கருத்துக்களுக்கு ஆதரவு தருபவர்களாக இருப்பார் கள் என்றோ கருதப்பட்ட சிலர் அந்த அவையிலே நியமிக்கப் படுவதற்கான அதிகாரத்தை அந்த அரசு பெற்று இருந்து இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் இடம் கூட பெற்று இருந்து இருக்கலாம். ஆனாலும் கூட தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் தவிர மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள் எல் லாம் மாண்புக்கு உரியவர்கள் அல்ல என்று சொல்லக்கூடிய வாதத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை, குறிப் பாக நம்முடைய ரமணி அவர்கள், பாராளுமன்றத்திலே ராஜ்ய சபா இருந்தே தீரவேண்டும் என்று சொன்னார்கள். நீங்களே கூட இந்த அரசியல் அமைப்பினுடைய வழியிலே இவைகள் எல்லாம் தோன்றியது, ஆகவே மாற்ற முடியாது என்று வற்புறுத்தினீர்கள். நான் கேட்டுக் கொள்கிறேன். மாநிலங்கள் அவையினுடைய உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படக்கூடியவர்களா? அவர்கள் எல்லாம் ஆங்காங்கு தேர்ந் தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக் கப்பட்டவர்கள் தானே. தேர்ந்தெடுக்கப்பட்ட, நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டதாக பாராளுமன்றத் தினுடைய அவை இருக்க வேண்டும் என்று அவருடைய கட்சி, நீண்ட நெடு நாட்களாக போராட்டத்தினுடைய அடிப்படை யிலே வலியுறுத்தி வருகிறது என்று சொல்வது உண்மை என்றால், மாநிலங்கள் அவையிலே அவர்கள் ஈடுபட்டு இருக் கக் கூடிய உறுப்பினர்கள் கூட அந்தந்த மாநிலத்தினுடைய பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற கருத்தை என்றாவது ஒப்புக்காவது சொன்னதுண்டா?

ஆக என்ன தெரிகிறது என்றால் நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள்தான் நேர்மையாளர்கள் என்றோ இப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களினாலே தேர்ந்தெடுக்கப்படு பவர்கள் அந்த மாண்புக்கு உரியவர்கள் அல்லர் என்றோ சொல்லப்படக்கூடிய வாதத்தை என்னாலே ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

(பிற்பகல் 12-30)

இன்னொன்று சொல்லப்படுகிறது. ஒரு பிரஜைக்கு ஒரு ஓட்டு என்று இருக்கும்போது, பட்டதாரிகளுக்கென்று இன் னொரு ஓட்டா? ஆசிரியர்களுக்கு என்று இன்னொரு ஓட்டா? என்றெல்லாம் சொல்லப்படுகிறது. நான் மரியாதையோடு உலக நாடுகளில் ஒன்றான ஆஸ்திரேலியா நாட்டிலே இருக்கக் கூடிய ஒரு மரபை முன்னவர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்பு கிறேன். அந்த நாடும் ஒரு ஜனநாயக நாடுதான். அந்த நாட்டிலே ஒரு நல்ல பிரஜைக்கு 7 வாக்குரிமைகள் அளித்திருக் கிறார்கள். வயது வந்தவர்கள் என்ற அடிப்படையிலே ஒரு வாக்கு; திருமணம் முடிந்து தம்பதிகள் என்ற அடிப்படையிலே ஒரு வாக்கு; படித்து பட்டம் பெற்றவர்கள் என்ற முறையிலே ஒரு வாக்கு; திருமணம் முடித்தும்கூட 10 ஆண்டுகளுக்கு மண விலக்கு அளிக்காமல் அவர்கள் தொடர்ந்து வாழ்க்கை நடத் தினார்கள் என்பதற்காக ஒரு வாக்கு; குறித்த காலத்திலே வரி செலுத்துகிறார்கள் என்பதற்காக ஒரு வாக்கு என்றெல் லாம் 7 வாக்குகள் தரப்பட்ட நாடும் இப்பொழுது இருக்கத் தான் செய்கிறது. இதைக் கலைப்பதைக் கொண்டு எவ்வளவு பெரியதொரு சமுதாயத்துக்கு இடையிலே இந்த அரசு தன் னுடைய நல்ல மதிப்பை இழந்துவிடும் என்று எண்ணிப்பார்க் கும் போதுதான் நாம் இதுபற்றி குறிப்பிட்டுக் கூறவேண்டிய தாக இருக்கிறது. இங்கே, இந்த அரசு வந்தபிறகு பல கலைப் புகள் நடந்திருக்கின்றன என்று விமர்சிக்கப்படுவதையும் நாம் நினைவிலே கொள்ள வேண்டும். ஏறத்தாழ 12 ஆயிரம் ஊராட்சிகள் கலைக்கப்பட்டன. 660க்கும் மேற்பட்ட பேரூ ராட்சிகள் கலைக்கப்பட்டன. 86 நகராட்சிகள் அன்றிருந்த நிலையிலே கலைக்கப்பட்டன. கோவை மாநகராட்சி தோற் றுவிக்கப்பட்ட காலத்திலேயிருந்து இதுவரையில் தேர்தலே நடத்தப்படவில்லை. இப்படியெல்லாம் இருந்திருக்கக்கூடிய இந்தத் தமிழக அரசினுடைய வாழ்வில் ஒரு மாமாங்கத்துக்குப் பிறகு தேர்தல் வந்துற்றது போல தேர்தல் நடந்து முடிந்த பிறகு மக்கள் தெரிந்து எடுக்கப்பட்டு, தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக தேதி குறிக்கப்பட்ட கால கட்டத்தில் அந்த அவை இல்லை என்றால் இப்படி தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு தெளிவாக வரையறுக்கப்பட்ட உரிமை இல்லாமல் ஆக்கப் படுகிறது என்ற குற்றம் சாட்டப்படுமானால் அதை நீங்கள் எப்படி எதிர்நோக்கப் போகிறீர்கள் என்றுதான் இந்த

அரசிடத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்தத் துறையிலே பார்த்தாலும் கூட இன்று இருக்கக்கூடிய மேலவையைக் கலைப்பதற்கு உரிய நியாயம் இருப்பதாக எனக்குப் படவில்லை. நான் மாண்புமிகு முன்னவர் அவர்களிடத் திலேயும், அவர்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் டணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நேற்றையதினம் மேலவைத் தலைவர், தமிழ் ஐயா மா.பொ.சி. அவர்கள் பேசியதாக....(குறுக்கீடு) அவர் செய்த விமர்சனத்தைச் சொல்லவில்லை. படித்தாலே நெக்குருகத்தக்க வகையில், 80 வயதைத் தாண்டிவிட்ட அந்தப் பெரியவர், நம்முடைய முதல்வரினாலே அவர் பொறுப்பிலே அமர்த்தப்படும்போது 'தமிழை' பொறுப்பிலே அமர்த்துகிறேன் என்று பெருமைப்பட வாழ்த்திய ஒரு பெரியவர் எவ்வளவு மனம் நொந்து, எவ்வளவு மனம் வெந்து தனது கருத்துக்களைச் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக் கிறார் என்றால் அதைவிட நான் உள்ளுருக பேச முடியாது; நல்ல தமிழிலும் பேச முடியாது. அதையே என்னுடைய கருத் தாக எதிரொலிப்பதோடு இந்த அவைக்கு அதிகாரம் இருக்கிறது; அதை ஒத்துக் கொள்கிறேன். கலைப்பதற்கும் அதிகாரம் இருக்கிறது; உண்டாக்குவதற்கும் அதிகாரம் இருக்கி றது. ஆனால் இதை கலைக்கும் வேலையிலே நாம் கனவிலும் ஈடுபடவேண்டாம். உருவாக்கக்கூடிய வேலை நமக்கு இல்லை. இருக்கக்கூடிய ஒரு நல்ல அவை நீடிப்பதற்கு நீங்கள் உங்க ளுடைய கருத்துக்களை மறுபரிசீலனை செய்யத்தக்க முறை யில் இந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அரசினுடைய சார்பிலே அரசியல் அமைப்புச் சட்டத்தின் 169 ஆவது உறுப்பின் ஒன்றாவது கூறின்படி தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கப்பட வேண்டும் என இப்பேரவை தீர்மானிக்கிறது என்று சொல்கிற தீர்மானத்தை முதலமைச் சர் அவர்கள் பேரால் கொடுக்கப்பட்டிருந்ததை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே வைத்து அதனுடைய நோக்கத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்தத் தீர்மானம் வந்தற்குப் பிறகு இந்தத் தீர்மானத்தில் அரசே, இந்தத் தீர் மானத்தைக் கொண்டு வந்த அரசே ஒரு தீர்மானத்தைச் செய்து இந்த அவையினுடைய வாக்குகளைப் பெறவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அந்தத் திருத்தம் எப்படி அமையவேண்டும் என்று கருது கிறேன் என்றால் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 169 வது உறுப்பின் 1-வது கூறின்படி தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை நீக்கப்படவேண்டுமா, நீக்கப்பட வேண்டுமா என்பதைப் பற்றி

மக்கள் கருத்தை அறிந்து இன்றிலிருந்து ஒரு மாதத்திற்குள் இந்தப் பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்கு அரசியல் அமைப்புச் சட்ட நிபுணர்களையும், பாராளுமன்ற நடைமுறையை அறிந்த விற்பன்னர்களையும், இந்தப் பேரவையின் கட்சித் தலைவர்கள் அடங்கிய ஒரு குழுவை உடனடியாக நியமிப்பதற்கு இப்பேரவை தீர்மானிக்கிறது என்று அரசு முடிவு எடுக்குமானால் இது மிகச் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏன் என்று சொன்னால், அரசு அப்படி வரவேண்டும் என்ற வேண்டுகோளைதான் இங்கே வைக்கிறேனே தவிர நான் ஒன்றையும் என் விச்சையாகவும், தன்னிச்சையாகவும் சொல்ல வில்லை. உங்களுடைய பார்வையிலே, உங்களுடைய கருணை திருவுள்ளத்திலே இந்தக் கருத்துப் படவேண்டும், உங்கள் உள்ளத்தைத் தொட வேண்டும், என் கருத்தை அதில் நட வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமே தவிர வேறு எந்த நோக்கத்தோடும் இது இங்கே சொல்லப்படவில்லை.

இந்தியாவிலேயே இந்த மேலவை என்று எப்போதும் அழைக்கப்படுகின்ற இந்த அவையிலே மூத்ததும், புதுமை பூத்ததுமாக இருப்பது தமிழகத்தில் இருக்கின்ற இது தான். இன்று தமிழகம் என்று அழைக்கப்பட்டாலும் முன்பு சென்னை மாகாணம் என்று அழைக்கப்பட்ட மெட்ராஸ் பிரசிடென்சியிலே ஆந்திராவினுடைய பெரும் பகுதியும், மலபார் உடைய ஒரு பகுதியும், கர்நாடகாவினுடைய ஒரு பகுதியும் இன்னும் பிற பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவம் இருந்த மதர் பார்லிமெண்டு என்று அழைக்கப்படுகின்ற அளவுக்கு ஒரு தாய் ஸ்தாபனமாக இருந்தது இந்த மேலவை என்பதை மறந்து விடக்கூடாது என்பதற்காகத் தான் அந்த தீர்மானத்தை நீங்கள் கொண்டு வருகிற நேரத்திலே எல்லோரையும் அணைத்துக் கொண்டு போகின்ற ஒரு வாசகத்தை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்ல வந்தேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

கன்னாட் என்று சொல்லுகின்ற முக்கியமானவர்தான் இதை தொடங்கி வைக்கிறார். 1920-ல் இந்த அவைகள் தொடங்குவது என்ற நிலை ஏற்பட்டபோது சென்னையிலும் இந்த அவை வந்தது, கல்கத்தாவிலும் இந்த அவை வந்தது, பம்பாயிலும் இந்த அவை வந்தது, இந்த மூன்று இடங்களிலும் அவை வந்தாலும் கூட அவைகளில் இந்த அவையை தேர்ந்தெடுத்து அவர் திறந்து வைத்தார், அப்படி தொடங்கி வைத்த போது அவர்கள் அப்போது சிந்தித்தது கூட,

"The Political capital of India may be Delhi;

The intellectual capital of India is Madras."

என்று சொல்லுகிற அளவுக்கு அறிவு பூர்வமான ஒரு தலைமை இடமாக சென்னை இருந்தது உண்டு. இப்போதும் திகழ்வதற்கு உரிய வாய்ப்பு இருக்கின்றது, இருப்பதற்கு கண் கூடான சில நிகழச்சிகள் நடப்பதற்கு உரிய வழிவகைகள் உண்டு. அப்படிப்பட்ட ஒரு சென்னை மாநகரத்திலே—சென்னை ராஜதானி என்ற இடத்தில்தான் தொடங்கி வைக்க வேண்டும் என்று கன்னாட் அவர்கள் இங்கே வந்து அதை தொடங்கி வைத்துவிட்டு பிறகுதான் மற்ற இடங்களுக்கு சென்றார்.

அந்த கன்னாட் பிளேஸ் என்று சொல்லுகின்ற ஒரு பெரிய இடம் டெல்லியிலே அவர்கள் நினைவாக ஒன்று இருந்தாலும் அவர் சென்னையிலே அதை தொடங்கி வைப்பதைத்தான் பெருமையாகக் கருதினார் என்பதை நான் நினைவூட்ட விரும்பு கிறேன். அதற்குப்பிறகு தொடர்ச்சியாக இருந்து கொண்டி ருக்கின்ற ஒன்றை என்றைக்குமே முற்றுப் பெறாத இருப்ப தற்கென்று விதைக்கப்பட்ட ஒன்றை இன்று முற்று பெற வைக்கின்ற ஒரு காரியத்தை நாம் செய்து கொண்டு இருக்கிறோம். சட்டப் பேரவையினுடைய காலம் முடிகின்ற நேரத்தில் கூட அடுத்த தேர்தலுக்கு அறிவிக்கின்ற போது இந்த சட்டப் பேரவை இங்கே இயங்காமல் இருப்பதுண்டு. ஆனால் எந்த நேரமும் இருந்து கொண்டு இருக்கிற ஒன்றாக இந்த மேலவை இருந்து கொண்டிருக்கிறது. Continuity is there. தொடர்ச்சி எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறது. தொடர்ச்சி எப்போதுமே இருந்து கொண்டிருக்கிற நேரத்தில் புதிது புதிதாக வருகின்றவர்கள் திடீரென மரபுக்கு மாறாக பழக்க வழக்கத்திற்கு மாறாக சிலவற்றைச் சொல்லாமல் தடுப்பதற்குக் கூடிய Restraind Powers. உள்ளவர்கள் அதனை அடக்கி வாசியுங்கள் என்று சொல்வதற்கு ஆன்று, அகன்று, அடங்கிய சான்றோர்கள் கொண்ட அவையாக அது எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறது. எப்படிப்பட்ட பொதுமக்கள் எல்லாம் அதிலே இடம் பெற்றிருந்தார்கள் என்பதை மற்ற பெரு மக்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய பிறகு நான் சுட்டிக் காட்ட வேண்டியதில்லை என்று சொன்னாலும் ஒன்றிரண்டு விட்டுப்போனவர்களைச் சொல்லவேண்டும். ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி அவர்கள் இருந்து அவர்களுடைய நாவோசை ஒலித்த மன்றம் அது. இன்னும் சொல்லப்போனால் பன்னீர் செல்வம் என்று புகழப்படுகின்ற அந்த பெருமகனார் இருந்த இடம் அந்த இடம். இப்படி ஒன்றிரண்டுபேரை மட்டும் நான் சொல்லுவதற்குக் காரணம் மற்றவர்கள் சொன்னதை யும் இதில் சேர்த்துக் கொண்டால் அந்தப் பட்டியல் எவ்வளவு பெரியதாக மட்டும் அல்ல, எவ்வளவு பெருமைக்கு உரியது

என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் என்பதுதான். ஆக தொடர்ந்து வந்து கொண்டிருக்கிற ஒன்றை மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கிறது என்ற ஒரே ஒரு காரணம் காட்டி அதை கலைப்பதற்குரியது என்று சொல்வோமானால் அது நல்லது அல்ல என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அருமைக்குரிய முன்னவர் அவர்கள் இங்கே சொல்லுகிறபோது பல்வேறு காரணங்களைச் சொன்னார் அது தேவையா, தேவை இல்லையா என்று சொல்லுகிறபோது இரண்டையும் வைத்துக்கொண்டு திருக்குறளை இங்கே எடுத்து சான்றாக சொல்லி மிகை நாடி மிக்க கொளல், அதிலே மிக நாடி, குணம் நாடி குற்றமும் நாடி, என்று சொன்னார். ஆகவே குணத்தை நாடி அதன் பிறகு குற்றமும் நாடி என்பது இழிவு சிறப்பு உவமையாக தான் வருகிறது என்பது இலக்கணம் கற்ற நடமாடும் பல்கலைக் கழகமாகிய நாவலர் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். எனவே

[பிற்பகல் 12-40]

முதலிலே நாட வேண்டியது குணம், பிறகு குற்றமும் நாடி, அந்த குணத்தையும், குற்றத்தையும் எடுத்துவைத்துப் பார்க்கின்ற நேரத்திலே, தேவையையும், தேவையின்மையையும் எடுத்து வைக்கின்ற நேரத்திலே, தேவையின்மை என்று சொல்வதற்குரிய காரணங்கள் மிக மிக மிகக் குறைவு. கண்ணுக்குக் கூட புலனாகாத அளவிற்கு மிகக் குறைவாக இருக்கின்றன. இவைகளைச் சொல்லும்போது ஒன்றை வேண்டுமென்றால் சொல்லலாம். மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் தான் அங்கே மாண்புக்குரியவர்களாக காட்சியளிக்கின்றார்கள். என்று சொல்கிறார்கள். நமது இந்தியாவில் இருக்கின்ற அரசியல் அமைப்பும் சரி, பொருளாதார அமைப்பும் சரி, அது எப்படியிருக்கிறது என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போமேயானால், கலப்பு பொருளாதாரமாக இருந்திருக்கிறது. முழுவதையும் நாம் முதலாளிகளிடம் கொடுத்துவிடவில்லை. முழுவதுமாக நாம் அதனை அரசாங்கத்திடம். கொடுத்துவிடவில்லை முழுவதுமாக நாம் அதை கூட்டுறவிடம் கொடுத்துவிடவில்லை. முழுவதுமாக நாம் இதை தனியாரிடம் கொடுத்துவிடவும் இல்லை. ஆக சில நேரங்களில் தனியாரிடமும் அரசிடமும் சேர்ந்திருக்கும். சில இடத்திலே கூட்டுறவிடம் இருந்திருக்கும். தனி முதலாளிகளும் இருப்பார்கள். அப்படியெல்லாம் கலப்புப்பொருளாதாரம் இருப்பதைப்போலவே ஜனநாயக முறையிலே பல்வேறு வழிமுறைகளைக் கொண்ட அரசியல் தான் இருந்துகொண்டிருக்கிறது. உறுப்பினர்களில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களும் இருக்கிறார்கள். இங்கு மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத் குறிப்பிட்டுக் காட்டியதைப் போல் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற ராஜ்யசபை உறுப்பினர்கள் இருப்பதைப் போல, நியமனத்திலே கூட, அதிகாரத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிற நமது மரியாதைக்குரிய கவர்னர் அவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்கள் ஒரு நியமனத்திலே தான் இங்கே வந்து அமர்ந்திருக்கிறார்கள்.

அதைப்போல ஜனாதிபதி அவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஆனால், அதே ஜனாதிபதி தான் முப்படைகளுக்கும் தலைவர் என்று அழைக்கப்படுகிறார்கள். 'Supreme Commander of the three forces' என்று சொல்கின்ற அளவிற்கு அத்தனை படைகளுக்கும் தலைவராகத் தம்மை உயர்த்தி வைத்திருக்கின்ற ஜனாதிபதி அவர்கள் நேரடியாகதேர்ந்தெடுக்கப் படுவதில்லை. தயவுசெய்து தவறாகக் கருதக்கூடாது. ஆளுகின்ற கட்சியிலே-இங்கே இருக்கின்ற ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, மத்தியிலே இருக்கின்ற ஆளுங் கட்சியாக இருந்தாலும் சரி, பிரதமராக அங்கே இருக்கின்ற திரு. ராஜீவ் காந்தியை மதிக்கின்றோம். நாம் வணங்குகின்றோம். அவரைப் பெருமைப்படுத்தியும் பேசுகிறோம். நமது முதல்வர் அவர்களையும் மதிக்கின்றோம். வணங்குகின்றோம். பெருமைப்படுத்தியும் பேசுகின்றோம். ஆனால் முதல்வர் என்ற ஹோதாவிலே அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப் படவில்லை. பிரதமர் என்ற ஹோதாவிலே, மக்களால் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இங்கே பட்டதாரி ஆசிரியர்களுக்கு இரண்டு வாக்குகள் என்று சொல்கின்ற நேரத்தில், இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு இரண்டு வாக்குகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவரைத் தேர்ந்தெடுக்கின்ற மக்கள் சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, சட்டமன்ற உறுப்பினர்கள்தான் முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஏறத்தாழ அதுவும் ஒரு மறைமுகமான தேர்தல்தான். பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் அங்கே பிரதமரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். நான் இவைகளை எல்லாம் சொல்வதற்குக் காரணம், அவர்கள் மக்களுடைய சக்திகளை பிரதிபலிப்பவர்கள் அல்ல என்பதல்ல. ஒட்டு மொத்தமாக மக்களுடைய சக்திகளின் பிரதிநிதியாகத்தான் இருக்கிறார். நமது முதல்வர் அவர்கள் தமிழக மக்களுடைய பிரதிநிதியாகத்தான் இருக்கிறார். பாரதப் பிரதமர் இந்திய மக்களுடைய பிரதிநிதியாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் நியமன முறை என்றும், பல்வேறு முறைகள் இருக்கின்ற காரணத்தாலே மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரே ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு, மேலவையை ஒழித்துவிடலாம் அல்லது கலைத்துவிடலாம் என்று சொல்வது பொருந்துவதாக இல்லை என்கின்ற காரணத்திற்காகத்தான் நான் சொன்னேன். இன்னும் ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தேவையில்லாதது என்று சொல்கிறபோது, செலவு என்று சொல்கிறார்கள். இங்கே ஒரு வகையில் அந்தச் செலவைப் பார்க்கின்ற போது, மிகக் குறைவாக இருக்கின்றது என்று எல்லா பெருமக்களும் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

உள்ளூர் பிரச்சினையைப் பார்ப்பதற்கு முன்னாலே, உலக சரித்திரத்திலேயே நாம் சிலவற்றைச் சான்றாக எடுத்துப்பார்ப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அமெரிக்காவிலே 1881-ல்

கான்ஸ்டிட்யூஷன் வந்போது, அங்கே ஒரேயொரு அவை தான் இருந்தது. 'செக்ஸ் அண்டு பேலன்சஸ்' வேண்டுமென்று சொன்னால், அங்கேயிருக்கின்ற மக்களுடைய தலைவர்கள் உணர்ந்த காரணத்தாலே 1887-லே அடுத்த அவையைக் கொண்டுவந்தார்கள். இப்போது உலகத்திலேயே மிகப் பெரிய செல்வ செழிப்பு மிக்க நாடாகவும், வல்லரசாகவும் இருந்துகொண்டிருக்கின்ற அமெரிக்காவிலே நடைபெற்ற ஒரு சோதனையைச் சொல்கிறேன். வந்தபோது, தனியாக வந்தாலும், பிறகு இரண்டாவது அவை என்று சொல்லப்படுகின்ற மேலவை வந்தது. அதற்குப் பிறகு 1949-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ஆம் தேதி இங்கிலாந்திலே இரண்டாவது அவையாக இருந்துகொண்டிருந்த ஒன்றை ஒழித்துவிட்டார்கள். பாராளுமன்றம் ஒன்று போதும் என்று பாராளுமன்றமே ஒழித்தும், அதற்கு லாங் பார்லிமென்ட் என்று சொல்கின்ற அளவிற்கு மிக அதிகமான நாட்களுக்கு உட்கார்ந்து, வாதாடி, முடிவெடுத்து, 'லாங் பார்லிமென்ட்' என்று சொல்லி, பாராளுமன்றத்திலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து இன்னொரு அவையே தேவையில்லை என்று சொல்லி, பாராளுமன்றத்திலே ஒரு அவையை மட்டுமே, மக்கள் அவை என்று சொல்லுகின்ற 'அவுஸ் ஆப் காமன்ஸ்' மட்டுமே வைத்துக்கொண்டிருந்தது. ஆனால் அப்படி வைத்துக்கொண்டிருந்த உடனேயே கிராம்வெல் என்ற ராணுவ அதிகாரி, ராணுவத் தளபதி ஆட்சியைப் பிடித்து, அவர் பிறகு இரும்புக்கரமாகக் கொண்டு ஆள ஆரம்பித்தார். இரும்புக் கரமாகக் கொண்டு ஆண்டுக்கொண்டிருந்த நேரத்திலே, அவர்களுக்கு அறிவுரை சொல்லுகின்ற அளவிற்கு அங்கே மூதியவர்கள் இல்லாததன் காரணத்தாலே மக்கள் அங்கே வெறுத்து, அந்த முறை அங்கே வந்தது என்று சொல்லி, மீண்டும் ஒரு முறை அந்த இரண்டாவது அவையைக் கொண்டு வந்தார்கள். ஆக இரண்டாவது அவை இருந்து, அது ஒழிக்கப்பட்டு, மீண்டும் வேண்டுமென்று சொல்கின்ற அளவிற்கு இங்கிலாந்திலே அப்படிப்பட்டதொரு பெரிய சோதனை நடந்திருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே அயர்லாந்தில் முதலிலே அந்த இரண்டாவது அவை என்பது வரவேயில்லை. அதற்குப் பிறகு வந்ததற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால் 'இட் இஸ் ஏ கூலிங் சேம்பர்' என்று சொல்லியிருக்கிறார்கள். பேராசிரியர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டிய நேரத்திலே கூட, பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை இங்கே சுட்டிக்காட்டி, அப்போது கப் அண்டு சாசர் என்று சொன்னார்கள், அதைப்போலவே, அயர்லாந்தில், 'கூலிங் எபெக்ட்' என்று சொல்கிற அளவுக்கு 'கூலிங் சேம்பர்' என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்வதற்குரிய காரணத்தோடு நான் நின்றுவிடாமல் உள்ளூர் பிரச்சினைகளுக்கு வருகிறேன்.

உள்ளூரிலே பீகாரிலேகூட ஒரு தடவை மேலவை வேண் டாம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். பீகாரிலே நிறைவேற்றி, பாராளுமன்றத்திற்கும் அனுப்பிவிட்டார்கள். பாராளுமன்றத்திற்கு அனுப்பியதற்குப் பிறகு, அது தேவை இல்லை, நாங்கள் முதலிலே அனுப்பியதை பின் வலித்துக் கொள்கிறோம். என்று சொல்லிவிட்டார்கள். உத்திரபிரதேசத் திலே ஒரு தீர்மானத்தைப் போட்டார்கள். அந்தத் தீர்மானத்தை பாராளுமன்றத்திற்கு அனுப்பவே இல்லை. ஆக, இப்படியெல் லாம் பல்வேறு இடங்களிலே பல்வேறு பிரச்சினைகள் நடந் திருக்கின்றன என்பதை மனதிலே வைத்துக்கொண்டு பார்க்க வேண்டும் என்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கி றேன்.

இன்னுமொரு செய்தி. அரசியலமைப்பு விதியை வகுத்தவர் கள் இதனை நீக்குவதற்கும், ஆக்குவதற்கும் உரிமை இருக்கிறது என்று சொன்னார்கள. எனவே, நீக்குவதற்குரிய உரிமையை எடுத்துக்கொண்டு இந்தப் பேரவையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். நான் கனிவோடு அவர்களைக் கேட்டுக் கொள்வேன். நீக்குவதற்கும் இருக்கிறது ஆக்குவதற்கும் இருக்கிறது. அது எந்தச் சூழ்நிலையிலே கொண்டு வரப்பட்டது என்று சொன்னால், இந்தியாவிலே சுதந்திரம் பெற்றவுடன், விடுதலை பெற்றவுடன் பல்வேறு மொழி வழி மாநிலங்கள் தோன்றும் என்று கருதிய ஒரு சூழ்நிலையிலே அப்படி பல்வேறு மொழி வழி மாநிலங்கள் தோன்றுகின்ற நேரத்திலே மாநிலங்கள் மிகச் சிறியதாக இருக்கும், என்பதால் மேலவை ஒன்றை வைத்துக்கொள்வதா, வேண்டாமா என்ற முடிவை அவர்களுக்கே விட்டு விட்டார்கள். பெரியவைகளாக இருக்கும் சில மாநிலங்கள் அதை வைத்துக்கொள்ள வேண்டுமா, வேண்டாமா என்ற முடிவை அவர்களுக்கே விட்டார்கள். எனவே, அரசியல் அமைப்பை உருவாக்குகின்ற நேரத்திலே இருந்த சூழ் நிலையில் ஆட்சிக்கு வந்தவுடன் நம்மை நாமே ஆளுகிற சுதந்திர புருஷர்களாக ஆனவுடன் மொழி வழி மாநிலங்கள் பிரிகின்ற நேரத்திலே இந்த மேலவையை வைத்துக் கொள்வதா வேண் டாமா என்பது அந்தந்த பேரவைகளே முடிவு செய்யட்டும் என்று விட்டுவிட்டார்கள்.

கர்நாடகம், கேரளம், ஆந்திரம், தமிழகம் என்று இருக் கின்ற நேரத்திலே இத்தனைக்கும் சேர்ந்து நமக்கு மட்டும் தான் மேலவை இருந்தது. எல்லோருடைய பிரதிநிதிகளாக இருந்தோம். இன்று கூட, ஆந்திராவிலே யாராவது ஒருவர் விதிப்படியோ அல்லது வினைப்படியோ அல் லது துரதிர்ஷ்ட வசமாகவோ அல்லது இயற்கையினுடைய அழைப் பின்படியோ மறைந்துவிட்டால், அவர் இங்கே முன்னாள் உறுப் பினராக இருந்தால், அவருக்கு இரங்கல் தீர்மானம் இங்கே

போடுகிறோம். கர்நாடக மாநிலத்தில் ஒருவர் இறந்து விட்டால், அவருடைய வரலாற்றை இங்கே சொல்லி, இங்கே ஒரு தீர்மானம் போடுகின்றோம். ஏனென்றால் அவர்கள் அத்தனை பேருக்கும் தாய் நிலையமாக இருந்தது இது. இது மட்டும் அல்ல. பலருக்கு பென்ஷனை நாம் இங்கே வழங்கிக் கொண்டிருக்கிறோம். தொடர்ச்சியாக, பழமையோடு பல பெரிய தலைவர்களுடைய சரித்திரத்தை தன்னகத்தே பதித்துக் கொண்டிருக்கிற ஒரு வரலாற்று ஏட்டை அழித்துவிடவேண்டாம். எழுதுவதற்கு எடுத்துக்கொண்ட காலம் ஏராளம். ஆனால் நாம் அதனை அழிப்பதற்கு எடுத்துக்கொள்கிற காலம் மிகக் குறைவு. அப்படி மிகக் குறைந்த காலத்திலே இப்படி செய்வது கூடாது என்பதற்காகத் தான் நான் சொன்னேன்.

இந்தப் பேரவையிலே தீர்மானம் கொண்டு வந்துவிட்ட பிறகு எல்லோருடைய ஆதரவையும் பெறுகின்ற வகையில் இது நீக்கப் பட வேண்டுமா என்று மக்கள் கருத்தை அறிவதற்காக ஒரு குழுவை நியமிப்பதற்குப் பேரவை தீர்மானிக்கிறது என்று சொல்லிவிட்டால் உங்களுடைய கருத்தா அல்லது அவர்களுடைய கருத்தா என்று இல்லாமல் மக்கள் கருத்துத்தான் மகேசன் கருத்து என்று சொல்கிற முடிவிற்கு நாம் போய்விடலாம்.

ஆக 'பார்லிமெண்டரி அஃபயர்ஸ் எக்ஸ்பெர்ட்ஸ்' ஒரு பக்கத்திலே இருந்து கொண்டு இந்தப் பேரவையிலே இருக்கிற அரசியல் தலைவர்கள் ஒரு பக்கத்திலே இருந்து கொண்டு மக்களுடைய கருத்தை அறிந்து இவ்வளவு காலத்திற்குள்ளாக ஒரு மாத காலத்திற்குள்ளாக அறிக்கையைக் கொடுங்கள் என்று சொன்னால் மக்களுடைய கருத்தை நாம் அறிந்து விடலாம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று அரசியல் தலைவராக தமிழகத்தை வழி நடத்திச் செல்கிற பெருமையான காரியத்தை இந்த பொதுத் தேர்தலிலே மக்கள் தந்தார்கள். ஆனால், 7, 8 மாதங்களாகவே இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருந்தோம் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிச்சயம் தேர்தல் நேரத்திலே அவர்கள் அதைச் சிந்திக்கவில்லை. தேர்தல் அறிக்கையிலும் அவர்கள் கொடுக்கவில்லை. தேர்தல் நேரத்திலே சிந்தித்திருந்தால், என்னைப் போன்ற எளிய அரசியல் கட்சித் தலைவர்களைப் பார்த்துக் கூப்பிட்டுப் பேசுகிற நேரத்தில், எல்லாம், உங்களுக்கு சட்டமன்றத் தொகுதிகள் அதிகம் தரமுடியவில்லை என்று சொல்லி, மேலவையில் இடம் தருகிறோம் என்று சொல்கிற அளவுக்கு அவர்கள் சொல்லி இருக்கமாட்டார்கள். ஒழிப்பது என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்திருந்தால் நிச்சயமாக என்னிடத்திலே அதை ஒளித்து மறைத்து இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஏனென்றால் நான் பொன்மனச் செம்

மனினுடைய உள்ளத்தையும் அறிவேன். அவர்களைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறவர்களுடைய உள்ளத்தையும் அறிவேன். அந்தப் பூப்போன்ற உள்ளத்தில் இப்படிப்பட்ட எண்ணம் நிச்சயமாக வந்திருக்காது. எனவே, அவர்களுக்கு இதிலே ஏற்படுகிற குறையை வேறொன்றிலே நிறைவு செய்யவேண்டும் என்ற எண்ணம் தான் இருந்தது. அதுதான் அன்று இருந்தது. ஆதலாலேதான் நான் சொல்கிறேன். உங்களுக்கு முதலிலே அந்தச் சிந்தனை இல்லை என்று.

ஒருவேளை உங்களுடைய சிந்தனையை மக்கள் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளலாம். ஏற்றுக்கொள்ளாமல் இருந்தாலும் இருக்கலாம். மக்களிடத்திலே போய்விடலாமே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மக்கள் செல்வாக்கு நிச்சயமாக இருக்கத்தானே செய்கிற மேலவையைக் கலைப்பது என்று சொல்கிற மிகப் பெரிய தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு முன்னாலே மக்களுடைய கருத்துக்களை அறிவதற்கென்று இப் பேரவை இன்று ஒரு குழுவை நியமிக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறது என்று சொல்கின்ற திருத்தத்தோடு உங்களுடைய வாசகம் இங்கே வந்தது என்று சொன்னால், மிகுந்த மகிழ்ச்சியோடு, அந்தத் திருத்ததோடு அந்த வாசகம் வந்தது என்றால் மக்கள் கருத்தை அறிகின்ற ஒரு குழுவை நியமிப்போம் என்ற திருத்தத்தோடு வாசகம் வந்தது என்றால் இந்தத் தீர்மானத்தை மனதார காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் ஆதரிக்கும் என்று சொல்லி அமைகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12-50).

திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்தின்மீது நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை முன் வைக்க விழைகிறேன்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 169-வது உறுப்பின் (1)-வது கூறின்படி, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை மிக்க மகிழ்ச்சியோடு நான் வரவேற்கிறேன். காரணம் 1952 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றப் பேரவையினுடைய கூட்டத்தில் எங்களுடைய தங்கத் தலைவர், இதய தெய்வம், தெய்வீகத் திருமகன் தேவர் அவர்கள் சட்ட மன்ற மேலவை நீக்கப்பட வேண்டும் என்று அப்பொழுதே எடுத்துக் கூறினார்கள். காரணம், காங்கிரஸ் பேரியக்கம் ஒரு சில குறைந்த உறுப்பினர்களைக் கொண்டு ஆட்சிப் பொறுப்பை அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபொழுது, அப்பொழுது மூதறிஞர் இராஜாஜி அவர்களை முதலமைச்சராக ஆக்கினால்

தான் காங்கிரஸ் சர்க்கார் ஆட்சி புரிய முடியும் என்ற ஒரு காரணத்தில், அவரைக் கொல்லைப்புற வழியாக மேலவைக்குக் கொண்டு வந்து முதலமைச்சராக ஆக்கினார்கள். அதைக் கடுமையாக எதிர்த்து தேவர் அவர்கள் இந்த மேலவை நீக்கப்பட வேண்டுமென்று தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியதன் காரண மாக, இந்த மேலவை நீக்கப்பட வேண்டுமென்று நான் மெத்தப் பணிவோடும் மகிழ்ச்சியோடும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள் இருக்கின்ற இந்தப் பேரவையில் இன்னொரு மேலவை தேவைதானா? தேவை இல்லை. காரணம், இந்தச் சபையின் மூலம் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களும், பல்வேறு கலைத்துறை, ஆசிரியர் துறை போன்றவைகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஜெயித்து வரும் நிலையை உருவாக்கியிருக்கின்ற காரணத்தினால் அவர்கள் இந்தச் சபையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படலாம். அதற்காக ஒரு மேலவை தேவையில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

வீணான செலவுகளை முன்னிட்டு மேலவையை நீக்கலாம் என்று கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

***திரு. இ. தமிழரசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மேலவையை நீக்க கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

இங்கே நம்முடைய மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபொழுது அறுபது ஆண்டுகளாக மேலவை இருந்தது என்றும், அதனுடைய பாரம்பரியத்தைப் பற்றியெல்லாம் சொல்லி, இப்படிப்பட்ட மேலவையிலேதான் பாரம்பரியம் மிக்க கம்யூனல் ஜி.ஓ., வகுப்புவாரி பிரதிநித்துவம் கொண்டு வரப்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள். ஒப்புக்கொள்கிறேன். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் மூத்த தலைவர்களிலே ஒருவராக இருந்த எங்கள் சமூகப் பெருந்தலைவர் இராவ்பகதூர் தாத்தா இரட்டைமலை சீனிவாசன், சுவாமி ஜெகஜானந்தா போன்றவர்கள், உதகை முனுசாமி பிள்ளை போன்றவர்கள், ஆகிய அவர்களெல்லாம் இருந்து வகுப்புவாரி பிரதிநிதித்துவம் மேலவையிலே வரவேண்டும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட மேலவையிலே இன்றைக்கு ஏழை எளிய மக்கள், தாழ்த்தப் பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் இடம் பெற முடியவில்லை. பலம் உள்ளவர்கள்தான் மேலவைக்கு வருகின்ற ஒரு நிலைமை இருந்து கொண்டு இருந்தது. எனவே தான், மேலவையிலே இட ஒதுக்கீடு முறை வந்தாகவேண்டும், பாராளுமன்றத்திலே கூட ஒரு திருத்தம் அதற்கு வந்தாக

வேண்டும் என்று நாங்கள் நீண்ட நெடுங்காலமாகவே இட ஒதுக்கீட்டு முறை வேலையிலே இருந்தாக வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருந்தோம்.

1967-லே தமிழ்நாட்டின் முதல்வராக அண்ணா அவர்கள் பொறுப்பை ஏற்றவுடன் பேரறிஞர் அம்பேத்கார் பிறந்தநாள் விழாவிலே பேசுகின்றபொழுது நாங்கள் கூட நாடாளுமன்ற மேலவையிலும், சட்டமன்ற மேலவைகளிலேயும் இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வருவதற்கு வற்புறுத்துவோம் என்று சொன்னார்கள்.

நீண்ட நெடுங்காலமாகவே எங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படாமலேயே இருந்து. பலம் உள்ளவர்களும், வலுவுள்ளவர்களும் அந்த மேலவையிலே இடம் பெற்றுக்கொண்டு இருந்த நிலைமை இருந்தது. எனவே இட ஒதுக்கீட்டு முறை இல்லாத அந்த மேலவையை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே ஒழிக்கக் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தைத் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக நான் மனப்பூர்வமாக, மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

சுதந்திரம் அடைந்தவுடன் பாபு ராஜேந்திரபிரசாத் அவர்களுடைய தலைமையிலே ஒரு அரசியல் நிர்ணயக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவிலே வரைவுக் குழுவின் தலைவராக பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் இருந்து அரசியல் நிர்ணயச் சட்டத்தை உருவாக்கினார்கள். அப்பொழுது மாநிலங்களிலே மேலவை வேண்டுமென்று ஒருசிலரும், வேண்டாம் என்று ஒரு சிலரும் கூறினார்கள் என்கிற நம்முடைய வரலாற்றை நம்முடைய முன்னவர் அவர்கள் சொன்னார்கள். பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் அப்பொழுது, அதற்கு ஒரு இறுதி முடிவாக, குழுவின் தலைவராக இருந்து தெளிவாகச் சொன்னார், மக்கள் மன்றம்தான் இருக்க வேண்டும். ஆட்சி நிர்வாக வசதிக்காக, மேலவை வேண்டுமென்று சட்டமன்றங்கள் கருதினால், அந்தச் சட்ட மன்றங்கள் தீர்மானங்கள் போட்டு, மேலவையை வைத்துக் கொள்ளட்டும். இல்லாவிட்டால், நீக்குகிற அதிகாரம் வைத்துக் கொள்ளட்டும் — இரண்டு அதிகாரங்களும் சட்டமன்றத்திற்கே இருக்கட்டும் என்று பேரறிஞர் அம்பேத்கார், அவர்கள் சொன்னார்கள். அந்த வகையிலேதான் இன்றைக்கு மக்கள் மன்றத்தின் மேலே அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிற புரட்சித் தலைவர், மக்கள் மன்றமே இருந்தாக வேண்டும், குறுக்கு வழியாக வருகின்ற மன்றம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை, மக்கள் மன்றத்திலே நம்பிக்கை வைத்திருப்பவர்கள் அதை அழித்தாக வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த முடிவை அறிவித்திருக்கிறார். இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே நான் பாராட்டி, வரவேற்று, அவை முன்னவர் முன்மொழிந்ததை வழிமொழிந்து அமர்கிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

[1986 மே 14

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களாலே மேலவை நீக்கப்பட வேண்டுமென்று அரசின் சார்பிலே கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். பொதுவாக, இந்த மண்டபமும் மன்றமும் சரித்திர பிரசித்திபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளை, பல்வேறு முடிவுகளை எடுத்திருக்கிறது. ஆனால், இதற்கு முன்னாலே இல்லாத அளவுக்கு இன்றைக்கு, அரசினாலே கொண்டு வரப்பட்ட இந்த அரசினர் தீர்மானம் தனித் தன்மை வாய்ந்தது என்பதை நான் முதலாவதாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

பன்னெடுங்காலமாக, தமிழகத்திலே, இயங்கி வந்த, சற்றேறக்குறைய 60 ஆண்டுகளுக்கு மேலாக இங்கே பணியாற்றி வந்திருக்கிற மேலவை, நீக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் அரசின் சார்பிலே மொழியப் பட்டிருகிறது. நான் பழைய நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கிறேன். நாட்டை வெள்ளையன் ஆண்ட காலத்திலே, மாண்டேக் செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் அடிப்படையிலே, 1919 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய சட்டத்தின் அடிப்படையிலே தான் லெஜிஸ்லேடிவ் கவுன்சில் என்ற மன்றங்கள் நிறுவப்பட்டன. அப்பொழுதெல்லாம் இந்தியா முழுமைக்கும் யுனிகேமரல் லெஜிஸ்லேச்சர் என ஒரே அவையாகத் தான் இருந்தனவே தவிர, இரண்டு அவைகள் இல்லையென்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். ஆனால், ஒரே அவையாக இருந்த தமிழக அவை கூட, ஒரு கால கட்டத்திலே இரண்டாவது அவை தேவையில்லையென்ற தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1932 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7, 8 நாட்களிலே ஒரு தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை ஆதரித்து 46 வாக்குகளும், எதிர்த்து 22 வாக்குகளும் கிடைத்து, அந்தத் தீர்மானம் நிறைவேறியது. அந்தத் தீர்மானம் என்ன தெரியுமா?

'It is resolved that in the conditions of this Province the constitution of Second Chamber was unnecessary and undesirable.'

எனவே, இரண்டாவது அவை என்பது தேவையல்லவென்று ஒரு தீர்மானம் இந்த மேலவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பொதுவாக, இங்கே வாதங்களைச் சொல்கிற நேரத்திலே, மேலவை ஏன்வேண்டுமென்று சொல்கிற கருத்தை எடுத்து வைக்கிற நேரத்திலே பட்டதாரிகள் பிரதிநிதிகள் அங்கே அங்கம் வகிக்கிறார்கள், ஆசிரியர்கள் பிரதிநிதிகள் அங்கே அங்கம் வகிக்கிறார்கள் என்ற ஒரு வாதம் சொல்லப்படுகிறது. நான் இங்கே

நம்முடைய அவையைப் பார்க்கிறேன், இந்த அவையிலே பட்டதாரிகள் இல்லையா ? குறிப்பு சொல்கிறது. 88-க்கும் அதிகமான பட்டதாரிகள் இந்த அவையிலே இருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்திலே ஆசிரியர்கள் பிரதிநிதிகள் அங்கே அங்கம் வகிக்கிறார்கள என்று சொல்லப்படுகிற நேரத்திலே, முன்பு ஆசிரியர்களாக இருந்தவர்கள், ஆசிரியர் சமுதாயத்திற்காகப் பாடுபட்டவர்கள இந்த அவையிலே இல்லையா என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்திலே, கல்வி அமைச்சராக இருக்கிற திரு. அரங்கநாயகம் அவர்களும் ஆசிரியராக இருந்து, அமைச்சராக உயர்ந்தவர். எதிர் வரிசையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கிற மாண்புமிகு திரு. அன்பழகன் அவர்கள் பேராசிரியராக இருந்தவர். இன்றைக்கும் நம்மாலே பேராசிரியராக அழைக்கப்படுபவர். ஏன், நான் அங்கம் வகிக்கிற காங்கிரஸ் கட்சியிலே கூட, அருமை சகோதரர் தங்கவேலு அவர்கள், ஆசிரியராக இருந்து, இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கின்ற நேரத்திலே, அதிலே, எந்த, எந்தப் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கிறார்களோ, அதே பிரதிநிதிகள்........

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இலக்கியச் செல்வர் குமரி அனந்தனும் நானும் கூட ஆசிரியராக வேலை பார்த்தோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அதைச் சேர்த்துக்கொள்வதிலே நானும் பெருமைப்படுகிறேன். ஆக, அவர்களுடைய பிரதிநிதிகள் இந்த அவையிலே இருக்கின்றார்கள். ஆனால், மேலவையிலே ஆசிரியர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் இன்னும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் பிரதிநிதிகள் அளித்து விடுவதனாலேயே, முழுமை பெற்று விடுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இங்கே சமுதாயத்திலே உழவர்களுக்கு, தொழிலாளர்களுக்கு, இன்னும் பலவேறு துறையிலே உறுப்பினர்களுக்கு அந்த மேலவையிலே அங்கம் இல்லையென்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். இன்னொன்றை சொல்ல விரும்பு

(பிற்பகல் 1-00)

கிறேன். 1937 ஆம் ஆண்டிலிருந்து இங்கே தமிழக சட்டமன்ற பேரவை எந்த தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புகிறதோ அந்த தீர்மானத்தை மேலவை நிறைவேற்றிவிடுகிறது. 12 சம்பவங்களைத் தவிர. ஆகவே, இங்கே கொண்டு வருகின்ற மசோதாக்களை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள். சில நேரங்களிலே கூட நான் பார்க்கிறேன். முன்பு காலையிலே சட்டப் பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாலையிலேயே சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்போதும்கூட முதல் நாள் இங்கே

சட்டமன்ற பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மறு நாளே மேலவையிலே நிறைவேற்றுகின்ற காட்சியை பார்க்கின்ற நேரத்திலே, மேலவைக்கு அனுப்பாமலே சட்டமன்ற உறுப்பினர் 40 பேர் கொண்ட ஒரு குழுவை உருவாக்கி, அந்த குழுவினிடம் அந்த மசோதாவையோ, தீர்மானத்தையோ கொடுத்து, சட்ட முன்வடிவை கொடுத்து அதன் மூலம் ஆய்ந்து, தெளிந்து, ஆராய்ந்து பின்னாலே கொண்டுவருவதுகூட பொருத்தமாக இருக்கும் என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். இந்த நேரத்திலே ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். 1955 ஆம் ஆண்டு சிம்லாவில் இருக்கக்கூடிய தமிழ்நாடு சட்டமன்றங்களுடைய, தலைவர்களுடைய மாநாட்டில் தமிழகத்தின் சார்பிலே ஒரு எண்ணம் பிரதிபலிக்கப்பட்டது.

I quote—No Constitution. No institution will live for a long time unless it has a definite function to perform. The Second Chamber has no definite function to perform. It is quite unnecessary to have a Second Chamber. The First Chamber itself could consider and pass legislation. For a State like Madras a Second Chamber was unnecessary, It is a waste of money. The same questions as were put in the Assembly were asked in the Council. In every Second Chamber in India the speeches are the same and the subjects discussed are the same. What then was the point in having a Second Chamber ?

இங்கே பேரவையிலே எந்த கேள்வியை கேட்கின்றோமோ, எந்த வாதங்களை எடுத்துரைக்கின்றோமோ, எந்த பேச்சுக்களை பேசுகின்றோமோ, அவைகள் மேலவையிலே பிரதிபலிக்கின்ற காரணத்தினால் இரண்டாவது அவை தேவையா என்ற கருத்து 30 ஆண்டுகளுக்கு முன்னாலே எழுப்பப்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்கிறோம். அதே நேரத்திலே இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் 164-வது பிரிவிலே 2-வது உட்பிரிவு என்ன சொல்கிறது என்றால் The Council of Ministers shall be collectively responsible to the Legislative Assembly of the State அமைச்சரவை பேரவைக்கு கட்டுப்பட்டதே அன்றி மேலவைக்கு கட்டுப்பட்டதல்ல, எனவே, அமைச்சரவையை கட்டுப்படுத்த முடியாத ஒரு அவை எதற்கு என்ற வாதம் இன்றைக்கு எழுந்திருக்கிறது. அரசின் தீர்மானம் ஒன்று பேரவையிலே தோற்கடிக்கப்பட்டால் அரசு கவிழும் என்பதை நாம் அறிவோம். ஆனால் அதே நேரத்தில் மேலவையிலே அரசின் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டால் அரசு கவிழும் என்ற நிலை இல்லை என்பதை நாம் எண்ணிப் பார்க்கின்றோம். மேலவைக்குள்ள முக்கிய அதிகாரங்களில் ஒன்று பேரவையில் நிறைவேற்றப்பட்ட எந்த மசோதாவையும் மறு பரிசீலனைக்காக மேலவை அதனை பேரவைக்குத் திரும்ப அனுப்புகிறது. அரசியல் சட்டம் 200-வது ப்ராவிசோ படி Provided that the Governor may as soon as

possible after the presentation to him of the Bill for assent return the Bill if it is not a money Bill together with a message requesting that the House will reconsider the Bill. ஆக ஒரு தீர்மானத்தை திரும்ப அனுப்ப வேண்டுமானால், மறு பரிசீலனை செய்ய வேண்டுமானால் மேலவை பேரவைக்கு அனுப்ப வேண்டியதில்லை. இப்போதுள்ள அரசியல் அமைப்பு சட்டத்தின்படி மேதகு ஆளுநர் அவர்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. அவர் விரும்பினால் அந்த தீர்மானத்தை மீண்டும் பேரவைக்கு அனுப்பி, ஆய்ந்து, தெளிந்து, அந்த தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பதை நாம் எண்ணிப் பார்க்கிறோம். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மேலவையிலே பெரிய அறிஞர்கள், மேதகு வல்லுநர்கள் எல்லாம் அங்கம் வகித்திருக்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதையும் நான் எண்ணிப் பார்க்கிறேன். இந்தப் பேரவையிலே எப்படிப்பட்ட தலைவர்கள் எல்லாம் அங்கம் வகித்திருக்கிறார்கள். உழைப்பாலே உயர்ந்த உத்தம பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் இந்த பேரவையிலே அங்கம் வகித்திருக்கிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால் ஆந்திரகேசரி என்று அழைக்கப்படுகின்ற டி. பிரகாசம் இந்த அவையிலே அங்கம் வகித்திருக்கிறார்கள். முன்னாள் நிதியமைச்சராக இருந்த கோபால்ரெட்டி அவர்கள் இந்த பேரவையில் அங்கம் வகித்திருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ பெயர்களை என்னால் சொல்ல முடியும். டாக்டர் சுப்பராயன், டி. எஸ். எஸ். ராஜன், பெருந் தலைவர் பக்தவச்சலம், இந்தியாவினுடைய நிதியமைச்சராக இருந்த புகழ் பெற்ற சி. சுப்பிரமணியம் போன்றவர்கள் எல்லாம் இந்த அவையிலே அங்கம் வகித்திருக்கிறார்கள். பேரவை, மேலவை என்று சொல்லுகின்ற நேரத்தில் இரண்டு கருத்துக்களை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அறிவுச்சுடர் என்று அழைக்கப்படுகின்ற ஹரால்டு லஸ்கி என்பவர் It might be urged with justice that even in a federal State no real necessity for a second Chamber exists. சமஷ்டி ஆட்சியில் 2-வது அவை உண்மையாக தேவையற்றது என்பதை நீதி உணர்வோடு கூறலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அவரைப்போலவே சிந்தனை சிற்பியான French Philosopher Seiyes அவர்கள் ஒரு இடத்திலே சொல்லியிருக்கிறார்கள். Of what use will second chamber be? If it agrees with the Representative House it will be superfluous, if it disagrees, mischievous. இரண்டாவதாக அதனால் என்ன பயன்-பேரவையின் முடிவுகளை ஒட்டிப் போவதாக இருந்தால் மேலவை தேவையற்றது ; பேரவையின் கருத்துக்கு மாறுபடுமேயானால் அது குறும்புத்தனமானது என்ற கருத்தினையும் கூட அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே கூட மேலவை தேவையா என்ற சர்ச்சை வந்தபோது இதே அவையிலே கூட மாண்புமிகு உறுப்

பினர்கள் சொல்லியிருப்பதை நான் முன்னாலே இந்த அவையின் நடவடிக்கை குறிப்புகளிலே பார்த்திருக்கிறேன். திரு. செல்வ ராஜ் அவர்கள் ஒருமுறை சொல்கிறபோது அறிவாளியின் கருத் துத் தேவைப்படுகிறது நிர்வாகத்திற்கு என்று சொன்னால் மேலவையில் இடம் பெற்றுத்தான் கொண்டுவர வேண்டுமா, வெளியே இருந்து கூட அந்தக் கருத்தைச் சொல்லலாமே என்ற கருத்தை அவர்கள் ஒரு முறை சொல்லியிருக்கிறார்கள்.

நான் பெரிதும் மதிக்கிற பொதுவுடைமைக் கட்சித் தலைவராக இருக்கின்ற திரு. கலியாண சுந்தரம் அவர்கள் கூட இதே அவையில் 1962 ஆம் ஆண்டு பேசுகிறபோது சிக்கனம் தேவை என்று சொன்னால் மேலவை தேவை இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம் என்றும் பொதுத் தேர்தலுக்கு முன்பாக இந்தப் பிரச்சினைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள். நான் பெரிதும் மதிக்கிற உலக உத்தமர் தேசப்பிதா காந்தியடிகள் கூட இந்தக் கருத்துக்கு ஆதரவாக 1931 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் தேதி நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டில் சொல்லியிருக் கிறார்கள். அது பெரிய செய்தியாக இருக்கிற காரணத்தால் இதை மட்டும் நான் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

அவரைப் போலவே திரு. ஜின்னா அவர்களும் இந்தக் கருத் தினை ஆதரித்து இருக்கிறார்கள். இவற்றை மேலவை ஒழிப் பதற்கான விவாதங்களாக நான் எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன். அதே நேரத்தில் சமுதாயத்தில் மேலவை இருக்க வேண்டும் என்ற கருத்தினையும் இங்கே பலரும் எடுத்துப் பேசினார்கள். தமிழகத்தில் இருக்கின்ற மேலவையைப் பொறுத் தவரையில் 60 ஆண்டுக்கால பாரம்பரியம் உண்டு. தமிழகத் திற்கு என்று ஒரு பண்பாடு உண்டு. இந்தியாவில் இருக்கிற அவைகளிலே மூத்த அவையாக இந்த அவை இருந்து கொண்டிருக் கிறது. பல்வேறு முடிவுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறது. பெரிய தலைவர்கள் எல்லாம் இதிலே இருந்திருக்கிறார்கள் என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்தியாவில் கூட இன் றைக்கும் பீகார், மராட்டியம், உத்திரபிரதேசம், ஜம்மு காஷ்மீர், கர்நாடகம், தமிழகம் போன்ற மாநிலங்களிலே இந்த மன்றங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் இதே கருத்தை ஆதரித்து இங்கிலாந்தில் 1649 ஆம் ஆண்டிலும், ஐக்கிய அமெரிக்க நாட்டில் 1781 ஆம் ஆண்டிலும், பிரான்ஸ் போன்ற நாடுகளில் 1591 ஆம் ஆண்டிலும் கருத்துக்கள் பிரதிபலிக்கப் பட்டு இருக்கின்றன என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இப்படி இந்த இரண்டாவது அவை இருப்பதற்கான ஆதா ரங்கள் நிறைய இருந்தாலும் கூட மேலவை ஒழிப்பதற்கான காரணங்கள் நிறைய இருந்தாலும் தொடர்ந்து செயல்படுவதற் கான சில நியாயங்கள் இருந்தாலும் தீர்மானம் கொண்டுவரப்

1986 மே 14] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பட்டுள்ள இந்த சூழ்நிலை, காலம் ஏற்புடையதாக இல்லை என்பதை நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சொல்ல விரும்புகிறேன். எனவே அரசு சார்பில் கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் நாங்கள் எங்களைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லை என்பதைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பாக மேலவை கலைப்பு பற்றி இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானத்தையொட்டி எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள மாண்புமிகு அரசியல் கட்சியினுடைய தலைவர்கள் பலரும் தங்களுடைய கருத்துக்களை இங்கே சிறப்பாக எடுத்து வைத்திருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களும், பார்வர்ட் பிளாக் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு திரு. முத்துவேல் அவர்களும், குடியரசு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்களும் இந்தத் தீர்மானத்தை முழுக்க முழுக்க ஆதரித்து இதற்கு நல்லாதரவு தருகிற வகையில் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் சிறப்பாக வழங்கி இருக்கிறார்கள். இடையிடையே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் அரசினுடைய கொள்கை, போக்கு ஆகியவற்றைப் பொறுத்த வரையில் தம்முடைய எதிர்ப்பு உணர்வுகளைக் காட்டினாலும் கூட தீர்மானத்தைப் பொறுத்தவரையில் ஆதரிக்கிறேன் என்ற வகையில் எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். மற்றபடி எதிர் வரிசையில் உள்ள அரசியல் கட்சிகளிலே உள்ள தலைவர்கள் அத்தனை பேரும் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தருகிற வகையில் அவர்களுடைய உள்ளங்களை ஈர்க்க முடியவில்லையோ

(பிற்பகல் 1-10)

என்றுதான் நான் வருந்துகிறேன். ஆனாலும் கூட, அவர்கள் தங்களுடைய உணர்வுகளை இங்கேவெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதிலே வாதப் பிரதிவாதங்கள் என்ற முறையிலே இல்லை. பொதுவாக எதிர் வாதம் புரிகிறோம் என்ற தன்மையிலேயும் எடுத்துச் சொல்லவில்லை. இந்த தீர்மானத்தை கொண்டு வருகிற போதே நான் ஆரம்பத்திலேயே நிலைமைகளை குறிப்பிட்டு விளக்கினேன். இந்த தீர்மானத்தைக் கொண்டு வருவதன் காரணமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் பேரிழப்பு என்பதையும் நான் சொன்னேன். இப்போது சட்டமன்ற மேலவையில் அதிகமான அளவிற்கு உறுப்பினர்களைப் பெற்றிருப்பது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான். ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அதிகம்

இருந்தும் அதைக் கலைக்கிறோம் என்றால், அதனால் இழப்புக்கு ஆளாவது ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

இங்கேயுள்ள சட்டமன்ற மேலவை இந்தியாவிற்கே வழி காட்டியாக இருந்தது என்ற விவரத்தை எடுத்துச் சொன்னார்கள். அதிலே மாறுபட்ட கருத்துக்கள் இல்லை. சிறந்த அறிஞர்கள், வல்லுநர்கள், பல்வேறு துறைகளிலே சிறப்புப்பெற்றவர்கள், புகழ் பெற்றவர்கள், பெருமை பெற்றவர்கள் எல்லாம் மேலவையிலே இருந்திருக்கிறார்கள், பணியாற்றியிருக்கிறார்கள் என்பதற்கான காரண காரிய விளக்கங்களை மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். மற்றைய உறுப்பினர்களும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அவற்றையெல்லாம் நான் மறுக்கவில்லை அவை அத்தனையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

மேலவையிலே மட்டும், அல்ல, இந்த அவையிலேயே அப்படிப் பட்ட பெரியவர்கள், சிறந்தவர்கள், சான்றோர்கள், ஆன்றோர்கள் புகழ் பெற்றவர்கள், திறமை பெற்றவர்கள் அத்தனை பேரும் இருந்து பணியாற்றியிருக்கிறார்கள். என்பதற்குத் தேவையான காரண காரிய விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

மேலவை கலைக்கப்படுவதன் காரணமாக இந்த அவைக்கு அதிகமான பொறுப்புகள் ஏற்படுகின்றன என்பதையும் நாம் உணர்வோம். ஆக அந்த அவைக்கு பெருமை இருந்தது, புகழ் இருந்தது என்கிறபோது அந்த புகழும் பெருமையும் சேர்த்து இந்த அவை விளங்குகின்ற அளவுக்கு அந்த திறமையையும் புகழையும் பெற வேண்டிய கட்டாயத்திற்கும் இந்த அவை ஆளாகிறது. ஆகவே, நான் முன்பே எடுத்துச் சொல்லியது மாதிரி, காரண காரிய விளக்கங்களை எடுத்துச் சொல்லியபோது, தேவையினுடைய அடிப்படையிலும், தேவையின்மை என்ற அடிப்படையிலும் காணுகிறபோது, அரசு இதில் ஒரு முடிவுக்கு வந்து, இந்த தீர்மான வடிவிலே அதைக் கொண்டு வந்திருக்கிறது என்று காரணங்களை நான் எடுத்துச் சொன்னேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கிற போது கூட, ஆக இனிமேல் இங்கு வருவதற்கு வழி ஏற்படாதா என்பதைப் பற்றிச் சொல்லுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களும் குறிப்பிட்டார்கள். மேலவையிலே இடம் பெற்றிருக்கிற முக்கியமானவர்கள் கூட, மக்களுடைய நல் ஆதரவையும், நல்லெண்ணத்தையும், நன்னம்பிக்கையும், நன் மதிப்பையும் பெற்று இந்த பேரவைக்கு வருவதற்குக் கூட வாய்ப்பு இருக்கிறது என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு இருந்ததன் காரணமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட மேலவை என்று ஒன்று

இருந்ததன் காரணமாக, தென் சென்னை நாடாளுமன்ற தொகுதியிலே, நாடாளுமன்றத்திற்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், அதற்குப்பிறகு ஆட்சிப்பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போது, இந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் பொறுப்பை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்ட போது அவர்கள் இந்த மாநிலத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பை எப்படி ஏற்றுக் கொண்டார்கள் என்றால், 6 மாத காலத்திற்குள்ளாக, அந்த நபர் பேரவையிலோ, மேலவையிலோ உறுப்பினராக ஆக வேண்டும் என்ற விதியின் அடிப்படையில், பொதுமக்களின் ஓட்டுக்களைப் பெற்று வெற்றி பெற்று நாடாளுமன்றத்திற்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் மேலவையிலே உறுப்பினராக ஆவதற்கு வழி இருக்கிறது என்ற காரணத்தாலே, அங்கே உறுப்பினராக ஆன சூழ்நிலை ஏற்பட்டது.

மேலவை இல்லை என்றால் அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட கழக உறுப்பினர்களிலே, 139 பேர்களிலே யாரேனும் ஒருவர் தன்னுடைய சட்டமன்ற பேரவைத் தொகுதியை காலி செய்து அப்போது அந்த இடத்திலே கூட பேரறிஞர் அண்ணாவை நிறுத்தி வைத்து இந்தப் பேரவையின் உறுப்பிராக கொண்டு வருகின்ற அளவுக்கு நிலைமையை உருவாக்கி இருக்க முடியும். அதேபோன்று பெருந் தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக தேர்ந்தெடுத்தற்குப்பிறகு, அவர்களை இந்த அவையிலேயே இருக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக குடியாத்தம் தொகுதியிலே நிறுத்தி வைத்து பேரவையிலே இடம் பெறச் செய்வதற்கான சூழ்நிலையை அவர்கள் பெற்றார்கள்.

ஏன் நான் அதைக் குறிப்பிடுகிறேன் என்றால், சிறந்த புகழ் பெற்றவர்கள், பெருமை பெற்றவர்கள், அறிவும் ஆற்றலும் பெற்றவர்களை இடம் பெறச் செய்ய முடியும் என்பதற்கு வழி வகை இருக்கிறது என்பதற்கான காரண காரிய விளக்கங்களைத் தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள கூறியதைப் போன்று, இளங்கலை பட்டதாரிகளுக்கு தனியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலை மேலவையில் இருந்தாலும் கூட இங்கே 15 உறுப்பினர்கள் இளங்கலை பட்டதாரிகள் இருக்கிறார்கள். அறிவியல் பட்டம் பெற்றவர்கள் ஏழு பேர்கள் இருக்கிறார்கள். வணிகவியல் பட்டம் பெற்றவர் ஒருவர் இருக்கிறார். முதுகலை பட்டதாரிகள 15 பேர்கள் இருக்கிறார்கள. ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் 3 பேர்கள் இருக்கிறார்கள். பொறியியல் பட்டதாரி ஒருவர் இருக்கிறார். சட்டக் கல்வி பெற்றவர்கள் 41 பேர்கள இருக்கிறார்கள். மருத்துவக் கல்வி பயின்றவர்கள் 8 பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே அந்தந்த துறைக்கு பிரதிநிதித்துவம் அளிக்கக் கூடிய அளவிற்கு வாய்ப்பு அறவே அற்றுப் போய் விடுமென்று நாம் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை

யென்பதையும், இந்த அவையிலே கூட ஆற்றல் மிக்கவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக் காட்டத்தான் இவைகளை குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல இப்படிப்பட்ட கருத்துக்கள் அடிக்கடி வந்து போகுமென்பதற்கு உதாரணத்தை எடுத்துச் சொல்கிற போது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கும், மேலவை இருக்க வேண்டுமா, இருக்க வேண்டாமா என்பதிலே கருத்துக்கள் உண்டு. ஆகவே அந்த வகையில் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1968 ஆம் ஆண்டு இந்திய பாராளுமன்றத்தின் மக்களவையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொள்கிற போது 16-5-1968-ல் அப்போது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்த திரு. கந்தப்பன் அவர்கள் சொல்கிற போது கூட, மேலவை தேவையில்லை என்ற கருத்தை சொல்கிற போது—அப்போது மேற்கு வங்க மேலவை தேவையில்லை என்று தீர்மானம் கொண்டு வந்து ஒப்புதலுக்கு வைக்கப்பட்ட நேரம்.

"Therefore now it is right for the Government to accept the unanimous resolution of the Government of West Bengal"

என்று சொல்லிவிட்டு,

"We have still an Upper Chamber in our State"

என்று சொல்லிவிட்டு

"the D.M.K. Policy all along has been that the Upper Chamber is superfluous"

என்று தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக இருந்த கந்தப்பன் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். ஏன் என்றால் திட்டவட்டமாக கொள்கையென்று நான் சொல்லவில்லை. அதிலே உறுப்பினர்களுக்கு கலைக்க வேண்டுமென்ற எண்ணமும் உண்டு. கலைக்க வேண்டாமென்ற எண்ணமும் உண்டு. மேலவை இருந்து விட்டுப் போகட்டும் என்றும் இருந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சமத் அவர்கள் சொன்னதைப் போல இருக்க வேண்டுமென்பதற்கும் இடமிருக்கிறது. இருக்க வேண்டாம் என்பதற்கும் இடமிருக்கிறது. ஆகவே இரண்டையும் முடிவு செய்வதற்கு அந்த முறையில் மாநில பேரவைக்கு விடப்பட்டிருக்கிறது என்பதைத்தான் முதலில் குறிப்பிட்டுக் கூறினேன்.

ஏற்கனவே சொன்னதைப் போன்று ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள குறிப்பிடுகிற போது சொன்னார்கள். எதிர்க் கட்சி ஆக்கம் பெற்றிருப்பதன் காரணமாக ஆளும் கட்சிக்கு

1986 மே 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஏற்பட்ட அதிர்ச்சி மற்றவற்றின் காரணமாக உள் நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறீர்கள் என்ற தன்மையில் அவர்கள சொன்னார்கள். ஆனால் நடைபெற்று முடிந்த தேர்தல்களின் தன்மைகளைச் சொல்கிறேன். ஓரளவிற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சரிவு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் முழுவதும் அடியோடு அற்றுப் போய்விடவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கான காரண காரிய விளக்கங்களை கண்டுபிடித்து அதை சரிப்படுத்த வேண்டியது எங்களுடைய பொறுப்பு என்பதை நான் உணர்கிறேன். 1980 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் சரிவு ஏற்பட்ட போதிலும் கூட, அது முடிந்து சட்டமன்ற தேர்தல்கள் நடைபெற்ற போது முழு அளவிற்கு வெற்றி பெற்று, இந்தப் பேரவையில் உட்கார்ந்து ஆட்சிப் பொறுப்பை பிடிக்கிற அளவிற்குதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொது மக்களிடம் நம்பிக்கையும், நன்மதிப்பையும் பெற்றது. அந்த அளவிற்கு புரட்சித் தலைவர் அவர்கள் மீது மக்கள நம்பிக்கையும், நன்மதிப்பும் வைத்திருக்கிறார்கள் என்பதை குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு பிறகு இடைத் தேர்தல் வந்த போது கூட மயிலாடுதுறையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வியுற்றது. அண்ணா நகரில் தோல்வியுற்றது. உடனே குறைந்து விட்டது என்று சொன்னதற்குப் பிறகு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொது மக்களுடைய நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெறுகிற அளவிற்குதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தது. ஆகவே இப்போது உள்ளாட்சி மன்றத் தேர்தலைப் பற்றிச் சொல்கிற போது, நானே சொன்னேன். மக்கள் மீது எந்தக் குற்றமும் இல்லையென்று சொன்னேன்.

(பிற்பகல் 1-20)

நானே பொதுப்படையாகவும் சொல்கிறேன், வெளிப்படையாகவும் சொல்கிறேன், எங்களிடத்திலே இருக்க வேண்டிய கட்டுப்பாடு இல்லாததன் காரணமாக, கட்டுப்பாடு சிறிது குறைந்ததன் காரணமாக போட்டிகள் வலுத்ததன் காரணமாக, ஓட்டுக்கள் பிரிக்கப்பட்டதன் காரணமாக வரவேண்டிய சில பல இடங்கள் வரவில்லை. அது எங்களுடைய குறைபாடு. பொது மக்களிடத்திலே அந்தக் குறைபாடு இல்லை. இதை நாங்கள் சீர்திருத்த வேண்டும். இது எச்சரிக்கை. நமக்கு பாடம் என்று கூட நான் அடிக்கடி சொல்லி வந்தேன். அந்த வகையில் காணுகிறபோது பேரூராட்சி மன்றங்களை மட்டும் எடுத்துக் கொண்டாலும் கூட அனைத்திந்திய அண்ணா தி.மு.க. 120 இடங்களையும், காங்கிரஸ் 89 இடங்களையும், ஆக கூடுதலாக, அதற்குப் பிறகு வந்தது 25 என்றும், ஆக மொத்தம் 234 இடங்கள் என்று

சொன்னால்,—அனைத்திந்திய அண்ணா தி.மு.க., காங்கிரஸ் கூட்டணிக்கு 234 என்றால்—திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு 218 இடங்களும், சுயேச்சைகள் 156 இடங்களையும் பெற்றிருக்கின்றன. ஆகவே இந்த பேரூராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் இந்தக் கூட்டணியைப் பொறுத்த வரையில், அரசியல் கூட்டணியே வேண்டாம், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியும் வேண்டாம், அனைத்திந்திய அண்ணா தி. மு. க. கூட்டணியும் வேண்டாம், ஆங்காங்கு இருக்கிற லோக்கல் நிலைமைகளைக் கண்டறிந்து பார்த்தால், சுயேச்சைகள் மட்டும் 156 இடங்களில் வெற்றி பெறுகின்ற நிலைமை ஏற்பட்டது என்றால், அரசியல் கட்சிகளுடைய கொள்கை, கோட்பாடுகளை விட, லோக்கலிலே இருக்கிற தன்மைகள் அதிகமாக வேலை செய்து இருக்கின்றன என்பதை எந்தத் தரப்பிலே உள்ளவர்களும் நன்றாகக் காணலாம்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி சேர்ந்து 204 இடங்களையும், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி 151 இடங்களையும், சுயேச்சைகள், பிற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 25இடங்களையும் பெற்று இருக்கின்றனர். அதைப் போல நகராட்சி மன்றங்களை எடுத்துக் கொண்டால், அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகம், காங்கிரஸ் கூட்டணி 22 இடங்களையும் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி 70 இடங்களையும், இதர கட்சிகள், சுயேச்சைகள் 5 இடங்களையும் பெற்றிருக்கின்றனர். கட்சிச் சின்னங்களோடு நிறுத்தி வைக்கப் பட்டவர்கள் என்று கணக்கிடுகின்ற போது, 1,003 இடங்களில் அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகம், காங்கிரஸ் கூட்டணி 460 இடங்களிலும், திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணி 439 இடங்களிலும், சுயேச்சைகள், பிற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 204 இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், பாதிக்கு மேலே இருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே பொது மக்களுடைய ஆதரவை அடியோடு இழந்து விட்டோம் என்றோ, மக்களுடைய நம்பிக்கையைப் பெற முடியாத சூழ்நிலை என்றோ—அந்த நிலை வருகின்ற அருப்புக்கோட்டைத் தேர்தலிலேயும் சரி, வருகின்ற நெல்லைத் தேர்தலிலேயும் சரி, பொது மக்களுடைய நிலை எப்படி இருக்கும் என்பதை மக்கள் காண்பிக்கத் தான் போகிறார்கள், அதிலே எங்களுக்கு உறுதிப்பாடு இருக்கிறது. (மேசைத் தட்டும் ஒலி)—அதைப் பொறுத்து இந்தப் பிரச்சனை இல்லை என்பதை நான் கூறிக் கொள்கிறேன்.

பல்வேறு காரண காரிய விளக்கங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் எடுத்துச் சொல்லியதற்கு நான் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே அரசியல் அமைப்புச் சட்டம் கொண்டு வந்த போது கூட இந்த மேலவை

வேண்டுமா, வேண்டாமா என்று காரசாரமாக விவாதம் நடைபெற்றபோது, அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குகின்ற பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருந்த டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்கள்—மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டதைப் போல—அவர்களும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அங்கே சொல்லுகின்ற போது—

"....All that we are doing by this Constitution is to introduce the second Chamber purely as an experimental measure. We have not, by the Draft Constitution, given the second Chamber a permanent place, we have not made it a permanent place, we have not made it a permanent part of our Constitution. It is a purely experimental measure, as I said, and there is sufficient provision in the present Art·304 for ge·ting id of the second Chamber...."

என்று தெளிவாக டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதனுடைய தமிழாக்கம் "அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் நாம் செய்யக் கூடியவைகள் எல்லாம் ஒரு சோதனை செய்து பார்க்க நினைத்து இரண்டாவது அவையை அறிமுகப்படுத்தப்படுவது தான். நகல் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் அது, இரண்டாவது அவைக்கு நிலையான இடத்தை ஏற்படுத்தவில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தில் நிலையான ஒரு கூறுபாடாகக்கூட நாம் அதை அமைக்கவில்லை. அது முழுக்க முழுக்க ஒரு சோதனை செய்து பார்க்கும் ஒரு ஏற்பாடாகும். நான் முன்பே கூறியது போன்று இரண்டாவது அவையை அகற்றிவிடுவதற்கு போதுமான அளவில் விதி வகுக்கப்பட்டு இருக்கிறது" என்று தான் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையிலே தான் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அந்த அடிப்படையிலேதான் இங்கேயும், நான் முதலிலே எடுத்துச் சொன்ன மாதிரி, அந்த உணர்வுக்கு ஏற்பட்டு இருக்கிற தன்மையை எடுத்துச் சொன்னேன். அந்த உணர்வு தான் தெளிவுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. அந்த தெளிவினுடைய அடிப்படையிலேதான் அரசு முடிவு எடுத்து இந்தத் தீர்மானத்தை அவையிலே கொண்டு வந்து இருக்கிறது. அதை இந்த அவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று மீண்டும் அவையை வேண்டி கேட்டுக் கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. தீர்மானம் அவையின் முடிவுக்கு வைக்கப்பெற வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 169 (1)ன்படி இந்தத் தீர்மானம

ஏற்றுக்கொள்ளப்படுகிறதா என்று அறிய வாக்குப் பதிவு செய்யப்பட வேண்டும். பேரவையின் வாக்குகளை அறிய 'எண்ணிக் கணிக்கும்' முறையைப் பின்பற்ற வேண்டும். எனவே, தற்பொழுது பேரவைச் செயலாளர் அழைப்பு மணியை அடிப்பார்.

(அழைப்பு மணி இரண்டு நிமிடங்கள் அடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நுழை வாயில்கள் அனைத்தையும் மூடும்படி உத்தரவிடுகிறேன். அவையின் அனுமதியுடன் அவை அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(நுழை வாயில்கள் அனைத்தும் மூடப்பெற்றன).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் சார்பாக மாண்புமிகு நிதி அமைச்சர் முன்மொழிந்த கீழ்க்கண்ட தீர்மானத்தை அவையின் முடிவுக்கு விடுகிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி :—

'' அரசியலமைப்புச் சட்டத்தின் 169-வது உறுப்பின் (1)-வது கூறின்படி, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கப்பட வேண்டும் (abolished) என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானிக்கிறது. ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, வாக்குகள் எண்ணிக் கணிக்கப் பெற்றன.

ஆதரித்தோர்	136
எதிர்த்தோர்	25
நடுநிலை வகித்தோர்	ஒருவரும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் மொத்த உறுப்பினர்களில் பாதிக்கு மேலும், இன்று அவையில் வாக்கெடுப்பின் போது வாக்களித்தவர்களில் மூன்றில் இரண்டு பாகத்திற்கு மேலும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளபடியால், தீர்மானம் அவையால் நிறைவேற்றப்பட்டது என்று அறிவிக்கிறேன்.

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆதரித்தோர்.

1. திரு. துரை கோவிந்தராசன்.
2. மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்).
3. திரு. இ. அன்பழகன்
4. திரு. மு. ஆறுமுகம்.
5. திரு. க. வே. கந்தசாமி
6. திரு. பி. முசிறிப்புத்தன்
7. திரு. வே. இரா. ஜெயராமன்
8. திரு. இரா. அரிக்குமார்
9. திரு. பொ. அன்பழகன்
10. திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி
11. திரு. எச். ஜி. ஆறுமுகம்
12. திரு. மு. ஆனந்தன்
13. திரு. கோ. இரகுபதி
14. திரு. எம். வி. இரத்தினம்
15. திரு. செ. இரத்தினவேலு
16. திரு. ஆர். இராசமாணிக்கம்
17. திரு. எல்ல இராசமாணிக்கம்
18. திரு. எப். எம். இராசரத்தினம்
19. திரு. எம். இராசரத்தினம்
20. திரு. ப. ந. இராமச்சந்திரன்
21. டாக்டர் கே. பி. இராமலிங்கம்
22. திரு. கி. எத்திராசன்
23. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்
24. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
25. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
26. மாண்புமிகு திரு. க. இராசாராம்
27. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்
28. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்
29. மாண்புமிகு திரு. தா. வீராசாமி.
30. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி
31. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்
32. மாண்புமிகு திரு. த. இராமசாமி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

33. மாண்புமிகு திரு. எ. அருணாசலம்
34. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்
35. திரு. இரா. சண்முகம்.
36. டாக்டர் கே. சமரசம்
37. திரு. க. இரா. சின்னராசு
38. திரு. கு. அ. செங்கோட்டையன்
39. திரு. ப. தனபால்
40. திரு. இரா. தாமரைக்கனி
41. திரு. துரை ராமசாமி.
42. திரு. கே. ஆர். கணபதி
43. திரு. பி. கந்தசாமி
44. திரு. சோ. கலிதீர்த்தான்
45. திரு. வி. இரா. கிருஷ்ணசாமி
46. திரு. ஜி. கிருஷ்ணராஜ்
47. திரு. கே. குப்புசாமி
48. திரு. எம். அண்ணாதாசன்
49. திரு. ச. சங்கரலிங்கம்
50. திரு. என். சண்முகம்
51. திரு. எம். சண்முகையா பாண்டியன்
52. திரு. மு. சந்திரசேகர்
53. திரு. தா. சாமிக்கண்ணு.
54. திரு. அ. சிவக்குமார்
55. திரு. எம். சிவக்குமார்
56. திரு. சி. சிவப்பிரகாசம்
57. திரு. மு. சின்னக்குழந்தை
58. திரு. வே. கு. சின்னசாமி
59. திரு. மா. சின்னராசு
60. திரு. சி. சுப்புராயர்
61. திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்
62. திரு. வி. சுப்பிரமணியன்
63. திரு. செ. செம்மலை
64. திரு. கே. பி. கே. சேகர்
65. திரு. க. சோலைராசு
66. திரு. சைதை சா. துரைசாமி
67. திரு. சா. ஞானசுந்தரம்

1986 மே 14]

68. திரு. மு. தங்கமணி.
69. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்
70. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து
71. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
72. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
73. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு
74. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்
75. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்
76. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி
77. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்
78. திருமதி இரா. சரோஜா
79. திருமதி பி. லட்சுமி
80. திருமதி பா. வளர்மதி
81. திரு. கே. உச்சி
82. திரு. கே. பி. நாச்சிமுத்து
83. திரு. சை. பட்டாபிராமன்
84. திரு. அ. பாலுசாமி
85. திரு. இரா. முத்தையா
86. திரு. இரா. சா. முனிரத்தினம்
87. திரு. மு. ஜான் வின்செண்ட்
88. திரு. செ. தங்கராசு
89. திரு. தமிழ்மணி
90. திரு. துரை அன்பரசன்
91. திரு. எஸ். பி. துரைராசு
92. திரு. க. நரசிம்ம பல்லவன்
93. திரு. ப. மு. நரசிம்மன்
94. திரு. பு. கோ. நாராயணன்
95. திரு. பா. ந. பரமசிவம்
96. திரு. த. பழனி
97. திரு. கா. செ. பழனிச்சாமி
98. திரு. மு. பாண்டுரங்கன்
99. திரு. பாப்பா சுப்பிரமணியன்
100. திரு. ச. பாலகிருஷ்ணன்
101. திரு. வி. பாலகிருஷ்ணன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

102. திரு. க. பாலசுப்பிரமணியன்
103. திரு. எஸ். பாலசுப்பிரமணியன்
104. திரு. கே. பாலாஜி
105. திரு. ஏ. பாலுச்சாமி
106. திரு. ஆ. பிரேம்குமார்
107. திரு. எஸ். புருசோத்தமன்
108. திரு. அ. பெரியசாமி
109. திரு. தெ. பெருமாள்
110. திரு. கோ. பெருமாள் பிள்ளை
111. டாக்டர் அ. பொன்னுசாமி
112. திரு. தி. நா. கோ. அ. மனோகரன்
113. திரு. யு. பி. மாதையன்
114. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி
115. திரு. செ. மாதவன்
116. திரு. எஸ்.என். இராசேந்திரன்
117. திரு. இரா. அருணாசலம்
118. திரு. கோ. வீரய்யன்
119. திரு. கே. முத்துவேல்
120. திரு. த. மாரிமுத்து
121. திரு. மு. மாரிமுத்து
122. திரு. ஜே. ஹேமச்சந்திரன்
123. திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்
124. டாக்டர் த. முகம்மது சலீம்
125. திரு. ம. நா. ராமஜெயம்
126. திரு. கூடலூர் இ. வி. வேலு
127. திரு. கு. தமிழரசன்
128. திரு. கு. வடிவேல்
129. திரு. என். விஜயபாலன்
130. திரு. வே. குப்புசாமி
131. திரு. அ. வெங்கடாசலம்
132. திரு. டி. எம். வெங்கடாசலம்
133. திரு. சு. ஜெகதீசன்
134. திரு. ஜி. கே. பிரான்சிஸ்
135. திரு. கு. ரமணி
136. திரு. வி. பி. சிந்தன்

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

எதிர்த்தோர்.

1. திரு. பொ. உத்திராபதி
2. திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்
3. டாக்டர் தே. குமாரதாஸ்
4. திரு. கு. சுப்பராயன்
5. திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்
6. திரு. ஆர். செங்காளியப்பன்
7. திரு. செ. ஆறுமுகம்
8. திரு. அ. செல்வராசன்
9. திரு. ப. பொன்னுரங்கம்
10. திரு. ம. ஆபிரகாம்
11. திரு. வி. தே. இராசு
12. திரு. சோ. மா. இராமச்சந்திரன்
13. திரு. ஆ. நடராசன்
14. திரு. பரிதி இளம்வழுதி
15. திரு. அ. பிரணவநாதன்
16. திரு. மா. மணிமாறன்
17. திரு. அ. மலர்மன்னன்
18. திரு. மா. மீனாட்சிசுந்தரம்
19. திரு. பொன் முத்துராமலிங்கம்
20. திரு. எஸ். ரெத்தினராஜ்
21. திரு. க. அன்பழகன்
22. திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்
23. திரு. சு. பாலன்
24. திரு. அ. ரகுமான்கான்
25. திரு. மு. இராமநாதன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–41 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

மாலை 4–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஐ) கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர் கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளை தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன்.

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 44/1986) * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தச் சட்டம் இந்த அவையிலே நிறைவேற்றப்படுகிற நேரத்திலே கடுமையான எதிர்ப்புக்கு ஆளாக்கப்பட்ட சட்டம் இது என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இந்தச் சட்டத்தின்படி இன்று கள்ளச்சாராயக் காரர்களையும், குண்டர்களையும் கைது செய்து நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் அரசுக்கு வழங்கப்பட்டிருக் கிறது. ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே இதை அமுல் படுத்தக் கூடிய நேரத்தில், இதை பொதுமக்களுக்கு எதிராகப் பயன்படுத்தலாம் என்ற ஆபத்து இருக்கிறது என்பது அன்றையதினம் சுட்டிக்காட்டப்பட்டது. இன்று இந்தச் சட் டத்தைப் பொறுத்த அளவிலே நீதி மன்றத்திற்குப் போய் பல நபர்கள் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் செல்லாது என்ற முறையிலே நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு வந்து, பலரை விடுதலை செய்ய வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டதற்குப் பிறகு அரசு தற்போது ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

இந்தத் திருத்தச் சட்டம் என்ன என்றால், அதாவது ஒருவர் மேல் ஏற்கனவே கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் பொறுத்தவரையில் அத்தகைய ஆணையானது, அக்காரணங் களில் ஒன்றோ அல்லது பலவோ தெளிவாக இல்லை, உளதா யில்லை, தொடர்புடையதாயில்லை, அத்தகையவர்களோடு சம்பந்தப்பட்டதாக இல்லை என்ற முறைகளில் உள்ள கார ணங்களால் ஒன்று அல்லது பலர் மேல் எடுக்கப்பட்டு இருக்கக் கூடிய நடவடிக்கை செல்லாது என்று நீதி மன்றம் தீர்ப்பு

*1986 ஆம் ஆண்டு மே 13-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

கொடுத்து இப்படி கைது செய்யப்பட்ட பலர் விடுதலை செய்யப் பட்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக என்ன திருத்தம் கொண்டு வந் திருக்கிறார்கள் என்றால்.

"....such order shall not be deemed to be invalid or inoperative merely because one or some of the grounds is or are—(i) vague, (ii) non-existent, (iii) not relevant, (iv) not connected or not proximately connected with such person, or (v) invalid for any other reason whatsoever...."

ஏற்கனவே இந்தச் சட்டத்திலே கொண்டு வந்து இருக்கக் கூடிய இந்த திருத்தத்தைப் பார்க்கும் போது 1952-ஆம் வருடத்திலே

Preventive Detention Act.

கொண்டு வரப்பட்டு, உயர்நீதிமன்றம்

Preventive Detention Act.

என்பதால் மக்களுடைய அடிப்படையான சில உரிமைகள் பாதிக் கப்படுகிறது என்று தீர்ப்பு கொண்டு வந்த உடனே அந்த தீர்ப்பின் அடிப்படையில் பலர் விடுதலை செய்யப்பட்டு உடனே அவர்கள் அரசு என்ன செய்தார்கள் என்றால் அந்தச் சட்டத்தை திருத்தி விடுதலை செய்யப்பட்டவர்களை மீண்டும் கைது செய்தார்கள். அப்படிப்பட்ட ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கையிலே அன்று ஆட்சிப் பொறுப்பில் இருந்த அரசுகள் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தார்களோ அந்த முறையில் உள்ள நடவடிக்கையை இந்த அரசு எடுக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒருவர் அவர் உண்மையான குற்றவாளியாக இருந்தால் அவரை கைது செய்யக்கூடிய நேரத்திலே அந்த உண்மையான குற்றத்தைச் சொல்லி அந்த உண்மையான குற்றத்தை குறிப்பிட்டு அவரை கைது செய்ய முடியும். ஆனால் இன்று நாம் என்ன பார்க்கிறோம் என்றால், சில காவல் துறை அதிகாரிகளின் விரோதத்திற்கு காரணமானவர்களை, காவல் துறை அதிகாரிகளுக்கு வேண்டியவர்கள் சுட்டிக்காட்டியவர்களை அரசியல் விரோதம் காரணமாக பலர் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்து கொண்டு இருக்கக்கூடிய நிலையை நாம் பார்க்கிறோம். கைது செய்ததற்குப் பிறகு அதை நியாயப்படுத்துவதற்காக சில குற்றச்சாட்டுக்களை தயாரித்து அந்த ஆட்கள் மேல் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் கொடுப்

பதன் காரணமாக இப்படிப்பட்ட Vague, non-existent, not relevant போன்று காரணங்கள் அமைகின்றன. இப்படிப்பட்ட காரணங்களால் தான் பலர் உயர்நீதிமன்றம் சென்று, உச்ச நீதிமன்றம் சென்று விடுதலை ஆகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் ஒருசில உதாரணத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மணலியில் கோத்தாரி என்ற ஒரு கம்பெனி இருக்கிறது. அவர்கள் ஆயிரக்கணக்கான காண்டிராக்ட் தொழிலாளர்களை வைத்து வேலை செய்கிறார்கள். அங்கே காண்டிராக்டர்கள் அவர்களுக்கு நியாயமான ஊதியம் கொடுப்பது இல்லை. மற்ற வசதிகள் செய்து கொடுப்பது இல்லை. அவர்கள் சங்கத்தை வைத்து இருக்கிறார்கள். சங்கத்தை வைத்துக் கொண்டு காண்டிராக்டர்கள் செய்யும் அயோக்கியத்தனத்தை எதிர்த்துப் போராடினார்கள்.

(மாலை 4—10).

இந்தக் கான்ட்ராக்ட்காரர்கள், பணம் உள்ளவர்கள் மற்ற முறையில் வசதி உள்ளவர்கள் காவல் துறையைச் சுவாதீனப் படுத்தி, அந்த கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டு, அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களின் கருத்துகளையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது ஒரு தொழிற் சங்கத்தின் செயலாளரை இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள். அவர் நீதிமன்றம் சென்று அந்த நீதிமன்றம், அவரைக் கைது செய்தது சரியல்ல என்று விடுதலை செய்துள்ளது.

அதே அரசியல் காரணமாக தேர்தல் காலத்தில் என்னுடைய தொகுதியில் ஒருவரை காவல்துறையில் உள்ள சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு பணத்தைக் கொடுத்து, அவர் மேலே ஒரு கேசை ஜோடித்து, அவரை இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்து அவர் உயர்நீதிமன்றம் சென்று விடுதலை பெற்று வந்தார். அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர், இந்தச் சட்டத்தின் கீழே வேறு எந்தவிதமாகவும் செய்யமுடியாத காரணத்தால், பூட் லெக்கர் என்ற முறையிலே அந்தச் சட்டத்தின்கீழே கேஸ் ஜோடித்து உள்ளே தள்ளி விட்டார்கள்.

அதேபோன்று வில்லிவாக்கம் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் ஒருவர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளருக்கு தீவிரமாக வேலை செய்த காரணத்தால், காவல் துறையைச் சார்ந்தவர்கள் அவர் மேல் இந்தச் சட்டத்தின் கீழ் வழக்கு போட்டு அவரை உள்ளே தள்ளினார்கள். அவரும் உயர்நீதிமன்றம் சென்று விடுதலை வாங்கி வந்தார். ஆகவே இந்தச் சட்டத்தை இப்படி காவல் துறையைச் சார்ந்தவர்கள் சில அரசியல் கட்சிகளினுடைய தூண்டுதல் காரணமாக, அல்லது வசதி உள்ளவர்கள் தூண்டு

தல் காரணமாக, அல்லது ** ** ** என்ற காரணத்தினாலே இப்படி உள்ளே தள்ளக்கூடிய முறையிலே அவர்கள் மேலே குற்றச் சாட்டுகளைச் சொல்லி, அவர்கள் நீதிமன்றத்திற்குப்போய், அந்த அளவிலே அவர் களுக்கு நியாயம், நீதி கிடைக்க வகை செய்யக் கூடிய முறையில் இன்றைக்கு நிலைமை இருந்துசொண்டிருக்கிறது. நான் ஏன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், உண்மை யில் குற்றவாளி என்றால் அவர் செய்த உண்மையான குற்றத் தைச் சொல்லி, அவர் மேலே வழக்குத் தொடுத்து, உள்ளே தள்ளுவதில் பிரச்சினை இல்லை, சிரமம் இல்லை, இப்படி ஆதாரம் இல்லாத முறையில் எந்தவிதமான நியாய மும் இல்லாத முறையில் பல நபர்கள் மேலே காவல்துறை அதிகாரிகளினுடைய சிபாரிசைக்கேட்டு, இந்த அரசு இப்படிப் பட்ட சட்டத்தின் கீழ் கைது பண்ணுவதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும், உள்ளே தள்ளுவதற்கும் நடவடிக்கை எடுப் பதன் விளைவாகத்தான் இப்படிப்பட்ட சட்டத் திருத்தங் களைக் கொண்டுவரக்கூடிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

இங்கே ஒரு அட்வைசரி கமிட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அட்வைசரி கமிட்டியைப் பொறுத்தவரையில், இருக்கக் கூடிய தகுதியைப் பொறுத்தவரையில், அவர்களுடைய யோக்கிய தாம்சங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. இந்த அட்வைசரிக் கமிட்டியிலே இருக்கக் கூடிய அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகளுக்கு ஒப்புதல் தரக் கூடிய அளவிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான ரெப்ரசன் டேஷனைக் கூட பரிசீலித்து நடவடிக்கை எடுத்து, நியாயம் வழங்கக் கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் ஏற்கனவே சுட்டிக்காட்டினது போன்று, எங்க ளுடைய மாவட்டத்தில் வீயனூர் என்ற ஊரில் சர்க்கிள் இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்பட்டு, ஒருவர் இந்த அட்வைசரி கமிட்டிக்கு ரெப்ரசன்டேஷன் கொடுத்தார். அட்வைசரி கமிட்டி அந்த ரெப்ரசென்டேஷனை நியாயமான முறையில் பரிசீலிக்கவில்லை. அப்படி நியாயமான முறையில் அவர்கள் பரிசீலித்திருந்தால் அதே நபர் உயர்நீதிமன்றம் போய் விடுதலை வாங்கக்கூடிய அந்த நிலைமை ஏற்பட் டிருக்காது. ஆகவே இன்றைக்கு அட்வைசரி கமிட்டியானது, சரியான முறையில் அவர்களிடம் என்ன முறையில் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பொறுப்புக்கேற்ற முறையில் அவர்களுடைய ரெஸ்பான்ஸிபிலிட்டிக்கு உட்பட்டு, அவர்கள் செயல்படாமல் இருப்பதன் காரணமாகத்தான்

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 மே 14

இப்படிப்பட்ட சட்ட திருத்தங்களைக் கொண்டுவரக் கூடிய தேவை இந்த அரசிற்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நான் என்ன சொல்லவிரும்புகிறேன் என்றால், கிரிமினல் ஜூரிஸ் புருடன்சுடைய முதல் ஏற்பாடு கூட இவ்வாறு கைது செய்யப் பட்ட 1,000 குற்றவாளிகள் தப்பித்தாலும் கூட பரவா யில்லை, ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது. அப்படி ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது, என்று இன்றைக்கு தெள்ளத் தெளிவாக கிரிமினில் ஜூரிஸ்ப்ரூடென்சி னுடைய பேசிக் அப்ரோச் இருக்கின்ற நேரத்தில் நாம் என்ன பார்க்கிறோம் என்றால், இந்தச் சட்டம் * *

அமைந்து கொண்டிருக்கிறது என்பதற்கு பல எடுத்துக்காட்டு கள் சொல்லமுடியும்.................. (குறுக்கீடு)......

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச் சந்திரன் அவர்கள் * * * * * * என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை நீக்க உத்தர விடுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : நீக்கக்கூடாது.............. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்பெசிபிக்காக சொன்னால் பரவாயில்லை. ஸ்வீப்பிங்காகச் சொல்லக்கூடாது. **(குறுக்கீடு) அது கூட ரூல் 93-ன் கீழ் நோட்டீஸ் கொடுத்து, பெர்மிஷன் வாங்கவேண்டும். (குறுக்கீடு).

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு கொண்டு போகலாம் என்று சொல்லக்கூடாதா, கொண்டு போய்விட்டது என்று சொன்னால் தானே தவறு?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறிப்பிட்டுச் சொன்னால் பிரச்சனை இல்லை. * * * என்றால் அது தவறு. (குறுக்கீடு).

திரு. கு. ரமணி : அப்படியானால், அந்த நடவடிக்கைகளைப் பற்றி எதுவுமே இந்த மன்றத்தில் பேசமுடியாது. அந்த நிலைக்கு போய் விடும்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

1936 மே 14]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்வீப்பிங்காகப் பேசினால் எந்தத் துறைக்கும் பாதுகாப்பு இல்லாமல் போய்விடும். (குறுக்கீடு).

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : ஒரு அதிகாரியினுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னால்தான் நோட்டீஸ் தர வேண்டும். (குறுக்கீடு) ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், அவரே கன்னியாகுமரி மாவட்டத்தில் வீயனூர் என்ற இடத்தில்—— அந்த ஆள் பெயரைச் சொல்லவில்லை. ஒருவரைக் கைது செய்து, குண்டாஸ் ஆக்ட்டிலே கேஸ் போட்டு, உயர்நீதிமன்றம் அவரை விடுதலை செய்து இருக்கிறது.

The Home Department is in possession of the order issued by the High Court.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி சொல்வது சரியா ? (குறுக்கீடு) மெம்பர்கள், மினிஸ்டர்ஸ், ஆபீசர்ஸ் மூன்று பேரும் வருகிறார்கள். ரூல்–93–ன் படி நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

திரு. மா. சின்னராசு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதிலே, அவர் விடுதலை செய்யப் பட்டு விட்டதாலேயே உயர்நீதிமன்றத்தினாலே விடுதலை செய்யப்பட்டு விட்ட காரணத்தினாலேயே அவர் குற்றவாளி இல்லை என்பதைப் போல் பேசுகிறார். வழக்கறிஞர், அவருக்குத் தெரியும். எல்லா வழக்குகளும் 'கன்விக்‌ஷனிலே' முடிவது கிடையாது. அதைத் தடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டமே கொண்டு வரப்படுகிறது. விடுதலை செய்த காரணத்தினாலேயே பொய்யான வழக்கு, பொய்யான குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்று சொல்கிற வாதம் சரியானது அல்ல என்பதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன்.

(மாலை 4–20)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : 'The Home Department is in possession of the order passed by the High Court'. ஹைகோர்ட்டிலே தெளிவாக, அவரை குண்டாஸ் ஆக்டிலே கைது செய்தது சரியல்ல என்று தெளிவாகச் சொல்லப்பட் டிருக்கிறது. எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால் ஏற்கனவே இரண்டு மூன்று எக்சாம்பிள்ஸ் சொல்லியிருக்கிறேன். இப்படித் தனிப்பட்ட அதிகாரிகளின் விரோதத்திற்குக் காரண மானவர்களையும், சில கட்சிகளின் விரோதத்திற்குக் காரண மானவர்களையும் எல்லாம் இன்றைக்கு இந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்து கஷ்டப்படுத்துகின்ற நிலைமை இருந்து கொண்

டிருக்கின்றது. அதிலேயிருந்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கும் வகையில், சார்ஜ் செய்தது சரியல்ல என்றால் விடுதலை கிடைக்கக்கூடிய அந்த வாய்ப்பைக் கூட இன்றைக்கு மூடிவிடுகின்ற முறையில் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பது சரியல்ல. சரி, அந்த முறையில் இருந்தால், அந்த நபர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு மாற்று நடவடிக்கைகளையாவது அரசு எடுத்திருக்க வேண்டும். ஆனால் அப்படி நடவடிக்கை எடுக்கவில்லை. ஏற்கனவே இந்தச் சட்டத்தின் மூலம் கைது செய்தவர்கள் மீது வழக்குகளைப் போட்டு அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய், நீதிமன்றம் அது சம்பந்தமாகக்கொடுக்கப்பட்டிருக்கின்ற தீர்ப்பின் அடிப்படையில அவர்களின் நிலைமையை பாதுகாத்துக் கொள்வதற்கு உள்ள பாதுகாப்பு ஷரத்துக்களை இந்தச் சட்டத்தில் கொண்டு வந்திருக்கவேண்டும். ஆனால், அதற்குப் பதிலாக இன்றைக்குக் காவல் துறை அதிகாரிகளினுடைய தவறான நடவடிக்கைகளின் காரணமாக உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்யாமல், ஏதேனும் காரணம் சொல்லி அவர்கள்மேல் சார்ஜ் கொடுக்கின்ற நேரத்தில் அதை (Non-existent, irrelevant) அந்த மாதிரி நிலை ஏற்படுவதால் அவர்கள் இன்றைக்குக் கஷ்டப்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது. அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்துகொள்வதற்கான வாய்ப்பை மூடும் முறையில் இந்தச் சட்டம் அமைகிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை ஆதரிக்க முடியாது என்று சொல்லி இந்தச் சட்டத்தை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு என்று ஒரு திருத்தச் சட்டத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் போனதடவை கொண்டு வரும்பொழுது இந்தச் சட்டம் யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எதிர்பார்த்து ஆதரித்தோமோ அதற்கு மாறாக, இந்தச் சட்டம் இன்றைக்கு அவர்கள் மேல் பாயப்படவில்லை. அதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட துறையில் இருக்கும் அதிகாரிகளுக்கு வேண்டப்பட்டவர்கள், வேண்டப்படாதவர்கள் ஆகியவர்களுக்கு அல்லது ஏதோ ஒரு வகையில் அரசியல் ரீதியாகவோ அல்லது வேறு மூலமாகவோ இருக்கும் சக்திகளை மட்டும் ஆக்குகின்ற அளவிற்குத் தான் இந்தச் சட்டத்தை இன்றைக்குக் காவல்துறை மூலம் பயன்படுத்துகிறார்கள் என்று

1986 மே 14] [திரு. பொ. உத்திராபதி]

தான் நான் சொல்ல விரும்புகிறேன். ஒன்றிரண்டு உதாரணங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். ஆனால், கள்ளச் சாராயத்தை ஒழிக்கவேண்டும். இன்றைக்குச் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட சாராயக் கடைகளுக்கு அரசு மூலம் கொடுக்கப்படும் கம்பெனி சாராயம் என்று கொடுக்கப்படும் அந்த பாட்டில்களை குறிப்பிட்ட மணி நேரம் வரையில் தான் விற்க முடிகிறது. ஆனால் சாராயக் கடைகளைப் பொறுத்த வரையில் திறந்த நேரத்திலேயிருந்து மறுநாள் காலை வரையிலேயும் தொடர்ந்து விற்றுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் அந்தச் சாராயம் எங்கேயிருந்து வருகிறது? குறிப்பாகச் சொல்லப்போனால், தம்பிக்கோட்டை, பட்டுக்கோட்டை தாலுக்கா, இந்தப் பகுதிகளில் நூறு, நூற்றைம்பது அடுப்புகளை வைத்துக் கொண்டு ஏதோ ஒரு பெரிய தொழிற்சாலை மாதிரி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். வேன்களின் மூலமாக ஆந்திராவிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இதெல்லாம் அதிகாரிகளுக்குத் தெரியாதா ? அவர்களுக்குத் தெரியாமல் எப்படி கள்ளச் சாராயம் கரைபுரண்டு ஓடுகின்றது தமிழகத்தில், இனத இல்லை என்று அதிகாரிகள் மறுக்க முடியுமா ? மறுக்க முடியாது. இப்பொழுது சர்வ சாதாரணமாக ஆகிவிட்டது. ஒரு காலத்தில் எனக்குத் தெரிந்து எங்கேயோ ஒரு இடத்தில், அதுவும் பெரிய காட்டிற்குள்ளே இரண்டு மூன்று பானைகளை வைத்துக் கொண்டு திருட்டுத்தனமாகத் தயாரித்து விற்பார்கள். ஆனால் இப்பொழுது அந்த நிலைமை கிடையாது. வேன் வேனாக அனுப்பப்படுகிறது, ஆந்திராவிற்குப் போகிறது என்று சொல்கிறார்கள். இதெல்லாம் எப்படிப் போகிறது ? தமிழகத்தை விட்டு ஆந்திராவிற்குப் போகிறது என்று சொன்னால் அதிகாரிகளெல்லாம் என்ன செய்துகொண்டு இருக்கிறார்கள்? எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழித்து, உழைக்கும் மக்கள் கம்பெனி சாராயத்தைக் குடித்து அவர்களது உடம்பு நல்ல முறையில் இருப்பது தேவை, கள்ளச்சாராயத்தைக் குடித்துவிட்டு வயிற்று வலி, வயிற்றில் புண் என்று ஏற்பட்டு, உழைக்கும் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமென்றுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம்.

ஆனால் அதற்கு மாறாக இன்றைக்கு கம்பெனி சாராயம் ஒரு கடைக்கு 10 பாட்டில் என்று சொன்னால், இந்த கள்ளச் சாராயம் 500 பாட்டில்கள் வந்து இறங்குகிறது. அதிகாரி வந்து இரவு 2 மணிக்கு பார்க்கிறார். என்னமோ பண்ணுகிறார்கள். மறுநாள் காலையில 9 மணிக்கு பார்த்தால் லைட் போட்டுக்கொண்டு அதைத்தான் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். கள்ளச் சாராயத்தை தடுக்கின்ற சட்டத்தை அமுல்படுத்துகின்ற அதிகாரிகள் அமுல்படுத்த வேண்டும் என்ற அந்த நீண்ட தூரப்

பார்வையோடு செயல் பட்டால்தான் அந்த கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியுமே தவிர, இல்லாவிட்டால் அமைச்சர் எத்தனை திருத்தங்கள் கொண்டு வந்தாலும், நாங்கள் எவ்வளவுதான் பேசினாலும் அவைகள் எல்லாம் ஏட்டளவிலே இருக்குமே தவிர கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு பயன்படாது. இந்த கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு அதிகாரிகள் மனம் உவந்து, வருமானத்தை கணக்கிடாமல் சட்டத்தை நிலைநாட்ட வேண்டும் என்று என்றைக்கு நினைக்கிறார்களோ அன்றைக்குத் தான் இந்த நல்ல நோக்கம் நிறைவேற முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அதே போல இந்த விபச்சாரத் தொழில், இதை நடத்துகின்றவர்கள் யார்? இவர்களை பிடித்து குண்டர்கள் ஆக்ட்டில் போடுவதாகச் சட்டம் கொண்டு வந்தோம். கணவனை இழந்து, 5, 6 பெண்களை வைத்துக்கொண்டு குடும்பத்திலே எந்தவிதமான வருமானமும் இல்லாத காரணத் தால் விபச்சாரம் என்ற தவறு செய்கிறார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் ஒரு செய்தி பார்த் தோம். கூலி வேலை செய்யும் பெண், கணவன் தன்னை பாது காக்கவில்லை என்பதால் குழந்தையை விட்டு விட்டு வேலைக்கு சென்ற பெண் 500 ரூபாய்க்கு கடத்தப்பட்டு இருக்கிறாள். கடத்தப்படும் போது அந்தப் பெண் ஒரு கேணிக்குள்ளே இறங்கி தப்பித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் மனு கொடுத்திருக்கிறாள். இத்தகைய செய்தி வந்திருக்கிறது. நமக்கு பெயர் எல்லாம் வேண்டாம். யார் கடத்துகிறார்கள்? சாதாரண ஆட்கள் கிடையாது. பெரிய புள்ளிகள், பெரிய வசதி படைத்தவர்கள் இப்படிப்பட்ட வேலை செய்கிறார்கள். இவர்கள் நாட்டினுடைய துரோகிகள். இவையெல்லாம் அதி காரிகளுக்குத் தெரியாதா? என்ன நடவடிக்கை எடுக்கிறார் கள். பிடிக்கிறார்கள். ஆனால் கொஞ்ச நாள் கழித்து பார்த் தால் அந்த வழக்கு மாயமாக மறைந்து போகிறது. எப்படி மறைந்து போகிறது? சம்பந்தப்பட்ட துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் குற்றத்தைக் களைந்து குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுப்பதற்கு பதிலாக இந்த சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு, தன்னுடைய குடும்பத்தை பாதுகாப்பதற்குப், தனக்கு வேண்டியவர்களை பாதுகாப்பதற்கும் வேண்டாதவர் களை இதன் மூலமாக பழிவாங்குவதற்கும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்தில் இது பல இடங் களில் நடந்துகொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு என்ன வழி என்று பார்க்க வேண்டும். சட்டத்தை ஆதரிப்பது, ஆதரிக்காதது ஒரு பக்கம் இருக்கட்டும். இந்தச் சட்டத்தை எந்த நோக்கத்திற்காக போட்டோம்? பெரிய குடும்பத்தில் பெண்கள் இருக்கிறார்கள். சில பேர் விரும்புகிறார்கள். சில பேர் விரும்புவதில்லை. உடனே என்ன பண்ணுகிறார்கள்

என்றால் சம்பந்தப்பட்ட துறையினரை விட்டு அவர்களை மிரட்டுகிறார்கள். இதையெல்லாம் பார்த்தால், இவர்கள் இந்தச் சட்டத்தை நிலைநாட்டுவதற்கு பதிலாக தவறாக உபயோகப்படுத்துகிறார்கள். நான் எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. ஒரு சில அதிகாரிகள் இதை தவறாக உபயோகிக்கிறார்கள். அரசியல்வாதிகள் நாணயமானவர்கள், அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்ற அந்த தோரணையில் நான் சொல்லவில்லை. ஒரு சில அதிகாரிகள் இந்தச் சட்டத்தை பாதுகாப்பதற்கு பதிலாக தவறாக உபயோகப் படுத்துகிறார்கள். இந்தத் தவறிலிருந்து அவர்களை பாதுகாக்க வேண்டும். அதே போல நில ஆக்கிரமம் பொறுத்தவரையில் சாதாரண ஆட்கள் தேவையான இடத்தை ஆக்கிரமித்தால் உடனே நடவடிக்கை எடுக்கிறார்கள். இன்றைக்கு போக்கு வரத்துத் துறையிலே எவ்வளவோ விபத்து நடக்கிறது. பெரிய வசதி படைத்தவர்கள் அக்கிரமம் பண்ணுகிறார்கள். பெரிய அதிகாரிகளுக்கு இது தெரியாமல் இல்லை. யார் என்ன என்று தெரியும். ஆனால் நடவடிக்கை எடுப்பது கிடையாது.

(மாலை 4-30)

அதனால்தான் நான் சொல்கிறேன், இந்தக் கள்ளச்சாராயக் காரர்கள், விபசாரம் செய்பவர்கள், நில ஆக்கிரமிப்புச் செய் பவர்கள் ஆகியவர்களைப் பொறுத்தவரையில் கொண்டு வரப்பட் டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். இதிலே தவறு இல்லை. ஆனால் இந்தச் சட்டத்தைப் பயன் படுத்தி தவறான காரியத்தைச் செய்கிற நிலைமை இருக்கிறது. தவறான காரியங்களைத் தடுத்து நிறுத்துவதற்காகத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வருகிறார்கள். அந்த நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய அளவுக்கு எதிர்காலத்தில் எந்த அளவுக்குக் கொண்டு வர வேண்டுமோ அந்த அளவுக்குக் கொண்டு வர வேண்டும். தமிழ் நாட்டில் மோசமான காரியங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டு மென்று நான் கேட்டு அமர்கிறேன்.

*திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் நாயகன் அவர்களே, இன்றைய தினம் இங்கே கொண்டுவரப் பட்டிருக்கின்ற கள்ளச் சாராயக் காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிர மிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காகக் கொண்டு வரப்பட் டிருக்கின்ற இந்த சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன்.

இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிறப்பாகக் குறிப்பிட்டிருந்தாலும் கூட நான் எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் சிலவற்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். தமிழக மகளிரிடம் ஆசை வார்த்தைகளைக் காட்டி, வேலைகளில் சேர்ப்பதாகச் சொல்லி, திரைப் படங்களிலே நடிக்க வைப்பதாகச் சொல்லி கிராமத்துப் பெண்களைக் கூட்டிக் கொண்டுபோய் வெளி மாநிலங்களில் விற்றுவிடுகிற காட்சியைப் பார்க்கிறோம். சில இடங்களில் சில மாவட்டத் தலைநகரில் விற்று விடுகிற காட்சியையும் பார்க்கிறோம். சில நேரங்களில் கணவன்மார்கள் கூட இது போல் விற்றுவிடுகிற செய்தியையும் நாம் பார்க்கிறோம். ஒரே ஆடவர் பல்வேறு பெண்களைத் திருமணம் செய்து கொண்டு அந்தப் பெண்களை விற்றுவிடுகிற நிகழ்ச்சிகளையும் பார்க்கிறோம். இந்தச் சட்ட முன் வடிவின் மூலம் விபசாரத்தைச் செய்கிற பெண்களுக்குத் தண்டனை கொடுக்கிற சூழ்நிலையை விட அதற்கு உடந்தையாக இருக்கிற ஆண்கள் மீதும், இடையிலே இருக்கிற தரகர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து கடுமையாக அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

விபச்சாரத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் பலர் செல்வந்தர்களாக மாறி மேல்நிலையில் இருக்கின்ற அதிகாரிகளைக் கூட கையகப்படுத்துகிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். இந்தக் கொடுமையைத் தமிழகத்திலிருந்து அறவே களைய வேண்டும்.

மருந்துச் சரக்குக் குற்றவாளிகள் என்ற பெயரில் அரசு மருந்துகளைத் திருடுவது, கலப்பட மருந்துகளைத் தயாரித்தல் போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள். உயிர்ப்பு அற்ற மருந்துகளைக் குழந்தைகளுக்குக் கூட கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதன் காரணத்தால் அகால மரணம் ஏற்படுகிற சூழ்நிலைகள் எல்லாம் வருகின்றன. எனவே மருந்துகளைப் பொறுத்தவரையில் கலப்பட இன்னல்களைப் பற்றிச் சிறப்பாக ஆராய வேண்டும். இன்றைய தினம் பல்வேறு மருந்துகள் ஒரே பெயரில் இருக்கின்றன. ஒரு எழுத்தை மாற்றி பல்வேறு சூழ்நிலைகள் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். எனவே மருந்துக் கலப்படக்காரர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

நில ஆக்கிரமிப்பு என்பதைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தினுடைய நிலங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்கள் கோயில் நிலங்கள் எல்லாம் கூட, எல்லா கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகளால் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அவற்றைக் குறிப்பிட்ட விலைக்கு விற்றுவிடுகிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். சில பகுதிகளை குடிசைப் பகுதிகளாக மாற்றி வைத்துக் கொண்டு பல்வேறு இயக்கங்களின் கொடிகளை ஏற்றி வைத்து அரசியலாக ஏற்படுத்துகிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். இந்த நிலங்களை எல்லாம் அரசு எடுத்து

அவற்றுக்காக என்னென்ன செயற்குறிப்புத் திட்டங்களை வைத்திருக்கிறதோ அல்லது அலுவலகங்களுக்காக வைத்திருக்கிறதோ அல்லது குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் போன்றவற்றுக்காக வைத்திருக்கிறதோ அந்தப் பணிகளுக்கு பயன்படுத்த ஏற்பாடு செய்யப்படவேண்டும். அந்த நிலங்களை எல்லாம் அரசு கையகப்படுத்திக் கொள்கிற ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

நில ஆக்கிரமிப்பாளர்கள் என்று சொல்கிறபோது அரசுகூட சில நேரங்களில் சில நிலங்களை ஆக்கிரமித்து எடுத்து இருக்கிறது. குறிப்பாக மணலியில் ஆயிரம் ஏக்கர் நிலத்தை அரசு எடுத்து இருக்கிறது. ஆனால் அதிலே பயிரிட்ட விவசாயிகளுக்கு, கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கு மேற்பட்டு இருந்த விவசாயிகளுக்கு, அந்த டெனன்ஸுக்கு 75 சதவீதம் என்றும் நில உரிமையாளருக்கு 25 சதவீதம் என்றும் நீதிமன்றத்தில் தீர்ப்பளித்தார்கள். அரசு அந்த நிலச் சொந்தக்காரருக்கு 25 சதவீதப் பணத்தைக் கொடுத்துவிட்டது. மீதி 75 சதவீதம் நீதிமன்றத்தில் இருக்கிறது. அந்த மக்களைப் பொறுத்தவரையில அவர்கள் எல்லாம் சாதாரண ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட, அரிசன மக்கள்தான். அவர்களுக்கு அந்த பாக்கித் தொகை கொடுக்கப்படாமல் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே ஆக்கிரமிப்பாளர் என்று சொல்கிறபோது அரசு கூட ஒருசில நேரங்களில் ஆக்கிரமிப்பாளராக இருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஆகவே அந்த நில ஆக்கிரமிப்பாளர்கள் எந்த அரசியல்வாதியாக இருந்தாலும்கூட அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து தண்டிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு குண்டர்களின் சட்டத்தின் கீழ் பல்வேறு விதமான சமூக விரோத செயல்களை செய்பவர்கள் அவசியமாக அந்த குண்டர்கள் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும். இப்போதும் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் அப்படி குண்டர்கள் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுகிற போது, அவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்படுகிற போது வெளியிலே இருப்பதை விட மிகச் சிறப்பான உணவு, தனியாக மற்ற வசதிகள் எல்லாம் கொடுக்கப்படுவதால் அவர்கள் ஏதோ மாமியார் வீட்டில் இருப்பது போன்ற சூழ்நிலையில் இருந்து விட்டு வந்தேன் என்று சொல்லுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட சலுகைகளை அவர்களுக்கு அளிக்கக் கூடாது. அவர்களுடைய தண்டனை கடுமையாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு தனியாக எந்தவித சலுகையும் தருவதை குறைத்துக் கொண்டு, சிறைச்சாலை என்று சொன்னாலே கடுமையானது, கொடுமையானது என்று எண்ணுகிற அளவுக்கு தண்டனைக்கால சூழ்நிலை இருந்தால்தான் அவர்கள் அதுபோன்ற குற்றங்களை அடிக்கடி செய்ய மாட்டார்கள்.

அப்படிப்பட்ட குற்றங்களை திரும்பவும் செய்தால் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்வார்கள், அதனால் சமூக விரோத குண்டர்கள் உள்ளே போய் சுகமாக இருக்கலாம் என்ற நிலையை மாற்றி, அந்தச் சட்டங்களை கடுமையாக்குவதன் மூலமாக, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்து சரக்கு குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோருக்காக சமுதாயத்தில் வாய்ப்பு குறைக்கப்பட வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தில் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை மட்டும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதன் நோக்கம் என்ற அடிப்படையில் காரண நோக்கத்தைப் பற்றி குறிப்பிடுகிற நேரத்தில் மத்திய அரசினுடைய சட்டமான நேஷனல் செக்யூரிடி ஆக்ட் என்ற தேசீயப் பாதுகாப்புச் சட்டத்தில் சில மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள்.

அந்த மாறுதல்கள் நடைமுறை சங்கடங்களை நீக்குகிற காரணத்தாலே அதே மாறுதல்களை இந்தச் சட்டத்திலேயும் செய்து நடைமுறை சங்கடங்களை களைந்து விட வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருப்பதாக இங்கே கூறப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தம் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், நில ஆக்கிரமிப்பு செய்பவர்கள், தவறான மருந்துகளை கையாளுபவர்கள், குண்டர்கள், விபச்சாரத் தொழிலை நடத்திக் கொண்டிருப்பவர்கள் ஆகியவர்களின் நடவடிக்கைகளைத் தடுக்கும் இந்தத் தடுப்புக் சட்டத்தைப் பொறுத்த மட்டில் 5-வது பிரிவில், 5 ஏ என்ற புதிய பிரிவும் 14-வது பிரிவு (2)-வது உட்பிரிவில் புதிய மாறுதல்களையும் செய்து, இந்தச் சட்டத் திருத்த மசோதாவை இங்கே அரசு கொண்டு வந்திருக்கிறது.

அந்த 5 ஏ என்ற புதிய பிரிவில் என்ன தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றால் அதிகாரம் படைத்த, அதாவது தடுப்புக் காவல் சட்ட உத்தரவை போடுகின்ற அதிகாரியானாலும், அரசு ஆனாலும் ஒரு சில காரணங்களை சொல்லி, அந்த காரணங்களின் அடிப்படையில் ஒருவரை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழே கைது செய்து சிறையிலே காவல் நீடிப்புச் செய்ய வேண்டும் என்று உத்தரவு போடுவார்களேயானால், அதை நீதிமன்றம், அதில் கூறப்பட்ட காரணங்கள் தெளிவாக இல்லை, தொடர்புடையதாக இல்லை என்ற அடிப்படையில், அந்தக் காரணங்களை நிராகரித்து விட்டு அவர்களை விடுதலை செய்யுமேயானால் அப்படி விடுதலை செய்ய, வேறு பல காரணங்களையும் எண்ணிப் பார்த்துத்தான் அந்த அதிகாரி உத்தரவிட்டார்கள் என்ற

1986 மே 14] *[திரு. பொன். முத்துராமலிங்கம்]*

அடிப்படையில், அந்தக் காரணங்களை நிராகரித்துவிடுவதோடு மட்டும் அல்லாமல், அந்தப் புதிய காரணங்களின் அடிப்படையில் அவர்களுடைய தடுப்புக் காவல் நீடிப்புச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் பிரிவு 5 ஏ இந்த திருத்த மசோதாவிலே வழி செய்கிறது.

அதைப்போலவே 14வது உட்பிரிவு 2வது திருத்தம் என்ன வழி செய்கிறது என்றால், ஒருவர் தடுப்புக் காவல் சட்டத்திலே சிறையிலே அடைக்கப்பட்டு காலம் முடிந்து வெளியிலே வந்து விட்டாலோ அல்லது அரசே பார்த்து விடுதலை செய்து விட்டாலோ அல்லது நீதிமன்றங்களே பார்த்து பரிசீலனை செய்து பிறகு விடுதலை செய்யப்பட்டாலும் கூட, இந்தப் புதிய திருத்தத்தின் அடிப்படையில் புதியதாக காரணங்கள் ப்ரஷ்-பேக்ட்ஸ் (Fresh Facts) என்ற அடிப்படையில் புதிய தான காரணங்கள் இல்லாவிட்டாலும் கூட, புதிய சூழ்நிலைகள் உருவாகாவிட்டாலும் கூட, அரசோ அதிகாரியோ நினைத்தால் அவர்களை மீண்டும் இந்த காவல் தடுப்புச் சட்டத்தின் கீழே கைது செய்து அவர்களை சிறையிலே அடைக்கலாம் என்பதற்கான வழி வகைகளைச் செய்கிறது, என்கிற திருத்தங்களைத் தான் இந்த மசோதாவிலே நம்மால் பார்க்க முடிகிறது.

அந்த அடிப்படையில் பார்ப்பீர்களேயானால் இந்தச் சட்டம் நீதிமன்றங்களுக்கு செல்லுபவர்களுடைய கதவுகளையெல்லாம் சாத்திவிட்டு கோர்ட்டிற்கே செல்ல முடியாது என்ற நிலையில் தனி நபர் உரிமையை அடியோடு பறிப்பதோடு மட்டும் அல்லாமல், தன்னுடைய உரிமைக்காக நீதிமன்றத்திற்கு சென்றால், நீதிமன்றத்திற்குச் செல்லுகின்ற வழிகளைக் கூட சாத்துகின்ற சூழ்நிலையில், இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

(மாலை 4–40).

தனிநபர் பாதிக்கப்படுகிற நேரத்தில் அவருக்கு இருக்கிற ஒரே வழி நீதிமன்றத்திற்குச் செல்வது தான். அப்படி நீதிமன்றத்திற்குச் சென்று, என்னென்ன காரணத்திற்காக இவரை தடுப்பு காவல் சட்டத்தின் கீழே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் நீதிமன்றம் பரிசீலனை செய்து, விடுதலை செய்யப்பட்டதற்குப் பின்னால் புதிய காரணங்கள் இல்லாவிட்டாலும் மீண்டும் அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படலாம் என்பதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படி சட்டமன்றம் நீதிமன்றத்தினுடைய அதிகாரத்தை எடுத்துக் கொள்வதும், நிர்வாகத் துறை நீதிமன்றத்தினுடைய அந்த அதிகாரத்தை ஆக்கிரமிப்பு செய்வது என்பதும் நீதித் துறையின் மீது சேணத்தைப் பூட்டி, நிர்வாகத் துறையும் சட்டமன்றமும் சவாரி செய்வதற்

கான சூழ்நிலையைத்தான் உருவாக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே சட்டமன்றம் ஒரு சட்டத்தை உருவாக்குகிறபோது, ஒரு சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டு வருகிறபோது, ஜனநாயகத்தில் நீதியை வழங்குகின்ற நீதி மன்றங்களின் சுதந்திரத்தை எந்தக் கட்டத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் பாதித்து விடாமல் மிகக் கவனமாக சட்டத்தை உருவாக்க வேண்டும்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் ஏற்கனவே உள்ள மூலச் சட்டமே நீதிமன்றங்களின் உரிமைகளையும், தனி மனிதனுடைய உரிமைகளையும் பாதிக்கிறது என்று சொல்கிறபோது, இந்தத் திருத்தம் என்பது நீதிமன்றத்திற்கே போக முடியாத அளவிற்கு சூழ்நிலையை உருவாக்குகிறது என்ற காரணத்தால் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த சட்ட திருத்த மசோதாவிற்கு என்னுடைய ஆட்சேபணையைத் தெரிவித்து முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சார்பாக கொண்டு வரக்கூடிய இந்த சட்டத்தை வரவேற்று, நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

சாராயக் கடை, கள் ஆகியவைகளை ஒழித்த பிறகு, குதிரைப் பந்தயம் தடைப்படுத்தப்பட்ட பிறகு இப்படி பல்வேறு அம்சங்கள் நாட்டிலே நடைபெற்ற பிறகு, இதுபோன்ற சட்டங்களுக்கு அத்தியாவசியம் ஏற்படுகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சந்தர்ப்பவாத சாட்சியங்கள் சரியாக இல்லாத காரணத்தால் குற்றவாளியும் நீதிமன்றத்தில் விடுதலை ஆகிவிடுகிறான் என்பதை எத்தனையோ சான்றுகள் நமக்கு, இந்த நாட்டிற்கு எடுத்துச்சொல்லிக்கொண்டிருக்கிறது; ஆகவே திருடனே தானே திருந்துவதற்குக்கூட இந்தப் பிரிவுகள் 5—ஏ, 14 உட்பிரிவுகள் துணை செய்யும் என்ற வகையில் இந்தச் சட்டத்தை சட்ட மன்றத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்திருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விபச்சாரியை கைது செய்வதால், பத்தினி பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. குண்டர்களைக் கைது செய்வதால், தண்டிப்பதால் தொண்டர்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. குற்றவாளிகள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டால் நிரபராதிகள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. இங்கே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்கு விரிவான விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் நிலைமை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாட்டிலே எப்படிப்பட்ட

ஒழுக்கக்கேடுகள், சீர்கேடுகள் மலிந்திருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தப் பிரிவுகள் 5—ஏ, 14 உட்பிரிவு கொண்டு வருவதற்குக் காரணம் என்ன? கொலை செய்துவிட்டு கோர்ட்டிலே பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்கிற குண்டர்கள் அட்டகாசங்கள் அதிகமாக இருப்பதால்தான். அப்படிப்பட்ட நிலைமை எங்கேயிருந்து வந்தாலும் அதை ஒடுக்க வேண்டிய அவசியம் ஒரு அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. ஆகவே, '' ஏர் ஓட்டுகிறவன் இளைத்தவனாக இருந்தால் எருது மச்சான் முறை கொண்டாடும்'' என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில் அரசாங்கத்தின் நிர்வாகம், அமைப்பு முறை இருக்கக்கூடாது என்று கடுமையாக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இதைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

சமுதாய சிக்கல்கள், சீர்கேடுகளை, குற்றங்களை இங்கே நண்பர்கள் எல்லாம் பல்வேறு வகையில் படம் பிடித்துக் காட்டி இருக்கிறார்கள். இங்கே நாம் ஒவ்வொன்றாக பார்க்கிற போது நில ஆர்ஜிதம் என்று பார்த்தால் அரசாங்கத்தின் நிலம் ஆக்கிரமிப்பாளர் கையில் இருக்கிறது. கோவில் நிலம் ஆக்கிரமிப்பாளர் கையில் இருக்கிறது. ஏழை எளிய விவசாயிகள் பயிர் செய்ய வேண்டிய பல்வேறு இடங்கள் எல்லாம் குண்டர்கள் கையில், ஆக்கிரமிப்பாளர்கள் கையில் போய் இருக்கிறது.

அதனால், பல்வேறு இடங்களில் போக்குவரத்து, பாசனம், குடியிருப்பு இப்படி ஒரு நாட்டில் பல்வேறு வகையிலே அது தீங்கு செய்யக்கூடிய வகையில், இந்த நிலைமை இருக்கின்ற காரணத்தால், இந்தச் சட்டம் இந்த நேரத்தில் ஒரு அத்தியாவசியச் சட்டம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவேதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இங்கே குண்டர்களைப் பற்றியும், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள் பற்றியும், கள்ளச் சாராயம் பற்றியும், விபச்சாரத் தொழில் பற்றியும் இன்ன பிற பற்றியும் நண்பர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே கள்ளச் சாராயக் கடைகளை எடுத்துவிட்டபிறகு இங்கே கள்ளச் சாராயக் கடைகளுடைய நிலைமை என்ன என்பதைப் பார்க்கும் போது, அதனால் பல்வேறு அனுபவங்களை இந்த மதுவிலக்கு ரத்து செய்வதற்கு முன்பே, இந்த அரசு பெற்றிருக்கிறது. நாடு கடத்தப்படவேண்டும் என்றும் கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்றும் இப்படி எல்லாம் சொல்லியும் கூட, அது இந்த நாட்டிலே மதுவிலக்கை அமுலாக்க முடியாத அளவிற்கு, பல்வேறு சங்கடங்கள் வந்து, சரி குடிப்பதுதான் குடிக்கட்டும், நல்லதாகக் குடிக்கட்டும் என்று கொண்டு வந்துவிட்ட பிறகு, புனிதம் போய்விட்டது என்று அரசியல் கட்சிகள் எல்லாம் புலம்பி, சரி அப்படியானால்

புனிதத்தைக் காக்கிறோம் என்று சொல்லி, சட்டத்தை திரும்பக் கொண்டு வந்து, மக்கள் மத்தியிலே அதை அமுல்படுத்துகின்ற போது இருக்கின்றவர்களைக் குடிக்காமல் பார்த்துக் கொள்ளவும், இந்தச் சட்டம் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என்ற காரணத்தால்தான், இந்தச் சட்டத்தை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்து இருக்கிறார்கள், இந்த நேரத்திலே.

அதைப்போலவே மருந்துச் சரக்குக் குற்றம் என்று வருகிற போது, அதை ஏன் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், அந்த போதை போனால், வேறு ஒரு போதை தேவை என்று இந்த நாட்டுக்கு என்று சொல்லி, இளைஞர்கள் எல்லாம், சிறார்கள் எல்லாம் பல்வேறு வகையிலே சீரழிந்து போய் விட்டார்கள் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் இருந்து கொண்டு இருக்கின்றன, இந்தியத் துணைக் கண்டத்திலே. அது தமிழ் மாநிலத்திலே தோன்றாவிட்டாலும் கூட, வந்து போகக் கூடியவர்களால், சுற்றுலாவாசிகளால் பல்வேறு வகைகளிலே பல்வேறு மாநிலங்களோடு தொடர்பு கொண்டவர்களால் ஏற்பட்டு இருக்கின்ற, இதுபோன்ற சீரழிவுகளை எல்லாம் போக்க, ஆரோக்கியமான அரசை அமைக்கக்கூடிய வகையில் மக்களுக்குப் பாதுகாப்பைக் கொடுக்கக்கூடிய வகையில் இருக்கின்ற இந்தச் சட்டத்தை நான் வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய காரணங்கள் என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்து பேசியிருக்கிறார்கள். கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மற்றும் குடிசைப் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பாளர்கள் போன்று 5 வகையான பிரிவினர்கள், சட்டம் ஒழுங்கை தங்கள் கையில் எடுத்து, வன்முறையிலே ஈடுபட்டு, மக்கள் உள்ளத்திலே பீதியினை ஏற்படுத்தி அவர்களது நடவடிக்கை ஆங்கு வாழ்கின்ற மக்களுக்குப் பொது அமைதியை கெடுக்கக்கூடிய ஒன்றாக அமையுங்கால், அத்தகைய சமுதாய விரோதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென 1982 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்திற்குச் சில திருத்தங்கள் இன்றியமையாத் தேவை என வந்துவிட்ட காரணத்தால் இந்தத் திருத்தங்களை தற்போது நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, இத்தகைய திருத்தங்கள் கொண்டுவருகின்ற காரணத்தால் நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய வாய்ப்பே தடுக்கப்பட்டு விடுகிறது என்று கருத்துப் படச் சொன்னார்கள். அது முற்றிலும் தவறான ஒன்றாகும். ''நேசனல் செக்யூரிட்டி ஆக்ட்'' என்று சொல்லக்கூடிய 1980-ஆவது ஆண்டு மத்திய அரசினுடைய சட்டத்தைப் பொறுத்த

வரைக்கும் நடைமுறையிலே இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தியபோதே குற்றம் புரிகின்ற ஒருவர், சாதாரணக் குற்றத்தைப் புரிகின்றவராக இருந்தால் நடைமுறையில் இருக்கிற, ஜெனரல் லா, பொதுச் சட்டத்தினுடைய அடிப்படையில் நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய குற்றங்கள் அவர்களது நடவடிக்கைகள், பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு, மிக அதிகமான பங்கத்தை பொது அமைதிக்கு ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு

(மாலை 4-50)

அவர்களது நடவடிக்கை "If their activities are so grave as to affect adversely the public order...." என்ற நிலையிலே இருக்குமேயானால் அப்போதுதான் இந்தச் சட்டத்தை அவர்கள்மீது பயன்படுத்துகிறோமேயொழிய, அப்பாவிகள் மீதோ, நிரபராதிகள் மீதோ, பொது அமைதிக்கு, ஒட்டு மொத்த பொது மக்களுடைய அமைதிக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயும், பங்கம் ஏற்படாத வகையிலேயும்கூட இந்தச் சட்டம் யார் மீதும் பயன்படுத்தப்படவில்லை. பயன்படுத்தப்படவும் முடியாது என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன். National Security Act -இல் 2 திருத்தங்களைக் கொண்டு வந்து அந்த அடிப்படையிலே இந்தச் சட்ட திருத்தம் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு வந்ததற்குக் காரணம் நடைமுறையிலே சில குற்றவாளிகள்; அவர்கள் குண்டர்களாக இருக்கலாம்—அப்பாவி பெண்களைக் கடத்திச் சென்று அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குப் பீதியை ஏற்படுத்தி பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தக்கூடிய சமூக விரோதிகளாக இருக்கலாம். ஆனால், அத்தகையவர்கள், அத்தகைய தவறுகளில், ஈடுபடுபவர்கள் பல குற்றங்களைச் செய்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரிகள், அவர்கள் செய்கின்ற குற்றங்களில் எந்தக் குற்றத்தை விடுவது; எந்தக் குற்றத்தை எடுப்பது என்று கருதாமல், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இருவகையாக இதிலே நாம் பிரித்துப் பார்க்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். ஒன்று, ஒரு பெண்ணை அவன் கற்பழிக்கிறான்; யாருக்கும் தெரியாமல் அவன் ஒருவனை கொன்று விடுகிறான்; குத்தி விடுகிறான் என்றால் அதை மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத அளவிற்கு அந்தத் தனிப்பட்ட, பாதிக்கப்பட்ட நபருக்கு பாதிப்பு என்று வருகின்றபோது

The provisions of this Act won't be used.

ஆனால், அவன் தொடர்ந்து அத்தகைய பல குற்றங்களைச் செய்கின்றவனாக இருந்தாலோ அல்லது இதுபோன்ற கொடூரமான செயல்களில் ஈடுபடுகின்றபோது அந்தப் பகுதியிலே வாழ்கிற

பொதுமக்களுக்குப் பீதி, அச்சம் ஏற்படக்கூடிய அளவிற்கு அவனுடைய நடவடிக்கைகள் பயங்கரமாக இருக்கின்றபோதுதான் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது. அத்தகையவர்கள், 4, 5 தவறுகளைச் செய்கின்றபோது, என்னென்ன தவறுகளைச் செய்கிறார்களோ, குற்றவாளிகள் செய்கின்ற தவறுகளை, அதிகாரிகள், அந்தக் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒருவனை குத்தி விடுகிறான்—ஒருவன் தனிமையிலே இருக்கின்றான்—அவனை குத்தி விடுகின்றான் என்றால் அதனையும் குற்றமாகக் கருதுகிறபோது Technically the Court decides it cannot be taken as disturbance to public peace. என்ற முறையிலே, இந்த நோக்கம் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படக் கூடாது என்று தெளிவாக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால் "acting in any manner prejudicial to the public peace" என இருக்கிறது. அதனுடைய விளக்கம், பொதுவாக Drugoffender ஆக இருக்கலாம்; குண்டர்களாக இருக்கலாம், Immoral Traffic Act-இல் ஈடுபடுபவர்களாக இருக்கலாம், யாராக இருந்தாலும் சரி, their activities—if they are likely to adversely affect the public order is an offence. என இருக்கிறது. அப்படி பப்ளிக் ஆர்டரை பயங்கரமாகப் பாதிக்கக்கூடிய அளவுக்கு அவர்களுடைய நடவடிக்கை பயங்கரமாக இருக்குமேயானால், அந்தக் குற்றத்திற்கு மட்டுமே இந்தச் சட்டத்திலே கைது செய்யலாம் என்று இருக்கிற காரணத்தால், மற்றப்படி பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படாத தனிப்பட்ட நபரைத் தாக்கி, அழித்து, சித்திரவதை செய்கின்ற அந்தக் குற்றம் இந்தச் சட்டத்திலே வராது என்ற காரணத்தால் அப்படி இரு குற்றங்களையும், 3 குற்றங்களையும் சேர்க்கின்ற போது இந்த ஒரு குற்றம், பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துகிறது ; எந்த ஒரு குற்றம் தனி நபருக்கு மட்டும் பாதிப்பு தருகிறது என்பதை ஆய்ந்து நீதிமன்றம் தனி நபருக்கு பாதிப்பு தருகின்ற அந்தக் குற்றத்தை, அந்தக் குற்றவாளியை இந்தச் சட்டத்தின் கீழ் நீங்கள் கைது செய்யக் கூடாது என்ற முடிவை நீதி மன்றங்கள் எடுக்கிறது.

ஒருவன் அந்த தனிப்பட்ட நபருக்கு பாதிப்பு தருகின்ற அந்தக் குற்றச்சாட்டையும் செய்து பொதுமக்கள் மத்தியிலே பீதியை ஏற்படுத்தக்கூடிய, பயங்கரத்தை ஏற்படுத்தக்கூடிய பயங்கரமான குற்றச்சாட்டையும் செய்து, இரண்டு குற்றங்களையும் இணைத்து அவன் கைது செய்யப்படுவானேயானால் அப்படி ஒரு உண்மையான ஒரு குற்றச் சாட்டை இந்தச் சட்டத்துக்கு உட்பட்ட குற்றச்சாட்டை செய்த அவன் உட்படாத குற்றத்தையும் மற்ற சட்டத்தினுடைய குற்றத்தையும் செய்திருக்கிற போது அவனை இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யக் கூடாது என்ற "technically he has been released."

நிலை தமிழகத்தில் மட்டும் அல்ல பாரதத்தில் பல்வேறு மாநிலங்களிலும் National Security Act நடைமுறைப் படுத்தப்பட்ட போது அது நீதி மன்றங்களுடைய தீர்ப்பு வழியாக வந்தது. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் கூட இந்த Boot-leggers and Goondas Act ஐ நாம் 1982 லிருந்து நடைமுறைப்படுத்தி வருகிறோம். அப்படி 82 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தி பல்வேறு குற்றங்கள் புரிந்தவர்கள் மீது நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் நிரபராதிகள் இந்தக் சட்டத்திலே தண்டிக்கப்பட்டு விட்டார்கள்; தண்டிக்கப் பட்டு விடுவார்கள் என்ற அச்சத்திற்கு அவர்கள் செல்லக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காரணம் 1982ல் இந்தச் சட்டம் வந்ததிலிருந்து இதுகாறும் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்த கட்சியைச் சேர்ந்தவர், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்றோ அல்லது அதிகாரிகளுக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்றோ எந்த ஒருவர் மீதும் இதுகாறும் இந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை நான் உத்திரவாதமாக இந்த அவைக்குத் தர விரும்புகிறேன். நீதி மன்றத்திற்கு சில வழக்குகள் சென்று இருக்கின்றன. அந்த வழக்குகள் தோல்வி அடைந்து இருக்கின்றன. குற்றவாளிகள் தப்பித்து இருக்கிறார்கள். ஆனால் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக கைது செய்யப்பட்டார்கள் என்றோ அல்லது அதிகாரிகள் அதிகாரத்தை துஷ்பிரேயாகம் செய்தார்கள் என்றோ யாரும் இதுகாறும் அந்த வழக்கை தள்ளுபடி செய்யவில்லை. மாறாக on technicalities என்ற முறையில் நான் ஏற்கனவே சொன்னது போல் ஒருவர் கைது செய்யப்படுகிறார் என்றால் more than one ground அடிப்படைக் காரணங்கள் 3, 4 காரணங்கள் இருந்து இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு காரணமும், மற்ற சட்டத்தின் கீழ் ஒரு இரு காரணமும் இருக்குமானால் அவற்றை இணைக்கக் கூடாது என்ற முறையில் அவர்கள், கைதிகள் விடுதலை செய்யப்பட்டு வெளியே வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும் போது சொன்னார்கள், இந்தச் சட்டம் அப்பாவி மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி எந்த ஒரு சிறு உதாரணத்தையும் குறிப்பிட்டுச் சொல்வார்களானால் கண்டிப்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் யார் யார் என்பதை ஒரு ஆய்வின் மூலமாக நீங்கள் கண்டு அறியலாம். (குறுக்கீடு) I am not yielding now. Excuse me.

இதைச் சொல்வதற்குக் காரணம் இந்தச் சட்டத்திலே கைது செய்யப்பட்டு இருக்கிறவர்கள் 1982லிருந்து கிட்டத்தட்ட 1543 பேர். இதிலே, 15, 20 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். காரணம் இதில் பார்பட்சம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரைக்கும் இந்தச் சட்டம் பொது மக்களின் நலனைக் கருதியும், அப்பாவி மக்களின் நலன் கருதியும், சாதாரண மக்களின் நலன் கருதியும் சமூக விரோதிகளிடமிருந்து அவர்களுக்கு பாதுகாப்புத் தர வேண்டும் என்ற முறையில் பாரபட்சமின்றி பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள். அத்தகைய உத்திரவினை காவல் துறை அதிகாரிகளுக்கு இட்டு இருக்கிறார்கள்.

மணலியில் இந்தச் சட்டத்தை தவறான முறையில் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது தவறு. அந்த வழக்கில் கூட on a technical ground the case has been dismissed குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

அதைப் போலவே கன்யாகுமரி மாவட்டத்திலே காவல் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரி வேண்டும் என்றே செய்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வழக்கில் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்லுகிறபோது politically motivated என்று சொன்னார்கள். உத்திரவாதமாகச் சொல்லுகிறேன். அதை நீங்கள் எழுதிக் கொடுங்கள். ஆதாரம் இருக்குமானால், எந்த நடவடிக்கையும் எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல வில்லிவாக்கத்தில் ஒருவரை இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள். மார்க்சிஸ்டு இயக்கத்திற்கு தேர்தல் பணி செய்த காரணத்தால் அவரை இந்தச் சட்டத்தில் கைது செய்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது தவறு. எந்த ஒரு கால கட்டத்திலும் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு நபருடைய தனிப்பட்ட குற்றத்திற்காக கூட மாநிலத்தில் பயன்படுத்தப்பட வில்லை. மாறாக பொது அமைதிக்காக, ஒட்டு மொத்தமான பயங்கரமான ஒரு ஆபத்தை விளைவிக்கக் கூடிய பயங்கரமான நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் ஆகத்தான் இருக்க வேண்டும். இந்தச் சட்டத்திலே கைது செய்யப்பட்டவர்கள் யார் என்று எங்கே இருந்தாலும், யார் வேண்டுமானாலும் சென்று விசாரிக்கலாம், அந்தப் பகுதி மக்களை நீங்கள் கேட்கலாம், பயங்கரவாதிகள், மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தக்

கூடிய அளவுக்கு பெண்களை கடத்துகிறவர்கள், விபச்சாரத்தில் ஈடுபடுத்துகிறவர்கள், குற்றவாளிகள், அல்லது குண்டர்கள், அல்லது கொடூரமான முறையில் நில ஆக்கிரமிப்புச் செய்து ஏழைகளை துன்புறுத்துகிறவர்கள், அல்லது பிறர் நிலங்களை ஒட்டுகிறவர்களை துன்புறுத்துகிறவர்கள், தான் இதுகாறும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். Advisory Board is not functioning properly. என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இத்தகைய உள் நோக்கம் கற்பிக்கக்கூடிய ஒரு குற்றச் சாட்டை நீதிபதிகள் அடங்கிய அந்த அட்வைசரி போர்டு மீது சொல்லக் கூடாது. சொல்லுவது தவறு என்று நான் கூற விரும்புகிறேன். அட்வைசரி போர்டைப் பொறுத்தவரைக்கும், ஒரு குற்றவாளி குற்றத்தைப் புரிகிறார், பெண்ணைக் கடத்தி, விபச்சாரத்தில் ஈடுபடுத்துகிறார் என்றால், பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையை உருவாக்குகிறார்கள். பயங்கரவாதியாக இருக்கிறார்கள். அவனை அட்வைசரி போர்டு கைது செய்தது சரி என்று சொன்னால் அந்த அட்வைசரி போர்டு மீது நாம் களங்கம் கற்பிக்கக்கூடாது. நீதிபதிகள் அடங்கிய அட்வைசரி போர்டைப் பொறுத்த வரைக்கும் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சில நேரங்களிலே மாண்புமிகு உறுப்பினர் திரு சின்னராசு அவர்கள் சொன்னது போல் கோர்ட்டினுடைய தீர்ப்பு ஒன்று, உண்மை நிலை ஒன்று ஆக இருக்கிறது. காரணம் நீதிமன்றங்களைப் பொறுத்த வரைக்கும் In the land acquisition matter, due compensation was not paid ஆனால் உண்மை நிலை சில நேரங்களிலே வேறாக இருந்து விடுகிறது. நடைமுறையில் அதை நாம் பார்க்கிறோம். நீதி மன்றத்திற்குச் சென்று,

(மாலை 5-00).

நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும் குற்றத்தை புரிந்து விட்டு, குற்றம் புரியாத உத்தமர்கள் போல் செயல்பட்டால், சமுதாயத்தில் ஒரு அவலநிலை மலிந்து விடும். நல்லவர்கள் தலை தூக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டு விடும் என்ற உணர்வின் காரணமாகத்தான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

நிரபராதி உள்ளே சென்று, காவல்துறையினர் பணம் பெறுவதற்கு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற குற்றச் சாட்டை சொன்னார்கள். அப்படி ஏதேனும் எங்கேனும் காவல் துறையைச் சார்ந்தவர்கள் உள் நோக்கத்தோடு, தனக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பாகுபாடு காட்டி, யார்

மீதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால், அவர்கள் மீது கடுமையான, கண்டிப்பான நடவடிக்கை எடுக்க இந்த அரசு தவறாது என்ற உத்திரவாதத்தை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் உத்திராபதி அவர்களும், பாரதி அவர்களும் பேசும்போது விபச்சாரக் கொடுமையிலிருந்து தமிழ்ப் பெண்களைப் பாதுகாக்க, இந்தச் சட்டத்தை இன்னும் கடுமையாக ஆக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள், அந்தக் கருத்தோடு நான் ஒன்றுகிறேன். காவல்துறைக்கு தக்க உத்தர விட்டு, அப்பாவிப் பெண்களை கடத்திச் சென்று, ஒரு ஊரிலிருந்து வேறு ஒரு ஊருக்கு கடத்திச் சென்று, விபச்சாரத் தொழிலில் கட்டாயமாக ஈடுபட வைத்தவர்கள் மீது இந்தக் கொடுமையைப் புரிகின்றவர்கள் மீது நடவடிக்கை அப்போதைக் கப்போது எடுக்கப்பட்டு வருகிறது. புதிய சட்டத்திலே அவர்கள் மீது அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உடனடியாக உத்தரவிட்டு இந்தச் சட்டத்தின் கீழ் தமிழகத்திலே ஒரு பீதியை உருவாக்கி, விபச்சாரத் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் சம்பந்தமாக, தமிழகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அல்லது வெளி மாநிலங்களைச் சார்ந்தவர்கள் இங்கு வந்து ஈடுபடுகின்றவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் மீது தக்க நடவடிக்கை, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் சொல்லவிரும்புகிறேன்.

அடுத்து மருந்து கலப்படம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் பாரதி அவர்கள் சொன்னார்கள். காவல்துறைக்கு தக்க உத்திர விட்டு, இந்தக் குற்றவாளிகள் மீது ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் கீழ் கடுமையான முறையில் தண்டிக்கப்பட்டு, பொது மக்களுடைய நலன் பாதுகாக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்தில் 'லேண்ட் அக்விசிஷனில்' 'ட்யூ காம்பன்சேஷன்' உழவர்களுக்கு இன்னும் கொடுக்கப்படாமல், எஞ்சியிருக்கிறது என்றும், அவர்கள் பாதிப்பிற்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள் என்றும் மாண்புமிகு உறுப்பினர் பாரதி அவர்கள் சொன்னார்கள். அந்த விவரங்களைத் தந்தால் கண்டிப்பாக, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குண்டர் சட்டத்திலே கைது செய்யப்பட்ட, பயங்கரமான நபர்கள், குற்றவாளிகள் எல்லாம் மீண்டும் தவறுகளைச் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டத்தின்படி நீதி மன்றத்தினுடைய தீர்ப்பின்படி, அவர்கள் 'ஏ' கிளாஸ் பிரிசனர் களாக நடத்தப்பட வேண்டுமென்று நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு

இருக்கின்ற காரணத்தினால், தவிர்க்கமுடியாத நிலை இருந்து வருகிறது. இதுகுறித்து மத்திய அரசிடம் கலந்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை எடுக்க இந்த அரசு ஆயும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசும்போது, நீதிமன்றத்தினுடைய அதிகாரத்தை, சுதந்திரத்தை இது பறிப்பதாக அமையாதா என்ற வினாவை கேட்டார்கள் இது தவறான கருத்து. காரணம், நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும், இந்தச் சட்டத்தினுடைய பிரிவுகளுக்கு உட்பட்டுத்தான் நீதிமன்றம் தீர்ப்பினை வழங்குகிறது. இதிலே ஏற்கனவே நான் சொன்னது போல, ஒரு சாதாரண குற்றம் புரிந்து, இன்னொரு பயங்கரமான குற்றத்தையும் செய்தால், இப்படி இரண்டு குற்றங்கள் என்று வருகின்றபோது, (Technically he wins the case) என்ற வகையிலே இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே ஒழிய, மற்றப்படி நீதிமன்றத்தினுடைய சுதந்திரத்தில் தலையிடுவதாகவோ, நிரபராதிகளைத் தண்டிப்பதாகவோ இந்தச் சட்டத்னுடைய நோக்கம் எள் அளவிற்கும் இல்லை. தமிழ் சமுதாயத்தினருடைய நலனுக்குப் புறம்பாகச் செயல்படுகிற பயங்கரமான சமூக விரோதிகளைத் திருத்த வேண்டும், அவர்கள் திருந்தி வாழவேண்டும் என்றும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுகிறேன்.

திரு. ஏ எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யாரையுமே குற்றவாளியாகப் பிடித்துப் போடுவதில்லை என்று சொன்னார்கள். மிக்க மகிழ்ச்சி. விருதுநகரிலே இரண்டு கோஷ்டிகளுக்கு இடையே தகராறு இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் பிப்ரவரி மாதம் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள். குண்டர்கள் ஆக்ட் படி இரண்டு பேரையும் பிடித்துப்போட்டார்கள். அவர்கள் மீண்டும் வந்த பிறகு, ஒரு பக்கம் மட்டும் நான்கு பேரை மட்டும் பிடித்து, குண்டர் ஆக்டிலே போட்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் போடப்படவில்லை. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், இரண்டு பக்கமும் தவறு நடந்து இருக்கிறது.

போலீஸ் ரிக்கார்டுகளைப் பார்த்து நீங்கள் ஏன் குண்டர்கள் சட்டத்திலே போடவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. பின்னாலே போட்டி ருக்கிற 3, 4 பேர்களும் எந்தவிதமான குற்றமும் செய்ததாக என்னைப் பொறுத்தவரையிலும் தெரியவில்லை. முதலிலே செய்தவர்களைத்தான், இரண்டு பேர்களை இரண்டு பக்கமும், ஆளுக்கு ஒருவராகப் பிடித்துப் போட்டார்கள். அவர்கள் வெளியிலே வந்து விட்டார்கள். இப்போது 3, 4 பேர்களைப் பிடித்துப் போட்டால், என்ன குற்றம் அவர்கள்

செய்தார்கள் என்று சரியாகத் தெரியவில்லை. அதே போல் எதிர்த் தரப்பிலேயிருந்து ஏன் பிடித்துப் போடவில்லை? 2 கோஷ்டிகள் இருந்து கொண்டே இருக்கிறது. போலீஸ் ரிக்கார்டு களைப் பார்த்து நீங்கள் செய்யலாம் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அதே போன்று ராஜபாளையம் போன்ற பகுதி களிலே இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் போலீஸ் ரிக்கார்டுகளிலே பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயங்கரக் குற்றங்களைச் செய்கின்றவர்கள் சில நேரங்களில் போலீஸ் ரிக்கார்டுகளில் தடயங்கள் இல்லாத அளவுக்குக் கூட செய்துவிடுகிறார்கள். என்ன என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாருங்கள். அதை ஐ. ஜி. அவர்களிடம் ஒப்படைத்து, விசாரித்து, தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி மேற்கொள்ளும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில் வருகிற வழக்குகளில் ஒரு வழக்கிற்கு 2, 3 எஃப். ஐ. ஆர். இருக்குமேயானால், நேரடி யாக—ஒரு பெஞ்ச் சொல்கிறது, அவர்களை டிடெயின் செய்யலாம் என்று மற்றொரு பெஞ்ச் சொல்கிறது—அவர்கள் Police confinement இருந்தாலேயே போதும், அவர்களை, டிடெயின் செய்து விடலாம் என்று சொல்கிறார்களே, இதுவே பயங்கரமாக இருக்கிறது அல்லவா ? இதை மாற்றுவதற்கு அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விதிக்குட்பட்டு

Provisions of the Act and rules are interpreted by the Court. On the basis of the provisions, the judgements are delivered.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர் கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

1986 மே 14] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர் கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/ 1986) நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

6. அறிக்கை அளித்தல்.

ராணி மங்கம்மாள் போக்குவரத்துக்கழகம் துவக்கப் பெற்றது குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேரவை விதி 238-ன்கீழ் அவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் 1—4—1986 இல் துவக்கப்பட்டதனுடைய விளக்கம் :

''பொதுமக்களுடைய கோரிக்கைகள் மீது விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டி, 600க்கு மேற்பட்ட பேருந்துகளைக் கொண்ட போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படவேண்டும் என்றும் முடிவு எடுத்து அதற்கேற்ப அரசு செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் முதலில் பாண்டியன், சேரன், கட்டபொம்மன், சோழன் போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரித்து முறையே, மருதுபாண்டியன், ஜீவா, நேசமணி போக்குவரத்துக் கழகங்களாக ஏப்ரல் 1983 இலும் மற்றும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகமாக ஏப்ரல் 1985 இலும் துவக்கப்பட்டன. பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் 1,007 பேருந்து களைக் கொண்டு, மதுரை மாவட்டத்தில் இயங்கி வந்தது. பின்னர் மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு

திண்டுக்கல்லை தலைநகரமாகக் கொண்டு அண்ணா மாவட்டம் என்ற புதிய மாவட்டம் ஏற்படுத்தப்பட்ட பிறகு பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தையும் இரண்டாகப் பிரித்து அமைப்பது என்று அரசு முடிவு எடுத்தது. அதன்படி, அண்ணா மாவட்டத்தில் 433 பேருந்துகள் கொண்ட ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம், 1—4—1986 முதல் ஒரு தனி போக்கு வரத்துக் கழகமாக இயங்கி வருகிறது. பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் மதுரை மாவட்டத்தில், 574 பேருந்து களுடன் இயங்கி வருகிறது.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஓ) சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப் படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய் தலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களால் பேரவை யில் ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கிற 45/1986 சட்டத் திருத் தத்தை நான் வரவேற்கிறேன். தமிழகத்தில் குதிரைப் பந்தயம் குதிரைகளை வைத்து நடத்தக்கூடிய அந்த சூதாட்டம் இல்லாமல் ஆகி இருப்பதற்கு நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்டு கம் யூனிஸ்டு கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூறிக் கொள்கிறேன்.

(மாலை 5.10)

குறிப்பாக முன்னாலேயே இந்தச் சட்டம் நிறை வேற்றப்பட்டு, அது உயர் நீதிமன்றத்தாலே செல்லுபடியாகும் என்று அறிவிக்கப்பட்டு, அதன் மீது உச்ச நீதிமன்றத்தில் தடை வாங்கியிருந்தார்கள். அந்த நேரத்திலே நாம் சட்டமன்றத்திலே குதிரைப் பந்தய சங்கத்தைக் கலைத்து விட்டு அதை மாநில அரசே கையில் எடுத்துக் கொள்வது என்று நிறைவேற்றிய தற்குப் பிறகு, வழக்கு தொடுத்தவர்கள் அந்த வழக்கைத்

*1986 ஆம் ஆண்டு மே 13ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திரும்பப் பெற்றுக் கொண்டதால், முன்னால் நிறைவேற்றப் பட்ட ஒரிஜினல் சட்டம்—குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் நடை முறைக்கு வந்து விட்டதால், குதிரைப் பந்தயம் ஒழிக்கப் பட்டு, அதன் சொத்துக்கள் முழுவதும் இன்றைக்கு அரசின் சொத்துக்களாக மாற்றப்படக் கூடிய ஒரு வாய்ப்பும், சந்தர்ப்ப மும் கிடைத்திருக்கிறது.

இதற்கிடையிலே ஒரு தகவல் செய்தியாக வருகிறது. என்ன வென்றால், அந்த வழக்கை உச்ச நீதிமன்றத்திலேயிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டதே தவறு என்று சொல்லி மறு படியும் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்ற தகவலும் வந்து கொண்டிருக்கிறது. இப்படி ஒரு கட்டத்திலே வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்ட பிறகு, குதிரைப் பந் தயம் தமிழகத்திலே ஒழிக்கப்பட்டதற்குப் பிறகு, வழக்கைத் திரும்பப் பெற்றதே சரி அல்ல என்று சொல்லி மீண்டும் புதிய தாக ஒரு வழக்கு வந்திருப்பதாகத் தகவல் தெரிகிறது. இப்படி இருந்தால் மேலும் காலத்தை இழுத்தடிப்பதாகத்தான் அது அமையும். எனவே, மீண்டும் குதிரைப் பந்தயம் தமிழகத்தில் தொடராமல் தடுப்பதற்கு மாநில அரசு எச்சரிக்கையாக இருந்து, அந்த வழக்கு மீண்டும் வராமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் குதிரைப் பந்தய சொத்துக்களைக் கையகப்படுத்து வதிலே நிச்சயமாக நல்ல முறையில் சென்னை மாநகரத்தி லேயும், நீலகிரி போன்ற உதகை நகரத்திலேயும் கிடைக்கின்ற மிகப் பெரிய அந்த இடங்களைப் பெறுவதற்கு உதவியாக இருக்கும். இதில் நோக்க-காரண விளக்கவுரையில், 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தய சங்கம் (நிறுவனத்தை கைய கப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) (தமிழ் நாடு சட்டம் 26/1986) இன்படி அரசிடம் மேவியுள்ள சொத்தினை குதிரைப் பந்தயங்கள் நடத்தும் தொழிலுக்காகப் பயன்படுத்து வது தற்போது முடியாமல் போய்விட்டதால் அரசானது நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் உள்ளடங்கலான மேற்சொன்ன சொத்தினை உடற் பயிற்சி விளையாட்டு வகை எதற்கும் மற்றும் கிரிக்கெட் விளையாட்டு மற்றும் மற்றைய விளையாட்டுக்கள் (சங்கத்தின் நோக்கங்களும் இதுவாகத்தான் இருக்கிறது) மற்றும் அரசு மருத்துவ மனைகளுக்காக கட்டிடங்கள் கட்டுவதற்கும் மற்றும் பொது நோக்கங்களுக்காக மற்றைய அரசு கட்டிடங் களை கட்டுவதற்கும் அரசினால் பயன் படுத்தப்படுதல் வேண் டும் என அரசு கொள்கை ரீதியாக முடிவு எடுத்துள்ளது என்ற முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது சிறந்த நல்ல தொரு ஏற்பாடாக இருக்கும்.

சமீபத்தில் நம்முடைய அவை முன்னவரவர்கள் கூடப் பேசிய தாகப் பத்திரிக்கையில் வந்திருக்கிறது. சென்னை மாநகரத்தில் இந்தக் குதிரைப் பந்தயச் சங்கத்திற்கு சொந்தமான அந்தத்

திட்லை அரசு கையகப்படுத்தி, நம்முடைய சட்டமன்றக் கட்டிடத்தை அங்கே எழுப்பி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் அங்கே இட வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு அந்த இடத்தைப் பயன்படுத்தலாமா என்று யோசிப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. மத்திய அரசினுடைய இடத்தில் நம்முடைய மாநில அரசின் சட்டமன்றக் கட்டிடத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பதிலாக மாநில அரசுக்குச் சொந்தமான இடத்திலேயே மாநில அரசின் சட்டமன்றக் கட்டிடத்தை எழுப்பி, சட்டமன்ற உறுப்பினர்களும் தங்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது உதவியாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதைப் போலவே, உதகையைச் சேர்ந்த இடத்தைப் பொறுத்த வரையில், உதகையில் அவ்வளவு பெரிய இடம் கிடைப்பது என்பது சாதாரணமானதொரு காரியம் அல்ல. அந்த இடத்தை நிச்சயமாக ஒரு சர்வதேச விளையாட்டு அரங்கமாக மாற்றவும், அதோடு சேர்ந்து ஒரு மருத்துவமனையையும் அங்கே ஏறபடுத்த வேண்டும். ஏனென்றால், அங்கே சுற்றுப்புற சீதோஷ்ண நிலைமைகளுக்கு ஏற்ப மருத்துவமனைகளை ஆரம்பித்தால் நோயாளிகளுக்கு உதவி செய்யும் முறையில் அமையும். தமிழகத்திலே சிறந்த மருத்துவமனையாக, எப்படி பாண்டிச்சேரியில் உள்ள ஜிப்மர் மருத்துவமனையை மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிறதோ அதைப் போல உதக மண்டலத்திலேயும் மாநில அரசின் சார்பாக சிறந்த ஒரு மருத்துவமனையை ஏற்படுத்துவதற்கு அந்த இடத்தைப் பயன்படுத்திக் கொள்வது உதவிகரமாக இருக்கும். அந்த வகையில் சர்வதேச விளையாட்டு அரங்கத்தையும், சிறந்த மருத்துவமனையையும் ஏற்படுத்துவதற்கு அந்த இடத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்களுடைய கருத்துக்களோடு இணைந்து, இந்தச் சட்டத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களை நான் கூறலாம் என்று கருதுகிறேன். இன்றைக்கு இந்தச் சட்டத்தின் வழக்குகளைப் பற்றி உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற பொழுது, இந்த வழக்கை மீண்டும் தொடருவதற்குச் சில பேர் முயற்சிக்கிறார்கள் என்ற அச்சத்தைச் செய்திகளின் அடிப்படையிலே சொன்னார்கள். முதலில் இந்த வழக்கை ஆரம்பித்தவர்கள், இந்த வழக்கை வாபஸ் பெறுவதற்காக மனு போட்டபொழுது, அரசின் வழக்கறிஞர் சாந்திபூஷன் அவர்கள் அந்த வாபஸ்பெறும் மனுவை எதிர்த்தார்கள் என்ற செய்தியை என்னுடைய நண்பர்கள் சொல்லி இது என்ன, இந்த அரசு இரட்டைக் கொள்கையை

வைத்திருக்கிறதா என்ற அச்ச உணர்வை எழுப்பிய நேரத்தில் நான் கூடச் சொன்னேன், வாதி ஒரு மனுவை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்று சொன்னாலும் கூட, பிரதிவாதி சொன்னாலும், சொல்லா விட்டாலும் பிரதிவாதியின் வழக்கறிஞர் அப்போஸ் என்று எழுதிக் கொடுப்பது வழக்கம் என்று சொன்னேன். அந்த அடிப்படையிலே தான் அவர்கள் சொல்லியிருப்பார்களே தவிர, அதிலே இரட்டைக் கருத்துக்கள் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை என்ற கருத்தை நண்பரிடத்திலே சொன்னேன். பின்னாலே நடந்த சம்பவங்கள் அந்தக் கருத்தை வலியுறுத்துகின்ற விதமாக இருந்ததை எண்ணி நான் சந்தோஷப்படுகிறேன். அந்த அளவுக்குக் குதிரைப் பந்தயங்கள் ஒழிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு ஒழிக்கப்பட்ட அந்தக் குதிரைப் பந்தய கிளப்பினுடைய (மெட்ராஸ் ரேஸ் கிளப்) சொத்துக்களை எந்த விதத்திலே பயன் படுத்துவது என்ற வகையிலே இன்றைக்கு நல்ல சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். குதிரைப் பந்தயச் சங்கத்தினுடைய இந்தச் சொத்துக்களை எடுத்து எந்த அளவுக்குச் சிறப்பாக, மக்களுக்கு நன்மை அளிக்க முடியுமோ அந்த அளவிலே செய்ய இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். சமீபத்திலே சென்னை குதிரைப் பந்தயத்தைப் பற்றி ஒரு கட்டுரை படிக்க நேர்ந்தது. அங்கே, குதிரைகள் நீந்துவதற்குக் கூட ஸ்விம்மிங் பூல் வைத்திருக்கிறார்கள் என்ற தகவலைக் கட்டுரையிலே படித்தேன். இங்கே மக்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறபொழுது, அங்கே அசுவமேத யாகம் நடத்துபவர்கள், குதிரைகளுக்கு ஸ்விம்மிங் பூல் எல்லாம் வைத்திருந்தார்கள் என்ற தகவலைத் தெரிந்து நான் ஆச்சரியப்பட்டேன். அந்த இடங்களை எடுத்து, மக்களுக்கு நன்மை பயக்கின்ற நிலையிலே அரசு கையகப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறது. அவற்றை நல்லபடியாகச் செய்ய வேண்டுமென்று சொல்லும்போது, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி அமர்கிறேன். இங்கே,

Government Buildings for public purposes

என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு சொல்கின்ற பொழுது, ஏற்கனவே, அவை முன்னவர் அவர்கள் சட்ட மன்ற மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபொழுது, சட்ட மன்றக் கட்டிடத்தைக் கூட அங்கே கட்டலாமா என்ற யோசனையை இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குச் சென்னை நகரத்திலே மிகுந்த இட நெருக்கடியிருக்கிறது. நம்முடைய கோட்டையிலே, பல வசதிகள் இருந்துங்கூட, அரசு அலுவலகங்கள், பலமாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டும் கூட, அரசு அலுவல்கள், வளர்ந்து வருவதன் காரணமாக, 'சோஷியல் வெல்பேர் ஸ்டேட்' என்ற காரணத்தாலே, அரசினுடைய அலுவல்கள் எல்லாம் பலவாறாகப் பெருகி இருக்கிற காரணத்

தாலே, இன்றைக்கு இந்தக் கோட்டையிலேயிருந்து சட்ட சபையை மட்டும் நீக்குவதன் காரணமாக, அரசு அதிகாரி களுக்குக் கூட அதிகப்படியான இடைஞ்சல்கள் ஏற்படக் கூடும், சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட அதிகப்படியான இடைஞ் சல்கள் ஏற்படும். ஏனென்றால், கோட்டைக்கு வந்து, இங்கே சட்டசபை கூட்டத்திலே கலந்து கொண்டு, அதிகாரிகளைச் சந்திப்பது, அமைச்சர்களைச் சந்திப்பது என்கிற கடமைகளை நாங்கள் வைத்து இருக்கிறோம். சட்டசபையை மட்டும் எடுத்து இங்கே இருந்து அகற்றுவதன் காரணமாக, இந்தப் பிரச்சினை தீர்ந்து விடும் என்று கருதவில்லை. இந்தக் கோட்டை என்பது இந்திய அரசினுடைய சொத்தாக இருக்கிற காரணத்தாலே, இராணுவத்தினர் மீண்டும், மீண்டும் அந்த இடங்களை எல்லாம் தந்து விடுங்கள் என்று தமிழக அரசை வற்புறுத்தி வருவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அது உண்மையாக இருக்குமானால், சென்னை நகரத்தினுடைய இட நெருக்கடியை மனதிலே கொண்டு, இந்தப் பக்கத்திலே, Heavy concentration of population and heavy concentration of traffic போன்ற கருத்துக்களை எல்லாம் மனதிலே கொண்டு, சென்னைக்கு வருகின்ற எல்லோருமே அதிகப்படியாக தெற்கேயிருந்து வரு கின்ற காரணத்தினாலேயும் தெற்கேயிருந்து வருகின்றவர்களும் முதலிலே கிண்டியிலே சென்னை நகரத்திற்கு உள்ளே நுழை கின்ற காரணத்தாலும், கிட்டத்தட்ட 300 ஏக்கருக்கு மேலே, இன்றைக்கு அந்த இடத்தை நாம் கையகப்படுத்துகின்ற காரணத் தாலே, அங்கு சகல வசதிகள் இருக்கிற காரணத்தாலே, சட்ட மன்றத்தை மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே இருக்கிற இடைஞ்சல்களை எல்லாம் உறுப்பினர்கள் சட்ட மன்ற மானியக் கோரிக்கையிலே பேசும்போது சொல்லியிருக் கிறார்கள். அசாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, கௌஹாத்தியில் என்ன வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் காண நேரிட்டது. அந்த அளவுக்கு வசதிகள் இல்லா விட்டாலும், பாதி அளவுக்காவது, வசதியோடு, தனி அறை இருக்கக் கூடிய நிலையில், உறுப்பினர்கள் தங்கு வதற்கு மட்டுமல்ல, தலைமைச் செயலகத்தைக் கூட அங்கே மாற்றுவது சாலச் சிறந்ததாக இருக்கும். அவ்வாறு நீங்கள் செய்யும் பொழுது, All Government buildings என்று அந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவ்வாறு சட்டத்திலே Government buildings என்று சொல்வது State Legisla-ture does not include Government என்ற காரணத்தாலே, நமக்குத் தனியாக செயலகம் இருக்கிற காரணத்தாலே, Buildings mean and include the State Legislature, Legislature Hostel and State Secretariat என்கின்ற ஒரு விளக்கம் தேவைப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும். ஏனென்றால், நம்முடைய 3 அமைப்புகளான Legislature, Executive and Judiciary ஆகிய 3 கருத்தை, இந்திய அரசியலமைப்புச்

சட்டத்திலே பார்க்கின்ற காரணத்தாலே, பொதுவாக, Legisl tive wing இணைத்துப் பேசாத காரணத்தாலே, அரசு கட்டிடங்களில் சட்டசபைத் துறையும் சேர்ந்திருக்கும் என்று சொல்கின்ற அளவிலே ஒரு மாற்றம் செய்ய வேண்டியது அவசியமாக இருந் இருந்தால், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் அதைக் கருத்திலே கொண்டு, அதற்குத் தேவையான ஒரு திருத்தத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும்.

(மாலை 5-20.)

அவ்வாறு செய்வதனால் நாட்டிற்கும், அனைவருக்கும் **அது** நன்மை பயக்கக்கூடிய சட்டமாக இருக்கும் என்ற காரணத்தினால் இதனை நீங்கள் ஆலோசனை செய்ய வேண்டும். ஆலோசனை செய்வதோடு இந்த மாற்றங்களை விரைவிலே நீங்கள் செய்வீர்களானால் அனைவருக்கும் பயன்தரக்கூடியதாக இருக்கும். எனவே, விரைவிலே இதை அமுல்படுத்த வேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய நோக்குபடி தற்போது அரசு கையகப்படுத்த இருக்கின்ற குதிரை பந்தய சங்கத்திற்கு சொந்தமான இடங்களை அரசு எத்தகைய காரணங்களுக்கு பயன்படுத்த வேண்டும் என்பதற்காக இது கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதிலே ஸ்டேட்மெண்ட் அண்டு ஆப்ஜக்ட்டிலே Lands and buildins sh ll be ut lised by the Governm nt f r any kind of athletic sports and for gam s and f r the construc i n cf buildings for Government hospitals and other Government buildings for public purp s s. என தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது சில நல்ல கருத்துக்களை சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் பேசுகின்றபோது குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்டு, தமிழக மக்களுக்கு ஒரு நல்ல நிலை ஏற்பட இருக்கின்ற காலகட்டத்தில் அதை மீண்டும் நடத்தக்கூடிய அளவுக்கு உச்ச நீதி மன்றத்திற்கு சென்றிருக்கிறார்களே என்று தன்னுடைய அச்சத்தை தெரிவித்திருக்கிறார்கள். அரசு அவற்றை கண்காணிக்கும். குதிரை பந்தயத்தை பொறுத்த வரைக்கும் தமிழகத்தில் ஏழை மக்களை பாதிக்கின்ற இந்த குதிரைப் பந்தயம் மீண்டும் தமிழகத்திற்கு வராத ஒரு நிலை கட்டாயம் ஏற்படும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது. இந்த இடங்களைப் பொறுத்தவரைக்கும், ஊட்டியிலே குதிரை பந்தயத்திற்குச் சொந்தமான இடத்தை சர்வதேச விளையாட்டு அரங்கமாகவோ, சிறந்த மருத்துவ மனையாகவோ மாற்ற வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். உலகின் பல பகுதிகளிலிருந்து உல்லாச பயணிகள் வருகின்ற அந்த மத்திய இடத்தில் அது இருக்கின்ற காரணத்தினால் அந்த உல்லாச

பயணிகளை ஈர்க்கக்கூடிய அளவிற்கு எப்படி அதை பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை அரசு ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும். திரு. வேங்கடரமணன் அவர்கள் பேசுகின்றபோது சென்னை குதிரை பந்தய சங்கத்திற்குச் சொந்தமான இடத்திலே சட்ட மன்றத்தையும், அதே போல தலைமை செயலகத்தையும் அங்கு மாற்றக்கூடிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் கூட அவையிலே இது குறித்து அரசு ஆயும் என்ற கருத்தை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் மற்றும் ஒன்றைச் சொன்னார்கள். கவர்ன்மெண்ட் பில்டிங் என்றுதான் இருக்கிறது. அதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தால் ஒழிய சட்டமன்றப் பேரவை அங்கு வருவதற்கு வாய்ப்பு எப்படி எழும் என்று கேட்டார்கள். அது தேவையில்லை. நீதி மன்றங்கள், எக்ஸிகியூட்டிவ், லெஜிஸ்லேச்சர், ஜூடிஷியரி என்ற மூன்று பிரிவுகளும் தனித்தனியாக இயங்கியபோதிலும் மீதி இரண்டு அமைப்புகளுக்கும், லெஜிஸ்லேச்சராக இருந்தாலும் சரி, ஜூடிஷியரியாக இருந்தாலும் சரி, இரண்டுக்கும் தேவையான அனைத்து வசதிகளையும் சுபிட்சப்படுத்த வேண்டிய சட்டரீதி யான பொறுப்பு அரசுக்கு இருக்கின்ற காரணத்தினால் அரசே இதை கட்டி, எந்த இடத்தில் சட்டமன்றத்திற்கு இடம் கட்ட வேண்டுமோ அந்த பொறுப்பை ஏற்று கட்டி இங்கே ஒப்படைக்கும். நீதிமன்றக் கட்டிடமும் அப்படித்தான் என்பதனை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து இந்த சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1986ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 45/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்)."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

1986 மே 14]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமைமாற்றம் செய்தலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 45/1986) நிறைவேற்றப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஓ) நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) திருத்தச் (திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணய) திருத்தச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 46/1986)** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் நில உச்ச வரம்பு நிர்ணய திருத்தச் சட்டம் தமிழ்நாடு சட்டம் 3-ன் கீழ் 1984/14 நிலச் சீர்திருத்த சிறப்பு மேல்முறையீட்டுத் தீர்ப் பாயத்தை அமைக்கும் நோக்கத்திற்காக இயற்றப்பட்டது. மேற் சொன்ன சட்டமானது அத்தகைய சட்டத்தை இயற்றி வைப்ப தற்கு மாநில சட்டமன்றத்தை இயல்விக்கின்ற அரசமைப்பில் 323 பி உறுப்பிற்கிணங்க இயற்றப்பட்டது. சிறப்பு மேல் முறை யீட்டுத் தீர்ப்பாயமானது நிலச்சீர்திருத்த வழக்குகளை நடத்து வதற்கு உயர்நீதிமன்றத்திற்குப் பதிலாக ஒரு தனி நீதிமன்றமாக அமையும். மற்றும் உச்ச நீதிமன்றத்தில் அதிகார வரம்பானது எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. 14 ஆவது சட்டம் மூன்றின் கீழ் 1984-ல் அறிவித்த தேதியில் இருந்து நடைமுறைக்கு வரவேண்டியுள்ளது. தமிழ்நாடு சட்டம் 3-ன் கீழ் 1984 இயற்றிய தற்குப் பின்னால் நாடாளுமன்றம் அரசமைப்பு 323 ஏ உறுப்பிற்கு இணங்க 1985ஆம் ஆண்டு நிலத் தீர்ப்பாயச் சட்டத்தை மையச் சட்டம் 15-ன் கீழ் 1985 இயற்றியது. இந்த மையச் சட்ட மானது 1986 ஆம் ஆண்டு நிலத் தீர்ப்பாயங்கள் திருத்த அவசரச் சட்டத்தினால் மைய அவசரச் சட்டம் ஒன்றின் கீழ் 1986-ல் திருத்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன மைய அவசரச் சட்டத்தின் வகையில் அந்த முறைகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாடு சட்டம் 3-ன் கீழ் 1984-ல் சில மாற்றங்கள் அவசியமாகிறது.

** 1986 ஆம் ஆண்டு மே 13ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன மாற்றங்களுக்குச் செயல் வடிவும் கொடுக்க விழைகிறது. ஆகவே இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு அவையினரை நான் கேட்டுக்கொள் கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) திருத்தச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 46/1986) என்பதை இங்கே இந்தச் சபையில் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்து இருக்கிறார்கள்.

இதிலே ஒரு முக்கியமான அம்சத்தைச் சொல்ல விரும்பு கிறேன். 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த நில உச்சவரம்பு நிர்ணய திருத்தச் சட்ட முன்வடிவு சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1984 இயற்றப்பட்டு இருக்கி றது. இப்போது மத்தியிலே 1986 ஆம் ஆண்டு மத்திய அவசரச் சட்டம் 1/1986 என்பதன்படி திருத்தப்பட்டுள்ளது. மேற் சொன்ன மத்திய அரசு சட்டம் திருத்தப்பட்ட காரணத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு சட்டம் 3/1984-ல் சில மாற்றங்களைச் செய்வது அவசியம் ஆகிறது ; எனவேதான் மத்திய அரசால் இப்போது இயற்றப்பட்டிருக்கிற சட்டத்திற்கு ஏற்ப 1983 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தை திருத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டு அதற்கேற்ற முறையில் இந்தத் திருத்தத்தை இங்கே மாநில அரசு முன்மொழிந்து இருக்கிறது. இந்த நேரத்தில் நான் கூற விரும்புவது என்ன என்பதைச் சொல் கிறேன். சம்பந்தப்பட்ட நில உடமையாளர்கள், உச்சவரம்புச் சட்டத்தின்படி வருகின்ற மிச்சம் இருக்கின்ற நிலங்களை அரசு கையகப்படுத்துவதற்குத் தடையாக தொல்லை ஏற்படுத்துகின்ற வகையில் இந்தத் தீர்ப்பாயங்களையும் நீதிமன்றங்களையும் பயன் படுத்தி நிலச் சீர்திருத்த உச்சவரம்புச் சட்டத்தைச் செயலற்ற தாக ஆக்குகிறார்கள். நில உடமையாளர்கள் இந்த மன்றங் களையும் பயன்படுத்துகிறார்கள். அந்த வகையில்தான் மத்தியச் சட்டம் நிலச்சுவான்தாரர்கள் செய்யக்கூடிய காலதாமதங்களுக்கு உதவி செய்யக் கூடிய முறையிலே வந்திருக்கின்றது. அதற் கேற்ப இங்கேயும் இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டு இருக்கிறது. எனவே இது குறித்து மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நில உச்சவரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை மாநில அரசுக்கு உட்பட்டு இருக்கக்கூடிய ஒரு பிரச்சினையாக இருக்கும் போது மத்திய அரசின் சட்டத்திற்கேற்ப இங்கேயும் திருத்த வேண்டிய அவசியம் ஏன் ஏற்படுகிறது என்பதை நம்முடைய அவை முன்னவர் அவர்கள் பதிலுரையில் விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அப்பொழுதும்கூட

(மாலை 5-30).

அந்தச் சட்டப்படி நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டால் அது அரசுக்குச் சொந்தமாகிவிடும். இங்கே நான் ஒரு விவரத்தை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அந்தச் சட்டத்திற்கு பல்வேறு விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருக்கிறது. 1961 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட உச்ச வரம்புச் சட்டத்திலும் பல்வேறு விதி விலக்குகள் அளிக்கப்பட்டு, அதன் பின்னாலே அப்போது கரும்பு பண்ணைக்கு கொடுக்கப்பட்ட விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது. அதேபோல பால் பண்ணை, மேய்ச்சல் நிலம் போன்றவைகளுக்கு கொடுக்கப்பட்டது ரத்து செய்யப்பட்டது. அப்படி ரத்து செய்யப்பட்டதன் விளைவாக பால் பண்ணை, மேய்ச்சல் நிலம் என்ற பெயரால் எடுக்கப்பட்ட நிலங்கள் முழுவதும் அரசுக்கு சொந்தமான நிலங்களாக அறிவிக்கப்பட்டது.

எனக்குத் தெரிந்த வரையில், பெரியார் மாவட்டத்தில் பால் பண்ணை என்ற பெயரால், மேய்ச்சல் நிலம் என்ற பெயரால் ஏறக்குறைய 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள், அந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டதனால் அரசுக்கு சொந்தமான நிலங்களாக மாறி, அவை முழுவதையும் அரசு கையகப் படுத்திவிட்டதாக அறிவித்தது. நான் கேட்க விரும்புகிறேன். அரசினுடைய பொறுப்பிலே அந்த நிலங்கள் வந்துவிட்டதா? அந்த நிலங்கள் நிலம் அற்றோர்களுக்கு வினியோகிக்கப்பட்டிருக்கிறதா? அப்படி வினியோகிக்கப்பட்டிருந்தால் எவ்வளவு பேர்களுக்கு வினியோகம் செய்யப்பட்டிருக்கிறது?

இது போலவேதான் முன்பும் காரியங்களைச் செய்ய முடியாமல் எடுக்கப்பட்ட நிலங்களின் சொந்தக்காரர்கள், நில உடமையாளர்கள் தீர்ப்பு ஆயங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் போய் தடை செய்கிறார்கள். இன்றைக்கும் கூட தஞ்சை மாவட்டத்தில் நில உடமைச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலம், உபரி நிலமாக அறிவிக்கப்பட்ட நிலம் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்ட நிலம் பட்டா அவர்களுடைய கையிலே இருந்தாலும், அந்த நிலத்தை இன்னொருவருக்குக்கூட ஒப்படைக்க முடியாமல், பல்வேறு வகைகளிலே பல்வேறு முயற்சிகளை அந்த நிலஉடமையாளர்கள் செய்து வருகிறார்கள். குத்தகை விவசாயம் செய்து கொண்டிருக்கக் கூடிய குத்தகை விவசாயிகள் அந்த நிலத்தை விவசாயம் செய்கிறேன் என்று சொன்னால், குத்தகை பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். அப்படி அவர்கள் பதிவு செய்ய வேண்டும் என்று மனு செய்தால், அடுத்த நிமிஷமே அவர்கள் மீது கிரிமினல் வழக்கு ஏதாவது தொடுத்து அந்த நிலத்தை ஆக்கிரமித்தான் என்று டிரஸ்-பாஸ் ஆக்டின் கீழும் மற்றச் சட்டங்களின் கீழும் நடவடிக்கைகள் எடுத்து, அந்த விவசாயிகளே வேண்டாம் என்று சொல்லி விட்டு, விட்டுப் போன நிலைமை இருக்கின்றன.

[திரு. கோ. வீரய்யன்] [1986 மே 14

அப்படிப்பட்ட நிலைமைகளில் தான் இந்த திருத்தச் சட்டமும் அந்த நிலச்சுவான்தாரர்களுக்கு, தங்களுடைய நில உடைமைகளை பாதுகாத்துக் கொள்ளுகின்ற வகையிலே உதவி செய்கிறதே தவிர, ஏழை எளிய விவசாயிகளுக்கு உதவி செய்யக் கூடிய முறையிலே இல்லை. அப்படி நியாயம் கிடைக்க வேண்டும் என்றால் அவர்கள் தீர்ப்பு ஆயத்திற்கு சென்று, நீதிமன்றங்ளுக்குச் சென்று, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடுத்து இப்படி பல ஆண்டுகள் கழித்து வருவதற்குள்ளே அந்த விவசாயியே செத்துவிடுவான். எப்படி தொழிலாளி வழக்குத் தொடுத்தால், அவன் செத்ததற்குப் பிறகு தீர்ப்பு வருகிறதோ அது போல இந்த மன்றங்களையெல்லாம் தாண்டி தீர்ப்பு அவனுக்குக் கிடைப்பதற்குள் அவன் செத்து விடுவான். அந்த வகையில் தீர்ப்பு ஆயங்களுக்கும், உயர் நீதி மன்றங்களுக்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் நில உடைமையாளர்கள் செல்வதற்குத்தான் அந்தச் சட்டம் பயன்படுவதற்கு உதவியாக இருக்கும்.

எனவே, மத்திய அரசு கொண்டு வந்த அந்தச் சட்டத்திற்கு ஏற்ற முறையில் தமிழக அரசின் சட்டத்தை மாற்றுவது சரியல்ல என்று நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். மாநில அரசுக்கு உட்பட்ட இந்தப் பிரச்சினையில் மத்திய அரசின் சட்டத்திற்கு ஏற்ப திருத்தத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியம் என்ன ஏற்படுகிறது என்பதை முன்னவர் அவர்கள் விளக்க வேண்டும் என்பதையும் அதேபோல தமிழகத்தில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் முழுவதையும் நிலமற்றவர்களுக்கு வினியோகிப்பதில் எது தடையாக இருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள், காரண நோக்க விளக்கவுரையிலே இரண்டாவது பத்தியிலே "தமிழ்நாடு சட்டம் 3/1984 இயற்றப்பட்டதற்குப் பின்னர் நாடாளுமன்றம், அரசமைப்பின் 323-எ உறுப்பிற்கிணங்க 1985ஆம் ஆண்டு நிருவாக தீர்ப்பாயங்கள் சட்டத்தை (மையச் சட்டம் 13/1985) இயற்றியது. இந்த மையச் சட்டமானது 1986 ஆம் ஆண்டு நிருவாக தீர்ப்பாயங்கள் (திருத்த) அவசரச் சட்டத்தினால் (மைய அவசரச் சட்டம் 1/1986) திருத்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன மைய அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான மேற்சொன்ன மையச் சட்டத்தின் வகை முறைகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு சட்டம் 3/1984-ல் சில மாற்றங்களை அவசியமாக்குகிறது," என்று சொல்லியிருக்கிறார்கள்.

1986 மே 14] [திரு. பொ. உத்திராபதி]

இந்தச் சட்டம் என்ன அவசியமாக்குகிறது என்பதைப் பற்றி பதிலுரையில் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். மேலும் மைய அரசினுடைய சட்டத்திற்கு ஏற்ப இதைத் திருத்த வேண்டிய அவசியம் என்ன? இன்றைக்கு மைய அரசு செய்யக் கூடிய காரியங்களுக்கு எல்லாம் துணை போகக்கூடிய அளவிற்குத்தான் மாநில அரசின் காரியங்களும் இருக்கின்றன. அந்த வகையில்தான் மைய அரசினுடைய பல்வேறு சட்டங்களுக்கும் ஏற்ப இங்கே இருக்கக்கூடிய சட்டங்களை திருத்திக் கொண்டே போகக்கூடிய ஒரு நிலைமைக்கு இன்றைக்கு தமிழக அரசு தள்ளப்பட்டிருக்கிறது என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

ஆனால் இந்த உச்ச வரம்பு சட்டம் என்கிற இந்தச் சட்டத்தை 1961 ஆம் ஆண்டு அன்றைக்கு இருந்த காங்கிரஸ் கட்சி கொண்டு வந்த ஒரு சட்டம். அதன் மீது கிடைக்கக் கூடிய நிலங்கள் அல்லது அதன் கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள் அத்தனையும் நிலம் இல்லாத விவசாய தொழிலாளர்களுக்கு கொடுத்து அதன் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, அன்றைக்கு அந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை.

அன்றைக்கு 1961 ஆம் ஆண்டு தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு பெரிய போராட்டத்தை நடத்தி, பல்லாயிரக் கணக்கான பேர்கள் சிறை சென்று, அதற்குப் பிறகுதான் இப்படிப்பட்ட சட்டம் தமிழகத்தில் பிறப்பிக்கப்பட்டது. அந்தச் சட்டம் பிறந்ததற்குப் பிறகு பெரும்பகுதி நிலங்கள் நிலப்பிரபுகளுக்கே பாதுகாப்பு என்ற வகையில் சட்டத்தில் இருக்கிற ஓட்டைகளை வைத்து நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பழத்தோட்டம் என்ற பெயரால், ட்ரஸ்ட் என்ற பெயரால், தோப்பு என்ற பெயரால் நிலங்கள் பலவிதமாகப் பிரிக்கப்பட்டு அதன் மூலமாக குறைந்த அளவிற்குத் தான் நிலம் எடுத்தார்கள். எடுக்கப்பட்ட நிலம் விநியோகிக்கிற போது நீதிமன்றத்திற்குச் சென்று, தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அந்தச் சட்டமும் இடைக்காலத்தில் மக்களுக்கு தேவையான அளவிற்கு நடைமுறைப்படுத்த முடியவில்லை. அதற்குப் பிறகு வந்த அரசு அதைத் திருத்தி 15 ஏக்கர் என்று கொண்டு வந்து, அதையும் குடும்ப அடிப்படையில் இல்லாமல், தனிநபர் அடிப்படையில் கொண்டு வந்து அந்தச் சட்டமும் பயன்படுத்தப்பட்டு மிச்ச நிலத்தை எடுத்தார்கள். எடுக்கப்பட்ட நிலத்தில் பெரும்பகுதி தடை செய்யக்கூடிய அளவிற்கு சட்டத்திலே இருக்கிற ஓட்டைகளைப் பயன்படுத்தினார்கள். அதையெல்லாம் வைத்துத் தான் இந்த மன்றத்திலே உங்களுடைய அரசு இப்படி தொடர்ந்து வருகிற சட்டங்களில் எல்லாம் இருக்கிற ஓட்டைகளைப் பயன்படுத்தி நிலப்பிரபுக்கள் தங்கள் நலத்தை பாதுகாத்துக் கொள்கிறார்கள், சாதாரண

மக்களுக்கு பலன் அளிக்கவில்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களைப் பாதுகாக்க முடியாமல் இருக்கிறதென்று பினாமி ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தச் சட்டமும் மத்திய சர்க்காரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறாமல் இருக்கிறது.

அதைப்போல குத்தகை விவசாயிகள். நிலப்பிரபுக்கள் பினாமியாக எழுதி வைத்திருக்கிற நிலம். அவர்கள் தங்களுக்கு நம்பிக்கைக்கு உரியவர்களிடத்தில் நிலத்தைக் கொடுத்தார்கள். குறிப்பாகச் சொன்னால் வலங்கைமான் என்னுமிடத்தில் ரெங்கராஜன் என்பவர் 3, 3½ ஏக்கர் குத்தகை நிலம் வைத்து சாகுபடி செய்தார்கள். வலங்கைமானில் ரெங்கசாமி மூப்பனாருக்குச் சொந்தமான நிலம் என்று சொல்லப்படுகிறது. இப்போது நிலம் ஒரு ஆசிரியர் பெயரில் இருக்கிறது. குத்தகை பயிர் செய்வதாக பதிவுப் பத்திரம் போடுகிற போது, இன்றைக்கு கோர்ட்டிற்குப் போய், பல்லாயிரக் கணக்கான ரூபாய் வழக்கிற்குள்ளாக்கப்பட்டு, நிலம் கூட அவர்களுக்குக் கிடைக்காத சூழ்நிலை இந்தச் சட்டத்தால் ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் சட்டத்தை திருத்திக் கொண்டே போவதை விட முழுமையாக நில உச்ச வரம்புச் சட்டத்தை கொண்டு வந்தால், சட்டத்திலே இருக்கிற ஓட்டையை அடைத்துச் செய்தால், மீதி நிலங்களையும் எடுத்து நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுத்து அவர்களின் வறுமையை ஒழிக்க முடியும். எத்தனை திருத்தம் கொண்டு வந்தாலும் அவை ஏட்டளவில் தான் இருக்குமே தவிர, அரசாங்கத்தின் நல்ல நோக்கம் நிறைவேறுவது என்பது நடைமுறைக்கு ஒத்துவராததாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை விளக்குகிற போது, இந்தத் திருத்தத்தால் என்ன பலன் கிடைக்கப் போகிறது என்பதை விளக்க வேண்டும். ஆகவே வரக்கூடிய சட்டமன்றத்திலாவது பினாமி நிலங்களை எடுக்க வழிவகை செய்ய வேண்டும். குறிப்பாக இன்றைக்கு இந்தியாவில் சோஷலிசத்தை உருவாக்கப் போகிறோம் என்று சொல்கிற பெரிய மனிதர் ஒருவர் இன்றைக்கு கும்பகோணம் தாலுகாவில், வலங்கைமான், பாபநாசம் போன்ற பகுதிகளில் 4,000 ஏக்கருக்கு மேல் எழுதி வைத்திருக்கிற நிலம் இருக்கிறது. அதிலே ஒருவர் தான் நான் சொன்ன இந்த ரெங்கராஜன் என்பவர். ஆகவே இப்படிப்பட்ட நிலையில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. அதையெல்லாம் எடுப்பதற்கு அடுத்த பட்ஜெட்டிலாவது அமைச்சர் அவர்களும், அரசும் தீர்க்கமாக பரிசீலனை செய்து சட்டத்தைக் கொண்டு வந்து நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

1986 மே 14]

(மாலை 5-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தின் முக்கிய நோக்கத்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் விளக்க ஆசைப்படுகிறேன். நிலத்தைக் கையகப்படுத்தவோ, அல்லது நில உடைமைக்கோ, மற்றைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டோ, இந்தச் சட்டம் வரவில்லை. சாதாரணமாக நில உச்சவரம்புச் சட்டத்தில், பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்திற்குச் செல்லுகின்றன. ஆகவே உயர்நீதி மன்றத்தில் உள்ள பல்வேறு நீதிபதிகள் அந்த வழக்குகளை எடுத்து தீர்ப்பு அளிப்பதிலே மிக அதிகமான காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே அதற்கு என்று தனியாக நீதிபதி ஒருவரை வைத்து, தனி தீர்ப்பாயம் வைத்து விட்டால், அந்த வழக்குகள் இனிமேல் இந்த ஒரு நீதிபதியின் முன் கொண்டுவருவதன் மூலமாக, விரைவாக வழக்குகள் தீர்க்கப்பட்டுவிடும் என்பதுதான் இந்தச் சட்டத்தினுடைய முக்கிய நோக்கமாக இருக்கிறது. அப்படி ஒரு சட்டத்தை நாம் ஏற்கனவே கொண்டு வந்தோம். தனி தீர்ப்பாயம், உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற அந்த அதிகார வரம்பு ஆகியவை சிறிதும் குறைக்கப்படாமல் ஒரு தனி உயர்நீதிமன்ற நீதிபதி, இந்த தீர்ப்பாயத்திற்கு இருந்து, இந்த நில உச்ச வரம்பு பற்றி வருகின்ற வழக்குகளை எல்லாம் கவனிப்பார்கள். அதைப் பற்றி மட்டும் தீர்ப்பு அளிப்பார்கள். அதற்காக வகை செய்கின்ற ஒன்று. நாம் ஒரு சட்டம் இயற்றியதற்குப் பிறகு, அந்தச் சட்டம் செல்லாது, மையச் சட்டம் செல்லாது என்று உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு ஒன்று தொடரப்பட்டது. அந்த வழக்கினுடைய தரத்தை முறியடிப்பதற்காக மத்திய அரசு ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தது. 1/86-லே நிறை வேற்றியது. அந்த அவசரச் சட்டத்தினுடைய அடிப்படையிலே அந்த ஷரத்துக்களை நாம் சேர்த்தால்தான், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத்தான் இந்தச் சட்டத் திருத்தம் இங்கே கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இது ஒரு தனி தீர்ப்பாயமாக அமைப்பதற்கும், உடனடியாக தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்கும் யார் ரிட்டுக்குப் போனாலும் கூட, இனிமேல் ரிட்டுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது அங்கே. அவைகள் வழக்குகளாகவே, நேரடியாக அங்கே எடுத்துக் கொள்ளப்படும். இந்தச் சட்டத்தின் மூலமாக ஏற்கனவே ரிட்டுக்கள் உயர்நீதிமன்றத்திலே இருந்தாலும், அந்த ரிட்டுக்கள் எல்லாம் வழக்குகளாக மாற்றப்பட்டு, இந்தத் தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டுவிடும். ஆகவே இவ்வளவு சௌகரியங்கள் கிடைக்க இருக்கிறது. இதை எதிர்த்து, உயர்நீதிமன்றத்திற்குச் சென்றதன் காரணமாகத்தான், ஆகவே இதைச் சரியாக ஆக்கக்கூடாது என்பதற்காக, அவசரச் சட்டத்தை

மத்திய அரசு இன்றைக்கு சாதகமாகத்தான் கொண்டு வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்தத் திருத்தத்தை நாம் செய்கிறோம். இந்தத் திருத்தம் செய்ததற்குப் பிறகு தனி நீதிமன்றம் அமைந்துவிடுமானால், இதைப்பற்றிய வழக்குகளை எல்லாம் விரைவில் தீர்ப்பதற்கும் நல்லதொரு நிலைமை வருவதற்கும் வாய்ப்பாக இருக்கும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த உச்ச வரம்புச் சட்டத்தைப் பற்றி இருக்கின்ற வேறு பல குறைகளை, வேறு பலநிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். தனியாக ஆராய்ந்து அதைப் பற்றி தனியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். இது நீதிமன்றத்தைப் பொறுத்தது. இது நமக்குச் சாதகமான ஒன்று. தேவையான ஒன்று. ஆகவே இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திற்குப் பதிலாக ஒரு தனி அமைப்பாக நாம் ஏற்படுத்துகிறோம் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தீர்ப்பாயமாக அமைக்கிறோம் என்று. அதிலே தீர்ப்புகள் வழங்கியதற்குப் பிறகு, உயர் நீதிமன்றத்திற்குப் போகாமல் அதைத் தடுக்க முடியுமா? ஏன் என்றால் மறுபடியும் உயர்நீதிமன்றத்திற்கு போகக்கூடிய வாய்ப்பு இருக்குமானால், அது காலம் கடத்துவதற்குத்தான் வாய்ப்பாக இருக்கும். அந்தத் தீர்ப்பாயம் விசாரித்து முடித்ததற்குப் பிறகு, அது ஒரு உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பாக மாற்றப்படுமா? இதை மீறி உயர்நீதிமன்றத்திற்குப் போவதற்கான வாய்ப்பு நில உடைமையாளர்களுக்கு இருக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு பகுதியாகப் பிரித்து எடுக்கிறோம். ஆகவே உயர்நீதிமன்றத்திற்கு என்னென்ன உரிமைகள் தரப்பட்டு இருக்கிறதோ, அந்த தன்மையினுடைய அடிப்படையிலே உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய பண்டமென்டல் ரைட்ஸ்படி இடம் இருக்குமானால், உச்ச நீதிமன்றத்திற்கு செல்வதற்கு வழி இருக்கக்கூடும். ஆகவே உயர்நீதிமன்றத்தில் இருக்கிற நீதிபதி பல்வேறு வழக்குகளில் ஈடுபட்டு இருக்கும்போது, அவர்களுக்கு ஓய்வு ஏற்படுகிறபோது, எப்போது தோன்றுகிறதோ, அப்போதுதான் அந்த வழக்குகளில் எல்லாம் வாய்தா போடுகிற நிலைமை இருக்கும். இதற்கு என்று தனி நீதிபதியை நியமிப்பது, உயர்நீதிமன்றத்தினுடைய தகுதி பெற்ற ஒரு நீதிபதி இதற்கு தனியாக போடப்படுவார்கள். அதற்கு தனியாக கவனிக்கின்ற சூழ்நிலை வருகிறபோது, இதற்கு மேலும் முறையீடு வருகிறபோது, உயர்நீதிமன்றத்திலே இருக்கிற நிலைமையையொட்டி, உச்ச நீதி

1986 மே 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மன்றத்திற்குச் செல்வதற்கு உரிமை இருக்கிறது என்றால், அப்படிப்பட்ட சூழ்நிலை இந்த தனி தீர்ப்பாயத்திற்கும் இருக்கக் கூடும். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கக்கூடும். அது தனியாக ஆராயப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) திருத்தச் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) திருத்தச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1986) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஔ) திரையரங்குகள் (ஒழுங்கு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு திரையரங்குகள் (ஒழுங்கு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1986) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

* 1986ம் ஆண்டு மே 13ம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1986 மே 14

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு திரையரங்குகள் (ஒழுங்கு முறைப்படுத்துதல்) சட்டத்தினுடைய திருத்த முன்வடிவின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படு கிறேன். இந்த தமிழ் நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறைப் படுத்துதல்) சட்டதினுடைய 4-A பிரிவின் மூலம் பல முறை யான சலுகைகள் திரையரங்கு உரிமையாளர்களுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன. ஏற்கனவே,

Madras City Municipal Corporation Act.
Madras District Municipalities Act.
Tamil Nadu Panchayat Act.

போன்ற சட்டங்களிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்தத் திருத்த முன்வடிவின் மூலமாக Town and Country Planning Act யுடைய பிரிவுகளிலிருந்தும் திரையரங்கு கள் கட்டுவதில் விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். இன்றைக்கு திரையரங்குகள் கட்டுவதில் பல முறைகேடுகள் நடந்து வருகின்றன. இன்றைக்கு Licensing Authority யாக இருக்கின்ற மாவட்ட ஆட்சியாளர்கள் அல்லது சென்னை நகரத்திலே Commissioner of Police போன்ற அதிகாரிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற விதிமுறைகளுக்குள்ளாக இந்தக் கட்டிடங்களைக் கட்டுவதும் அதில் இயந்திரங்களைப் பொருத்து வதற்குமான விதிமுறைகளை இந்தச் சட்டத்தின் வாயிலாக கட்டுப்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்று சொல்லி இருக் கிறார்கள். ஆனால் இன்றைக்கு நம்முடைய பகுதியிலே பொது மக்களுக்காக M. M D. A. Act கொண்டு வந்திருக்கிறோம். பெரு நகருக்காக M. M D. A. Act கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தை மீறி இன்றைக்கு திரையரங்குகள் கட்டப் படுகின்றன. பொதுவாக நடுத்தர மக்கள் வீடு கட்டுவதற் கெல்லாம் இந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் கட்டிடங்கள் கட்டவேண்டும். அது Town and Country Planning Act படி கட்டிடங்கள் கட்டவேண்டுமென்றெல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே திரையரங்குகள் முதலாளிகளுக்கு மட்டும் இந்தச் சலுகைகள் தேவையானதுதானா என்பதுதான் என்னுடைய கேள்வி. என்னுடைய பூந்தமல்லி நகரத்தில்கூட பகவதி என்ற ஒரு தியேட்டர் கட்டியிருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த M. M. D. A. Act, Town and Country Planning Act சட்டங்களை மீறி கட்டியதற்காக இந்தத் திரையரங்கு திறக்கப்படாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட தவறு செய்கின்ற. திரையரங்குகளுடைய முதலாளிகளுக்காக சலுகை கொடுப்பதற்கு இந்தத் திருத்தம் கொண்டுவரப்படு கிறதா ? அல்லது பொதுமக்களுக்கு எவ்வாறு பயன்படக்கூடிய சட்டம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நம் முடைய பெரு நகர் பகுதியில் Town and Country Planning Act

1986 மே 14] [திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

என்பது மதிக்கப்படாத தன்மை இருக்கிறது. மேலும் இப்படிப் பட்ட சட்டங்கள் மூலமாக இந்தச் சட்டங்களையெல்லாம் மதிக்காமல் இருக்கிற தன்மை ஏற்படுமே தவிர இன்னும் மேலும் மேலும் திரையரங்குகள் முதலாளிகளுக்கும் ஒரு தனிப்பட்ட வர்க்கத்துக்கும் தனிப்பட்ட முதலாளிகளுக்கு சலுகைகள் கொடுக்கக் கூடாது என்று கூறிக்கொண்டு இந்தச் சட்டம் தேவையில்லை என்று கூறி விடைபெறுகிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு திரையரங்குகள் ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்ட திருத்த முன்வடிவில், சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 47/86-ஐ இங்கே முன் மொழிந்து இருக்கிறார்கள். அந்தச் சட்டத்தினுடைய காரண நோக்கங்களை விளக்கும்போது 1955 ஆம் ஆண்டு தமிழ் நாடு திரையரங்குகள் ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமானது திரைப்படம் காட்டுவதற்காக கட்டிடங்களின் கட்டுமானத்தையும் மறு கட்டுமானத்தையும் முறைப்படுத்துகின்ற வழிமுறைகளை தன்னுள்ளேயே அடக்கி இருக்கின்ற ஒரு சட்டமாக இருக்கின்ற காரணத்தால் அரசு 1971 ஆம் ஆண்டு தமிழ் நாடு நகர மற்றும் ஊர் அமைப்பு சட்டத்தின் தமிழ் நாடு சட்டம் 35/72 வழிமுறைகளும்கூட கட்டிடங்கள் அத்தகைய கட்டுமானத்திற்கோ மறு கட்டுமானத்திற்கோ பொருந்தாததாகச் செய்யப் பட வேண்டுமென்று கருதுகிறது.

(மாலை 5-50)

இச்சட்ட முன்வடிவு மேற்காணும் கருத்துருவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது என்று காரண நோக்கத்தில் விளக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இன்றைக்கு தமிழகத்தில் இந்த காரண நோக்கத்தில் விளக்கப்பட்டு இருக்கக்கூடிய அளவுக்கு இந்த திரைப்பட கொட்டகைகளுடைய கட்டிடங்கள் என்பது இன்றைக்கு அமைக்கப்பட்டு இருக்கிறதா? அல்லது பழைய கட்டிடங்கள் சரிபார்க்கப்பட்டு பல்வேறு நகரங்களில் இந்த பில்டிங் இன்ஸ்பெக்டர்கள் இந்த கட்டிடங்கள் திரைப்படம் காட்டுவதற்கு சரியானது என்று சர்டிபிகேட் வழங்கியிருக்கிறார்களா? அதற்கு பொருத்தமான முறையில் அந்தக் கட்டிடங்கள் எல்லாம் இப்போது இருக்கிறதா? அது என்ன காரணத்தினால் மிக பாழடைந்த கட்டிடங்களை கூட பல ஆண்டுகள் ஆகி அது எந்தவிதமான பயனுக்கும் உகந்ததாக இல்லாத கட்டிடங்களுக்கு எல்லாம் அவைகள் தகுதி உள்ள கட்டிடங்கள் என்று பில்டிங் இன்ஸ்பெக்டரால் சர்டிபிகேட் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குள்ளே என்ன இருக்கிறது? என்ன நடக்கிறது? இவைகள் அரசுக்குத் தெரியுமா? இதனுடைய விளைவாக ஏற்படக்கூடிய சங்கடங்கள் என்ன என்பது உங்களுக்கு எல்லாம் நன்கு தெரியும்.

[திரு. கோ. வீரய்யன்] [1986 மே 14

சென்ற ஆண்டு ஆரம்பத்திலேயே தஞ்சை நகரத்தில் திரைப் படம் ஓடிக்கொண்டு இருக்கும் போதே ஒரு திரைப்படக் கொட்டகை இடிந்து விழுந்து அந்த திரைப்படத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தவர்களை எல்லாம் வெளியேற்றக்கூடிய நிலை ஏற்பட்டதும், பலர் உயிர் இழப்பு ஏற்பட்டதும் உயிர் இழப்பு ஏற்பட்டதற்குப் பின்னால் நாம் அதற்கு அனுதாபம் தெரிவிப் பதும், அதற்கு யார் சம்பந்தப்பட்டவர்கள் என்று பார்த்து நடவடிக்கை எடுப்பதும் என்பது மட்டும் போதுமானது அல்ல. ஆக இன்றைக்கும் இந்தச் சட்டம் இருந்தாலும் இந்தச் சட்டத்தை அமல் நடத்தக்கூடிய அந்தத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கொஞ்சம்கூட மதிப்பது இல்லை, இதை அமல் நடத்துவது இல்லை, என்பதை இந்த நேரத்தில் கூற வேண்டியிருக்கிறது, மிக வருத்ததோடு.

உதாரணமாக சொல்ல வேண்டுமானால், தஞ்சை மாவட் டத்தில் ஒரு சம்பவத்தை நான் குறிப்பிட்டேன். என்னுடைய தொகுதியில் தலை நகரமாக இருக்கின்ற நாகை நகரத்தில் 2 தியேட்டர்கள் இருக்கின்றன. ஒன்று பாண்டியன் தியேட்டர், ஒன்று ஸ்டார் தியேட்டர் இருக்கிறது. அந்த தியேட்டர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கட்டிடங்கள். அவைகளில் எந்தவிதமான வசதியும் இல்லை. எந்தவிதமான பாது காப்பும் இல்லை. அந்த தியேட்டர்களில் படம் பார்க்கச் செல்பவர்கள் உயிருக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. அப்படிப்பட்ட நிலையில் நாகை நகரத்தில் இருக்கக்கூடிய 2 தியேட்டர்களின் கட்டிடங்கள் இருக்கின்றன. அந்த தொகுதி யின் கட்டிடங்கள் நன்றாக இருக்கிறது என்று சொல்லி பில்டிங் இன்ஸ்பெக்டர்கள் சர்டிபிகேட் கொடுத்து இருக்கிறார்கள்.

அதேபோல் திருவாரூர் நகரத்திலே தேவி என்ற தியேட்டர் இருக்கிறது. அம்மையப்பா தியேட்டர் என்று இருக்கிறது. அதுவும் கிட்டத்தட்ட 50, 60 ஆண்டுகளுக்கு முன்னால் இருக்கக் கூடிய கட்டிடங்கள். மிகவும் பாழடைந்த கட்டிடங்கள். அந்த கொட்டகைகளுக்குள் சாதாரண மனிதர்கள் அமர்ந்து திரைப் படம் பார்க்க முடியாத அளவுக்கு மிகவும் மோசமாக புழுதி படிந்து இருக்கக்கூடிய முறையில் அப்படிப்பட்ட தியேட்டர்கள் ஒவ்வொரு நகரத்திலும் தமிழகம் முழுவதும் இன்றைக்கு பல கட்டிடங்கள் இருக்கின்றன. அப்படி இருந்தாலும் அது திரைப் படம் காட்டுவதற்கு தகுதியான கட்டிடங்கள் என்று சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உரிமம் வழங்குகிறார்கள். இவைகளை எல்லாம் கண்காணித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையில் அந்த துறை இருப்பதற்கு பதிலாக இந்த தவறுகளுக்கு முழு உடந்தையாக அல்லது அதற்கு உதவி செய்யக்கூடிய முறையில் சம்பந்தப்பட் அதிகாரிகள் இருக்கிறார்கள். இவைகளை எல்லாம் தடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்

1986 மே 14] *[திரு. கோ. வீரய்யன்]*

என்றும் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது மட்டும் அல்லாமல் இந்தச் சட்டத்தை சரியாக அமல் நடத்துவதற்கு உண்டான முறையில் முயற்சி எடுக்கவேண்டும் என்றும் கேட்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. சி பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பொறுத்த வரைக்கும் திரைப்படம் காண்பிப்பதற்காக கட்டப்படும் கட்டிடங்கள், மாற்றி அமைக்கப்படும் கட்டிடங்கள் அவற்றில் திரைப்படம் காண்பிப்பதற்கான இயந்திர சாதனங்கள் பொருத்துவதற்கான அனுமதியை கோரும் விண்ணப்பங்கள் 1971 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு நகர் மற்றும் ஊர் அமைப்புச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்கும், வரைமுறைகளுக்கும் உட்படுத்த வேண்டியது இல்லை. அதற்கு மாறாக 1955 ஆம் ஆண்டு தமிழ் நாடு சட்டத்தின் கீழ் 5(ஆ) என்ற திருத்தப் பிரிவை கொண்டு வந்து அதற்குள் அதை உட்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்த கிருஷ்ணா அவர்கள் பேசுகின்றபோது சில ஐயங்களை, ஆதாரமற்ற ஐயங்களை தெரிவித்தார்கள். கட்டிடங்கள் கட்டுவதிலே தற்போது முறைகேடுகள் இருக்கின்றன, திரையரங்குகள் கட்டுவதிலே என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தினுடைய நோக்கம், ஏதோ தற்போது திரையரங்குகளுக்கு இல்லாத சலுகைகளை புதியதாக இந்தச் சட்டத்தின் மூலமாக திரையரங்குகளுக்கு சலுகை கொடுப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவர் சட்டத்தினுடைய ஷரத்துக்களைப் படித்து இருப்பார் என்று கருதுகிறேன். அதிலே எந்த ஒரு இடத்திலும் திரையரங்குகளுக்கு சலுகை கொடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம் என்று குறிப்பிடப்படவில்லை. அந்த எண்ணமும் இல்லை. திரையரங்குகளைப் பொறுத்த வரைக்கும் அந்தக் கட்டிடத்திற்கு வேண்டிய உரிமங்களை எல்லாம் பெறுகின்றபோது, 1955-ஆம் ஆண்டிலே தமிழ் நாடு திரையரங்குகளை வரைமுறைப்படுத்துகின்ற சட்டம் இயற்றப்பட்ட சமயத்திலே, இந்தச் சட்டம் அப்போது நடைமுறையில் இருந்து, 1926-ஆம் ஆண்டிலே இயற்றப்பட்ட தமிழ் நாடு நகர அமைப்பு சட்டம், தமிழ் நாடு திரையரங்குகள் சட்டம் 55(5)-வது பிரிவிலே சேர்க்கப்படவில்லை. அதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதாவது எந்தெந்த சட்டங்கள் திரையரங்குகளை வரைமுறைப்படுத்துவதில் அனுசரிக்கத் தேவையில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கின்ற அந்தப் பிரிவில் அப்போது நடைமுறையில் இருந்துவந்த தமிழ் நாடு நகர அமைப்புச் சட்டம் 1920-ல் குறிப்பிடப்படவில்லை என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏதோ திரையரங்குகளை நடத்துகிற முதலாளிகளுக்கு சலுகை காட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தச் சட்டம்

கொண்டுவரப்பட்டது என்றால், 1955 ஆம் ஆண்டு வாக்கில் இங்கே காங்கிரஸ் ஆட்சிதான் இருந்தது. மாண்புமிகு உறுப்பினருடைய இயக்கம்தான் இருந்தது. அப்போது 1920-வது ஆண்டு தமிழ்நாடு நகர அமைப்புச் சட்டம் இந்த ஷரத்துக்களுக்கு உட்படுத்தப்படாத போதே, அப்போது உள்ள அமைப்பில் திரையரங்கு முதலாளிகளுக்கு சலுகை தருவதற்காக இதைக் கொண்டுவருவதாக மாண்புமிகு உறுப்பினர் கருதுவதாக நான் அச்சப்படுகிறேன். ஒரு சட்ட முன் வடிவைக் கொண்டுவருகிற போது அதனுடைய உள் நோக்கம் என்ன, ஷரத்துக்கள் என்ன என்பதை நன்கு அறிந்து பார்த்தால் அது சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதனை பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தற்போது இருக்கின்ற திரையரங்குகள் சட்டத்தைப பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். பஞ்சாயத்தில் விதிவிலக்கு இருக்கிறது. முனிசிபாலிட்டியில் விதிவிலக்கு இருக்கிறது. தற்போது எம்.எம்.டி.ஏ. ஆக்டிலிருந்து விதிவிலக்கு தரப்படுகிறது. இந்த பஞ்சாயத்து ஆக்டிலிருந்தும் முனிசிபாலிட்டி ஆக்டிலிருந்தும் கொடுக்கப்பட்ட விதிவிலக்கு அந்தக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உள் நோக்கத்தோடு முதலாளிகளுக்கு சலுகை செய்யும் நோக்கோடு அரசு கொண்டு வந்ததாக மாண்புமிகு உறுப்பினரே ஒத்துக்கொள்கிறார் என்ற முறையிலே அவர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படி பேசக் கூடாது என்பதற்காகத்தான நான் சொல்கிறேன். விதிவிலக்கு என்பது ஏதோ ஒருவருக்கு சலுகை நோக்கத்தோடு கொடுக்கப்படுவது அல்ல. எம்.எம்.டி.ஏ. நகர அமைப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுத்து 'Everything should be brought under one roof'. என்ற முறையிலே Single Window Clearance concept. என்று சொல்லக் கூடிய ஒரு குடையின் கீழ் எல்லா உரிமங்களும் வழங்கப்பட வேண்டும் என்ற முறையிலே இந்தச் சட்டத்தை 1955 ஆம் ஆண்டிலே கொண்டு வந்திருக்கிறார்கள். அப்போது எம்.எம்.டி.ஏ. ஆக்ட் இல்லை. அதற்குப் பிறகு 1971-ல் தான் எம்.எம்.டி.ஏ. ஆக்ட் வந்தது. ஒருவேளை 1955 ஆம் ஆண்டிலே எம்.எம். டி.ஏ. ஆக்ட் இருந்திருக்குமேயானால் அன்று ஆண்ட காங்கிரஸ் கட்சியே எம்.எம்.டி.ஏ. ஆக்டிற்கு எப்படி பஞ்சாயத்து ஆக்டிற்கு முனிசிபாலிட்டி ஆக்டிற்கு விதி விலக்கு வந்ததோ இதையும் கொண்டு வந்திருக்கும். 1971-ல் தான் எம்.எம்.டி.ஏ. ஆக்ட் வந்தது. தற்போது இந்த பிரிவுகளைப் பொறுத்த வரைக்கும் 1971-ஆம் ஆண்டில் சில விதிமுறைகள் உண்டு. 1971-ஆம் ஆண்டு எம்.எம்.டி.ஏ. ஆக்டில் கட்டிடங்கள் இப்படித் தான் இருக்கவேண்டுமென்று விதிமுறைகள் உண்டு. இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரைக்கும் திரையரங்குகளுக்கான கட்டிடங்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று There are no express provisions with regard to the cinema theatres anywhere in the provisions of MMDA Act '71. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு இதை

நான் கொண்டுவரவிரும்புகிறேன். This is a hyper-technical interpretation. In MMDA Act there is express provision and there is express provision in Panchayat Act, and Municipality Act பொறுத்தவரைக்கும் Express Provision என்ற முறையிலே 1955 ஆம் ஆண்டு திரையரங்குகள் சட்டத்திலே விதி விலக்கு இருக்கிறது. விதிவிலக்கு என்றால் எப்படி வேண்டுமானாலும் கட்டிடங்களைக் கட்டிக்கொள்ளலாம் என்பது அல்ல. இப்படித்தான் கட்டிடங்களைக் கட்டவேண்டுமென்று 1955 ஆம் ஆண்டிலே திரையரங்குகள் சட்டத்தின் கீழ் வந்து விட்டது. திரையரங்குகள் சட்டத்தின் கீழ் ஒரு சினிமா தியேட்டர் இந்த விதிக்கு உட்பட்டுத்தான் இருக்க வேண்டும் என்று வகுக்கப்பட்ட பிறகு அதற்கு 'டியூவல் ரோல்' தேவையில்லை 3, 4 அதிகாரிகளிடம் செல்லவேண்டிய நிலையில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவரே திரையரங்குகள் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று வழிமுறையிலே சட்டத்திற்கு உட்பட்டு அனுமதி வழங்கலாம். அதை விடுத்து டவுன் பிளானிங்கில் ஒரு அதிகாரி, அல்லது பஞ்சாயத்துக்கு ஒரு அதிகாரி முனிசிபாலிட்டிக்கு ஒரு அதிகாரி, ஹெல்த்திற்கு ஒரு அதிகாரி. இவ்வாறு பல்வேறு இடங்களில் சுற்றி அலைகிறபோது தவறுகள் நடப்பதற்கு, தாமதம் ஏற்படுவதற்கு அது இடம் தந்து விடுகிற காரணத்தினால்..

(மாலை 6–00 மணி)

Under one roof, under one single licensing authority, all the licensing procedures should be brought என்ற முறையில் 55-வது ஆண்டிலேயே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதே நோக்கத்தைத் தான் இந்தச் சட்டம் தற்போது எம்.எம்.டி.ஏ.-வைப் பொறுத்தும் நிறைவேற்றுகிறது. எம்.எம்.டி.ஏ. சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் இப்படி இப்படி விதிகள் இருக்க வேண்டும், கட்டிடங்கள் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. சினிமா தியேட்டரைப் பொறுத்த வரைக்கும் உயரமான அளவுக்கு திரையரங்குகள் இருக்கின்றன. ஆனால் சென்னையிலே இருக்கிற எம்.எம்.டி.ஏ. சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட உயரத்திற்கு மேல் போகக்கூடாது என்ற இருக்கிறது.

அந்தச் சட்டத்தினுடைய ஷரத்துக்களை வைத்து 4 மாடிக் கட்டிடத்திற்கு மேல் அங்கே கட்டக்கூடாது என்று சொல்லி சினிமா தியேட்டரினுடைய உயரத்தை 10 அடி 20 அடி 30 அடிக்குள் நிறுத்திவிட வேண்டும் என்று—2 தியேட்டர். Three in one or two in one. என்று வருகிற சினிமா தியேட்டர்களுக்கு உயரத்தைக் கூடாது என்று சொன்னால் இந்தச் சட்டத்திலே இருக்கிற இந்த விதியை நடைமுறைப் படுத்துகிறபோது அந்த சினிமாத் திரையரங்கு முதலாளிகளுக்கு சலுகையாக அமைந்து விடுமே ஒழிய இந்தப் புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துகிறபோது அவர்களுக்கு சலுகை கிட்டாது. மாறாக நடைமுறையிலே திர

[திரு. சி. பொன்னையன்] [1986 மே 14

யரங்குகள் எப்படி இருக்கவேண்டும் மக்களுக்கு வசதியாக எப்படி இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு ஈடேற்றக்கூடியதாகத் தான் இது அமையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரையரங்குக் கட்டிடங்கள் என்பது வேறு. அமைப்புக்கள் வேறு. பல மாடிக் கட்டிடங்கள் என்பது வேறு. எம்.எம்.டி.ஏ. ஆக்ட்டைப் பொறுத்தவரையிலும் திரையரங்குகளுச்கென்று தனியாக விதிகள் அல்ல. பல மாடிக் கட்டிடங்களுக்கு இருக்கின்ற விதிகளை அப்படியே திரையரங்குகளுக்கு கடைப்பிடிக்க முடியாது. ஆனாலும் திரையரங்குகளைப் பொறுத்தவரையிலும் ஒரே தியேட்டராக இருந்தால் எப்படி? ஒரே தியேட்டருக்குள் 2 தியேட்டர் 3 தியேட்டர் வருமேயானால் எப்படி? எந்த அளவுக்கு உயரம் இருக்க வேண்டும்? எந்த அளவு அகலம் பாதை இருக்க வேண்டும்? மற்ற வசதிகள் இருக்க வேண்டும் என்பதை எல்லாம் இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு சட்டத்தின் கீழேயே வரவேண்டும். திரையரங்குகள் சட்டத்தை ஈடேற்றக்கூடியவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரும் கமிஷனரும். எம்.எம்.டி.ஏ. சட்டத்தை ஈடேற்றக்கூடியவர்கள் வேறு எங்கோ இருந்து எந்த மாநிலத்திலிருந்தோ வருகிற அதிகாரிகள் ஈடேற்றவில்லை. அதுவும் தமிழகத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மூலமாக ஈடேற்றப்படுகிறது.

ஒரு தொழிலைப் பொறுத்தவரைக்கும் இரண்டு அதிகாரிகளுடைய பரிசீலனைக்கு உட்படுத்துவது அவருக்கு தொந்தரவைத் தரும், இடைஞ்சலைத் தரும். அதை விட தவறுகள் நடப்பதற்குக் கூட, தாமதம் நடப்பதற்குக் கூட வழிவகை தந்துவிடும் என்ற காரணத்தால் Under one roof it should be brought என்பதுதான் நோக்கம்.

தற்போது இந்த திரையரங்குச் சட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த அதிகாரம் வந்த பிறகு அந்தக் கட்டிடம் எந்தெந்த விதிகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்பதை விதிகளில் சேர்க்கப்பட்டு, The legislation is being introduced and the Rules thereto will be framed taking into account the requirements for permanent theatres. அந்த அடிப்படையில் திரையரங்குகளுடைய சட்டத்திற்குட்பட்டு விதிகளும் வகுக்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்படும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் வீரையன் அவர்கள் பேசுகின்றபோது பழுதடைந்த கட்டிடங்களுக்கு தகுதிச் சான்றிதழ்கள் கிடைக்கின்றன என்பதை சொல்லியிருக்கிறார்கள். பழுதடைந்த கட்டிடங்களைப் பொறுத்தவரையிலும் Cinematograph Act and the Rules made there under என்ற விதிக்குட்பட்டு, அவை மாற்றி அமைக்கப்பட்ட பிறகுதான் அவற்றுச்கு உரிமங்கள் வழங்கப்படவேண்டும். எங்கும் அப்படி தவறுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டுவீர்களானால் கட்டாயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச்

சொல்லி இந்தச் சட்டமுன்வடிவை அவை நிறைவேற்றித் தர மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை வேண்டு கிறேன்.

THIRU G. ANANTHAKRISHNA: Hon. Mr. Deputy Speaker, the Tamil Nadu Cinematograph Act is an Act enacted in 1955. Exemption from the Panchayat Act has been provided. Those Acts were Acts of 1918, 1920 and 1950. The Cinema Regulation Act is the latest Act. Therefore, the provisions in the Tamil Nadu Cinema Regulation Act are progressive, and exemptions were given. Hon. Mr. Deputy Speaker, M.M.D.A. Act is the most progressive legislation compared to the Cinema Regulation Act. Therefore, we are going a step back by adopting the Cinema Regulation Act, leaving MMDA Act. When the Congress Government adopted the Tamil Nadu Cinema Regulation Act, it exempted the cinema theatres from the old provisions of law, not the latest provisions of law.........

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: கிளாரிபிகேஷனை சுருக்கமாகக் கேட்கவேண்டும். விவாதமாக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பேசு கின்றபோது தெளிவாகச் சொன்னேன். 1920-வது ஆண்டு நகரமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. அந்தச் சட்டத்தி னுடைய விதிமுறைகள் உள்ளடக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு சினிமா அரங்கைப் பொறுத்தவரைக்கும், நகராட்சி சட்டம் பஞ்சாயத்து சட்டத்திற்கு உட்பட்டு விதிகள், அங்கும் அந்த உரிமையாளர்கள் உரிமம் பெறுகிற அவர்களுடைய மனுக்கள் செல்லும் என்றும், 55-வது ஆண்டு சட்டத்தின் கீழ் செல்ல வேண்டும் என்ற நோக்கம் இருந்து இருக்குமேயானால, 55-வது ஆண்டு சட்டத்திலேயே 1920-வது ஆண்டினுடைய சட்டத்தி னுடைய உள் பிரிவினை சேர்த்து இருக்க வேண்டும். அப்படிச் சேர்த்திருக்கவில்லை. அதிலிருந்து 1955-வது ஆண்டைப் பொறுத்த சட்டத்தைப் பொறுத்தவரைக்கும், Under one roof the Cinematograph provisions and the Rules made thereunder should be implemented என்பதைக் கருத்திற்கொண்டு செயல்பட வேண்டு மென்ற நோக்கத்தில் அந்தச் சட்டம் இயற்றப்பட்டது. தற்போது புதிய சட்டம் வருகின்ற காரணத்தால் எந்த முறையில் திரை யரங்குகள் taking into consideration the relevant factors prevailing as on date என்பதை அடிப்படையில்கொண்டு அதற்காக விதிகள் வகுக்கப்படும் என்பதைத் தெளிவாக்கி இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்கு முறைப் படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(அஅ) நகராண்மைச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 48/1986), *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின்படி நகராட்சி அல்லது மாநகராட்சி எல்லைக்குள்ளே இருக்கும்படியான சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய தொகுதி அந்த வட்டாரத்தில் வரும்படியான உறுப்பினர்களும், அந்தப் பகுதியிலே குடி

* 1986 ஆம் ஆண்டு மே 13-ந் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

யிருக்கும் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும், அவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஏற்படுத்தி போகக்கூடிய ஒரு குழு—அட்வைசரி போர்டு என்ற அந்தக் குழுவிலே அவர்கள் அங்கம் வகிக்கலாம் என்ற ஒரு ஏற்பாடாக இந்தச் சட்டம் வருகிறது.

ஆனால் இப்பொழுது இந்தக் குழு ஏற்படுத்தப்படுவது சென்னையிலேதான். மாநிலத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகளைப் பொறுத்தும் விரிவானதொரு சட்டத்தைக் கொண்டு வர அரசு பரிசீலித்து வருகிறது என்றும், அத்தகைய சட்டம் கொண்டு வருவதற்கிடையே, சென்னை மாநகரைப் பொறுத்த வரையில், தனி அலுவலருக்கு அறிவுரை (ஆலோசனை) வழங்குவதற்காக ஆலோசனைக் குழு அப்படிப்பட்ட அந்தக் குழுவிலே இப்படி சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் அரசால் நியமிக்கப்படும் உறுப்பினர்களும் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவாக அது அமைக்கப்படும். அந்தக் குழுவிற்கு சில வரையறைகள் செய்யப்பட வேண்டும். இந்தக் குழு எப்போது கூடும், இதில் என்னென்ன பேசலாம், இதனால் என்ன நன்மை என்பதைப்பற்றியெல்லாம் சில வரையறைகளைச் செய்து கொடுக்க வேண்டி உள்ளது.

நான் சொல்வதெல்லாம், ஆலோசனைக் குழுக்கள் வேண்டும் என்பதைப்பற்றிப் பல சந்தர்ப்பங்களிலே நாம் இந்த மன்றத்திலே எடுத்துக் கூறி கேட்டு வந்திருக்கிறோம். நமது மாண்புமிகு அமைச்சரவர்களும், கட்டாயமாக ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும் என்று பலமுறை சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது சென்னைக்கு மட்டும்தான் இந்தக் குழு வரப்போகிறது. மற்றபடி, மதுரை, கோவைக்கு என்ன நிலை?

கோவை மாநகராட்சி ஏற்படுத்தப்பட்டதிலிருந்து இன்றைய தினம் வரையில் தேர்தல் இல்லை; தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்கள் இல்லை; ஆலோசனைக் குழு இல்லை. ஆனால் மாநகராட்சியாக ஆவதற்கு முன்பு, நகராட்சியாக இருந்த போது ஆலோசனைக் குழு இருந்தது. அந்தக் குழுவில் நாங்கள் நகரத்தில் உள்ள பல பிரச்சினைகளைப் பற்றிப் பேசி, நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தது. ஆனால் அதுவும் இப்பொழுது டிஸ்கன்டினியூ ஆகிவிட்டது அது மாநகராட்சியாக ஆகிவிட்டதால். கிட்டத்தட்ட ஐந்து வருடங்களைத் தாண்டியாகி விட்டது. எப்பொழுது அதற்குத் தேர்தல் என்பதே நமக்குத் தெரியாது.

மதுரையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே தேர்ந்து எடுக்கப்பட்ட கவுன்சில் இருந்த இடம். ஆனால் கோவையைப் பொறுத்தவரையில் அப்படி இல்லாத இடம். இதுவரைக்கும்

அந்த கோவை மாநகராட்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் இருந்தது கிடையாது. ஆகவே, சென்னை மாநகராட்சிக்கு மட்டும் இப்படிப்பட்ட ஆலோசனைக் குழு வருகிறது, கோவைக்கும் இப்படிப்பட்ட குழு—ஆலோசனைக் குழு இல்லாமல் இருக்கிறது.

(மாலை 6-10)

அந்த நிலைக்கு என்ன காரணம் என்பது புரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால், இந்தச் சட்டம் வருகின்றபொழுது மூன்றே மூன்று மாநகராட்சிகள்தானிருக்கின்றன. அந்த 3 மாநகராட்சிகளிலும் அப்படிப்பட்ட ஆலோசனைக் குழுக்கள் இருக்க வேண்டும். அதே போன்று நகராட்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில்கள் இருப்பதால், இந்த மாதிரி பிரச்னைகள் இல்லை. அங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், அங்கேயிருக்கிற கூட்டங்களில் பங்கெடுக்க சந்தர்ப்பம் கிடைத்தால், அது உதவிகரமாக, ஜனநாயக முறையில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு, அதிகப்படியான மக்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும். அது நல்லது. ஆனால், இந்த 3 மாநகராட்சிகளுக்கும் சேர்ந்து, இந்தச் சட்டத் திருத்தத்திலேயே கொண்டு வந்திருக்கக்கூடாதா? ஏன் முடியவில்லை? இப்பொழுது முடியவில்லையென்றால், அரசின் நோக்கம் என்ன? அந்த இரண்டு மாநகராட்சிகளுக்கும் ஆலோசனைக் குழுக்கள் கட்டாயம் இருக்க வேண்டுமென்பது தான் எங்களுடைய கோரிக்கை. இப்பொழுது செய்யாவிட்டால் எப்பொழுது செய்யப் போகிறார்கள்? என்ன செய்யப் போகிறார்கள்? அந்தக் குழுக்கள் வருமா? அமைக்கப்படுமா என்பதைப் பற்றி, அமைப்பதற்கான வாக்குறுதியை இந்த மன்றத்திலே அமைச்சர் அவர்கள் தர வேண்டும்; அப்படிக் கொடுத்தால், பின்னாலே அரசாங்கம் செய்வதற்கு வழி இருக்கும். அந்த வகையிலே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தத் திருத்தச் சட்டத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒருசில விளக்கங்கள் அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மானியக் கோரிக்கை விவாதத்தில் இந்த அவையிலே பேசிய நேரத்தில், மாநகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்திய நேரத்தில், இந்தத் தேர்தலை நடத்துவதற்கு முன்னால், நாங்கள் ஒரு அட்வைசரி கமிட்டியை அமைப்போம் என்று சொன்னார்கள். அதை ஊர்ஜிதம்

1986 மே 14] [திரு. சு. பாலன்]

செய்வதற்காகத்தான் இன்றைய தினம் இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே (பி) என்ற தலைப்பிலே, (1) மாநகரின் பகுதி எதையேனும்

உள்ளடக்கிய தொகுதிகளுக்குப் பிரதிநிதியாக இருக்கத் தெரிவு செய்யப்பட்ட மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்களவை உறுப்பினர்கள்; (2) சாதாரணமாக மாநகரில் குடியிருந்து வருகின்ற மாநிலச் சட்ட மேலவை உறுப்பினர்கள் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள்; (3) மாநில அரசால் பெயர் குறித்து நியமிக்கப்படக் கூடிய பதினைந்து நபர்களுக்கு மேற்படாதவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீங்கள் இந்தத் திருத்தங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, அதற்குப் பின்னால், 15 பேர்களுக்கு மேல் அரசால் நியமிக்கப்படக்கூடியவர்கள் இந்தக் குழுவில் இருப்பார்கள் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அந்த 15 பேர்கள் யார் என்பதைத் திட்டவட்டமாகத் தெரியப்படுத்தவில்லை. அதே நேரத்திலே, மேலவை நீக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை அரசு இன்றையதினம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். எதிர் காலத்தில், மேலவை இருக்காது என்ற நிலையில், இது தேவைதானா என்பதை அமைச்சரிடத்திலேயிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, ஏற்கனவே சென்னை மாநகரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் மாநகராட்சி வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. எங்களைத்தான் மக்கள் அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். காலையிலே, எழுந்தவுடனே, அங்கே குப்பை அகற்ற வேண்டும், இங்கே சாக்கடை அடைத்திருக்கிறது, தண்ணீர் வரவில்லையென்றெல்லாம் மக்கள் இன்றைய தினம் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றைக் கவனிப்பதற்கே எங்களுக்கு நேரம் சரியாக இருக்கிறது. அந்நிலையைப் போக்கத்தான் நாங்கள் அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தோம்; சென்னை மாநகராட்சிக்கு உடனடியாகத் தேர்தலை நடத்துங்கள் என்று. அவர்கள் தேர்தல் நடத்த முடியாத சூழ்நிலையிருக்கிற காரணத்தால், இன்று இப்படி அடவைசரி போர்டில் உறுப்பினர்களாக்கிவிட்டு, தேர்தலை இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு நடத்த முடியாத சூழ்நிலை இருக்குமோ என்ற அச்சம் ஏற்படும். அது மட்டுமல்ல, அந்த அட்வைசரி கமிட்டி போடுவதால், எங்களுக்கு இன்னும் அதிகமான வேலைகள் வரும், குறைபாடுகளை எங்களிடம்

அதிகமாக வற்புறுத்துவார்களோ என்ற கவலை இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்ளவிரும்புவது, நாங்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினர்கள். எங்களுக்கும் அத்தகைய தொல்லை இருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இந்த மாநகராட்சித் தேர்தலை நடத்தி எங்களை விடுவிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சி உறுப்பினருக்கும், சட்டப்பேரவை உறுப்பினருக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை அவர் அறியாதவர் அல்ல. ஏற்கனவே உள்ளாட்சித் தலைவராக இருந்தவர் அவர். எல்லாவகையிலும் அதைப்பற்றி நன்கு அறிந்தவர் என்பதனால் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆண்டு இதே ஏப்ரல் மாதத்திற்கு முன்னால் மேம்பாட்டுக் குழு என்று ஒரு குழுவை அமைத்து அந்த குழுவிலே எங்களையெல்லாம் அங்கத்தினர்களாக ஆக்கி சென்னை மேம்பாட்டு வேலைகளை பார்ப்பதற்காக மாதந்தோறும் மரியாதைக்குரிய முதல்வர் அவர்களும், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் அதில் கலந்து கொண்டு சென்னை மாநகராட்சிக்கு செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் அவ்வப்போது கலந்து பேசி செய்யலாம் என்று சொன்னார்கள். அப்போது முதல்வர் அவர்கள் சொன்னார்கள். மாதத்திற்கு ஒரு முறை நாம் கூடலாம் என்று சொன்னார்கள். நான் அதைப்பற்றி மிகத் தெம்பாக இருந்தேன். ஆனால் கடந்த ஓராண்டு காலம் ஆகியும் அந்த குழு நடைபெறவில்லை. அப்படி ஒரு நிலைமை இந்த அட்வைசரி போர்டிலே ஏற்படுமா என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே நீங்கள் சென்னை மாநகராட்சிக்கு மட்டும் இத்தகைய அட்வைசரி போர்டு போட்டுவிட்டு மற்ற இரண்டு நகராட்சிகளுக்கு போடவில்லை என்ற வருத்தத்தை திரு. ரமணி அவர்களும் சொன்னார்கள். ஆகவே கூடியசீக்கிரம் மாநகராட்சி தேர்தலை வரவழைத்து மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வந்து செய்வதற்கான வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அட்வைசரி போர்டு ஏற்கனவே அமைக்கப்பட்ட அந்த மேம்பாட்டு குழுவைப்போல் அல்லாமல் அவ்வப்போது கூடி மக்களுடைய குறைகளை கேட்டறிந்து அவைகளை நீக்குவதற்கான வழிவகைகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எ. எஸ். ஆர். ஆறுமுகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிகள் ஆகியவை தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவு இப்போது ஆய்விலே இருக்கிறது. நேற்றே நான் சொன்னேன். மாநகராட்சி தேர்தலை நடத்த வேண்டும். நடைபெறாமல்

1986 மே 14] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

இருப்பதற்கு பல காரணங்களைச் சொல்லி அட்வைசரி போர்டில் ஆலோசனையெல்லாம் சொல்லலாம் என்று நீங்கள் சொல்லி யிருக்கிறீர்கள். மாநகராட்சி தேர்தல் நடத்துவதற்கு இப்போது எந்தவித சிரமமும் இல்லை. மாநகராட்சி அளவிலே இருக்கக் கூடிய சேலம், திருச்சி, திருநெல்வேலி போன்ற நகராட்சிகளுக் கெல்லாம் தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. அவைகளும் மாநக ராட்சி அந்தஸ்து வரக்கூடிய தகுதியுள்ள நகரங்கள் தான். அங் கேயெல்லாம் தேர்தல் நடத்தியபோது இங்கே தேர்தல் நடத்து வதற்கு என்ன சிரமம் என்று புரியவில்லை. போர்ட் அமைப்ப தாகச் சொல்வது காலத்தை கடத்துவதற்காகத் தான் என்று நான் கருதுகிறேன். அந்த போர்டில் உறுப்பினர்களுக்கு காலவரை யறையெல்லாம் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அரசு விதிகளிலே இதைப்பற்றியெல்லாம் குறிப்பிடவேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படி பார்க்கும்போது நீங்கள் ஓரிரு வருடங்களுக்கு இதை நீட்டித்துக்கொண்டு செல்வீர்களோ என்ற அச்சம் எங்களுக்கு இருக்கிறது. எனவே, மாநகராட்சி தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் பங்குகொள்வதோடு தவிர அரசால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் 15 பேர்கள் அந்த குழு வில்சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த அதிகப் படியான 15 உறுப்பினர்கள் ஏன் என்று எங்களுக்குத் தெரிய வில்லை. மாநகராட்சி கமிஷனர், தனி அதிகாரி தனியாக நிர் வாகத்தை சரிவர செய்ய முடியவில்லை. இந்த குழுவிற்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் போதும். இந்த குழுவை அமைப் பதாக இருந்தால், கோவை, மதுரை மாநகராட்சிக்கும் இப்படி குழுவை அமைக்க வேண்டும். குழு அமைப்பது முக்கியம் அல்ல. 3 மாதம் 6 மாதத்திற்குள்ளாவது மாநகராட்சி தேர்தலை நடத்த வேண்டும். குழு அமைப்பது தேவையில்லை என்று சொன்னாலும் கூட சட்டமன்றத்தில் மெஜாரிட்டி வைத்து நீங்கள் நிறைவேற்றி அந்த குழுவை நீங்கள் அமைக்கப் போகிறீர்கள். அந்த 15 பேர் நியமிப்பது குறித்த சட்ட நிலையை மாற்றி நிறை வேற்றவேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன். வணக்கம்.

(மாலை 6–20)

*மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்கு ஒரு ஆலோசனைக் குழு அமைப்பது பற்றிய சட்டமும் அத்துடன் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த இடங்களில் இருக்கின்ற நகராட்சி மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்கிற உரிமையையும் வழங்குவதற்கான சட்டமும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மானியக் கோரிக்கை வந்தபோது இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று அறிவித்திருந்தேன். அந்தச் சட்டம் தான் கொண்டுவரப்பட்டு இருக்கிறது.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 மே 14

இதுவரையில் ஊராட்சி ஒன்றியங்களில்தான் சட்ட மன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளலாம் என்று இருந்ததே தவிர நகராட்சியில் கலந்துகொள்ளலாம் என்று சட்ட விதி இல்லை. அந்த சட்ட விதியை இதற்கும் கொண்டுவரவேண்டும் என்று நான் நாம் கொண்டுவந்திருக்கிறோம். எனவே, இதிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் யாருக்கும் ஆட்சேபணை இருக்காது என்று தான் நினைக்கிறேன். சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் ஒரு அட்வைசரி குழு அமைப்பதாக நான் சொன்னேன். அதன்படி சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். இதில் ஏன் 15 பேர்களைப் போடுகிறீர்கள். சட்டமன்ற உறுப்பினர்களை மட்டும் போட்டால் போதாதா என்று கேட்டார்கள். சென்னையைப் பொறுத்தவரையில் 150 வட்டங்கள் இருக்கின்றன. இந்த 15 பேர் கூட போதுமா என்று யோசிக்கப்பட்டது. 10 வட்டத்துக்கு ஒரு பிரதிநிதியாவது இருக்கவேண்டும் என்று கருதித்தான் இவ்வாறு 15 பேர்கள் போடுகிறோமே தவிர வெறும் ஆட்களைப் போட வேண்டும் என்பதற்காகப் போடவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இதிலே அங்கம் வகிக்கலாம் என்று சட்டத்திலே விதி வகுத்து இருக்கிறோம். சட்ட மன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு இதிலிருந்து விடுதலை கொடுங்கள் என்று திரு. பாலன் அவர்கள் கேட்டார்கள். சென்னையைப் பொறுத்தவரையில் சட்ட மன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் செய்கிற வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இந்தச் சங்கடத்திலே இருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்றுதான் நானும் விரும்புகிறேன். இருந்தாலும் கூட இந்தச் சங்கடத்திலிருந்து விடுவிக்க சட்டத்திருத்தம் கொண்டுவரலாம் என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்று ஏற்கனவே நான் தெரிவித்திருக்கிறேன். அந்தச் சட்டத் திருத்தம் விரைவிலே வர இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல் குழுக்கள் அமைப்பதைப் பொறுத்தவரையில் மதுரைக்கும், கோவைக்கும் ஏன் அமைக்கப்படவில்லை என்றும் அவற்றுக்கும் அமைக்கப்படவேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கேட்டார்கள். நியாயமான கேள்வி. நான் ஒத்துக் கொள்கிறேன். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும், விரைவில் முடிவு எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஒரு ஆலோசனைக் குழு மதுரைக்கும், கோவைக்கும் அமைப்பது நியாயம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். எவ்வளவு விரைவில் அதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து இந்த அவையிலே நிறைவேற்ற முடியுமா அவ்வளவு விரைவாக நிறைவேற்றி புதுச் சட்டப்படி புதிய மாநகராட்சித் தேர்தலை நடத்தலாம் என்றுதான் அரசு கருதிக்கொண்டிருக்கிறது

எனவே, மாநகராட்சித் தேர்தலை நடத்த அரசு அஞ்சிக் கொண்டிருக்கிறது என்றோ, சூழ்நிலை சரியில்லை என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது என்றோ யாரும் கருத வேண்டிய அவசியம் இல்லை. 96 நகராட்சிகளுக்கும், 356 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தலை நடத்தி வைத்திருக்கிற நாங்கள் இந்த 3-க்கு மட்டும் தேர்தலை நடத்த அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று ஏற்றுக்கொள்கிற புரட்சித் தலைவர் கட்சியைச் சார்ந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாகத் தேர்தலை சந்திக்க அஞ்சாது; பயப்பட மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு எவ்வளவு விரைவாகத் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக தேர்தலை நடத்துவோம் என்று நான் கூறிக்கொள்கிறேன். கோவைக்கும் மதுரைக்கும் குழு அமைப்பதைப் பொறுத்தவரையில் அரசு யோசிக்கும் என்று கூறி இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று தங்கள் மூலம் பேரவையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 48/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 48/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆஆ) ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 49/1986)*'' ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்டு ஆய்வுக்கு எடுக்கப்பட்டிருக்கிற 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் 4 ஆம் திருத்த சட்டத்தை நான் வர வேற்று ஓரிரு வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவில் 47-ஏ பிரிவில் கீழ்க்கண்ட பகுதிகள் திருத்தப்பட வேண்டும் என்ற குறிப்பில் ''உறுப்பினர்களை ஒத்து தேர்வு செய்வதற்கும், துணைத் தலைவரை தேர்ந்தெடுப் பதற்குமான சிறப்புக் கூட்டத்தை கூட்டுகின்ற பொறுப்பை கோட்ட வளர்ச்சி அதிகாரியிடம் ஒப்படைத்து'' இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அது குறித்து நான் என்னுடைய கருத்தை தெரிவிக்க வருகை யில் ஏற்கெனவே நான் அது குறித்து அமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கிறேன். 1952 ஆம் ஆண்டு இந்த மூலச் சட்டத்தில் சேர் மேன் தேர்ந்து எடுக்கப்பட்டதற்கு பின்னால், சேர்மேன் அவர் களே தலைமை வகித்துத்தான் துணைத் தலைவரையும், மற்றும் அந்த நியமன உறுப்பினர்கள் என்று சொல்லப்படுகிற கோவாப்ட் செய்துள்ள மெம்பர்களையும் தேர்ந்து எடுக்க வேண்டும் என்று அந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

அன்று இயற்றிய அந்தச் சட்டத்தினுடைய நோக்கம், அத னுடைய எதிர்பார்ப்பு என்னவென்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் தலைமை வகிக்கிறபோது, அவர் தலைவராகவும் தேர் தலை நடத்துகின்ற அதிகாரியாகவும் இருந்து, அதற்குள்ள பொறுப்புகளை தலைவரே ஏற்று நடத்துவார்கள் என்ற அடிப் படையில்தான் அன்றைக்கு அந்தச் சட்டம் இயற்றப்பட்டு இருந்தது.

ஆனால், இந்தச் சட்ட முன் வடிவினுடைய காரண நோக்க விளக்கத்திலே சொல்லியிருப்பது போல இன்று நடைமுறையில் பார்க்கிற போது பல்வேறு இடங்களிலே அந்த ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர்கள் கூட்டங்களைக் கூட்டுகிறபோது, சட்டத் திற்கு நேர்மாறாகவும், தார்மீக நியாயத்திற்கு எதிராகவும் தங்க

*''1986 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ளுடைய அரசியல் நோக்கங்களை ஈடு செய்து கொள்கிற வகை யிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலே அப்படிப்பட்ட கூட்டங்களைக் கூட்டி நடத்துகிறார்கள். அல்லது சட்டத்திற்கு விரோதமாகவே கூட நடத்தியிருக்கிறார்கள் என்பதற்கு பல்வேறு ஆதாரங்களை என்னால் சொல்ல முடியும்.

நான் அங்கம் வகிக்கிற என்னுடைய தொகுதியிலே கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்த போது, நீங்கள் எங்களுக்குத் துணை நிற்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர் களைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற மசோதாவின் காரண நோக்க விளக்கத்திலேயே "உறுப்பினர்களை ஒத்துத் தெரிவு செய்வதற்காக அல்லது துணைத் தலைவரை தேர்ந்தெடுப் பதற்காக சில ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் நடத்திய கூட்டங்கள் முறையாக நடத்தப்படவில்லை என்று, அல்லது எந்த நோக்கத் திற்காக அந்தக் கூட்டம் கூட்டப்பட்டதோ, அந்த அலுவலை நடத்தாமல் அக்கூட்டங்கள் முடிவடைந்துள்ளன" என்று குறிப் பிடப்பட்டிருக்கிறது. இது எங்கள் மாவட்டத்தில் பரவலாக இருக்கிற ஒரு செயல்பாடு என்பதை சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

ஒரு தேதியை தலைவராகவே 25 ஆம் தேதி தேர்தல் என்று அறிவித்துவிட்டு, 10 நாள் அவகாசம் வேண்டும் என்பதற்காக 15ஆம் தேதி என்று அறிவிப்பிலே குறிப்பிட்டு, 19 ஆம் தேதி அன்று தபாலிலே சேர்த்து 21 ஆம் தேதிக்குமேல் உறுப்பினர் களுக்கு அந்த தபால் கிடைக்கும்படியாகச் செய்து, அதற்குள்ளாக தங்களுக்கு வேண்டியவர்களை துணைத் தலைவராகவும், கோவாப்டட் உறுப்பினர்களாகவும் வைத்துக் கொண்டு, தேர்த லையே மறைத்து வைத்த நிலைமைகள் எல்லாமே நடந்திருக் கிறது. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து நியாயம் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், எப்படி சேர்மன் தேர்த லிலே, அது பொதுத் தேர்தலாக இருந்தாலும் கூட ஒரு ஆபீசர் நடத்தி வைக்கின்றாரோ, அதைப் போலவே துணைத் தலை வரையும், ஒத்து தேர்வுசெய்யப்பட வேண்டிய கோவாப்டட் உறுப்பினர்களையும் டி.டி.ஓ. அவர்களே நடத்தித் தர ஏற்பாடு செய்வது நல்லதாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே நான் மேலும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது ஏற்கனவே இருக்கிற மூலச் சட்டத்திலேயே இன்னும் பல்வேறு திருத்தங்களை கொண்டு வருவதற்கு அரசு தீவிரமாக யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் காரணம் ஏற்கனவே 1952ஆம் ஆண்டு இயற்றிய அந்தப் பஞ்சாயத்துச் சட்டத்திலே வழங்கப்பட்டிருந்த பல்வேறு சலு கைகள் இன்றைக்கு அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கிறது.

[திரு. க. பாரமலை] [1986 மே 14

(மாலை 6-30).

மீண்டும் அந்தச் சலுகைகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கவேண்டுமென்ற கோரிக்கை நிச்சயமாக வந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் இன்றைக்கு அந்தக் கோரிக்கைகளுக்கு நேர்மாறாக, இருக்கிற அதிகாரங்களை தவறாக பயன்படுத்துகிற போக்கும் வளர்ந்து கொண்டு வருவதைப் பார்க்கிறோம். ஆகவே புதியதாக அவசரமாக தேர்தல் நடத்திய காரணத்தால இன்றைக்கு அப்படிப்பட்ட நிகழ்ச்சியை எதிர்பார்த்து சட்டமுன்வடிவு கொண்டு வராமல், ஏதோ அவசரமாக கொண்டு வந்த காரணத்தால் சட்டத்தில் இன்னும் சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக 1958 ஆம் ஆண்டு சட்டத்திலே அன்றைக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தவர்தான் ஒன்றியத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுகிற வாய்ப்பு இருந்தது. அவர்களுக்கு ஓட்டு அளிக்கிற உரிமை இருந்தது. இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் தேர்தலில் ஓட்டு அளிக்கிற நிலைமை இருந்து வருகிறது. அவர் ஓட்டு அளிக்கலாமா என்பதை இன்றைக்கு இருக்கிற சட்டத்திலே தெளிவாக இல்லையென்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

என்னுடைய கருத்து என்னவென்றால் ஊராட்சி ஒன்றியக் கூட்டங்கள் நடக்கிற போது அந்த விவாதங்களில் கலந்து கொண்டு, போடுகிற வாக்குகள் சரிசமமாக இருக்குமானால் அதிலே தங்களுடைய கேஸ்டிங் ஓட்டைப் போடலாமே தவிர, துணைத் தலைவர் அல்லது நியமன உறுப்பினர்களை கோவாப்ட் செய்கிற உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு இன்னும் அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்பதில் எங்களுக்கு உடன்பாடு உண்டு. சிவகெங்கையில் நடந்த டிஸ்டிரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சில் மீட்டிங்கில் கூட சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் விசேஷ அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டார்கள். அன்றைக்கு நடந்த கூட்டத்தில் கூட சேர்மென்கள் எல்லாம் முழு தகுதி பெற்ற உறுப்பினர்களாக வேண்டுமென்ற கருத்தை சொல்லி, அதற்கு அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தோம். ஆகவே அந்த அளவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு அதிகாரங்கள் அதிக

மாகக் கொடுக்க வேண்டும். அவர் முழு அளவில் மக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இதிலும் எங்களுக்கு உடன்பாடு உண்டு. ஆனால் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பது தான் எங்களுக்கு இருக்கிற ஆதங்கம் எல்லாம். ஆகவே நான் பணிவோடு கேட்டுக்கொள்வது, 1958 ஆம் ஆண்டு சட்டத்திலே இன்றைக்கு இருக்கிற நடைமுறைகளைச் சரியாகப் பார்த்து இன்னும் சில திருத்தங்களை விரிவாக கொண்டு வர அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

அடுத்து இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எங்களுடைய ஊராட்சி ஒன்றியத்தில் முதல் கூட்டத்தில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் ஒருவர் அந்த ஊராட்சி ஒன்றிய வளாகத்தை சுட்டிக்காட்டி, இந்த வளாகத்திலே சட்டமன்ற உறுப்பினர் வரமுடியாது. அந்த வளாகத்திற்குள் அமைச்சர் வரமுடியாது. ஏன் ஜனாதிபதியே வரமுடியாது என்று சொன்னார். அப்படிப்பட்ட அவல நிலை இன்றைக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் இதைச் சொல்வதற்கு காரணம், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்கிறபோது, அந்த அதிகாரம் என்பது இருபக்கமும் கூர் உள்ள ஒரு ஆயுதம், என்பதையும், அந்த ஆயுதத்தைப் பயன்படுத்துவதில் எச்சரிக்கையாக இல்லையென்றால் பயன்படுத்துகிறவர்களுக்கும் ஆபத்து, அந்த ஆயுதத்தை வழங்குபவர்களுக்கும் ஆபத்து என்பதை உணர்ந்து அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு ஓட்டுகள் பெற்று ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களாக வந்திருக்கிறார்கள் என்பதை மனதில் கொண்டு நீங்கள் இதிலே சில திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்திலே என்ன பொறுப்பு இருக்கிறது என்பதை தயவு செய்து தெளிவாக விதியில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய கவுன்சில் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் ஓட்டு அளிக்க உரிமை இல்லை. விவாதங்களில் கலந்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மற்ற விவகாரங்களில் இவர்களுக்கு இருக்கிற உரிமையென்ன என்பதை விதியில் சேர்க்க வேண்டும். குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர் இரண்டு நாட்கள் அவர்களுடைய யூனியனில் சுற்றுப் பயணம் செய்யலாம். அவர்களுக்கு 50 லிட்டர் பெட்ரோல் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. நான் ஐந்தாண்டுகளுக்கு மேலாக சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். ஆனால் ஐந்து நாட்கள் கூட ஊராட்சி ஒன்றிய ஜீப்பை பயன்படுத்த முடியவில்லை. இன்றைக்கு கூட ஊராட்சி ஒன்றிய ஜீப்பை பயன்படுத்த வேண்டுமென்றால் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவருடைய அனுமதியோடுதான் செய்ய முடியும்

என்று பகிரங்கமாக பொதுக்கூட்டத்தில் பேசுகிற நிலைமை இருக்கிறதால் எங்களுடைய நிலைமை என்னவென்பதை தயவுசெய்து தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அந்த ஜீப்பை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவருடைய சொந்த சொத்தாக கருதப்படுகிறது. யூனியனுடைய வேலைகளைப் பார்ப்பதற்கு மட்டுமல்லாமல், தொகுதிக்கு அப்பால் இருக்கிற தங்களுடைய சொந்த இடங்களுக்கும், தேர்தலில் உறுப்பினர்களைக் கொண்டு செல்வதற்கும் பஞ்சாயத்து யூனியன் ஜீப் பயன்படுத்தப்படுகிறது.

ஆகவே இதைத் தடுப்பதற்கு எந்தெந்தக் காலங்களில் ஊராட்சி பெருந் தலைவர்கள் பயன்படுத்தவேண்டும் என்பதையும், இங்கே தெளிவாக ஒரு அறிக்கை விடுவதோடு அதை அமுல்படுத்துவதற்கு நீங்கள் சரியான ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு என்னுடைய ஊராட்சி ஒன்றியத்திலே இந்த நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களை பதவிப் பிரமாணம் செய்யாமல், கோ ஆப்ட் செய்யப்படுகிற மெம்பரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற முயற்சி இருந்தது. அந்த முயற்சியை எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் நடக்காத காரணத்தால், நாங்கள் உயர்நீதி மன்றத்திலே வந்து தடை வாங்கினோம். தடை வாங்குவதற்கு எங்களுக்கு இருந்த ஒரே காரணம் உரிய வகையில் நோட்டீஸ் கொடுக்கவில்லை என்பதுதான். ஆகவே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன், இப்படி நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், அரசு ஆணையிட்டு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அப்படி நியமனம் செய்யப்பட்ட மெம்பர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்ய மறுப்பதால், அந்த மெம்பர்களே கூட வாசித்து விட்டால் கூட அது பதவிப் பிரமாணம் செய்யப்பட்டதாக கருதப்படவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி மறுக்கிறார்கள் என்று சொன்னால், நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்க ஊராட்சி பெரும் தலைவர் மறுத்தால் அது, அவர் தன்னுடைய கடமையில் இருந்து தவறியதாகக் கருதி அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்திலே வழிவகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்றைக்கு தேர்தல் நடந்து முடிந்த நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பல்வேறு பஞ்சாயத்துக்களிலே, பஞ்சாயத்து யூனியன்களிலே இன்றைக்கு அவர்களுக்கு நியமன ஒதுக்கீடு இல்லை என்ற காரணத்தால், இன்றைக்கு நியமனம் செய்வதும் கோ- ஆப்ட் செய்வதுமாக, அதை நிரப்புவதற்கு

1986 மே 14] [திரு. க. பாரமலை]

அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறது. ஆனால் இன்றைக்கு டி.டி.சி.யிலே பஞ்சாயத்து யூனியன் தலைவராக வந்தவர்கள்தான் அங்கே பங்கு பெறமுடியும் என்ற காரணத்தால், நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அதிலேயும் ஒரு குறிப்பிட்ட சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், பெண்களுக்காகவும், ஒதுக்கீடு செய்து, வருகின்ற சட்டத்திலே அதற்குரிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மொத்தத்திலே இந்த நான்காவது திருத்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

*திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஊராட்சிகள் நான்காவது திருத்த சட்ட மசோதாவின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டத் திருத்தம் இன்றைக்கு இங்கே கொண்டுவரப்பட்டு, 47-ஏ பிரிவு புதிதாக புகுத்தப்பட்டு இருக்கிறது. இந்தப் பிரிவினுடைய ஷரத்துபடி ஊராட்சி ஒன்றியத்தினுடைய துணைப் பெருந் தலைவர் தேர்தலுக்காகவும், கோ-ஆப்சன் முறையிலே சேர்த்துக்கொள்ளப்படுகிற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கின்ற அந்தக் கூட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அதிகாரிகள் தலைமையேற்று நடத்தவேண்டும் என்கிற இந்தப் புதிய பிரிவு இந்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்ற புதிய பிரிவாகும். இந்தச் சட்ட ஷரத்தினுடைய பாதக சாதகங்களை எடுத்துக் கூறுவதற்கு முன்னால், ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர் மொத்தமாக உள்ளாட்சிகளுடைய தேர்தல் நடந்து முடிந்த பின்னால், உள்ள பழைய சூழ்நிலையையும், புதிய சூழ்நிலையையும் எண்ணிப் பார்த்து, ஒரு சுமுகமான சூழ்நிலையை எதிர்காலத்திலே உருவாக்க இந்த அரசு தவறிவிட்ட காரணத்தால், இவ்வளவு குழப்பங்களும், குதர்க்கங்களும் தொடர் கதையாக வந்து கொண்டு இருக்கின்றன என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏற்கனவே இருந்த சட்டப்படி, ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந் தலைவர், முன்னால் இருந்த சட்டப்படி ஊராட்சி மன்றங்களுடைய தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். அதற்குப் பின்னர், கோ.-ஆப்சன் முறையில் உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இது பழைய முறை. ஆனால் புதிய சூழ்நிலை என்பது, ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதற்குப் பின்னால், கோ-ஆப்சன் முறையில் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதோடு இன்னொரு முறையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நாமினேசன் என்கிற நியமன முறையிலே உறுப்பினர்களை நியமிக்கிறார்கள். எனவே இரண்டு வேறு புதிய சூழ்நிலையில் பழைய சட்டத்தை எண்ணிப் பார்த்து, இவ்வாறு

எல்லாம் சரி செய்கின்ற அடிப்படையில் புதிய சட்ட விதிகளை உருவாக்கி இருக்கவேண்டும். சட்ட திருத்தத்தை அப்போதே கொண்டு வந்திருக்கவேண்டும். ஆனால் என்ன நிலைமை இந்த அரசு உருவாக்கியது? ஆரம்பத்திலே எவ்வளவு காலத்திற்குள் துணைப் பெருந் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற விதியை மாற்றி ஒரு மாதம், 30 நாட்கள் என்றிருந்ததை, 90 நாட்களாக ஆக்கி இந்த மன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்தார்கள். அதற்குப் பிறகு ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந் தலைவருக்கு துணைப் பெருந் தலைவர் தேர்தலிலே வாக்களிப்பதற்கு உரிமை உண்டா என்று வினவிய நேரத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருந் தலைவருக்கு வாக்களிப்பதற்கு உரிமை இருக்கிறது என்று விளக்கம் தந்தார்கள். அதற்குப் பின்னால் நாமினேஷன் முறையில், நியமன

(மாலை 6-40)

முறையில் மாவட்ட ஆட்சித் தலைவராலே நியமிக்கப்படுகிற உறுப்பினர்களுக்கு துணைப் பெருந்தலைவர் தேர்தலிலே வாக்களிக்க உரிமை இருக்கிறதா என்று வினவிய நேரத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதனைத் தொடர்ந்து கோ-ஆப்ஷன் முறையிலே சேர்த்துக்கொள்ளப்படுகிற உறுப்பினர்களுக்கு, துணைப் பெருந்தலைவர் தேர்தலிலே வாக்களிக்க உரிமை இருக்கிறதா என்று கேட்ட நேரத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். இப்படி தொடர்ந்து பல்வேறு கட்டங்களில் பல நாட்களில் இந்தக் கேள்விகளுக்கு விடை அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை தொடர்ந்து அரசு உத்தரவுகளாக அனுப்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இடையிலே ஊராட்சி ஒன்றியங்களிலே என்ன நடைபெற்றது? ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கோ-ஆப்ஷன் முறையிலே உறுப்பினர்களாக சேர்த்துக்கொண்டிருந்தார்கள். இந்தச் சூழ்நிலையின் காரணமாக அரசு போட்ட உத்தரவுகள் சில ஒன்றியங்களுக்குப் பொருந்தி வருவதும், அதை ஏற்றுக்கொண்டு நடத்துவதும் சில ஒன்றியங்களுக்கு அது பொருந்தாமல் அல்லது அந்த உத்தரவு சேர்வதற்கு முன்னாலே ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் தேர்தல் நடைபெற்ற காரணத்தினாலேயும் ஒரு பெருத்த குழப்பமான சூழ்நிலை ஊராட்சி ஒன்றியங்களிலே நிலவி இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கனவே உங்கள் முறைப்படி, உதவிப் பெருந்தலைவர், துணைப் பெருந்தலைவர்களுடைய தேர்தல் முடிந்ததற்குப் பின்னால் கோ-ஆப்ஷன் முறையிலே உறுப்பினர்களைச் சேர்த்தல் அல்லது புதிதாக இப்போது நியமன முறையிலே உறுப்பினர்களை நியமித்தல் என்கின்ற முறை பின்பற்றப்பட்டு இருக்குமேயானால் எந்தவிதமான குழப்பமும் இன்றி ஒருவருக்கொருவர் போட்டி போடுகின்ற அல்லது மன மாச்சரியங்கள் உருவாகின்ற சூழ்நிலைகள் ஊராட்சி ஒன்றியத்

1986 மே 14] [திரு. பொன்முத்துராமலிங்கம்]

திலே வராமல் ஒரு சுமூகமான சூழ்நிலையிலே ஊராட்சி ஒன்றியங்கள் நடைபெறுவதற்கு, செயல்படுவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும். ஆனால் ஒட்டுமொத்தமாக ஆங்காங்கு இருந்து வந்த சில தவறுகளை மையமாக வைத்து இந்தச் சட்டத் திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்தச் சட்ட திருத்தம் என்ன சொல்கிறது? தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந் தலைவர்தான் தலைமையேற்று, தலைமை அதிகாரியாக இருந்து துணைப் பெருந் தலைவர் தேர்தலையும் கோ-ஆப்ஷன் முறையிலே சேர்த்துக்கொள்ளக்கூடிய உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கின்ற அந்த முறையும் நடத்த வேண்டுமென்று பழைய சட்டம் சொல்கிறது. ஆனால் இந்தத் திருத்தம் என்ன சொல்கிறது? புதிதாக, வட்டார வளர்ச்சி அதிகாரியை தலைவராக வைத்து அவரே கூட்டத்தைக் கூட்டுகின்ற அதிகாரமும், அவருக்கு வழங்கி இந்தக் கூட்டம் நடைபெறவேண்டுமென்று தெரிவிக்கிறது. நான் இந்த மன்றத்தின் வாயிலாக தெரிவிப்பது எல்லாம் ஒரு ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் என்பவர் அந்தப் பகுதியிலே மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி. அதுபோன்று சட்டமன்ற உறுப்பினர்களும் மக்களாலே அந்தப் பகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி. சட்டமன்ற உறுப்பினர்களால் இந்த மன்றம் கூட்டப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவர் இந்த மன்றத்தினுடைய தலைவராகவும் துணைத் தலைவராகவும், அமைச்சர்களாகவும் வீற்றிருக்கிறார்கள். எனவே இங்கே ஒரு புகார் வருகிறது என்பதற்காக அல்லது ஒரு தவறு நேர்ந்துவிட்டது என்பதற்காக இங்கே தலைவர் வேண்டாம் அல்லது துணைத் தலைவர் வேண்டாம் என்று ஒரு அரசாங்க அதிகாரியை வைத்துக்கொண்டு நடவடிக்கைகளை நடத்தவேண்டுமென்று சொன்னால் அது எந்த அளவு ஜனநாயகத்தில் பொருத்தமானது, ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பதை மாண்புமிகு அமைச்சர் எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே சட்டமன்றத்திற்கு ஒரு நீதி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட இந்த சட்ட மன்றத்திற்கு ஒரு நீதி, அதே நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு நீதி என்று சொன்னால் ஜனநாயகத்திலே இருவகையான அளவுகோல்களை பயன்படுத்துவது என்பது உகந்த முறையாகாது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவிப்பதெல்லாம் ஒரு அதிகாரியை வைத்து நீங்கள் இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கருதுகிறீர்கள். அதற்கு என்ன காரணம்? மாநிலத்திலே ஏற்பட்டுவிட்ட சில சில குழப்பங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட அவர்களுடைய ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியை சொன்னார்கள். ஆனால் அதற்கு வேறு வழிமுறைகளே இல்லையா? சட்டத்தால்தான் அவைகள் திருத்தப்படவேண்டுமா? தவறு செய்துவிட்டால் அங்கே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள Inspector of Municipalities அல்லது Inspector of Panchayats என்கின்ற அடிப்படையில் தலையிடலாம்.

அதற்கு மேலே டி. ஆர். டி. அவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் தலையிடலாம். இதையும் மிஞ்சி நீதிமன்றங்கள் இருக்கின்றன. பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றங்களுக்குச் செல்லலாம். இவ்வளவு முறைகளும் இருக்கின்ற நேரத்தில் எடுத்த எடுப்பிலேயே சில சம்பவங்கள் ஆங்காங்கு நடந்துவிட்டது என்பதற்காக உடனடியாக சட்டத்திருத்தம் என்று வருமேயானால், அது நல்ல முறை அல்ல என்பதை மட்டும் இந்த மன்றத்திலே நான் வலியுறுத்திக்கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஆங்காங்கு சில தவறுகள் நேர்ந்திருக்கலாம், ஒத்துக் கொள்கிறேன். அதற்கு என்ன காரணம்? இந்த அரசு தொடர்ந்து படிப்படியாக உருவாக்கிய குழப்பங்களும் அதற்கு ஒரு காரணம் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே ஆரம்ப காலகட்டத்திலேயே புதிய முறையிலே தேர்தல் நடக்கிறது, பழைய சட்டம் இருக்கிறது. எனவே துணைப் பெருந்தலைவர் தேர்தலிலேயும் மற்றைய நிலைகளிலேயும் ஒரு குழப்பமான சூழ்நிலை உருவாகக்கூடும் என்ற தொலைநோக்கு சிந்தனையோடு இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்து தெளிவான துணை விதிகளையும், தெளிவான சட்ட மாற்றங்களையும் ஏற்கனவே செய்திருந்தால் இந்தக் குழப்பம் உருவாகாது இருந்திருக்கும் என்பதையும் இந்தக் குழப்பங்கள் ஏற்படாது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே அதற்காக இந்தக் குழப்பங்கள் ஆங்காங்கே ஏற்பட்டுவிட்டதே என்பதற்காக அதிகாரிகள் கையிலே அதிகாரத்தை தந்து மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த அதிகாரத்தை பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானால் அது உள்ளபடியே இந்த ஊராட்சி ஒன்றியங்கள் தோற்றுவிக்கப்பட்டதினுடைய அடிப்படை நியாயங்களையே உருக்குலைக்கின்ற, சிதறடிக்கின்ற, சின்னாபின்னமாக்குகின்ற ஒரு அரசியல் சட்டமாக இது அமையும் என்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்தச் சட்டத் திருத்தத்தை வாபஸ் வாங்க வேண்டுமென இந்த மன்றத்தின் சார்பாக கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தை மேலும் திருத்துகிற சட்டமுன்வடிவின் மீது ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லும்போது இந்த சட்டமுன் வடிவிலே நோக்க காரண விளக்க நோக்கத்திலே சொல்லும்போது சில இடங்களிலிருந்து, சில ஒன்றியங்களிலிருந்து சில தவறுகள் நடந்து இருக்கின்றன என்று புகார் வந்திருக்கிறது. சரியான முறையில் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை, சரியான முறையில் கோ-ஆப்ஷன் முறையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற காரணத்தால்தான் இந்த சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். ஒரு சின்ன

பிரச்சினைக்காக ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து எதிர் தரப்பிலிருந்து புகார் வரும்போது இதையே ஒரு காரணமாக வைத்து இதற்கு ஒரு சட்ட திருத்தம் தேவையா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இந்த குழப்பங்களுக்கு எல்லாம் காரணம் நீங்கள் கோ-ஆப்ஷன் முறையிலே நியமனம் செய்தது தான் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த கோ-ஆப்ஷன் மெம்பர்களுக்கும், நியமன உறுப்பினர்களுக்கும் வாக்கு உரிமை கொடுத்தது தான் காரணம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தெரு தெருவாக, வீடு வீடாக சென்று கும்பிட்டு வாக்குகள் சேகரித்து வெற்றி பெற்றவர்களுக்கும் ஒரு வோட்டு நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கும் ஒரு வோட்டு என்று சொல்லும்போது உள்ள படியே அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தக்காரணத்தால் தான் பல குழப்பங்கள், பல இடங்களில் நடந்து இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களுக்கு இருக்கின்ற அந்த மெஜாரிட்டி இந்த நியமன உறுப்பினர்கள் மூலமாக குறைக்கப்படுகிறது. அப்படி குறைக்கிறபோது இந்த நேர்தலை நடத்தமுடியாமல் தவிக்கிறார்கள். இந்த கஷ்டங்கள் எல்லாம் ஏற்படுவதற்கு காரணம் அரசு தான். இந்த அரசு செய்கிற திட்டங்களால் தான் இந்தப் பிரச்சினை எழுகிறது. ஆகவே மேலவையை ஒழித்தது போல் நீங்கள் இந்த நியமன உறுப்பினர்களையும், கோ-ஆப்ஷன் உறுப்பினர்களையும் ஒழிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு அந்த அதிகாரத்தை கொடுப்பதாக இருக்கிறது. இந்த அதிகாரிகளுக்கு இருக்கின்ற அதிகாரம் போதும் என்று சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களோ, அல்லது என்ஜினியர்களோ, அல்லது கால்நடை மருத்துவர்களோ இவர்களை எங்கள் கூட வாருங்கள் என்று கூப்பிட்டால் அவர்கள் ஏதாவது சாக்குபோக்கு சொல்லி வர மறுக்கிறார்கள். உடனே

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஏற்கனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்து சட்டம் இயற்றி இருந்தோம். ஆனால் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்குப் போய் விட்ட காரணத்தால் தேர்தல் நடத்த முடியவில்லை. ஆகவே, பழைய முறையிலே அந்த சட்டப்படி தேர்தல் நடத்த வேண்டும் என்று எல்லா தரப்பினராலும் சொல்லப்பட்டது. அதை அனுசரித்து ஏற்கனவே ஒதுக்கீடு இல்லாமல் இருக்கிற காரணத்தால் தான் நியமன முறையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களையும் பெண்களையும் நியமிக்க வேண்டும் என்று அரசு ஒரு முடிவு எடுத்து இப்படி செய்து இருக்கிறது. அதையும் ஒழிக்க வேண்டும்

((! நம்முடைய ஜனதா கட்சி தலைவர் சொல்கிறார்களே அது பற்றி வேறு ஏதாவது அதற்கு மாற்றம் சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள் சொல்வதற்கு பதில் சொல்லும்போது நான் சொல்ல வருவது இந்த அரசினுடைய குழப்படி தான். நீங்கள் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து வாக்கு போடுவதற்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உண்டான வழிமுறையை எடுத்து இருக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விருதுநகர் எம்.எல்.ஏ. திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் அவர்கள் எனது நெருங்கிய நண்பர். **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெளியே பேசியதை எல்லாம் இங்கே பேச வேண்டாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் தாமரைக்கனியும், ஆறுமுகமும் பேசியதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன். (குறுக்கிடு) இன்னும் 2 பேர் பேசி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.

(மாலை 6.50)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தப்பு என்று நான் ஏற்கனவே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். ஆதலால் இந்தக் கோட்ட வளர்ச்சி அதிகாரிக்கு இந்த அதிகாரத்தைக் கொடுப்பது மிக மிகத் தப்பு என்பது என்னுடைய கருத்து.

காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், விருது நகர் ஊராட்சி ஒன்றியத்தில் 161 பேருக்கு ஐ.ஆர்.டி.பி. கடன் மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றே ஒன்று கூட வாங்கிக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவிலே வட்டார வளர்ச்சி அதிகாரி செய்கிறார் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆதலால் கோட்ட வளர்ச்சி அதிகாரிக்கு அதிகாரம் கொடுப்பதே தப்பு என்பதே என்னுடைய கருத்து. நீங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு.... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 மே 14]

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சபைக்குரிய வார்த்தைகள் பலஇருக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தப்பு, பொய் என்கிற வார்த்தைகளைத் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். எனவே அதற்கு மாற்று வார்த்தைகளைச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : நான் சொல்கின்ற பாஷை உங்களுக்குப் புதிய பாஷையாக இருக்கலாம். மாற்றிச் சொல்ல வேண்டுமானால் தவறு என்று கூடச் சொல்லலாம். ஆனால் இதிலே ஒன்றும் வார்த்தை ஜாலங்கள் இல்லை. (குறுக்கீடுகள்).

ஊராட்சி மன்றங்களிலே உள்ள துணைத் தலைவர்கள் தேர்தலுக்கும், அதேபோன்று ஊராட்சி மன்ற உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் கொண்டு வந்த சட்டத்திருத்தத்தை மாற்றி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான தலைவர்களே நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. கு. ரமணி : கொஞ்சம் அமைதியாக இருந்தால் பேசலாம். துணைத்தலைவர் அவர்களே, இந்தச் சட்ட திருத்தத்தில் இருக்கிற ஒரே ஒரு விஷயம் தான் முக்கியமான விஷயம். (குறுக்கீடுகள்) ஏற்கனவே இந்த மன்றத்தில் நான் இதுபற்றி பேசியிருக்கிறேன். இது ஒரு முக்கியமான ஜனநாயக அம்சத்தை உள்ளடக்கக் கூடிய ஒரு கருத்து. இதை நாம் சாதாரணமாகவும், கேலியாகவும் பார்க்கக்கூடாது. நியாயமாகப் பார்க்க வேண்டும் என்பது தான் என்னுடைய கருத்து. இதிலே 47ஏ செக்ஷன் தான் விவாதத்திற்குரிய விஷயம். The meeting of the Panchayat Union Council for the co-optionof women and the members of the scheduled castes and scheduled Tribes in sub-section (1)(a) of section 12 or for the election of vice-chairman under section 36 (b) shall be convened and presided over by the Divisional Development Officer. இதுதான் நமக்கு பிரச்சினைக்கு உரிய விஷயம். நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்களும் இந்தச் சட்டத்தை விவாதிக்கிறோம். இது மட்டுமல்ல. எந்தச் சட்டங்கள் கிடைத்தாலும் நாங்கள் விவாதித்து, எங்களுக்குத் தெரிந்த விஷயங்களை எடுத்துக்கொண்டுதான் நாங்கள் இந்த மன்றத்தில் வாதிடுகிறோம். இதை நாங்கள் விவாதித்த காலத்தில், ஏற்கனவே பஞ்சாயத்துச் சட்டத்திற்கு திருத்தத்தைக் கொண்டு வந்தபோதே ஜனநாயக முறையின் மீது நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பது என்னுடைய கருத்து. 'என்க்ரோச்மென்ட்' எப்படி வேண்டுமென்று கேட்டால், இந்தப்

[திரு. கு. ரமணி] [1986 மே 14

பஞ்சாயத்தில் நமக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும், சட்டப்படி அவர்களுக்கு ஒதுக்க வேண்டிய அளவு ஒதுக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதை சரி செய்வதற்காக வேண்டி சில ஏற்பாடுகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். அந்த ஏற்பாடுகள் முறையாக நடத்தப்படவேண்டும். அதே மாதிரி, தேர்ந்தெடுக்கப்பட்ட கௌன்சில், தேர்ந்தெடுக்கப் பட்டு முடித்தால், அந்தக் கௌன்சில் தான் அந்தக் கூட்டத்தை, யார் அதை கூட்டவேண்டுமோ, அந்த கூட்டுவதற்குரியவர் தான் அந்தக் கூட்டத்தைக்கூட்ட வேண்டும். நாம் ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கும்படியான பஞ்சாயத்து சட்டப்படி ஒரு முக்கியமான நல்ல அம்சம் இது. அது என்ன? அனைத்து மக்களும் ஓட்டுப் போட்டு, ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம். இது ஒரு நல்ல அம்சம் அல்லவா? நல்ல அம்சம். அதற்காக வேண்டி எல்லா கௌன்சில்களுக்கு கிடைத்த ஓட்டும், அவருக்குக் கிடைத்த ஓட்டும் கிட்டத்தட்ட சரியாக இருக்கலாம். சில சமயம் தலைவருக்கு ஜாஸ்தியாகக் கூட வந்திருக்கலாம். அமெரிக்க ஜனாதிபதி என்று நான் கருதவில்லை. அவரும் சட்டத்திற்கு உட்பட்டு, நடக்கக்கூடியவர்தான். இந்த பஞ்சாயத்து சட்டத்திற்கு உட்பட்டு, அதனுடைய டிசிப்ளினுக்கு உட்பட்டு நடக்கவேண்டியவர்தான். அப்படி நடக்கத் தவறினால், அதில் ஏதாவது தவறுகள் ஏற்பட்டால், அதைத் தீர்ப்பதற்கு பல்வேறு வழிமுறைகள் உண்டு. அதைக் கையாள வேண்டும். கடைப்பிடிக்க வேண்டும்.

அது தான் சரியாக இருக்குமே தவிர, அதற்கு மாறுபட்டு— தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களுடைய இன்றைய பொசிஷன் என்ன? இந்தத் திருத்தம்—இப்போது கொண்டு வருவது 47 (ஏ) திருத்தம், இங்கே நாம் இப்போது சட்டம் ஆக்கி அங்கீகரிக்கப்பட்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஒரு சாதாரண மெம்பர் மாதிரி அவரும் உட்கார்ந்து இருக்க வேண்டியதுதான். மக்களாலே ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், தலைவர் என்ற தனியான உரிமையோடு தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் தலைமை தாங்குவதற்கு சகல தகுதியும் இருக்கிறது. அவருக்கு இந்தக் கூட்டத்தில் தலைமை தாங்க தகுதி இல்லை என்ற முடிவுக்கு எப்படி வந்தீர்கள்? அது தான் பிரச்சனை. அவர் நடத்தையிலே தவறு செய்தாலோ அல்லது கூட்டம் கூட்டுவதிலே வேறு ஏதாவது தப்பு செய்தாலோ அதற்கு வேண்டிய பாதுகாப்புக்களை நாம் உருவாக்க வேண்டும். அது அல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு, அந்தத் தலைவர் முதல் கூட்டத்திலே தலைமை தாங்குவதற்கு அவருக்கு உரிமை இல்லை என்ற ஒரு நியதி, ஒரு நடைமுறை எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது? எப்படி அது சரி என்று சொல்லலாம்? நமக்குப் புரியவில்லை. அதனால்தான் அது சரியில்லை என்று நாம் சொல்கிறோம்.

1986 மே 14] [திரு. கு. ரமணி]

அப்படியானால், சில நடவடிக்கைகள், தவறான நடவடிக்கைகள் நடந்து இருக்கிறது என்பதை இங்கே ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் தங்களுடைய அனுபவங்களிலிருந்து எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் நடந்திருந்தால், அவை மிக, மிகத் தவறாகும். அது சரியல்ல. ஜனநாயகத்தைப் பேசி, தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுத்து, மக்கள் நம் மீது நம்பிக்கை தந்து, நாம் அந்த இடத்திற்குப் போகும்போது, இப்படி நடைபெற்றால் இன்றைக்கு நமக்கு ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது? ஆகவே, அது சரியல்ல, அந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு வேண்டிய வழி வகைகளை பார்ப்பதற்கு—இப்படிப்பட்ட வழி வகைகளை எடுத்தால் என்ன ஆகும் என்று சொன்னால், அந்த வட்டார வளர்ச்சி அதிகாரி வந்து தலைமை தாங்கி நடத்த வேண்டியது முதல் கூட்டத்தை. அப்படி ''வைஸ் சேர்மனை'' தேர்ந்தெடுக்க வேண்டியது. கோ-ஆப்ஷன், அதாவது இணைத்துக்கொள்ளக் கூடிய மெம்பர்களை இணைத்துக் கொள்ள வேண்டியது என்ற முறை ஆகி விட்டால், அந்த ''பங்ஷன்ஸ்'' முழுவதும் நடந்து முடியும் வரைக்கும், அந்தத் தலைவருக்கு, அவருடைய தலைவர் என்கிற ''பங்ஷன்ஸ்'' அவரிடம் இல்லை.

நான் நினைக்கிறேன்—இது கோர்ட்டுக்கு நாளைக்கு போனால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் இதிலே அவ்வளவு விஷயம் இருக்கிறது. மிகவும் ஆழத்திற்குப் போனால், தான் இதனுடைய நிலை என்ன என்பது புரியும். ஏனென்றால், பஞ்சாயத்து யூனியன்களிலே எவ்வளவு ஜனநாயகத்தைக் கொடுத்திருக்கிறோம் என்பது நமக்குத் தெரியும். அப்படிப்பட்ட நிலை. அரசாங்கத்தினுடைய பல்வேறு பிடிப்புகள் பஞ்சாயத்து யூனியன்களின் மேல் இருக்கிறது. நான் இப்போது பேசவில்லை. ஒரு சந்தர்ப்பத்திலே பேச வேண்டி வரும்.

ஒரு ''காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்'' கொண்டு வந்து, பேசுகிற நேரத்தில், எந்த முறையில் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் செயல்பட வேண்டும்.—ஒரு சாதாரண பஞ்சாயத்து தேர்ந்தெடுக்கப்பட்டால் அதனுடைய தலைவர் மற்றும் அதனுடைய கவுன்சில் உறுப்பினர்களும் செயல்படுவதற்கு எந்தவிதமான தடையும், பிடிப்பும் அவர்களுக்கு மேலே உண்டாக்கக் கூடாது. இது வரும் போது, நாம் அவர்கள் தவறு செய்தார்கள் என்று மட்டும் சொல்வது அல்ல. தவறு எங்கேதான் நடக்கவில்லை? அநேக தவறுகள். நாம் செய்கிற தவறுகளை நாமே திருத்தலாம். அன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு அறிக்கை வெளியிட்டார். இனி மேற்கொண்டு நடக்கக் கூடிய தேர்தல்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன என்று சொல்லி. அதனுடைய விளைவாகத்தான் இந்தச் சட்டத் திருத்தம் இப்போது வந்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) முக்கியமான

[திரு. கு. ரமணி] [1986 மே 14

பாயிண்ட் பேசுகிறேன். எனவே, சிறிது நேரம் அனுமதியுங்கள். ஆகவே அப்படிப்பட்ட ஒரு நிலை ஒரு குறிப்பிட்ட நபருக்கோ, தப்பு செய்யக்கூடிய ஒரு சில நபர்களுக்கோ உள்ள சட்டம் அல்ல. நல்ல முறையில் நடந்து கொள்ளக்கூடிய அத்தனை தலைவர்களுக்கும் இது தானே கதி? அவர்கள் யாருமே தலைமை தாங்கி கூட்டத்தை நடத்த முடியாது. அப்படியானால், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் எத்தனை இருக்கின்றனவோ, அதிலே ஒரு டஜன் பேர் தப்புச் செய்தால், அவர்களின் காரணமாக, அத்தனை இடங்களிலேயும் இருக்கக்கூடிய தலைவர்கள் முதல் கூட்டத்திலே தலைமை வகிக்கக் கூடாது என்ற நிலை. அது எப்படி சரி ஆகும்?

இது மிகவும் யோசிக்க வேண்டிய விஷயம் என்று தெரிவித்துக் கொண்டு, இந்தத் திருத்தம் சரியில்லை என்பது எங்களுடைய கருத்து. இந்தத் திருத்தம் கைவிடப்பட வேண்டிய திருத்தம். இப்படிப்பட்ட முறையிலே பண்ண முடியாது. அதற்குப் பதிலாக குறிப்பாக குற்றங்கள் எங்கே நடந்திருக்கிறதோ, அதைத் தடுப்பதற்கு வேறு ஏதாவது வழி வகைகளை கண்டுபிடிக்க வேண்டுமே தவிர, அந்த தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மன் தலைமை வகிக்கக் கூடாது, வேறு ஒருவர்தான் தலைமை வகிக்க வேண்டும் என்ற நிலை ஏற்படக் கூடாது. அது இங்கேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, இங்கே முதலில் கொடுக்கும் போதே கொடுத்து இருக்கிறார்கள்.

(இரவு 7.00).

Certain Panchayat Union Councils held for the purpose of co-option of members or for election of Vice-chairman have not been conducted properly or ended without transacting the business for which the meeting was convened. இதுதான். இதன் தோற்றுவாய் எங்கிருந்து முளைத்தது என்று வந்திருக்கிறது. "Certain Panchayat Union Councils—not all Panchayat Union Councils in Tamil Nadu—In certain Panchayat Union Councils such things happened." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

It is very unfortunate. It should not have taken place. It is not correct. But அதற்கு இதுதான் முறையா? இது முறையல்ல என்பது தான் எங்களுடைய தாழ்மையான கருத்து. ஆகவே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் ஆழமாகப் பரிசீலித்து கவனிக்க வேண்டும். நாங்கள் வேறு எந்த எண்ணத்தோடும் பேசவில்லை. தவறு நடக்கிறது, பல இடங்களில் தவறு நடக்கிறது என்றால் அது வராமல் தடுக்கப்பட வேண்டுமென்ற முறையில்தான் சொல்கிறோம். ஆகவே, இதை எதிர்க்கிறோமே தவிர வேறு வழி இல்லை.

ஏற்கனவே என்ன செய்திருக்கிறோம்? கலெக்டரிடத்தில் அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அவர், தாழ்த்தப்பட்ட பகுதியிலிருந்தும் நியமிக்கலாம். பெண்களிலிருந்தும் நியமிக்கலாம் என்று சொல்கிறோம். ஏன் இந்தக் கவுன்சிலே அத்தனையையும் நியமிக்கக் கூடாது? அல்லது சில எண்ணிக்கையை அதுவே நியமித்துக் கொள்ளலாம் மற்றும் சில எண்ணிக்கையை இவர்களே நியமித்துக் கொள்ளலாம் என்ற முறையிலேயாவது ஏன் இருக்கக் கூடாது? அல்லது பஞ்சாயத்து சபையே அவர்களை இணைத்துக் கொள்வது என்று ஏன் செய்யக் கூடாது? தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மெம்பர்ஸ் பேரில் நம்பிக்கை இல்லையா? ஏன் கலெக்டரிடத்திலே அந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும்?

திரு. இரா. தாமரைக்கனி : சார், ஒரு கிளாரிபிகேஷன்.

திரு. கு. ரமணி : Sir, I refused to yield. I do not accept his request for yielding. நான் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே, இந்த நிலையில் இதைக் கவனித்து தகுந்த முறையில் இந்த நடவடிக்கைகளைக் கொண்டு வரவேண்டும். ஜனநாயகத்தின் பேரிலே என்க்ரோச்மெண்ட் வரக்கூடாது என்று தெரிவித்து அமர்கிறேன்.

திரு. பாப்பா சுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆதி திராவிடர்களுக்கு 18 சதவீதம் என்றும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் பதில் சொல்வார், ஆளுங் கட்சி தரப்பிலே ஒருவர் பேசப் போகிறார். அவர்கள் சொல்லும் தகவலில் ஏதாவது தவறு என்றால் கேட்கலாம். இப்பொழுது உட்காருங்கள்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் திருத்தத்தை ஆரம்பத்திலேயே நாங்கள் எதிர்த்தோம். இப்பொழுதும் இந்த 47-ஏ என்ற பிரிவை நீக்கிவிட வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம்.

இந்தத் தேர்தல் என்பது 1970 ஆம் ஆண்டுக்குப் பிறகு, 15 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு கொண்டு வரப்பட்டது. அதை எல்லோரும் வரவேற்றோம். ஆனால், இன்றைக்கு ஜனநாயக முறைப்படி ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஏதோ ஒரு சில இடங்களில் தவறுகள் நடந்து விட்டது என்பதற்காக, ஒட்டு மொத்தமாகத் தமிழகத்தில் உள்ள ஒரு ஜனநாயக ரீதியாக இருக்கும் அமைப்பை உதாசீனப்படுத்துவது என்பது அவ்வளவு நல்லது அல்ல என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1986 மே 14

இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருக்கின்ற பொழுது கோட்ட வளர்ச்சி அதிகாரி தலைமைப் பொறுப்பை ஏற்று துணைத் தலைவர் தேர்தலை நடத்த வேண்டுமென்ற ஷரத்து இருக்கிறது. இதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும் அல்லது திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். என்ன காரணம் என்று கேட்டால், விவரமாகப் பேசுவதற்கு நேரம் கிடையாது. ஆகவே, எங்கள் மாவட்டத்திலே பெரும்பாலான இடங்களிலே இரண்டு அணிகளுமே தேர்தலில் போட்டியிட்டுருந்தோம். ஆனால் இம் மாதிரியான சம்பவங்கள் வேறு எங்கேயும் நடந்தது, அதனால் தேர்தலை ஒத்தி வைக்க வேண்டிவந்தது என்பதாகத் தெரிய வில்லை. முத்துப்பேட்டை யூனியனில் தேர்தல் நடத்துவதற்கான ஆயத்தங்கள் எல்லாம் நடந்து விட்டன. ஆனால் முதல் நாள் நிப்பாட்டு என்று தகவல் வந்து விட்டது. எனவே, ஒரு சில இடங்களில் எம்.எல்.ஏ.விற்கும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் இடையில் பிரச்னைகள் இருக்கின்றன என்ற காரணத்தினால் இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வருவது நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 30-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தால் 4 உறுப்பினர்கள் என்று கருதுகிறேன் அல்லது ஐந்து என்று கருதுகிறேன். அந்த அளவிலும், 30-க்குக் கீழே இருந்தால் 3 உறுப்பினர்களையும் கவுன்சிலே நியமிக்கலாம் என்று முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் 4 நியமன உறுப்பினர்களை நியமிக்கலாம் என்று அறிவித்திருந்தார்கள். அதில் எந்தச் சிக்கலும் ஏற்பட வில்லை. கலெக்டரும் அறிவித்து, நடைமுறையில் பெரும்பாலான இடங்களில் வந்து விட்டது. கவுன்சிலே நியமிப்பதைப் பற்றியும் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை, பெரும்பாலான இடங்களில் நடந்து முடிந்து விட்டது. ஆனால் இப்பொழுது கலக்டர் நியமிக்கலாம் என்று எல்லாவற்றையும் அதிகாரிகளிடத்திலே ஒப்படைப்பது சரியல்ல. மத்திய அரசே நமக்கு அதிக அதிகாரங்களை வழங்கவில்லை என்றும், மேலும் மேலும் அதிகாரங்களை எடுத்துக் கொள்கிறார்கள் என்றும் சொல்லுகின்ற நேரத்தில், ஊராட்சி ஒன்றியங்களிலே அநேகமாக எல்லாம் போய்விட்டது, இப்பொழுதுகூட தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்களே தவிர நிதி கிடையாது.

திரு. இரா. தாமரைக்கனி ; துணைத் தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : : அவர்கள் சொல்லும் நேரத்தில் ஏதாவது தவறு என்றால் கேட்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 மே 14]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாய்ன்ட் ஆப் ஆர்டர் அல்ல. ஆகவே, அதை நீக்கி விடுகிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் சொன்ன பாயின்ட், நமது அரசு அறிவித்தபடி, மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த ஆதி திராவிடர்களுக்கும், பெண்களுக்கும் முறைப்படி அறிவித்தார்கள். அது முறைப்படி அமுல் செய்யப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேனே தவிர, அதிலே ஒன்றும் மாற்றுக் கருத்துச் சொல்லவில்லை.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்தில் 4 இடத்தில் நின்றோம். இரு இடத்தில் அரிசனங்கள் வெற்றி பெற்றார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 4 இடத்தில் நின்று, 3 இடத்தில் வெற்றி பெற்று, இரண்டு இடத்தில் ஆதிதிராவிடர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆகவே, நாம் எத்தனை பேர்கள் நின்றோம் என்பது பிரச்சினை அல்ல. சட்டச் சிக்கல்களைத்தான் சொல்கிறேனே தவிர, பிரச்சினைக்குள் போகவில்லை. நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தேர்தல் நடந்து முடிந்து விட்டது. எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் பணம் கிடையாது. பணம் இல்லாததால், ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் முடிந்தும் பணிகள் (மணியடிக்கப்பெற்றது) இன்றைக்குப் பணிகள் அதிகமான அளவுக்கு வளர்ந்து வருகிறது. ரூ. 12 இலட்சம் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொடுத்த பணத்தில் கூட, ரூ. 6 இலட்சம் வீடு கட்டிக் கொடுப்பதற்கு கொடுத்து விட்டார்கள். எனவே, அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இப்படித் தேர்தலை நடத்தி விட்டு, திருத்தச் சட்டத்தின் மூலமாக, இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத்தினுடைய அதிகாரத்தைப் பறிக்கக் கூடாது. அதனாலேதான் இந்தச் சட்டத்தை நான் எதிர்த்து அமர்கிறேன்.

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால், கொண்டு வரப்பட்ட, ஊராட்சிகள் நகராட்சிகள் திருத்தச் சட்டத்தின் மீது பல்வேறு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் மேலோட்டமாகத் தெரிவித்திருக்கக்கூடிய பல்வேறு கருத்துக்களில், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு ரமணி அவர்களும் மாண்புமிகு பொன் முத்துராமலிங்கம் அவர்களும் ஜனநாயகத்திற்கு விரோதமாக, ஜனநாயகத்தைப் படுகொலை செய்கிற அளவில், இந்தச் சட்டத் திருத்தத்தை நாங்கள் கொண்டு வரலாமா என்கிற கேள்வியைத் தொடுத்திருக்கிறார்கள். அந்தக் கேள்வியைத் தொடுக்கிற அவர்களே ஒத்துக் கொள்கிறார்கள், இங்கொன்றும் அங்கொன்றுமாக

சில தவறுகள் நடத்திருக்குமானால், அந்தத் தவறுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இப்படியா ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது என்று கேட்கிறார்கள்.

(இரவு 7–10)

அவர்கள் குறிப்பிடுகின்ற அங்கொன்றும் இங்கொன்றும் என்று சொல்கின்ற சில பல தவறுகளுடைய அடிப்படையை எண்ணிப் பார்த்தால் எவ்வளவு பெரிய கடுமையான தவறுகள் நடைபெறுகிறது ஏற்கெனவே இருக்கின்ற முறைகள் காரணமாக என்பதை நான் எடுத்து தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன். ஜனநாயகம், ஜனநாயகம் என்கின்ற பெயரில் ஜனநாயகத்தை படுகொலை செய்கின்ற பல காரியங்கள் பல்வேறு ஒன்றியங்களில் பல்வேறு ஒன்றிய பெரும் தலைவர்களால் அவர்கள் தலைமை தாங்குகிறார்கள் என்கின்ற பொறுப்பின் காரணமாக செய்வதே இன்றைக்கு இருக்கின்ற இந்த திருத்தம் என்று சொன்னால் அனுமதிக்க போகிறீர்களா ? இதை ஜனநாயகப் படுகொலை, ஜனநாயகப் படுகொலை என்ற ஜனநாயகத்தை பேசிக் கொண்டு ஜனநாயகத்தின் பெயராலேயே ஜனநாயகத்தை படுகொலை செய்யலாமா என்று தான் அவர்களை நான் கேட்க ஆசைப்படுகிறேன். என்னுடைய மாவட்டத்தில் ஒரு புகார் இன்றைக்கு அரசுக்கு செய்திருக்கிறோம். செல்லம்பட்டி என்கின்ற ஊராட்சி ஒன்றியத்தில், ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவருடைய சார்பில் ஒருவர் முன்மொழியப்படுகிறார். துணை பெரும் தலைவருக்கு, ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர் தலைமை தாங்கியிருக்கிறார். இன்னொருவரை இன்னொரு பஞ்சாயத்து தலைவர் முன்மொழிகிறார். உடனே அந்த ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிற காரணத்தாலே எழுந்து அவர் அறிவிக்கிறார். இல்லை இல்லை அவரை ஏற்கமுடியாது. நான் முடிவு செய்துவிட்டேன். ஒருமனதாக அவர் தேர்வு செய்ய வேண்டும். எனவேதான் இதை ஏற்கமுடியாது. இன்னார் ஒருமனதாக தேர்ந்து எடுக்கப்பட்டார் என்று தீர்மானிக்கிறேன் என்று சொல்லி கூட்டத்தை முடித்துவிட்டு போகிறார் என்று சொன்னால் அப்படிப்பட்ட ஜனநாயக படுகொலையை நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியரையும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்களும் விரும்புகிறார்களா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். அப்படி ஜனநாயகத்தின் பெயராலே ஜனநாயக படுகொலை நடக்கின்றபோது அரசாங்கம் பல்வேறு காரியங்களைச் செய்யலாம் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் எப்படி தலையிடுவது என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட சில சட்டத்திருத்தங்கள் இன்று கொண்டுவருகிறோம். இந்த சட்டத் திருத்தங்கள் வருவதற்கு முன்னால் இதுவரையில் ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர், ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்கெனவே நடந்த தேர்தலில்..........(குறுக்கீடு)

1986 மே 14]

திரு. அ. மலர்மன்னன் : * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது விஷயமாக பேசியதெல்லாம் நீக்கப்படுகிறது. திரு. முத்தையா தொடர்ந்து பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட புகாரை நான் இருக்கின்ற நேரத்தில் அந்த சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே வந்து எழுத்து மூலமாக கொடுத்து, ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு தந்தி மூலமாக கொடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தந்தி மூலமாக கொடுத்து அதுபற்றிய வழக்கும் போடுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். அதை பொறுப்பு ஏற்றுக் கொண்டே நான் பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஜனநாயக விரோத போக்கை இந்த ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர் தலைமை தாங்கி நடத்திவிட வேண்டும் என்று பலர் விரும்புகிறார்கள் என்று சொன்னால் அதற்கு இந்த சட்ட திருத்தத்தை கொண்டுவராமல் நாம் அனுமதிப்பது ஜனநாயக படுகொலையில்லையா என்றுதான் மாண்புமிகு ரமணி அவர்களை கேட்க ஆசைப்படுகிறேன். டி. டி. ஓ. தலைமையில் நடப்பது ஜனநாயக படுகொலை என்பதைப் போல் பேசுகிறார்கள். இதற்கு முன்னாலே இருமையிலே நடந்த ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர் தேர்தலில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் ஒரு அங்கமாக உட்கார்ந்து ஊராட்சி ஒன்றிய குழு அமைக்கின்றபோது அன்றைக்கு முதன் முதலாக அந்த ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெறுகின்ற தேர்தல் ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர் தேர்தல். இந்த ஊராட்சி மன்றத் தலைவராக சேர்ந்து தேர்ந்தெடுக்கின்ற அந்த தேர்தல் இதற்கு முன்னால் மாண்புமிகு பொன் முத்துராமலிங்கம் அவர்கள் அந்தத் தேர்தலில் நின்றார். அவருடைய தேர்தலிலே ஒரு ஊராட்சி மன்றத் தலைவர் மூத்த தலைவர் உட்கார்ந்தார். தேர்ந்தெடுத்தார். அன்றைக்கு ஒரு ஆர்.டி.ஓ. டி.டி.ஓ. தான் தேர்ந்தெடுத்தார். அவர் தலைமை தாங்கினார். அது ஜனநாயகத்திற்கு உட்பட்ட காரியம். இன்றைக்கு இந்த டி.டி.ஓ. தலைமை தாங்கி விட்டார். இன்றைக்கு அந்த துணை பெருந் தலைவர், மன்றத் தலைவர்கள் இவர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப் பட்ட பிறகு நடைபெற்ற முதல் தேர்தல் ஒரு ஊராட்சி ஒன்றியத்தை பொறுத்தமட்டில் அந்த தேர்தலை ஒரு டி.டி.ஓ. தலைமை தாங்குகின்ற காரணத்தாலே ஜனநாயகப் படுகொலை என்று சொன்னால் இது ஏற்றுக் கொள்ளக்கூடிய வாதமா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இதைப்போன்ற பல்வேறு ஜனநாயகப் படுகொலைகள் ஊராட்சி ஒன்றியத்தலைவர் தலைமை தாங்கலாம் என்று இருக்கிற காரணத்தால் பல்வேறு ஒன்றியங்களில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. பல்வேறு பகுதிகளில் திடீரென்று வெற்றி பெறுகிற வாய்ப்பு இல்லை என்று சொன்னால் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைகள் இன்றைக்குக் கூட்டம் ஒத்திவைக்கப் பெறுகிறது என்று அந்த ஒரு மணி நேரத்திற்கு முன்னாலேதான் அறிவித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அது எல்லாம் எப்படி ஜனநாயகத்துக்கு உட்பட்ட காரியமாகும். அப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நடைபெறுகிற காரணத்தால்' நீங்கள் சொன்னீர்கள், எப்படி எல்லாம் அரசாங்கம் தலையிட்டு தடுக்கிற முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று சொன்னீர்கள், தடுக்கிற முயற்சி எடுக்க வேண்டுமென்றால் இப்படிப்பட்ட ஜனநாயகப் படுகொலையை செய்கிற ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களைப் பதவியை விட்டு நீக்குகிற அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

அப்படிப்பட்ட அதிகபட்சமான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடக்கூடாது என்பதற்காகத்தான் ஒரு சுமுகமான முறையை இன்றைக்கு அரசாங்கம் எடுக்கவேண்டும என்ற வகையில் இந்தத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே இந்தத் தீர்மானம் இன்றைக்குக் கொண்டு வந்திருப்பது என்பது பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் ஜனநாயகத்தின் பெயரால் ஜனநாயகப் படுகொலை செய்து கொண்டிருப்பவர்களுடைய நடவடிக்கையைத் தடுக்க எடுக்கிற முயற்சியாகும். எனவே அதை மனப்பூர்வமாக அனைவரும் ஏற்கவேண்டுமென்று கேட்டு அதை வரவேற்று அமர்கிறேன்.

திரு. பி. ஜே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அந்த செல்லம் பட்டி ஒன்றியம் என்னுடைய தொகுதியில் வருகின்ற காரணத்தால் அந்த ஒன்றியப் பெருந்தலைவரைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா. முத்தையா அவர்கள் இங்கே ஒரு புகார் சொல்லியிருப்பதன் காரணத்தால் ஒன்று சொல்ல விரும்பகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் தமிழ்நாடு பார்வர்ட் ப்ளாக் அமைப்பிலே இருந்து அங்கே வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள் அவர்கள். எனவே ஒரு ஒன்றியத்தினுடைய தலைவரைப் பற்றி ஒரு புகார் இங்கே சொல்கிறபோது அது மிகத் தெளிவாகச் சொல்லப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படிப்பட்ட ஒரு புகார் அரசாங்கத்திற்கு மாவட்ட ஆட்சித்லைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அந்தப் புகாரின் அடிப்படை

யில் பேசுகிறார். அப்படிப்பட்ட புகார் கொடுக்கப்படவில்லை என்று நீங்கள் சொன்னால் அதுபற்றிக் கண்டுபிடித்து உரிய வகையில் உரிமைப் பிரச்சினை வேண்டுமென்றால் நீங்கள் எழுப்பலாம். (கூச்சல், குழப்பம்).

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது விளக்கமாகத் தரப்படவேண்டும் என்றுதான் நான் கேட்கிறேனே தவிர, தவறு என்று சொல்லவில்லை. ஜனநாயகப்படுகொலை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் தமிழ்நாடு பார்வர்ட் ப்ளாக் அமைப்பு நிச்சயமாகக் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே இருக்கக்கூடிய ஒன்றியமாக இருக்கின்ற காரணத்தால் தான் நான் கேட்கிறேன். எனவே தரப்படுகின்ற தகவல் விளக்கமானதாக இருக்கவேண்டும் என்பதை நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்).

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : எனதத்தன் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற அடிப்படையில் கேட்பது என்று வரைமுறை இல்லையா? எனவே அந்த அவைக் குறிப்பிலே இருந்து நீக்குகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை குறித்து கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் திருத்த மசோதாவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த மேலான கருத்துக்களுக்கு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்தக் கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும் வெளிப்படையாக அந்தக் கருத்துக்களைத் தெரிவித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள்

** ** ** **

என்று கேட்டார்கள். வேண்டுமானால் திரு. ஆறுமுகத்தைத் தவிர மற்றவர்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற வகையில் வேண்டுமானால் திருத்திக் கொள்ளலாம். எனவே அதை ஒரு பிரச்சினையாக ஆக்கவேண்டியதில்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 மே 14

[இரவு 7-20].

பொதுவாக நான் ஒன்றை இந்த அரசின் சார்பிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தேர்தல் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு, மக்கள ஆட்சி நெறி முறைப்படி, ஏற்கனவே வகுத்திருக்கிற சட்ட திட்டங்களின் படிதான் துணைத் தலைவர் தேர்தல் நடக்கும் என்றும், கோவாப்ட் செய்யப் பட வேண்டிய நபர்கள் சேர்ப்பது நடக்கும் என்றும், மாவட்ட ஆட்சித்தலைவரால் நியமிக்கப்பட வேண்டியவர்கள் நியமிக்கப் படுவார்கள் என்றும், எல்லாம் சட்டப்படியே நடக்கும் என்றும் நாங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம்.

ஆனால் 30 நாட்களுக்குள்ளாக துணைத் தலைவர் தேர்தலை நடத்த வேண்டும் என்பதை 90 நாட்களுக்குள்ளாக என்று நான் மாற்றியதற்காக பெரிய ஆட்சேபணை சொல்லப் பட்டது. வெளியிலே கூட சில பெரிய தலைவர்கள் பலபடி பேசினார்கள். நான் அவர்களைத் தவறாகச் சொல்லவில்லை, சொல்ல மாட்டேன். அவர்களுக்குச் சிலபேர்கள் அப்படி தவறான தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப் படையில் புரியாமல் பேசுகிறார்களே என்றுதான் நான் நினைக்கிறேன். 30 நாட்களுக்குள் துணை தலைவர் தேர்தல் இருக்கலாம் என்பதை 90 நாட்களுக்குள் என்று மாற்றியதற் குப் பின்னாலே நான் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்தப் போது விளக்கிச் சொன்னேன், அந்த 90 நாட்களுக்குள் தான் 30 நாட்களும் அடங்கும். அதை 20 நாட்களுக்குள் என்று வைத்துக் கொண்டால் கூட யாரும் ஆட்சேபிக்க போவ தில்லே, அதிகபட்சம் 90 நாட்கள் என்று வைத்திருக்கிறோம் என விளக்கிச் சொன்னேன்.

அதைப்பற்றிக் கூட பொது மேடையிலே வெளியிலே பேசும்போது என்னைச் சாடுவதற்கு அதையும் ஒரு காரண மாக வைத்திருந்தார்கள் என்பதை நான் படித்தேன், கேள்வி யும் பட்டேன். இருந்தாலும் பரவாயில்லை. பொதுவாக துணைத் தலைவர் தேர்தல் நியாயமாக முறைப்படி நடக்க வேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புகிறோம். ஆனால் துணைத் தலைவர் தேர்தல் நடந்தபோது சில தவறுகள் நடந்ததாக அமைச்சர்களுக்கு புகார்கள் வந்தன. புகார்கள் வந்த உடனேயே பார்வையாளராக வட்டார வளர்ச்சி அலுவலர் அங்கே அனுப்பப்படவேண்டும் என்று உத்தரவு போட்டோம். அப்படி வட்டார வளர்ச்சி அலுவலர் பார்வையாளராக சென்றதற்குப் பிறகும் நிலைமை சீர்பட வில்லை. சில ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பெருந் தலை வர்கள், நான் தான் தேர்தல் அதிகாரி, நீ யார் கேட்பதற்கு என்று அவர்களை மிரட்டி அதட்டி இருக்கிறார்கள். வேறு பல தவறான முறைகளும் கையாளப்பட்டதாக எங்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

1986 மே 14] [திரு. ப. உ. சண்முகம்]

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு ரமணி அவர்கள் பெருந் தன்மையோடு சில தவறுகள் நடந்திருக்கலாம் நடந்திருக்கும் என்று ஒத்துக் கொண்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த தவறுகளுக்காகவா இந்தச் சட்டம் என்று கேட்டார்கள். அந்தத் தவறுகளினால் பாதிக்கப்படுகின்ற அப்பாவிகளை பாதுகாக்கத்தான் இந்தச் சட்ட முன்வடிவே தவிர, தவறு செய்கின்ற கொடியவர்களுக்காக இந்தச் சட்டம் அல்ல. (கரவொலி).

நடந்திருக்கிற சில தவறுகளை முழுமையாக எடுத்துச் சொல்வதற்கு நேரம் இல்லாத காரணத்தால் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை மட்டுமாவது எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே—ஊரின் பெயரைச் சொல்ல வேண்டும் என்றாலும் சொல்லுகிறேன், ஆதாரம் வைத்திருக்கிறேன்—துணைத் தலைவர் தேர்தல் நடக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே துணைத் தலைவர் பதவிக்கு ஒருவர் நின்றிருக்கிறார். அ.தி.மு.க. வின் சார்பில் ஒருவர் போட்டியிட்டிருக்கின்றார். வாக்குகளை கடைசியில் எண்ணிப் பார்க்கும்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நின்றவருக்கு 14 வாக்குகள் என்றும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நின்றவருக்கு ஆதரவாக 13 வாக்குகள் என்றும் எண்ணுகிறார். எண்ணி அவரே முடித்ததற்குப் பிறகு, 27 வாக்குகளையும் கையிலே எடுத்துக் கொண்டு, புஸ்தகத்திலே ஏதோ எழுதுகிறார். ஏதோ எழுதுகிறார் என்று எதிரிலே இருப்பவர்கள் நினைத்துக் கொண்டிருக்கும்போது, தேர்தல் குழப்பத்தில் முடிந்துவிட்டது நான் இதோடு கூட்டத்தை ஒத்தி வைக்கிறேன் என்று எழுதி வைத்துவிட்டு அந்த 27 ஓட்டுகளையும் தூக்கிக் கொண்டு ஓடி விட்டார்கள். இதற்கு என்ன செய்வது? மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொல்வார்கள், நீதிமன்றத்திற்குப் போங்கள் என்று சொல்லுவார்கள். ஏன் நாங்கள் நீதிமன்றத்திற்குப் போக வேண்டும் ? இந்த தவறுகளை அரசாங்கம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. அனுமதிக்கவும் முடியாது. (கரவொலி) இதுபோன்று ஒன்றிரண்டு தவறுகள் அல்ல. எத்தனையோ இருக்கின்றன.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இன்னொன்று ஊராட்சி ஒன்றியத்திலே — பெயரைச் சொல்ல வேண்டும் என்றால் சொல்கிறேன். சொல்ல வேண்டாம்

என்றால் விட்டுவிடுகிறேன்—ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே துணைத் தலைவர் தேர்தல் நடக்கிறது. அப்படி துணைத் தலைவர் தேர்தல் நடக்கும்போது அங்கே இருந்த அனைத்திந்திய அ.தி.மு.க. உறுப்பினரைப் பார்த்து அந்த பெரும் தலைவர் சொல்லுகிறார். அப்போது அங்கே எக்சிகியூட்டிவ் ஆபிசர் இல்லை. வெளியூருக்குப் போயிருக்கிறார். சானிடரி இன்ஸ்பெக்டரும் இல்லை, அவரும் வெளியூர் போயிருக்கிறார். கிளார்க்கை வைத்துக்கொண்டு இந்த தேர்தலை நடத்துகிறார் கள். அப்போது அந்த பேரூராட்சியின் தலைவர் தேர்தலை நடத்தும்போது ஒரு அ.தி.மு.க. உறுப்பினரைப் பார்த்து சொல்லுகிறார். வாக்காளர் பட்டியலிலே உங்களுக்கு வயது போடவில்லை. ஆகவே உங்களை ஓட்டுப் போட அனுமதிக்க மாட்டேன் என்று தேர்ந்து எடுக்கப்பட்டு வந்திருக்கிற ஒரு உறுப்பினரைப் பார்த்து சொல்லுகிறார். அவர் சரி போகட் டும் என்று விட்டு விடுகிறார். தேர்தல் நடக்கிறது. வாக்குச் சீட்டு போட்டு ஓட்டு போடுகிறார்கள். பெருந் தலைவர் ஓட்டை எண்ணுகிறார். சம ஓட்டாக இருக்கிறது. உடனே குலுக்கல் சீட்டு போடுகிறார்கள். குலுக்கல் சீட்டிலே அ.தி.மு.க. வேட்பாளரின் பெயர் வருகிறது. அதைப் படிக்கிறார். படித்து முடிக்கிற நேரத்தில் மாலை போடுவதற்காக சிலர் உள்ளே வருகிறார்கள். கையெழுத்துப் போடுங்கள் என்று உறுப்பினர்களை பெருந் தலைவர் கேட்கிறார். உறுப்பினர் களும் கையெழுத்துப் போட்டுவிட்டு வெளியே போகிறார்கள். மேலே என்ன எழுதுகிறார் தெரியுமா? துணைத் தலைவர் தேர்தல் நடந்தது. அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த கன்னையா அவர்களுக்கு 6 ஓட்டு, தி.மு.க. வைச் சேர்ந்த ஏழுமலைக்கு 7 ஓட்டு,. ஒரு ஓட்டு செல்லாத ஓட்டு. ஏழுமலை வெற்றி பெற்றார் என்று எழுதுகிறார்கள். இது நியாயமா? இதற்கு நான் நீதிமன்றத்திற்குப் போகவேண்டுமென்று எங்கள் கட்சிக் காரருக்குச் சொல்ல சொல்கிறீர்களா? எப்படி இதை அனுமதிப் பது என்று கேட்கிறேன்.

இன்னொரு ஊரில் கோவாப்ட் செய்வதற்காக 10 உறுப்பினர்கள் பிரேரேபிக்கிறார்கள். நாங்கள் 10 பேரை சொல்கிறோம் என்கிறார்கள். உடனே பேரூராட்சி பெருந் தலைவர் என்ன செய்கிறார் என்றால் தான் சொன்ன 10 பேர் தான் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக எழுதிக்கொள் கிறார். கூட்டம் முடிந்து ஓட்டுக்கு விட மாட்டேன். வாக்கு அளிக்க விடப்போவதில்லை என்று சொல்லி தான் சொன்ன 10 பேரை மட்டும் எழுதிக்கொள்கிறார். இது நியாயம் என்று கருதுகிறீர்களா? மாவட்ட ஆட்சித் தலைவரால் நிய மிக்கப்பட்டவர்களுக்கு ஓட்டு உண்டு என்று ஏற்கனவே சட்டத் டத்தை சென்ற ஆண்டே நிறைவேற்றியிருக்கிறோமே தவிர, அது இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கலாமா, நீதிமன்றத்திற்குப்

1986 மே 14] [திரு. ப. உ. சண்முகம்]

போனார்கள். நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துவிட்டது. நியமிக்க அதிகாரம் உண்டு. தீர்ப்பளித்துவிட்டது. நியமித்தார்கள். நாம் ஏற்கனவே. யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாமென்று சட்டத்திலே போட்டுக் கொண்டிருக்கிகலாம். தாழ்த்தப்பட்டவர்கள். பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அவர்களுக்கு அந்த நியமனம் என்று சொன்னாரே தவிர, யாரை வேண்டுமானாலும் நியமித்துக்கொள்ளலாம் என்று முதலமைச்சர் சொல்லவில்லை. அந்த அதிகாரம் இருக்கிறது. நியமித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் நியமிக்கவில்லை. தாழ்த்தப்பட்ட மகனுக்கும், பெண்களுக்கும் நியமனம் கொடுப்பதிலே என்ன தவறு ? வருகிறார்கள. நியமனம் ஆனவுடனே உத்தரவு போடுகிறோம். பதவிப் பிரமாணம் செய்து வைக்கபோட்டேன். என்று சொல்கிறார்கள். சட்டத்திலே என்ன இருக்கிறது என்றால் பதவிப் பிரமாணம் செய்து வைக்க வேண்டுமென்று சட்டத்திலே இல்லை. அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தான் இருக்கிறது. செய்து வைக்கிற அதிகாரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவருக்குக் கிடையாது. படித்துவிட்டாலே போதும், பதவி ஏற்றுக்கொண்டதாக அர்த்தம். சட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது ? அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டும். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் செய்து வைக்கவேண்டுமென்று சட்டத்திலே இல்லை. எனவே எடுத்துக்கொண்டால் போதுமென்று உத்தரவுகளை அரசே போட்டோம். படித்து விட்டாலே போதும் என்று சொன்னோம். படித்து விட்டார்கள் சில இடங்களில். படித்து விட்டதற்குப் பிறகு வருகைப் பதிவேடு புத்தகங்களில் கையெழுத்து வாங்கிகொண்டார்கள். ஆனால் நான்கு பேருக்கு ஓட்டு கொடுக்க முடியாதென்று மறுக்கிறார்களே எந்த வகையில் நியாயம் ?

இன்னொரு இடத்தில் தேர்தல் நடக்கிறது. துணைத் தலைவர் தேர்தல் நடக்கும்போது ஓட்டுச் சீட்டை கீழே கொட்டுகிறார். அதிலே 3 ஓட்டு அண்ணா தி.மு.க. ஓட்டை கையிலே எடுத்து வைத்துக்கொண்டு இது சொல்லாது என்று சொல்கிறார்கள். பக்கத்திலே வட்டார வளர்ச்சி அலுவலர் சொல்கிறார். நீங்கள் சொன்னது தவறு. செல்லக் கூடிய ஓட்டை கையிலே வைத்துக்கொண்டு. இப்படி அநியாயமாக சொல்லக்கூடாது என்று சொல்கிறார். யார் சொல்வது தேர்தல் அதிகாரி. அதற்கு '' நான் சொல்கிறேன். இது செல்லாது போ '' என்றால் என்ன செய்வது? இதை அனுமதிக்க. வேண்டுமென்றால் நாம் எங்கே போய் நிற்கப் போகிறோம் நமக்கு புரியவில்லை. துணைத் தலைவர் அவர்களுடைய தொகுதியில் நடைபெற்றிருக்கிற அக்கிரமங்கள் கொஞ்சமா ? வேடசந்தூர் ஒன்றியத்தில் நடந்திருக்கிறது.

சில இடங்களில் துணைத் தலைவர் தேர்தலை கூட்டுகிறார்கள். கூட்டி வந்து உட்காருகிறார்கள். உட்கார்ந்தவுடன் தங்களுடைய சட்சிக்கு மெஜாரிட்டி இல்லை என்றவுடன் ஒத்தி வைக்கிறேன் என்று போய் விடுகிறார்கள். ஒத்திவைக்கிற அதிகாரம் சட்டத்திலே கிடையாது. தலைவர் இல்லையென்றால் அங்கே இருக்கிற உறுப்பினரை தேர்ந்தெடுத்து உட்கார வைத்துத் தேர்தலை நடத்தலாம். சட்டத்திலே இருக்கிறது. அப்படி நடத்துகிற தேர்தல் செல்லும். தலைவர் தானாக தேர்தலை ஒத்திவைத்து விட்டேன் என்றால் எங்கே போய் நிற்பது ?

இன்னொரு இடத்தில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் நோட்டீஸ் அனுப்புகிறார்கள். கோவாப்ட் செய்வதற்காக ஒரு தேதி. நாமினேஷன் செய்த மெம்பர்களாக பதவிப் பிரமாணம் செய்து வைப்பதற்கு இன்னொரு தேதி என்று எழுதுகிறார். அரசு என்ன சட்டம் போட்டோம் ? அடுத்த கூட்டத் தொடரில், ஸ்பெஷல் மீட்டிங்காக இருந்தாலும், சாதாரண கூட்டமாக இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்பட்டவர்கள் பதவி பிரமாணம் எடுத்துக்கொள்வார்கள். எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு வாக்கு உரிமை உண்டு. அடுத்தக் கூட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விதியிலே போட்டிருக்கிறோம். சட்டத்திலே போட்டிருக்கிறோம். ஆனால் இவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், வேடசந்தூரில் கோவாப்ட் செய்வதற்கு மீட்டிங் தேதி 5-ம் தேதி. பதவிப் பிரமாணம் செய்து வைப்பதற்கு 7-ம் தேதி என்று போடுகிறார்கள். ஏன், இவருக்கு எங்கேயிருந்து அந்த அதிகாரம் வந்தது ? எப்படி நோட்டீஸ் அனுப்புகிறார்கள ? இங்கே சில சட்ட மன்ற உறுப்பினர்கள் கேட்டார்கள். எங்களுக்கு ஜீப்பே இல்லை. ஒரு நாள் கூட ஜீப்பிலே ஏறவில்லையென்று சொன்னார்கள். சில ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மீது வந்திருக்கிற புகார்கள் சாதாரண புகார்கள் இல்லை.

(இரவு 7–30)

ஜீப்புகளை ஏதோ அவர்களுடைய சொந்த வீட்டுச் சொத்தைப் போல எடுத்துக்கொண்டு போய் வீட்டிலே நிறுத்திக்கொள்கிறார்கள். பி.டி.ஓ. அவர்களிடம் புகார் கொடுக்கிறார்கள். எங்களுக்குக் கூட ஜீப்புகள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். நான் அரசுத் தரப்பிலே இருந்து சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் தொகுதியைச் சுற்றிப் பார்ப்பதற்காக மாதத்திற்கு 2 நாள் ஜீப்புகளைக் கொடுத்தே தீரவேண்டும். ஒரு வாரத்திற்கு முன்பு, சட்டமன்ற உறுப்பினர் பி.டி.ஓ. அவர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுப்பார்களானால், அந்த ஜீப்பு

குறிப்பிட்ட தேதிகளில் அவர்களுக்கு ஜீப்பைக் கொடுக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு இது சம்பந்த மாக உத்தரவினை இன்னும் வேண்டுமானால் விளக்கமாக அரசு ஆணை பிறப்பிக்கும், என்பதை இந்த அவையில் உத்தர வாதமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன உரிமை என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, ஓர் உண்மையை ஒத்துக்கொண்டதற்காகப் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். ஐ.ஆர்.டி.பி. கடனுக்கு நான் சென்று ஒருவருக்குக்கூட வாங்கிக் கொடுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். நான் சட்டமன்ற உறுப்பினர்கள் தவறாக வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு, அந்தப் பட்டி யலில் இருப்பவர்களுக்கு சிபாரிசு செய்வதற்குக் கூட அருகதை இல்லையா? அது என்ன சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால் ஊராட்சி ஒன்றியத்திற்குள்ளே நுழையக் கூடாதவர்களா? சொன்னார்கள். அந்த வளாகத்திற்குள்ளே சட்ட மன்ற உறுப்பினர்கள் நுழையக் கூடாதா? நான் கேட்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களைப் பார்த்து மட்டும் இப்படிக் கேட்பதற்கு என்ன தைரியம் என்று பச்சையாகவே நான் கேட்கிறேன். அன்றைய தினம் திரு. எத்திராஜ் அவர்களை வெளியே போ என்று சொன்னார்கள். இன்றைய தினம் திரு. பாரமலை சொல்கிறார்கள். எப்படி இப்படி கேட்க முடிகிறது. எந்த அடிப்படையில் தைரியத்தில் இப்படிச் கேட்கிறார்கள். ஏமாளிகள் என்ற காரணத்தினாலா? இதை எல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கிறோம் என்பது உண்மை. நான் ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவ்வள வுக்கும் அரசுத் தரப்பிலேயிருந்து நோட்டீஸ் அனுப்பப் பட்டு இருக்கிறது. தக்க நடவடிக்கை எடுக்கப்படும். நடவடிக்கை என்ன என்பதைப்பற்றி இப்போது நான் சொல்லத் தயாராக இல்லை. அதற்கு உரிய பரிகாரம் நிச்சயம் தேடு வோம். இது பயமுறுத்தலுக்காக அல்ல. இப்படி தவறுகள் நடப்பதை அனுமதித்துக்கொண்டே இருக்க முடியாது என் பதற்காகத்தான், அதற்கு ஒரு வரம்பு வைக்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந் தோமே தவிர, டி.டி.ஓ. அவர்களை வைத்து துணைத் தலைவர் தேர்தலை நடத்துவதிலே எங்களுக்கு என்ன பெருமையா? துணைத் தலைவர் தேர்தல் நடத்த வேண்டும். நான் கேட்கிறேன். துணைத் தலைவர் தேர்தல் தானே. தேர்தல் நடத்துவதிலே ஓட்டுக் கொடுப்பதிலே நீங்கள் பார பட்சம் காட்டுகிற காரணத்தால், ஓட்டை அவர்கள், கையிலே கொடுக்கப் போகிறார்கள். ஓட்டைப் போட்டு, எண்ணி முடித்ததற்குப் பிறகு, யார் வெற்றி பெற்றார்கள் என்பதை அறிவித்து விட்டு, டி.டி.ஓ. அவர்கள் தன் வேலை

முடிந்தது என்று போகப்போகிறார். அதற்குப் பிறகு, கவுன்சிலை நீங்கள் தானே நடத்தப் போகிறீர்கள். வேறு யாரும் நடத்தப் போவதில்லையே.

இன்னொன்று, கண்டனத் தீர்மானங்களை சில இடங்களிலே போடுகிறார்கள். என்னைக் கண்டித்து, திட்டி கூட சில இடங்களில் தீர்மானம் போட்டு, நோட்டீஸ் வந்திருக்கிறது. நான் இவைகளை ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்று சொன்னாலும், விளக்கம் கேட்டு இருக்கிறோம். இதற்கு எல்லாம், அரசைக் கண்டித்து தீர்மானம் போடுகிறார்கள். அரசைக் கண்டிக்கவும் ப.உ.ச.வைக் கண்டிக்கவும் தானா இப்போது பெருந் தலைவராக வந்தீர்கள், வேறு வேலை இல்லையா ? ஊருக்கு, வேண்டியதை ஊராட்சி ஒன்றியத்திற்கு தேவையானதைச் செய்யவேண்டும். அதற்காக பாடுபடுவதற்கு முயற்சிக்கவேண்டும்.

ஆர்.எல்.இ.ஜி.பி.-யிலே அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காக பணம் ஒதுக்கிவிட்டீர்கள் என்று மாண்புமிகு உத்திராபதி அவர்கள் கூட குற்றம் சொன்னார்கள். (குறுக்கீடு) கொடுத்து இருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். ஆமாம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவதற்காக, ஆர். எல்.இ.ஜி.பி. பணத்தில் பெரும் பகுதியை ஒதுக்கியிருக்கிறோம். மறுக்கவில்லை. இது எங்கள் லட்சியம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின், புரட்சித் தலைவரின் லட்சியம், நிறைவேற்றினோம். இதிலே என்ன தவறு. ஒளிவு மறைவே கிடையாது. வீடு கட்டச் சொல்கிறோம். அதில் என்ன தவறு இது தவறா ? எனக்குப் புரியவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, வாழ வசதியற்றவர்களுக்கு கட்டுகின்ற வீடுகளே மிகவும் குறைந்த வீடுகள். ஒரு ஒன்றியத்திற்கு நாம் கட்டிக் கொடுப்பது இதுவரையில் 30, 40 வீடுகளைக் கட்டிக் கொடுத்து வந்தோம். இந்த ஆண்டு கட்டுவதாக நாங்கள் திட்டம் போட்டு இருப்பது, தமிழகம் முழுவதற்கும், 75 ஆயிரம் வீடுகளாவது இருக்கவேண்டும். ஏறக்குறைய ஒரு ஒன்றியத்திற்கு 100, 150 வீடுகள் வரும். அந்த அளவிற்குக் கட்ட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. முதலமைச்சர் உத்தரவிட்டு இருக்கிறார்கள். எனவே இது எங்கள் லட்சியம். அதை நிறைவேற்றுகிறோம். அரசு லட்சியங்களை நிறைவேற்றுவதில் யார் குறுக்கிட்டாலும், நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இது எங்களுடைய கொள்கை.

மேலும் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த என். ஆர். இ.பி., ஐ.ஆர்.டி.பி. கடன் கொடுப்பதைப் பற்றி அரசு விரைவில் ஒரு ஆணை பிறப்பிக்க இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் ஒரு ஆணையை பிறப்பிக்க இருக்கிறார்கள்

அதற்காக ஒரு குழுவைப் போட்டு, யாருக்கு கொடுப்பது என்பதைப் பற்றி தேர்ந்தெடுப்பதற்காக, ஒரு குழுவை நியமிக்க இருக்கிறோம். அந்தக் குழுவிலே ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் இருப்பார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள். தாசில்தார் இருப்பார்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்துச் சொல்வதற்காக, சரியாக இருக்கிறதா, இல்லையா, என்பதைக் கண்டுபிடிப்பதற்காக, பி.டி.ஓ. இருப்பார்கள். அங்கே இருக்கின்ற ரிஜிஸ்டர்களில் எல்லாம் எழுதி வைத்து இருக்கின்ற பெயர்களைப் பார்த்து சரி செய்வதற்காக. வங்கியினுடைய மேலாளர் உறுப்பினராக இருப்பார்கள். இவர்கள் எல்லாம் சேர்ந்துதான் ஐ.ஆர். டி.பி. லோனுக்கு யார் தகுதி வாய்ந்தவர்கள் என்பதைத் தேர்ந்தெடுப்பார்கள். இப்படி ஒரு குழுவைப் போடுவதாக இருக்கிறோம்.

அதேபோல் என். ஆர். இ.பி. வேலைத் திட்டங்களுக்குக் கூட இப்படித்தான் முடிவு எடுக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அரசு அதிகாரிகளிடத்திலே அதிகாரத்தைக் கொடுத்து பழி வாங்க வேண்டுமென்று நினைக்கவில்லை. இந்தச் சட்டம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெருந்தலைவர்கள் பலரை பாதிக்கிறது என்று என்னிடத்திலே சண்டைக்கு வருகிறார்கள். இப்படி சட்டம் போட்டுவிட்டீர்களே, எங்களுக்கு இருக்கிற அதிகாரம் போய் விட்டதே என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் சமாதானம் கூறிக் கொண்டு இருக்கிறேன். எனவே தமிழ்நாடு முழுவதுக்கும் பொதுவாக ஒரு சட்டத்தைப் போட்டோமே தவிர, வேறு கிடையாது. ஒரே நாளில் ஆவுடையார் கோவிலில் 10 மணிக்கு கோ-ஆப்ஷன் மெம்பர், 11 மணிக்கு நாமினேஷன் மெம்பர் பதவி ஏற்பார்கள். 10 மணிக்கு தேர்தல் என்று சொன்னால், வெளிப்படையாக நாமினேஷன் மெம்பர்களுக்கு ஓட்டுரிமை கொடுக்க மாட்டேன் என்பதற்காக செய்கிறார்கள். ஓட்டுரிமை உண்டு என்று போட்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிப்பது சரி என்று ஒப்புக்கொண்டு ஆகிவிட்டது. போட்டிருக்கின்றவர்கள் தாழ்த்தப்பட்டவர்களும், பெண்களும், அவர்களுக்கு ஓட்டுரிமை கொடுக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவதில் என்ன தவறு? அரிஜன பெண் தேர்ந்தெடுக்கப்படப் போகிறார், என்ன தவறு அதிலே? இதில் ஏன் அரசியல் கண்ணோட்டத்தைப் புகுத்த வேண்டுமென்பது தான் எனக்குப் புரியவில்லை. இப்படி தெரிந்த காரணத்தினால் தான் இந்தத் தவறுகளை தெரியப்படுத்துவதற்கு ஒவ்வொன்றுக்கும் நீதிமன்றத்திற்கு போய்க் கொண்டிருப்பது என்று சொன்னால், நீதி மன்றத்திற்குப் போவதற்கு எந்த அரிஜன் கையிலே, எந்தப் பெண் கையிலே பணம் இருக்கும்? எந்த அரசியல் கட்சி

இந்த வழக்கை நடத்த முடியும். நீதி மன்றத்திற்கு போவதை கூடிய மட்டும் தடுப்பதற்காகத்தான் எந்த அளவிற்கு சட்டத்தை சுருக்க முடியுமோ, அந்த அளவிற்கு சுருக்கி இப்படி சட்டம் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, வேறு காரணம் இல்லை. இன்னும் ஏராளமான தவறுகள் செய்ததற்கான சாட்சியங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. ரெக்கார்டுடன் வைத்திருக்கிறேன். அவைகளையெல்லாம் சொல்வதற்கு எனக்கு நேரம் இல்லை என்று சொன்னாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துக்களை அரசு கவனத்திலே வைத்திருக்கும் என்று உறுதி அளிக்கிறேன். அரசுக்கு, ஒரு அதிகாரியை வைத்துத் தேர்தல் நடத்த வேண்டுமென்று எண்ணம் இல்லை. ஆனால், அந்த நிலைக்கு துரத்தப்பட்டு விட்டோம் என்பதை மட்டும் நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொண்டு, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் மூலம் பேரவையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதில் உள்ளபடியே மகிழ்ச்சியை அளித்தாலும், அதே நேரத்தில், அவர்கள் பெண்களுக்காகவும், அரிஜன மக்களுக்காகவும், மிக வேகமாகவும், பலமாகவும் அவர்களுடைய கருத்துக்களை கேட்கின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி. அதே நேரத்திலே அரிஜனங்களுக்கும், பெண்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களில் ஒதுக்கீடு செய்யப்படாமல் போனது குறித்து வேதனைப்படுகின்ற தமிழக முதல்வரும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், இனி வருங்காலத்திலாவது அதைத் தடுப்பதற்காக ஒரு உறுதியை அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதுபற்றி இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக பேசுகின்றபோது, இது குறித்து விளக்கலாம் என்று இருந்தேன். வேண்டாம் என்று இருந்து விட்டேன். நாம் சட்டங்களில் பழையபடி ஒதுக்கீடுகளைக் கொண்டு வந்தோம். அதில், உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று 'ஸ்டே' வாங்கி விட்டார்கள். சுப்ரீம் கோர்ட்டிலே இது குறித்து வழக்கு இருந்தது. நாம் தேர்தலை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகு ஒதுக்கீடு இல்லாமலேயே தேர்தல் நடத்தலாம் என்று முடிவெடுத்து சட்டத்தை திருத்தி ஒதுக்கீடு இல்லாமல் தேர்தல் நடக்கும் என்று நாம் அறிவித்தோம். அறிவிப்புக்குப் பிறகு சுப்ரீம் கோர்ட்டிலே இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ஒதுக்கீடே இல்லை. வழக்கு எங்கே இருக்கிறது என்று நீதிபதி கேட்க, வழக்கைப் போட்டவர்கள் திரும்பப் பெற்று விட்டார்கள். பழையபடி தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்னதற்குப் பிறகுதான் வழக்கு

1986 மே 14] [திரு. ப. உ. சண்முகம்]

திரும்பிப் பெறப்பட்டதே தவிர, வழக்கு திரும்பிப் பெறப் பட்டதற்குப் பிறகு, நாம் இப்படி அறிவிக்கவில்லை. மீண்டும் அந்த ஒதுக்கீடு கொண்டு வந்தால், மீண்டும் அவர்கள் 'ஸ்டே' வாங்குவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் தொடர்ந்து நாம் தேர்தலை நடத்தினோம். ஆனால் ஏற்கனவே இந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றும்போது நான் சொன்னேன். முதலமைச்சருடைய இலட்சியம் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், 15 சதவீதம் பெண்களுக்கும் என்று ஒதுக்கிய இடங்களை அடைய வேண்டுமென்பதுதான் இலட்சியம். ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களாக தாழ்த்தப்பட்ட மக்களின் பெண்கள் வரவேண்டுமென்றும், நகராட்சி தலைவர் களாகவும், பேரூராட்சித் தலைவர்களாகவும் வர வேண்டு மென்றும் முதலமைச்சர் அவர்கள் விரும்புகிறார்கள். அந்த இலட்சியம் ஈடேறுவதற்காக நான் ஏற்கனவே முடிவெடுத்திருக் கிறேன்; இந்த அரசியல் சட்டத்திற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அதை மத்திய அரசாங்கம்தான் செய்ய வேண்டும். இதுபற்றி மத்திய அரசாங்கத்துக்கு கடிதம் எழுத வேண்டு மென்று முடிவு எடுத்து இருக்கிறேன். கடிதம் எழுதுவோம். அந்த லட்சியம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியமாகும். அது ஈடேறுவதற்கு நாங்கள் பாடு படுவோம் என்று பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நடப்பது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சி. இந்த ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 'தாட்கோ' மூலமாக ஆர்.எல். ஈ.ஜி.பி., என். ஆர்.ஈ.பி. மூலமாக அரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறோம். நகராட்சியில் குடிநீர் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கிறோம். இப்படி பல திட்டங்கள் இருக் கின்றன. இந்தத் திட்டங்கள் உள்ள..(குறுக்கீடு)..

(இரவு 7—40)

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசிய போது ஒன்று விடப் பட்டு இருக்கிறது. அதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். தேர்தலை ஒத்தி வைக்கிறது என்று அரசு இந்த அவை யில் அறிவித்த தேதி அன்றோ அல்லது அதற்குப் பிறகோ தேர்தல் நடத்தி இருப்பார்களானால் அந்தத் தேர்தல் சட்டப்படி செல்லாது. மறு தேர் ல் நடக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுக்கு ஏற்கனவே இருக்கின்ற பஞ்சாயத்து சட்டத்தில் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், துணைத் தலைவர் தேர் தலையும் தள்ளி வைக்கும் அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இதைத் தள்ளி வைத்தோமே தவிர வேறு அல்ல. எனவே இந்தத் தேர்தலை ஒத்தி வைக்

கிறோம் என்று சொன்னதற்குப் பிறகு நடந்த தேர்தல்கள் எல்லாம் சட்டப்படி செல்லாது என்பதை நான் இந்த சபையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாப்பா சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் இதய தெய்வம் அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற ஆதி திராவிடர்கள் பூராவுக்கும் ஒவ்வொரு யூனியனிலும் அதாவது இந்த ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 5 இலட்சம் வீடுகள் கட்டித் தரவேண்டும் என்ற ஒரு எண்ணத்தை வைத்து இருந்தாலும் கூட குறிப்பாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆயிரம் வீடுகள் என்று ஆதி திராவிடர்களுக்கு கட்டித் தர வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிற இந்த நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர்கள் ஒவ்வொரு இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு ஊருக்கும் சென்று தங்களுக்கு விருப்பமானவர்கள் தங்களுடைய இயக்கத்தில் சேர்ந்தால் தான் வீடு கட்டித் தர முடியும் என்று அவர்கள் தங்களுடைய இயக்கத்தில் சேருவதற்கு தங்களுடைய அதிகாரத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொடுக்கின்ற அந்த வீட்டை பயன்படுத்தி தங்களுடைய இயக்கத்தை வளர்த்துக் கொள்வதற்கு முயற்சி செய்கிறார்கள். இதை கவனத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கமிட்டி போட்டு இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒன்றை இந்தப் பேரவைக்கு தெரிவிக்க விரும்புகிறேன். ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்ற வீடுகளுக்கு எல்லாம் மரியாதைக்குரிய மறைந்த முன்னாள் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் பெயரை வைக்க வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்து இருக்கிறது. அதை தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதில் உரையில் ஆங்காங்கு சில தவறுகள் நேர்ந்து இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தத் தவறுகளை எல்லாம் தற்போது உள்ள சட்டத்தின் அடிப்படையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் இருக்கிறதா? இல்லையா? என நான் அறிய விரும்புகிறேன்.

1986 மே 14]

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற அந்தச் சட்டவிதிகளின்படி அந்த அதிகாரம் உண்டா? இல்லையா? என்பதை என்னிடம் இருந்து தெரிந்து கொள்வதை விட சட்டப் புத்தகத்தைப் படித்து சட்டத்தை நன்கு புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு பெற்று இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக் குரிய பொன். முத்துராமலிங்கம் அவர்கள் நல்ல வழக்கறிஞர், அவரே படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுச் சட்டம் போட்டதற்குப் பிறகு நியமன உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் பல் வேறு ஊராட்சி ஒன்றியங்களில். அது நிறுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பேரவையில் அறி வித்தபோது துணைத் தலைவருக்கும், கோ—ஆப்ஷன் உறுப்பினர் களுக்கும் சேர்த்துதான் தடை உத்தரவு போட்டு இருக்கிறேன் என்று அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. துணைத் தலைவர் தேர்தல் நடந்து இருந்தாலும், கோ-ஆப்ஷன் நடை பெற்று இருந்தாலும் அது இரண்டுமே எந்தக் கட்சியைச் சேர்ந் தவர், எப்படி சேர்ந்து இருந்தாலும் அவைகள் செல்லாது என் பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பாலாஜி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலை வர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் அந்த ஜீப்புகளை 2 நாள் பயன்படுத்தலாம் என்றும் சொன்னீர்கள். என்னைப் போன்று நகராட்சியில் சம்மந்தப்பட்ட எங்களுக்கு எல்லாம் இருக் கின்ற கார், ஜீப்புகளை 4 நாட்கள் பயன்படுத்துவதற்கு மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்குவார்களா? அப்படிச் சட்டத்தைக் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகள் பற்றி கேட்கிறார் கள். எல்லா நகராட்சிகளிலும் வண்டிகள் இல்லை. சில நகராட்சிகளில் தான் வண்டிகள் இருக்கின்றன. அதைப் பற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது இந்தத் தீர்மானங்களைப் பற்றிச் சொன்னார்கள். என் னுடைய தொகுதியில் ஒரு சம்பவம் நடந்தது. அந்த சம்பவத்

திற்கு நான் பொறுப்பு ஏற்றுக் கொண்டு சொல்லுகிறேன். குறிப்பாக தலைமை தாங்கிய ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர் அவர்கள் அந்த அட்டவணையில் 4 விஷயங்கள் இருந்தன. அதில் முதல் அட்டவணையில் "62 தென்னை மரங்களை ஒரு வருடத்திற்கு 1,050 ரூபாய்க்கு கொடுக்கப்பட்டு இருப்பதை அங்கீகரிக்க", என்று வருகிறது. அது பற்றி விளக்கம் கேட்கிறபோது, விளக்கம் கொடுக்க ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் அவர்கள் மறுக்கிறார். மறுத்த காரணத்தால் இது பற்றி தீர்மானிக்காமல் அடுத்த விஷயத்திற்கு போகக்கூடாது என்று அங்கு இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் ஒட்டு மொத்தமாக சொல்லுகிறார்கள். உடனே அவர் மினிட் புக்கை தூக்கிக்கொண்டு அறைக்குச் சென்றுவிட்டு அத்தனை விஷயங்களையும் தீர்மானிக்கப்பட்டு விட்டதாக கையெழுத்து போட்டு விடுகிறார்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மறுபடியும் டிபேட் மாதிரி பேசுகிறீர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்களுடைய கேள்வியைப் புரிந்து கொண்டு பதில் சொல்லுகிறார். தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களின் பெருந்தலைவர்கள் இதுபோன்ற தீர்மானங்களையெல்லாம் நிறைவேறாத நேரத்தில், நிறைவேற்றி விட்டதாக எழுதிக்கொள்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள் தெரிவிக்கிறார்கள். இது ஒரு இடத்தில் இல்லை. பல இடங்களில் இப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன. இப்போது பிறப்பிக்கப்பட்ட புதிய உத்தரவின்படி அங்கத்தினர்கள் வருகைக்கு என்று தனிப் புத்தகம் ஒன்று இருக்கும். மினிட்ஸ் புத்தகம் தனியாக இருக்கும். மினிட்ஸ் புத்தகத்தில் சப்ஜெக்ட்டுகளை எழுதிக்கொடுக்கின்ற அதிகாரத்தை பி.டி.ஓ. எழுதி வைப்பார்கள். அதற்கு மேலாக வேண்டுமென்றால் ஒரு கிளார்க்கைக் கூப்பிட்டு எழுதச் சொல்லலாம். அல்லது ஒன்றியத்தின் பெருந்தலைவர் எழுதலாம். நிறைவேறியது, நிறைவேறவில்லை என்ற கருத்தை எழுதலாம். ஆனால், புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு ஓடுவார்களேயானால்: அங்கே இருக்கின்ற அதிகாரிகள் தெரிவிப்பார்களேயானால், சட்டப்படி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அங்கே போய் உட்காரும்போது, அவர்களுக்கு உரிய மரியாதைக் கொடுப்பதில்லை என்றும், நாற்காலியை விட்டு கீழே உட்காருங்கள் என்று சொல்வதாகவும் சொல்கிறார்கள். அதிகாரிகள் அப்படி கவனக் குறைவாக இருக்க மாட்டார்கள். இது அதிகாரிகள் பொறுப்பே தவிர, பேரூராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் பொறுப்பில்லை என்றும் தெரிவித்துக் கொண்டு, அப்படி ஏதாவது தவறு நடக்குமேயானால், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1986 மே 14]

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்ற கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வதற்காக சட்டத்திலே ஏற்கெனவே வாய்ப்பு இருந்ததை நான் அறிகிறேன். இது போன்று சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியத்திலே ஓட்டுப்போடுகிற வாய்ப்பை......(குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எற்கெனவே இருந்த சட்டத்திலே நகராட்சிகளிலே சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வதற்குச் சட்ட விதியிலே இடம் இல்லை. அதனால்தான் புதியதாகச் சட்டம் கொண்டு வந்தோம். ஊராட்சி ஒன்றியங்களிலே கலந்து கொள்வதற்கு இடம் இருந்தது. அதனால்தான் விட்டு விட்டோமே தவிர, வேறு அல்ல. ஏற்கெனவே இருந்த விதியில் அப்படி நகராட்சி மன்றக் கூட்டங்களிலே கலந்து கொள்வதற்கு அதிகாரம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ளக் கேள்வி :—

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண். 49/1986), ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 49/1986) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல் இத்துடன் முடிவுற்று நாளை (15—5—1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

111. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சாராவி கலந்த தயாரிப்பு பொருட்கள் (கட்டுப்பாட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 24–1–1986 ஆம் நாளிட்ட 96 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

112. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் அட்டவணை 2-இல் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 17–2–1986 ஆம் நாளிட்ட 170, 171 மற்றும் 172 ஆம் எண்கள் கொண்ட அரசாணைகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

113. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையகத்தின் 1981–1982 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது (ஆங்கிலம்).

114. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையகத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது (ஆங்கிலம்).

115. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1983–1984 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 18/1959) 24(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனையத் தாள்கள்.

எதுவுமில்லை.